A

உ

ஸ்ரீ இராமநாத சுவாமி ஸகாயம்

# சேதுராமேச்வர க்ஷேத்ர புராணம்

=***=

C

இராமேஸ்வரம்

செ. முத்துக்கருப்ப பிள்ளை அவர்களுடைய

ஏட்டுப் பிரதியை ஆதாரமாகக் கொண்டும்,

ஸ்காந்த புராணத்தை அனுசரித்தும்,

இராமேஸ்வரம்

ஸ்ரீ கேசவம்பிள்ளை அவர்களால்

எழுதப்பெற்றதை Accn.No: 120754

No of Pages: 274

அடியாரால் தமது,

இராமேஸ்வரம் பார்வதி பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

டிசம்பர், 1934.

இதன் விலை, ரூ.1-8-0

120754

# முகவுரை

பாரதநாட்டில் காசி இராமேசுரம் என்னுமிவ்விருதலங்கள் இந்துமதத்தின் சகல வகுப்பார்களுக்கும் இகபரசித்திகளைக்கொடுக்கக்கூடிய மாபெரும் புண்யக்ஷேத்ரங்களாக விளங்குகின்றன. சேது என்ற மகாவரப்பிரசாதமிக்க சாகரசங்கமதீர்த்தமும் ஜோதிசொரூபமான கெந்தமாதனமும், ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியால் பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கமூர்த்தியின்உண்மையும் இராமேசுரத்தின் கண் பிரகாசிப்பதால் காசியைவிட இராமேசுரமே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய யிம்மூன்றுமகிமைகளிலும் சாலச்சிறந்து விளங்குகின்றது.

எனவே, இத்தகைய மாபெரும் புண்யக்ஷேத்திரமாகிய சேது இராமேசுரத்தின் மகத்வத்தை விரித்துரைக்கும் நூற்கள் இந்துமக்கள் ஒவ்வொருவரும் மிகப் பிரீதியுடன் வேண்டற்பாலதே. இதுகாறும் எத்தனையோ சேதுபுராணங்கள் தமிழில் வெளிவந்திருந்தும் அவைகளில் சேதுவின் ஆதிமுதலான வரலாறுகள் நுட்பமாய் கூறப்படவில்லை. இக்குறையை நிவர்த்திக்க எமது மூதாதைகளாண்டுவந்த ஏட்டுப்பிரதியானது சிறந்த சாதனமாகக் காணப்பட்டதால் அதைஅனுசரித்து யிக்காலத்துக்கேற்றவாறு அச்சிட்டுதவுமாறு அனேகபக்தர்கள் எமது தந்தையாரிடமும் அவர்காலஞ்சென்றபின் எம்மிடமும் கேட்டுக்கொண்டும் அக்காலத்தில் எமக்குள்ள பண உதவியின்மைமுதலிய சில அசந்தர்ப்பங்களால் வெளியிடமுடியாதுபோய் இப்பொழுதுதான் பூர்த்திபெறும்சந்தர்ப்பங்கள் வாய்ந்து அவ்விதமே பூர்த்தியாயிற்று.

மிகுந்தபிரயாசையின்மேல் எம்மால் வெளியிடப்பட்டிருக்கும் இந்நூல் அன்புமயமாயிலங்கும் சிவநேசர்களின் ஆதரவைப் பெறுமென நம்புகின்றேன். இதன் கண் தோன்றும் குற்றங்களை எம்மீது கருணை கூர்ந்து தெரிவிக்கும் அன்பர்கட்கு யாம் பெரிதும் கடப்பாடுடையராவோம்.

மு. சே.

# சேதுராமேச்வர க்ஷேத்ர புராணம்

## பொருளடக்கம்


| விஷயம். | பக்கம். |
|---|---|
| **(தலமகத்துவகாண்டம்)** | |
| புண்ணியசொரூபமாகிய கெந்தமாதனபர்வதச்சிறப்பு | 1 |
| ரெத்தினகாமஹோததிசங்கமவரலாறும் ஸ்ரீசேதுஜெனனமும் | 2 |
| சேதுபந்தனம் (திருவணைகட்டுதல்) | 9 |
| சேதுவுக்கு தனுஷ்கோடிஎன்ற நாமம்ஏற்பட்டவரலாறு | 15 |
| சிவலிங்கப் பிரதிஷ்டை | 17 |
| காசிசென்றஅநுமானும் லிங்கமும் | 21 |
| கெந்தமாதனபாதாளபிறப்பும்சேதுவின்நிறையுயர்வும் | 27 |
| சேதுஎன்ற ராமேச்சுரநகரச்சிறப்பு | 31 |
| சேதுக்ஷேத்ரம் | 35 |
| சேதுமஹாயாத்திரை | 45 |
| **(தீர்த்தமகத்துவகாண்டம்)** | |
| நவபாஷாண தீர்த்தம் | 65 |
| தர்மபுஷ்கரணிஎன்ற சக்கரதீர்த்தம் | 67 |
| வேதாள வரததீர்த்தம் | 69 |
| பாபநாசதீர்த்தம் | 71 |
| வைரவதீர்த்தம் | 74 |
| கபிதீர்த்தம் | 76 |
| சீதாபுஷ்கரணிதீர்த்தம் | 78 |
| வில்லூரணிதீர்த்தம் | 80 |
| மங்கள தீர்த்தம் | 82 |

## பொருளடக்கம்


| விஷயம். | பக்கம். |
|---|---|
| இருணவிமோசனதீர்த்தம் | 84 |
| அமிர்தவாபிதீர்த்தம் | 87 |
| லட்சுமணதீர்த்தம் | 89 |
| இராமதீர்த்தம் | 91 |
| சுக்ரீவதீர்த்தம் | 93 |
| அங்கததீர்த்தம் | 96 |
| சாம்பவதீர்த்தம் | 97 |
| வாலிதீர்த்தம் | 98 |
| தருமதீர்த்தம் | 100 |
| பீமதீர்த்தம் | 105 |
| அர்ச்சுனதீர்த்தம் | 107 |
| நகுலதீர்த்தம் | 110 |
| சகாதேவதீர்த்தம் | 111 |
| பிர்மதீர்த்தம் | 113 |
| பரசுராமதீர்த்தம் | 117 |
| துரோபதைதீர்த்தம் | 120 |
| தேவதீர்த்தம் | 121 |
| அநுமதீர்த்தம் | 123 |
| அகஸ்தியர்தீர்த்தம் | 130 |
| அக்னிதீர்த்தம் | 132 |
| நாகதீர்த்தம் | 140 |
| மஹாலட்சுமிதீர்த்தம் | 142 |
| காயத்ரி சாவித்ரி சரஸ்வதி தீர்த்தம் | 144 |
| கெங்கா யமுனை கயா தீர்த்தம் | 149 |
| பிர்மஹத்திவிமோசனதீர்த்தம் | 151 |


## பொருளடக்கம்


| விஷயம். | பக்கம். |
|---|---|
| சங்கதீர்த்தம் | 153 |
| சக்கரதீர்த்தம் | 155 |
| சூரியபுஷ்கரணிதீர்த்தம் | 157 |
| சந்திரபுஷ்கரணிதீர்த்தம் | 158 |
| சிவதீர்த்தம் | 159 |
| சாத்யாமிர்ததீர்த்தம் | 164 |
| மாதவதீர்த்தம் | 168 |
| நளதீர்த்தம் | 171 |
| கெந்தமாதனதீர்த்தம் | 173 |
| கவயதீர்த்தம் | 174 |
| கவாட்சதீர்த்தம் | 175 |
| நீலதீர்த்தம் | 176 |
| சர்வதீர்த்தம் | 177 |
| ஜடாமகுடதீர்த்தம் | 180 |
| கோடிதீர்த்தம் | 183 |
| சர்வரோகநிவாரணதீர்த்தம் | 185 |
| விபீஷணதீர்த்தம் | 190 |
| ஜோதிசொரூபமாகியசேது அல்லது தனுஷ்கோடிதீர்த்தம் | 194 |
| அர்த்தோதயமஹாபுண்யகாலஸ்நானம் | 197 |
| மஹோதயபுண்யகாலஸ்நானம் | 198 |
| மஹாலயபுண்யகாலஸ்நானம் சிரார்த்தம் | 199 |
| ஆடி அமாவாசைபுண்யகாலஸ்நானம் | 200 |
| சூரியசந்திரகிரகணபுண்யகாலஸ்நானம் | 201 |
| சேதுதீர்த்தில்செய்யும்தானங்களும் அவைகளின்பலனும் | 207 |

## பொருளடக்கம்


| விஷயம். | பக்கம். |
|---|---|
| **(மூர்த்தி மகத்துவகாண்டம்)** | |
| ஸ்ரீராமநாதக்கடவுள்எனும்ஸ்ரீராமலிங்கம் | 227 |
| ஆலிங்கனதெரிசனம் | 230 |
| திருப்பள்ளிஎழுச்சிதெரிசனம் | 231 |
| உச்சிக்காலதெரிசனம் | 232 |
| சந்திபூஜாதெரிசனம் | 233 |
| மஹாசிவராத்திரிமகத்வமும் சிவசந்நிதியில் சேது கெங்கை [தீர்த்தஅபிஷேகமும்] | 236 |
| மலைவளர்காதலிஎனும் ஸ்ரீபர்வதவர்த்தனிஅம்மன் | 241 |
| ஸ்ரீமத்அநுமத்லிங்கம் | 243 |
| சேதுமாதவர் | 245 |
| கெந்தமாதனபர்வத தெரிசனமும் டிபர்வதசிகாமீத [மர்ந்து சேதுதெரிசனமும்] | 247 |
| காட்டுப்பிள்ளையார்என்ற சாட்சிவிநாயகர்தெரிசனம் | 249 |
| சேதுமஹாயாத்ரைசம்பூரணம் | 251 |



—o—

## பொருள் அடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| **யாத்ரீகர்கட்குஉபயோகப்படும்குறிப்புகள்** | |
| அபிஷேகங்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் | I |
| தங்கும் சத்திரங்கள் மடங்கள் | II |
| வைத்திய சாலைகள் | IV |
| வாசக சாலை | IV |

# பொருள் அடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| **படங்கள்** | |
| கெந்தமாதன பர்வதச் சாரலில் ஸ்ரீ ராமர் சிவலிங்கப் பிரதிட்டை செய்தல் | 1 |
| சேதுபந்தனம் — ஸ்ரீ ராமஸ்வாமியின் ஆக்ஞையின் மேல் நளன் ஸ்ரீசேதுசமுத்திரத்தில் இலங்கைசெல்வதற்கு திருவணைகட்டுதல் | 9 |
| ஸ்ரீராமநாதசுவாமிபர்வதவர்த்தனிஅம்பாள் | 227 |
| ஸ்ரீராமர்பட்டாபிஷேகம் | 251 |



கெந்தமாதன பர்வதத்தில் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி சைனியங்களுடன் [illegible]



ஸ்ரீபர்வதவர்த்தனிசமேத இராமநாதஸ்வாமி ஸஹாயம்.

# சேது ராமேச்வர க்ஷேத்ர புராணம்

## கணபதி துதி

திரைகடலுடுத்தவையத் திலகமாம்தேவைதன்னில்
பரையருள்பொங்குஞ்சேது பானருட்பாலிப்பேற்று
வரைகெந்தமாதனத்தால்வான்புகழோங்குமாண்மை
உரையதுசெய்தற்காகு வாகனன் பாதம் போற்றி.

## ஸ்ரீராமலிங்கம் துதி

எத்தலங்களுக்கு மேலா மிலங்கிய தேவைதன்னில்
சித்தி முத்திகள் கொடுக்கும் தெய்வராமேசர் பாதம்
பக்தியாய் சிரமேற்கொண்டு பர்வதவர்த்தனித் தாய்
உத்தமிதன்னைப் போற்றி உயர்சேதுமகிமை சொல்வோம்.

## (தலமகத்துவ காண்டம்)

## புண்ணிய சொரூபமாகிய கெந்தமாதனபர்வதச் சிறப்பு,

நெடியகடல்சூழ்ந்த இப்பூமண்டலத்தில் பிர்ம்ம சிருஷ்டியில் மிகச்சிறந்துபூமகளின்ரத்னக்கிரீடங்களெனப்பெயர்பெற்றுவிளங்காநின்ற இமயம்,மந்தரம், கைலை,விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம் கெந்தமாதனம் ஆகிய இவ் வஷ்டமா பருவதங்களில் மகா புனிதத் தன்மைவாய்ந்ததும் சதா சுகந்தவாடையைத் தெய்வீகமாக வீசிக் கொண்டிருப்பதும் உலகிலுள்ள சகலதீர்த்தங்களும்,புண்யநதிகளும் விரும்பி வசித்துவருவதும்தேவர்கள் ரிஷீஸ்வரர்கள்,சித்தவித்யாதரர்கள், கெருட காந்தர்வர்கள், இந்திராதி, அஷ்டதிக்குப் பாலகர்கள்

சூரிய சந்திரர்கள், தேவமாதர்கள் முதலியவர்களும். ஸ்வர்க்கம்,வைகுண்டம் முதலிய புண்ய லோகங்களிலே, வாசஞ்செய்யும் புண்யாத்துமாக்களும் சத்யலோகத்திலே வெண்டாமரை மலரில் வாணி சமேதரா வீற்றிருக்கும் பிர்ம்ம தேவனும், வைகுந்த வாசனாகிய மகாவிஷ்ணு திருமகள் சகிதனாகவும், மலைமடந்தையோடு கைலைவாசனாகிய பரமசிவனும், உல்லாசமாகப் பொழுதுபோக்கும் வசந்த மண்டபமாகக் கொண்டதுமான, கெந்தமாதன மென்னும் கற்பகாசலத்தின் ஒப்புயர்வற்ற மகிமையை எடுத் துரைப்பதென்றால் அகில நாயனாகிய சாக்ஷாத் ஸ்ரீஉமாகாந்தனின் கடாக்ஷ மிருந்தாலன்றி அற்ப சக்தியுடைய நம்போன்றோர்களால் இயலாதகாரியமேயாகும் தெட்சிணபாகத்தில் பொதிகை, மயேந்திரகிரி முதலிய பர்வதங்களுக்குச் சமீபத்தில் சமுத்ரக்கரையோரமாக கார்மேகத்தை நிகர்த்த கரிய நிறங்கொண்டு வான்முட்டும் சிகரங்களையுடைய அனேகதொடர் மலைகளைக் கொண்டதாயிலங்கும் கெந்தமாதன பர்வதமானது, திருச்செந்தூரில், தொடங்கி ரெத்னாகர மகாசாகரக் கரையோரமாய்க் கீழ் திசை நோக்கிப் படர்ந்து அம்மலைத்தொடரானது முற்றுப் பெறும் பாகத்திற்கு கற்பகாசலம் எனப்பெயர். ரெத்னாகர மகாசமுத்திரம் தெற்கிலும், மகோததி மகாசமுத்திரம் வடக்கிலும், கற்பகாசலத்தை மருவி அலை மோதிக் கொண்டிருப்பதால் அம்மலையின் இயற்கை வனப்பை மிகுதிப்படுத்திக் கொண்டிருந்தது. உதயசூரியனின் இளங் கதிர்களும், அஸ்தமனம் பொன்கதிர்களும், சமுத்திரத்தில் படும்போது, அலைகளானதுஉருக்கிவார்த்தபொன்னானது ஓடுவதுபோன்றுமின்னிக்கொண்டு ஹோ!வென்ற சப்தத்துடன் மோதி ஆகாயத்தில்எழும்போது அம்மாமலையானது தங்கக்கோட்டையால்சூழப்பட்டதாகத்தோன்றும். தறவிசந்திரோதய காலங்களில் சந்திரனுடைய பொன்னொளி படர்ந்த சமுத்ரமானது அம்மலையின் இரு பக்கமும் கண்ணுக்கெட்டாததூரம்வரைக்கும் நீலக்கம்பளத்தை விரித்துஅதில் கண்களைப் பறிக்கக்கூடிய ஒளியடிக்கத் தக்க பட்டை தீர்த்த விலை உயர்ந்த வைரங்களைப் பதித்தாற்போன்று தக தக்வென மின்னிக் கொண்டுஉயருணந்தக்காட்சியை அளித்துக்கொண்டிருக்கும். நிற்க, அம்மாமலைமீதுபஞ்சதருக்களாகிய சந்தனம்,அரிச்சந்தனம்,மந்தாரம்



மாலதி, கருமுகை, திலகம்,மகாவாழை,துழாய்,துருக்கம், அனங்கம், பாரிசாதம், கற்பக விருக்ஷங்களும், மகிழ், சோங்கு, சண்பகம், வலம்புரி, கமுகு, அசோகு, பலா, தேமா, தெங்கு,பனை, ஆல், புங்கு கொன்றை, காவல், வேம்பு, அத்தி, வாகை,வில்வம்,மல்லிகை,முல்லை இருவாட்சி, மரு, தாழைமுதலிய விருட்ச ஜாதிகள் அடர்ந்து படர்ந்து, செழித்துத்தழைத்து, அரும்பிப் பூத்து, காய்த்துப்பழுத்து சுகந்தவாசனையை வீசிக்கொண்டிருக்கும். சொல்லுதற் கரிதாகிய சக்திகளையுடைய பலவித மூலிகைகளும் ஜீவாம்ருதங்களென அழைக்கப்படும் மிருதசஞ்சீவி, அமிர்தசஞ்சீவி, ஜீவசஞ்சீவிமுதலிய அபூர்வ மகாமூலிகைகளும் காயகற்பகமான கருநெல்லியும் பச்சைப்பசேலெனச் செழித்துநிற்கும் தெள்ளீரையுடைய ஓடைகளும் வனப்பு மிகுந்துஓடிக்கொண்டிருக்கும் அருவிகளும் அதனிரு கரைகளிலும் விருட்சங்களிலுமுள்ள குயில்,மயில்,சாரங்கம், கிளி,நிலாமுகி,பூவை வானம்பாடி, மைனா முதலியபறவைகளின் உல்லாசநடையும், தோற்றமும், இனியகானங்களும், நீரில் வாசஞ்செய்யும் பொன்னிறமீன்களும், நீர்ப்பறவைகளும், நீந்திவிளையாடும்காட்சியும்,, இன்பசாகரத்திலாழ்த்தக் கூடியவையாயிருக்கும் தெய்வதச்சனால் அமைக்கப்பட்டு பார்ப்பதற்கு ரமணீகரமான படித்துறைகளுடன் விளங்கிக் கொண்டிருக்கும் எண்ணிறந்த தெள்நீர்த்தடாகங்களும் அத்தடாகங்களில் புஷ்பித்திருக்கும் ஆம்பல், நீலோர்ப்பவம், அல்லி, தாமரை முதலிய புஷ்பங்களிலுமிருக்கும் தேனைக்குடித்துவிட்டு மதுமயக்கத்தால்வண்டுகள் செய்யும் ரீங்காரகானமும் தூயவெண்மைநிறமுடைய அன்னப்பறவைகள் நீந்தித்திரியும் அழகிய தோற்றமும், செவிக்கும் நயனத்திற்கும் அமுதவிருந்தூட்டிக் கொண்டிருக்கும் தேவேந்திராதி, பிர்ம்மவிஷ்ணு, பரமசிவன்முதலிய தேவர்களின் வசந்தமண்டத்தின் அமைப்பையும் காட்சியையும் அப்படியே சித்தரித்துக்காட்டுவதற்கு வேண்டிய வார்த்தைகள் இனிமேல்தான் சிருஷ்டிக் கப்படவேண்டியதாயிருக்கிறது. ஜெகஜோதியாக ஒளிர்ந்துகொண்டிருக்கும் இவ்வசந்த மண்டபங்களைத்தவிர மகாரிஷீஸ்வரர்களின் திவ்ய ஆசிரமங்களும், பன்னகசாலைகளும், யாகசாலைகளும், மகாபரிசுத்தமாகத்திகழ்வதுடன் எக்காலமும் வேதபாராயண கோஷங்களும் மந்திரகானங்களும்காருகபத்யம்,தக்ஷிணாக்னி, ஆகவநீயம். என்னும்

முத்திகளாலய வேள்விகளும், யாகங்களும், ஜபதபங்களும், மங்க
ளகரமாக கெந்தமாதன மென்னும் கற்பகாசலத்தில் சதா முழங்கி
க்கொண்டிருக்கும்

## ரத்னாகர மகோததி சங்கம வரலாறும்

## ஸ்ரீ சேது ஜெனனமும்


இத்தகைய மகா மகிமை பொருந்திய கெந்தமாதன மென்னும்
கற்பகாசலத்தை பிர்ம்ம, விஷ்ணு, ருத்திரன்முதலிய சகலதேவகண
ங்களும் ஆரோக்ய ஸ்தலமாகக்கொண்டு வீற்றிருக்கையில் ஓர்தினம்
லோகமாதாவாகிய பரமேஸ்வரியானவள் பரமேஸ்வரன்ஏகாந்தமாக
வீற்றிருப்பதைக்கண்டு நாயகா! அடியாள்மனதில் ஓர்எண்ணமான
து என்னவெனில் நாயகிக்கெந்தமாதனத்தை இன்பவாசஸ்தலமாகக் கொண்டு
அவ்வாறே தேவர்களுக்கும், புண்யாத்மாக்களுக்கும், அருளினே
மோ அன்றமுதற்கொண்டு உதித்திருக்கிறது அம்மகத்தான எண்
ணத்தை அதிசீக்கிரத்தில் நிறைவேற்றியருள திருவுளம்பற்றவேண்
டு மெனத்துதித்துநிற்கையில், ஓ பெண்கள்நாயகமே, சர்வலோகங்
களிலுமுள்ளசகல ஜீவராசிகளுள்ளும் சக்திசொரூபமாய்நின்றஜெக
ஜ்ஜோதியாக விளங்கும்உன்னால்முடியாதகாரியம் யாதுளது! உன
தபிப்ராயந்தானென்ன! எனதிரிகேத்ரதாரியாகிய ஸ்ரீசந்திரஜடாதர
மூர்த்திகேட்க உமையவள்சொல்லத்தொடங்கினள் தேவரீரின்கடா
க்ஷவீண்யத்தால் மஹாமகிமைபூண்டு காற்றைச்சுவாசித்த மாத்திர
த்திலே கற்பகோடிகாலவாழ்வும் கண்களினால் தெரிசித்தமாத்திரத்
திலே யாருக்கும்கிடைத்தற்கரிய சாயுட்சியபிரப்தமும் அளிக்க
வல்ல இக்கெந்தமாதனமாகிய கற்பகாசலத்தின் உத்தரபாகத்தில்
மகோததி மகாசமுத்ரமும் தெக்ஷிணபாகத்தில் ரத்னகா மகாசமுத்
ரமுமிருந்துமலைமீதுஅலைகளை வீசிக்கொண்டு எந்நேரமும் ஜெயஹோ
ஷன்றமங்கல ஆரவாரம் செய்துகொண்டும் தென்கிழக்குப்பாகமோ
கிலப்பரப்பாகவுமிருந்து கொண்டிருக்கிறது ஹே, அன்பேஉருவாக
க்கொண்டநாயக, இந்நிலப்பாகத்தில் பதினான்கு உலகங்களிலுமு



ள்ள புண்யதீர்த்தங்கள் நதிகள்யாவற்றையும் வரவழைத்துஅப்புண்
ய தீர்த்தநதிகளின் பெருக்கால் ரத்னகா மகோததி சாகரசங்கமத்
தைஉண்டுபண்ணி இம்மாபெரும்புண்ய தீர்த்தத்துக்கு வேதசொரு
பத்தையளித்து நித்தியமங்களாகாரத்தையும் இதுகாறும் எந்தத்தீர்
த்தத்துக்கும் அளிக்கப்படாத மேன்மைபொருந்திய வரப்பிரசாதங்
களையுமளிப்பதுந் தவிரஇப்பர்வதத்தில்எழுந்தருளியிருக்கும்தேவே
ந்திராதி பிர்ம்மவிஷ்ணு சகல தேவரிஷிகணங்களுடனும் நாம்இதில்
நித்தியஸ்நானஞ்செய்துகொண்டிருக்கவேண்டும்.இதுதான்எனது
கோரிக்கைஎன்று சொல்லிபக்திவினயமாய்ஸ்தோத்தரித்துநிற்கும்
மகாதேவிக்கு அங்ஙனமே செய்வதாகவாக்களித்து மறுநாளுதைய
காலத்தில் அகிலலோகங்களிலுமுள்ள சகலதேவகணங்களும் ரிஷிக
ளும்சூழ இந்திரன் பிர்ம்மா விஷ்ணுஇவர்களுடன் இந்திராணி சரஸ்
வதி மகாலெக்ஷ்மிமுதலிய தேவநாயகிகளும்பின்தொடர உமையவள்
சமேதராய் பரமசிவன் ரிஷபவாகனத்திலாரோகணித்து கெந்தமாத
னத்தில் தென்கிழக்குப்பாகமாகவுள்ள நிலப்பரப்பைச்சமீபித்துஈரே
ழுபதினான்குலகிலுமுள்ள புண்யதீர்த்தங்கள் நதிகள்யாவும் இவ்வி
டம் வரக்கடவதென மனதில் நினைத்தமாத்திரத்தில் கீழுலகங்களா
கிய அதலம், சுதலம், தாரதலம், இரசாதலம், மகாதலம், பாதாலம்
ஆகியஏழு உலகங்களிலுமுள்ள புண்யதீர்த்தநதிகள்யாவும் எல்லை
யற்ற ஆனந்தங்கொண்டு யாவருக்கும் கிடைத்தற்கரியசர்வேஸ்வர
னின்திருமேனியைத்தெரிசித்து இன்புறும்பாக்யம்கிடைத்ததென
துள்ளிக்குதித்துஆர்பரித்துக்கொண்டுஅதிவேகமாகக்கீழுலகங்களை
க்கடந்துசங்கையில்லாது நிலத்தில்வந்து பெருகியோடவும் மேலுல
கங்களாகியபூலோகம்,புவர்லோகம்,சுவர்லோகம்,மகர்லோகம்,சன
லோகம்,தவலோகம்,சத்யலோகம்,ஆகிய இவ்வேழுலகத்தீர்த்தங்க
ளும்மகாவரப்பிரசாதங்களையுடையதாதலால் சிவனுடைய அழைப்
பைக்கண்டுமகிழ்ச்சியால்வெள்ளப்பெருக்கடைந்துமிகுந்தஆரவாரத்
துடன்ஆகாயவானியாகப்பூமியில்பிரவேசித்துபாதாளதீர்த்தங்களு
டன்ஒன்றாகக்கலந்து நிலப்பரப்பைஅடைந்துஇருபுறமும் மகாசாக
ரத்தை நோக்கிப் பாய்ந்தோடி அதனால் ரத்னகாமகோததி சாகர

ஸங்கமமாகிக்கொண்டிருக்கும்போது தேவர்கள் ஆகாயத்தினிடமாக வந்துதேவதுந்துமிகளைமுழக்கி பூமாரிபொழிந்து மங்களகீதங்களைப் பாடினார்கள். அக்காலையில்ஈஸ்வரன்பிரம்மாவைப்பார்த்துவாரும்பிர்ம்மதேவ,இப்புண்யதீர்த்தசாகாசங்கமத்துக்குவேதசொரூபமளிக்கவேண்டியிருப்பதால்நான்குவேதங்களையும் தீர்த்தசொரூபமாகஇதில்பிரகாசிக்கச்செய்களனத்திருவாய்மலரபிர்ம்மனும்அவ்வாறேருக்,யசுர், சாம,அதர்வண நான்குவேதங்களையும்தியானித்தமாத்திரத்தில்வேதங்களும்தனித்தனியேதீர்த்தசொரூபம்பெற்றுஓம்என்ற பிரணவமூலத்தைஓங்காரமாய்த்வனித்துக்கொண்டேசாகாசங்கமத்தில்கலக்கபரமேஸ்வரன்பார்வதியைப்பார்த்து மாதேஉனதுஆவலைநிறைவேற்றிக்கொள்களனமொழியவேஅண்டபிண்டங்களையும்தன்சக்தியாலாட்டிநிற்கும்பரமேஸ்வரியானவள் மகாகோடிகலையுடன்தோன்றி பரமனின்வாமபாகத்திலமர்ந்து பிள்ளையார் சுப்பிரமணியர் இருபக்கமும்வரரிஷபவாகனமேறிசாகரசங்கமத்தில் பிரவேசிக்கும்போது தேவர்கள் அடங்காமகிழ்கொண்டுமேலும்தேவதுந்துமி,அந்தாதுந்துமி முதலிய வாத்தியங்களைமுழக்கிபாரிஜாதமலர்மாரிபொழியவும்சமுத்ரராஜனை வருணபகவான்சொல்லொணமகிழ்ச்சிபூண்டுதன்தேவிமார்களுடன் பார்வதிசமேதனைபரமேஸ்வரனின்பாதபத்மங்களில்வீழ்ந்துஅனேகவாறுப்புகழ்ந்துதோத்திரம்செய்ய வேதசொரூபமாயிருக்கப்பட்டஅத்தீர்த்தமானதுசாட்சாத் ஸ்ரீலோகமாதா சமேதமாய்ஈஸ்வரத்திருமேனிதன்மீதுபட்டவுடன்சொல்லுதற்கரிய தூய்மையும் சக்தியும் கொண்டதாகித்தெய்வீகத் தன்மையடைந்து வேதசாரமான காயத்திரியைகனகனவெனபாராயணஞ்செய்யவும்அவ்வாழியசாகரத்திலுள்ளமகாபுனிதவஸ்துக்களாகியவலம்புரி,சலஞ்சலம். பாஞ்சசன்யம்முதலியசங்கங்கள்பம்பம்எனமுழங்கவும்ஈஸ்வரியானவள்ரிஷபத்தை விட்டிறங்கி அத்தீர்த்தத்தில் ஸ்நானமாடினாள்.

அகிலபுவனங்களையும் பெற்றெடுத்தபரமேஸ்வரியானவள் அத்தீர்த்தத்தைக்கண்டதும்மகிழ்ச்சிப்பெருக்கால் பூத்துத்ததும்பும்கரைகாணா சமுத்ரம்போலாகி கோடிசூரிய கலைபொருந்திநின்ற ஆனந்த சொரூபக்காட்சியை என்னென்றெடுத் துரைப்பது. அப்படிப்பட்ட



ஸ்ரீ [illegible]வாமியான [illegible] இலங்கை செல்வதற்கு நளன் ஸ்ரீசேது சமுத்திரத்தில் திருவணை கட்டுதல்.



பாக்யம்கொண்ட தீர்த்தத்தின்தெய்வீகத்தன்மையைஎதற்குநிகராக சொல்வது. இவ்வாறுசாகரசங்கமத்தில் ஆனந்தசாகரம் மூழ்குவதுபோன்று தீர்த்தமாடி எழுந்த தேவி இப்புனிததீர்த்தம் "சேது,, என்றதிருநாமம்பூண்டுதிரிலோகத்தார்களுக்கும்இகபரச் சிறப்புகளை அளித்துக்கொண்டிருக்கக்கடவதுஎனவரமருளிசஸ்வாமி பிரார்த்தித்துநிற்பமேஸ்வாநுற்கட்சணம் நிற்குந்துசேதுவுக்கு இணையற்ற வரப்பிரசாதங்களை அளிக்கத் திருவுளங்கொண்டுஹே, தேவாதிகளே நம்மாலுண்டாக்கப்பட்டதிருமிகத்தங்கிய இச்சேதுவைப்போன்று ஈரேழுபதினான் குலகங்களிலும்மாட்சிமையுற்ற தீர்த்தம்இல்லையாதலால்இன்றுமுதல்இத்தீர்த்தத்தில்ஸ்நானமாடுகிற தேவ,ரிஷி,மானுடர் முதலிய சர்வஜீவராசிகளும் தங்கள் பாவதோஷங்களினின்றும் விடுதலை பெற்று தூயமனோநிலமையும் ஏகாக்ர சித்தநிலமையும் பெற்றுஉலகில்அஷ்டஐசுவரியங்களுடனும்புகழும்கீர்த்தியும்பெற்று நீடூழிவாழ்வார்கள். மேலும் இத்தீர்த்தத்தில் இருபத்தேழுதடவை வேதசாரமாகியஇருபத்தேழு மகாரகசியஎழுத்துக்களின் பொருளை திரிகாணசுத்தியாய்த்தியானித்துக்கொண்டுதீர்த்தமாடுவார்களேயானால்அப்படிப்பட்டவர்கள்பிறவித்துன்பமற்றுசாலோப,சாமீப,சாருபமென்னும்படிகளையெல்லாம்தாண்டிநித்தியானந்த பிர்ம்மானந்தமாய் சாக்ஷாத்சிவமயமாய்விலங்காநின்ற சாயுட்சபதவியை அடைவார்கள். இவ்வாய்மையுள்ளவாங்களுடனே இத்திருச்சேதுவானது பூமியுள்ளளவும் சூரிய சந்திரர்கள் உள்ளளவும் இப்புண்யபூமியிலே பிரகாசிக்கக் கடவது என்றுமகத்தானவரப்பிரசாதங்களை யருளிமேலுங்கூறுவார்ஹே,தேவர்களே இச்சேதுவானதுகருமலையாகிய கெந்தனத்தையுத்தேசித்துகிரேதாயுகத்தில் தேவர்களுக்கன்றி மற்றோர்கள் இந்த ரகசியத்தையுணருமலும், திரேதா, துவாபரயுகங்களில் திருமாலவதாரத்தி நல்ரிஷிகள்,முனிவர்கள், தர்மாத்துமாக்கள்ரகசியமுணர்ந்துஅவர்களும்கலியுகத்தில்கெந்தமாதனம் பூமியினின்றும் மறைந்து பாதாளப்பிரசப்தமாகிவிடுமாதலால் அப்போதுகெந்தமாதனத்தின்பாநிமகிமை சேதுவைச்சார்ந்து பூவுலகின்கண் அதன்மகாரகசியம் அகத்திய முனிவரால் மனுமக்களுக்கு வெளியாக்கப்பட்டு பூவுலகினரும்சேதுவைச் சொந்தமாக்கிக்கொண்டு இஷ்டகாமியங்க

ளைப்பெற்று மதுபதவியைப்பெற்று மகிழ்ந்திருப்பார்களென திருவாய்மலர்ந்தருளிபார்வதிசமேதராய்கரையேறவே. மகலக்ஷ்மி சமேதராய் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சேதுதீர்த்தமாடி நித்தியமங்களமாக என்றென்றும் திரிலோகவாசிகளும் அவரவர்கள் இஷ்டகாமியங்களை குறைவற அளித்துக் கொண்டிருக்க அருள்புரியவும் பின் சரஸ்வதி தேவியாருடன் பிர்ம்மதேவன் சேதுதீர்த்தமாடி அதிஉன்னதமான வரப்பிரசாதங்களையளித்தும் இப்படியாக இந்திராதி அஷ்டதிக்குப்பாலகர்களும் தேவகணங்களும் இப்பேர்ப்பட்ட மகாமகிமைவாய்ந்த சேதுஈஸ்வரியால் தங்களுக்குக்கிடைத்ததைப்பற்றி பரமேஸ்வரியை நாவறப் போற்றித்துதித்து சேதுநீராடிமுன்னிலும் அதிகசக்தியும் திவ்யசொரூபமும்பெற்று தேவருலகம்போய்ச்சேர்ந்தார்கள்.



## சேது பந்தனம்

அயோத்தியாபுரிக்கரசனான தசரதமஹாராஜனால் கைகேயிக்குக் கொடுத்தவாக்குப்படி பதினான்குவருஷம் வனத்தினில் கழிக்க வேண்டி ஸ்ரீராமச்சந்திரன் தனதுபத்தினியாகிய சீதா தேவியுடன் தண்டகாரண்யத்தில் 10 வருடம்தங்கி வசிஷ்டாதி முனிவர்களுடைய ஆசிகளைப்பெற்று அகத்தியமுனிவரால் ராம--ராவண மகா யுத்தம் நடைபெறும் என்றும் அப்பயங்கரயுத்தத்தில் ராவணாதி ராக்ஷஸ சம்ஹாரம் செய்துமுடிய வேண்டியிருக்கிறதென்றும் ராவணனைக்கொன்ற பிர்ம்மஹத்தி தோஷம்தீர சேதுமத்தியில் பிரகாசிக்கும் கெந்தமாதனத்தில் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்யப்படும் என்றும் வருங்காலநிகழ்ச்சிகளை ஸ்ரீராமரிடம்தெரிவித்து தசமுகங்களையுடைய ராவணேஸ்வரனையும் அவனது அரக்கர்களையும் சைன்யங்களையும் அழிப்பதற்கு வேண்டியசகலவித உபாயங்களையும் தெரிவித்து சிவதநுசைநிகர்த்தசிலையையும் கணைகளையும் விஸ்வாமித்திரனால் ராமனுக்கு பயிற்றுவித்திருகிருப்பதும் அரக்கர்களைக் கொல்வதற்கு இன்றியமையாததுமான அஸ்திரபிரயோக மந்திரங்களையும் விடும்அஸ்திரங்கள் ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரம் லக்ஷமாகப்பெருகி எதிரிகளை சம்ஹாரம் செய்யும் மகாமந்திரத்தையும் ராமருக்கு ஓதுவித்து ராவணசம்ஹாரம் செய்தபின் அயோத்திக்குச் செல்லும்போது கெந்தமாதனத்தில் தன்னைச்சந்தித்துப் போகுமாறு ராமனை வேண்டிக்கொண்டு பொதிகையிலிலங்கும் தன் பொற்குடிசைக்கு அகஸ்தியமாமுனி சென்றார்.

ராமரும் மீதிநாட்களை பஞ்சவடிதீர்த்தக்கரையில் பன்னகசாலை நிறுவி காலம்போக்கி வருகையில் ஓர்நாள் அவ்வனத்தில் உலாவிக் கொண்டிருந்த இலங்கை வேந்தனின் தங்கையாகிய சூர்ப்பநகையானவள் ராமரின்நீலமேனியைக்கண்டு காதல்கொண்டு தன்னை மணந்து கொள்ளுமாறுவேண்ட ஏகபத்தினி விரதனாகிய ஸ்ரீராமர்மறுத்து

லக்ஷ்மணனிடத் அனுப்ப லெக்ஷ்மணர் கோபாவேசம்கொண்டு சூர்ப்பநகையின் மூக்கையும் கொங்கைகளையும் பங்கப்படுத்திவிடவே சூர்ப்பநகையும் கொடியநீலிபோற் சீறிவிழுந்து இதோ உங்களைச் சின்னபின்னப் படுத்தச்செய்கிறேன் பாருங்கள்என்று ஆர்ப்பரித்து தன்தமயனாகிய இராவணேஸ்வரனிடத்தில் போய் கண்களில் நீர் தாரைதாரையாய்வடிய அறுபட்டமூக்கிலும் ஸ்தன்னியத்திலுமிருந்து ரத்தம்ஒழுகிக்கொண்டும் தேகமெல்லாம் ரத்தக்கரை படிந்த அலங்கோலரூபத்துடன் அவரிஅடித்துப்புலம்பி தனக்கு ராமலட்சுமணர்களால் நேரிட்ட விபத்துகளைச்சொல்லி முறையிட்டு பழிக்குப் பழியாக சீதையை சிறைஎடுத்து வரும்படிவேண்டராவணேஸ்வரனும் அக்கணமேலங்கையைவிட்டுப்புறப்பட்டு மாரீசனைப்பொன்மானாக வேடமெடுப்பித்து பஞ்சவடிக்கரையிலே சீதைமுன் அம்மானைத் தோன்றச்செய்கையில் அம்மானின்தோற்றத்தில்மயங்கி அதைப்பிடித்துத்தரும்படி சீதையானவள் ராமரைவேண்டவும் பொய்மானென்றெண்ணாதராமரும்மானைப்பின்தொடர்ந்தும் பிடிக்கக்கூடாமையால் ஓர்கூறிய அம்பாலெய்யவே அம்புபட்டமானானது அபயக்குரல்கொண்டு லெக்ஷ்மணா! லெக்ஷ்மணா! என்றுமாயமாய்க்கத்திற்று.

இச்சப்தத்தைக்கேட்ட சீதையானவள் தன்பதிக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டதாகக்கருதி லெட்சுமணரைப் போய்ப் பார்த்து வரும்படிஅனுப்ப சமயம்பார்த்திருந்த இராவணன்சன்யாசிவேடங்கொண்டு சீதையிடம் பிச்சை கேட்க பிச்சையிடவந்த சீதையை பூமியோடு பேர்த்தெடுத்துத் தன்தேர்மீது வைத்து இலங்கைநோக்கி நடக்கையில் வழியில் ஜடாயுவழிமரித்து சீதையை விட்டுவிடும்படி கேட்க இராவணன் சினந்துமாறுக்க இருவருக்கும் யுத்தம்உண்டாகி அதில் இராவணன் ஜடாயுவைப்பலமாகத் தாக்கி குற்றுயிராய் நிலத்தில் போட்டுவிட்டு சீதையுடன் இலங்கை சேர்ந்து அசோகவனத்தில் திரிசடைமுதலிய அசுரஸ்திரீகள் சூழ சீதையை சிறைப்படுத்தி வைத்தான்.



இங்ஙனமிருக்க மானைப்பின்தொடர்ந்து சென்ற ராமரும் லெட்சுமணரும் ஆசிரம்வந்து சீதையைப் பார்க்கவே காணாது பெருந்துயருற்று வனமெங்கும் தேடிவருகையில் வழியில் ஜடாயு குற்றுயிராய்க்கிடப்பதைப்பார்த்ததும்ஜடாயுவானவர் சகலசங்கதிகளையும் சொல்லி விட்டுமரணமானார் பின்பம்பை ஆற்றங்கரையில் நின்றுகொண்டிருந்த அனுமானைசினேகங்கொண்டு வாலியைக்கொன்று சுக்ரீவனுக்கு கிட்கிந்தையைப்பட்டாபிஷேகம் செய்வித்து அனுமானால் சீதை அசோகவனத்தில் சிறையிருப்பதை அறிந்து சீதையைமீட்டிவர அனுமார் சுக்ரீவன் அங்கதன் நளன் முதலியவீரர்களுடன் எழுபத்திரண்டு வெள்ளம் வானரசேனைகளை அழைத்துக்கொண்டு தக்ஷிணமார்க்கமாகவந்துமயேந்திரகிரிபர்வதத்திற்குஅருகில்தென் சமுத்திரக்கரையில்தங்கி அவ்வாழியசமுத்திரத்தைப்பார்த்துஎவ்வாறுஇச்சாகரத்தைவானரசேனைகளுடன்கடந்துஇலங்கைசேர்வோமெனயோசித்துக்கொண்டிருக்கையில்தகப்பனார்மரணமும், ஆருயிர்க்காதலிபிரிவும் ராஜ்யஅலங்கோலமுதலியதுயரங்களெல்லாம்அலைபோல் ஸ்ரீராமச்சந்திரனுடைய உள்ளத்திலெழும்பி வேதனைசெய்யத்தொடங்கின.

அந் நிமிடம் ஸ்ரீராமஸ்வாமியிடம் அடைக்கலம்புகவந்த ராவணேஸ்வரனுடையதம்பியாகியவிபீஷணனும் அனுமானும்சுவாமிக்கு ஆறுதல்கள்கூற ஸ்ரீராமரும்சமுத்ரராஜனைவருணபகவானைஅழைக்கக்கருதி அவ்விடத்திலேயேதர்ப்பையைப்பரப்பி அதின்மேல்வீற்றிருந்து ஏழுதினம் வருணமந்திரத்தைச் செபித்தும் வருணன் வராதது கண்ட ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி பிரளயகாலருத்ரனைப் போல்சீறிஎழுந்து இதோஒருநொடியில்இவ்வாழியை ஒரேகணையால் வற்றடித்துநிலப்பரப்பாக்கிவிடுகிறேனெனமொழிந்துகோதண்டத்திடமாக வடவாமுக்கினியைகக்கக்கூடியஅக்கினிக்கணைகளைத் தொடுத்துவாரியில்விட்டார்சப்தசாகரங்களையும் வாட்டக்கூடிய அக்கணைகளானது அக்கினிச்சுவாலைகளை குபீல்குபீலெனகக்கிக்கொண்டு பிரமலோகம்வரைபுகைமுட்டிநிறைய சமுத்திரத்திலுள்ள தண்ணீரையும் மீன்முதலிய

ஜீவன்களையும் மலைகளைவாட்டிக் கருக்கியும் டவாமுக்கினிபோன்று எரித்துக்கொண்டிருக்கும்போது ஸ்ரீராமரானவர் பிறிதோர்அக்கினிக்கணையை கோதண்டத்தில்தொடுக்கும்போது அக்கினியால்பாதிக்கப்பட்ட வருணனானவன் வருந்தியும்வாதிருந்தவன் தன்தேவிமார்களுடன்வந்து இராமசுவாமியின் பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாகவிழுந்து பணிந்து உயிருக்குமன்றாடினான் அக்காலையில்புருஷோத்மனானராமரும் கருணைபால் நிறையப்பெற்று வருணனைஆதரித்து சமுத்ரஆழமும் இலங்கையின் நீளமும் உரைப்பாய்வருணதேவே எனவிளம்ப வருணனும் பணிந்துசொல்வான் ஆழமானதுஇன்னதெனச் சொல்லமுடியாததா யிருக்கிறது நீளமோ நூறுயோசனைதூரமிருக்கின்றது எனவிடையளித்து மேலும்கூறுவான் சுவாமி தேவரீருடன் சமுத்திரத்தில் அணைகட்டும் ஆற்றல்படைத்தஒருவானரத்தலைவன் வந்திருக்கிறான் அவன்பெயர்நளன் அவன்முன் ஜென்மத்தில் மயன்என்னும் தெய்வீகசிற்பனாகவும் இச்சென்மத்திலும் அந்தசிற்பதத்துவ அம்சங்களைப் பொருந்தியவனாய் நீரிலிட்டகற்கள் மிதக்கும்வரப்பிரசாத முடையவனாகவும் இருக்கிறான் அவனைக்கொண்டு மிகச்சுலபத்தில் இம்மாபெரும் புனிதசேதுவில் அணைகட்டி பந்தனம்செய்யலாம் எனயோசனைகூறி ஆசிபெற்றுச்சென்றான்

## சேது பந்தனம்

ஒப்புயர்வற்ற மகிமைபூண்டு புண்ய சொரூபமாகத்திகழும்சேதுவில் அணைகட்டி சேதுசாகரத்தை பந்தனம் செய்யவேண்டியிருப்பதால் அதற்கு முதலில் ஆதிமூலதேவனை சேதுகால் சேதுமூலம் என்று சொல்லப்பட்ட இடத்தில்பூஜித்து வழிபாடுசெய்து பின் நவக்ரகஸ்தாபனம்செய்து அதன்மேற்றான் சேதுபந்தனம் செய்யவேண்டும் என்பதாய் வருணன்கூறிய வார்த்தைகளுக் கொப்ப ராமசுவாமியும் சேதுமூலத்தில் (சேதுகால் உப்பூர் தேவிப்பட்டணம்) விநாயக நவக்ரக பிரதிஷ்டை புரிந்து பின் தற்பசயனம் சென்று [திருப்புல்லாணி] நளனுக்கு சேதுபந்தனம் செய்ய உத்தரவளித்து



பல ஆசிகள்கூற நளனானவன் சுவாமியின் உத்தரவை சிரமேற்கொண்டு தயாராயிருக்கையில் அனுமான் முதலிய வானரவீரர்கள் பல திக்குகளுக்கும் சென்று பிரமாண்டமான மலைகளைப் பெயர்த்தெடுத்து ஆகாயமார்க்கமாகப் பாய்ந்துவந்து நளன்கையில்கொடுக்க நளன்வாங்கி தெற்கு நோக்கி சேதுவைப் பந்தனம் செய்யத்தொடங்கினான்

குமுகன், விருபாக்ஷன், துன்முகன், கேசரி பனசன், சுஷேஷணன், பத்மமுகன், துமிந்தன், நீலன், கவ்யன் முதலிய வானரவீரர்கள் கொண்டுவந்து கொடுக்கும் மலைப்பாறைகளை இடதுகையால் வாங்கி, திருவணைகட்டுவதுபோல் அனுமான், கொண்டுவந்து கொடுக்கும் பர்வதக்குன்றுகளையும் தன் இடதுகையால் வாங்கியநளன் மீது அனுமான் அடங்காதகோபம்கொண்டு அடாநளா, கொஞ்சமும் மரியாதையற்று நான்கொண்டுவந்து கொடுக்கும் மலைப்பாறைகளை உனதுஇடக்கையால் அலட்சியமாகவாங்கிய உனதுமமதையை இதோக்ஷணப்பொழுதில் சிதைத்துப்போடுகிறேன் பாரெனஅறைகூவி நளன்மீதுபாய்ந்து தும்சப்படுத்த எத்தனிக்கையில் ஸ்ரீராமசந்திரர் குறுக்கிட்டு, அப்பா! அனுமானே, கோபம்கொள்ளாதே சாந்தம்அடைக, நளன் இச்சமயத்தில் இத்திருவணைகட்டும் மாபெரும் சிற்பியாகவும் நாமெல்லாரும் பணியாளர்களாக விருப்பதும்வாஸ்தவமல்லவா! ஆதலால் நமக்குக்காரியந்தான் முக்யமேயொழிய அற்பகாரியங்களுக்காக நாம்நமது பெருந்தகைமையை இழந்துவிடக்கூடாது, எனப்பலசாந்தமதிகளைக்கூறி அனுமானைத்தேற்றி பர்வதங்களைப் பேர்த்தெடுத்துவரும்படி அனுப்பிவிட்டு நளனைப்பார்த்து வாராய் நள மகாவரப்பிரசாதியும் மாபெரும்பலிஷ்டனாகவும் கலைஞான சம்பன்னனாகவும் பெரியோனாகவுமுள்ள மாருதிகொணர்ந்து கொடுக்கும் மலைப்பாறைகளை மாத்திரம் நீஉன்னிரு கைகளாலும் வாங்கி உனதுதிருப்பணியை இனிது நிறைவேற்றுவாயாக எனத்திருவாய் மலர்த்தருளினர்.

அவ்விதமே செய்வதாக சுவாமியிடம் நளன் உத்தரவு பெற்று வானரவீரர்கள் ஒருவரோ டொருவர் போட்டி போட்டுக்கொண்டு வசந்தமலை உனக்கென்றும் வஜ்ரமலைஎனக்கென்றும் கண்டகண்ட மலைகளையும் பாறைகளையும் பெயர்த்தும், உடைத்தும் அவைகளைச் சிலர் வால்களில் சுற்றிக்கொண்டும், சிலர் தோள் மீது சுமந்து கொண்டும் சிலர் சிரம்மீது வைத்துக்கொண்டும் சிலர் கரங்களால் ஏந்திக்கொண்டும் சந்தோஷ ஆரவாரங்களைச் செய்துகொண்டு வந்து கொடுக்கும் பிர்மாண்டமான மலைப்பாறைகளைத் தன்கையால் வாங்கிச் சமுத்திரத்தில் அடுக்கிக்கொண்டு வருகையில் முதல் நாளில் 14 யோசனை தூரமும் இரண்டாவதுதினத்தில் 20 யோசனை தூரமும் மூன்றும்நாளில் 21 யோசனை தூரமும் நான்காம்நாளில் 22யோசனை விஸ்தீர்ணமும் ஐந்தாம்நாளில் உற்சாகமிகும் வானரவீரர்களால் 23 யோசனைநிகளமும் ஆக 100 யோசனைநீளமும் சுவேலபர்வதம்வரைக்கும் செய்துமுடித்த திருவணையானது இலங்கைக்கரையையடைந்தது. சேதுபந்தனத்தைச் பூரணமாய்ச்செய்துமுடித்த சந்தோஷமும் உற்சாகமிக்க வானரவீரர்கள்மீதும் தங்களுடைய துயர்களை ஒழிக்கும்நிமித்தம் அரக்கர்சம்ஹாரம் செய்யவழிநடந்துகொண்டிருக்கும் ஸ்ரீராமமூர்த்திமீதும் அக்காலையில்திருவணையைப் பார்க்க ஆகாயவீதியில் குழுமியிருந்த தேவர்கள் பாரிஜாத மலர் மாரி பெய்து ஜெயம்! ஜெயமென வாழ்த்தினர்.



## "சேதுவுக்கு"
## தனுஷ்கோடி என்ற நாமமேற்பட்ட வரலாறு,

இவ்வண்ணம்கட்டிமுடிந்த திருவணையில் 72'வெள்ளம் வானரசேனைகளுடன்ராமசுவாமி நடந்துசென்றுஇலங்காபுரிபட்டணத்தையடைந்துராவணனுதிராக்ஷஸர்களுடன் 10தினங்கள்கடும்போர்புரிந்து ராவணசம்ஹாரம் செய்து விபீஷணனுக்கு இலங்காபுரிபட்டாபிஷேகம் சூட்டி சீதாபிராட்டியுடன் ராவணனால் குபேரனிடத்திலிருந்து சொந்தமாக்கிக்கொண்ட புட்பகவிமானத்தில்வானராதிசேனைகளுடனும் விபீஷணனுடனும்ஆரோகணித்து இலங்கையைவிட்டுத் திரும்பி வருகையில் முன் தண்டகாரண்யத்தில் அகத்திய மாமுனிவருக்குக் கொடுத்தவாக்குப்பிரகாரம் அவரைக்காண்பதற்கு கெந்தமாதனபர்வதத்திலிறங்க எண்ணங்கொண்டு அம் மாமலையைவிமானம் அணுகியதும் அத்தெய்வீக விமானத்தின் அக்ரசிம்மாசனத்தில் வீற்றிருந்த ராமச்சந்திரமூர்த்திமலையிலிறங்கும்படி நினைக்கவே விமானமும் கெந்தமாதனபர்வதத்திலிறங்கும்போது புண்யசொரூபமானசேதுவானது அனந்தசயனனைக்கண்டதும் சந்தோஷஆரவாரங்கொண்டு அலைகளைவீசிஎழுப்பி ஆனந்தங்கொண்டாடிற்று.

அகத்தியர் முதலிய சகலரிஷிகளும் ராவணாதி அரக்கர் சம்ஹாரவிபரங்களை ராமச்சந்திர மூர்த்தியால் சவிஸ்தாரமாய்ச்சொல்லக் கேட்டு மட்டற்றமகிழ்ச்சிப்பெருக்கெய்தி ராமச்சந்திரனை வாழ்த்தி இராவணனைக்கொன்ற பிர்ம்மஹத்திதோஷந்தீர கெந்தமாதனத்தின் சாரலிலேயே சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து சாக்ஷாத்கைலாசபதியின் அருட்கடாட்சத்தை பெறுமாறு ஞாயங்களைக்கூறலாயினர்.

முனிவர்களுரைத்த இவ் வாய்மையைக்கேட்ட ராமசுவாமியும் சிவலிங்கஸ்தாபனம்செய்ய அத்யந்த ஆவல்கொண்டு அதற்காயத்தமாகி ஜோதிசொரூபமாக ஒளிர்ந்துகொண்டிருந்த சேதுவில்தீர்த்தஸ்நானமாடசீதாதேவி,லக்ஷ்மணன்,விபீஷணன்,சுக்ரீவன்முதலியவர்களுடன் சேதுதீரத்தையடைந்ததும்இலங்காதிபனாகியவிபீஷணன்

இராமச்சந்திரமூர்த்தியைப் பார்த்து இருகையும் சிரமேற்கூப்பிசொல்லானுபினன், ஓ! ரவிகுலதிலக தேவரீரால் தர்ப்பசயனம் தொடங்கி சுவேலபர்வதம்வரைசமுத்திரத்தில்கட்டப்பட்டுள்ள நூறுயோசனை நீளமுடைய திருவணையை அப்படியேவிட்டுவிட்டால் அரக்கர்கள் அடிக்கடி மிகச் சுலபமாக பாரதத்தாய் பூமிக்குவந்து மக்களுக்கு இடையூறுகளைச்செய்வார்களாதலால் இத்திருவணையையுடைத்துப் போடுமாறு வேண்டவும் அனுமார்முதலிய சகலர்களுமதை ஆமோதித்து நின்றார்கள்.

இக் கருத்துக்கிசைந்த ராமச்சந்திரனும் கோதண்டத்தை கையிலெடுத்து அனேகவஜ்ரக்கணைகளைவிடுத்துதிருவணையைத்தூளாக்கிச்சிதைத்துப்போட்டு இதுகாறும்தேவரகசியமாயிருந்த சேதுமகிமையைசீதாமுதலியோருக்குதெரிவிப்பான்வேண்டி கோதண்டத்தின் ஒரு கோடியைக் கையிற் பிடித்துக்கொண்டு மற்றொருகோடியை சேதுதீர்த்தத்தில் ஊன்றி இப்புண்யதீர்த்தமாகிய சேதுவானது திரிநேத்திரதாரியாகியபரமனால் உற்பவித்ததென்றும்திரிமூர்த்திகளாகியபிர்ம விஷ்ணு ருத்ரனால் நித்திய மங்கள வரப்பிரசாதங்களைப் பெற்றிருக்கிறதென்பதையும் மூன்றுகாலங்களிலும்முக்குணங்களில் சாத்விக ராசத செயல்களாகிய தானம், தவம், ஞானம், மெய்மை, மேன்மை,அருளுடைமை,ஐம்புலனடக்கம்,கல்வி,கேள்வி முதலியவற்றையுந்தாமதச்செயல்களாகிய அநீதி,காமம்,களவு,கொலை,பேருண்டி,நித்திரை,மறதி,கோபம், வஞ்சம் முதலியவைகளைத்தவிர்த்தும் மக்களைநன்னெறியிற்றிருப்பும்வரப்பிரசாதமுடையதென்றும் கோதானம் சர்வலோகதீர்த்தங்கள் நான்மறைகள் இம் மூன்று பெரும் சக்திகளும் ஒன்று சேர்ந்து மகாமகிமையோடு சேது என பெயர் பெற்றிருக்கிறதென்றும்,பிர்மலோகம்,விஷ்ணுலோகம், சிவலோகமாகியமூன்றுபுண்ணியவுலகங்களுக்கும் வழிகாட்டியென்றும் ஊன்றிய விற்கோடியினால் மூன்றுயிடங்களில் குறிப்பாகக் கீறிக்காட்டி,ஜெகஜோதியாக விளங்கிக்கொண்டிருக்கும் சேதுவில்சீதாதேவி சமேதராகத் தீர்த்தமாடி எழுந்தார்கள்.



ஸ்ரீராமசுவாமியானவர் சீதா, ஹனுமான், சுக்ரீவன் முதலியோர் அறிய வேண்டி தேவ ரகஸ்ய மாயிருந்த சேதுவின் மகிமையை தனுவின் கோடி யினால் கீறிக்காட்டி அதன் முக்தி மார்க்கத்தை வெளியிட்டதினால் சேது வுக்கு தனுஷ்கோடி என்ற பெயரும் உண்டாயிற்று.

—o—

ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி

### ராவணேச்வரனைக்கொன்ற பிர்ம்மஹத்தி தீரச் செய்த

## சிவலிங்கப் பிரதிஷ்டை.

—o—

வாணிகேள்வனாகிய பிர்ம்மதேவனுடைய புத்திரனாகிய புலஸ்தியமகாரிஷியின் குமாரனும் வேதசாஸ்திர கலைப் பயிற்சியில் திரிலோகத்திலும் தனக்கீடில்லாதவாறு தேர்ச்சிபெற்று ஒப்புயர்வற்ற மகாமகிமைபொருந்திய தபோபலத்தோடும்கூடிய விச்சிரவாமாவின் புத்திரனாக ஜெனித்து ஈரேழுலகிலும் தனக்கீடில்லாத புஜபலபராக்ரமம் படைத்து தேவேந்திராதி தேவர்களை யுத்தத்திற்கழைத்து வெற்றி பெற்று, குபேரனின் புட்பகவிமானத்தைக்கைப்பற்றி, தேவர்களை ஏவல்கொண்டு எத்திசையும் தன்னுக்கிணைக்குக் கீழ்ப்படியும் வண்ணம் இலங்காபுரியில் அரசாட்சி செய்துவந்த தசமுகனாகிய இராவணேஸ்வரனானவன் வேத சாஸ்திரங்களில் நிபுணனாகவும் கேட்பதற்கு மிகுந்த பயங்கரத்தை விளைவிக்கத்தக்க அகோர தவங்கள்செய்து யாரும் பெறுதற்கரிய வரங்களைப்பெற்றும், பிர்மதேவனின் பௌத்திரனாகவுமிருப்பதால் அவனைக்கொன்ற பிர்மஹத்தி ராமச்சந்திரமூர்த்தியைச் சார்ந்திருப்பதாலும் பின் அதனால் உபாதைகளதிகமாக யிருக்குமென்

றும் அத்தோஷத்தை நிவர்த்திசெய்வான் வேண்டி இக்கெந்தமாதனத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்யுமாறு திரிகால ஞானிகளாகிய அகத்தியர் முதலிய மாமுனிவர்கள் ராமமூர்த்திக்கு உபதேசம்புரிந்தனர்.

ஸ்ரீராமரும் கெந்தமாதனத்தில் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்யும் தன்பாக்யத்தைக்குறித்து அளவிலாத ஆனந்தமெய்தி வாயுபுத்திரனாகிய ஹனுமானைப் பார்த்து ஹே, மாருதி நாமிக்கெந்தமாதனத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யவிரும்பியிருப்பதால் பூலோககைலாசமாகிய காசிமா க்ஷேத்ரத்தையடைந்து அதிசீக்ரம் சிவலிங்கம் கொண்டுவரக்கடவாய் என ஆக்ஞாபிக்க, அஞ்சனாதேவிதனயனும் ராமச்சந்திரனுடைய உத்தரவை பாக்யமெனக்கொண்டு உடனேபுறப்பட ஆயத்தமாகி, அங்கிருந்த யாவரும்காண விஸ்வரூபமெடுத்து ஆகாயத்திலெழும்பி காசியைநோக்கிப்பாய்ந்து சென்றார்.

இங்கு ராமச்சந்திரர்முதலியோர்லிங்கபூஜைக்கு வேண்டிய சகல சாமக்கிரிகைகளையும் சேகரம்செய்து, மறுநாள் அருணன் உதயமாகுங்காலமாகிய முகூர்த்தநேரம்சமீபித்தும் காசிசென்றஹனுமான் லிங்கம்கொண்டுவராததைக்கண்ட ஸ்ரீராமமூர்த்தி விசனமுற்றிருக்கையில் மகாலெட்சுமியான சீதாதேவியானவள் புன்சிரிப்புற்று பஞ்சாட்சரத்தை மனதிலுன்னி கெந்தமாதனபர்வதத்தின்மீது படிந்துள்ள தூயமணலை தன்னிருகரங்களாலும் லிங்கரூபமாய்ச் சேர்த்துப்பிடிக்க அதிலே தேஜோமயமான ஒருஜோதி விளங்குவதை முனீஸ்வரர்கள் கண்டு ஸ்ரீராமரைநோக்கி ஓ, ராமச்சந்திரமூர்த்தியே, எல்லாமுணர்ந்த தேவரீர் கவலைகொள்வதின்காரணம்யாதோ, முகூர்த்தவேளை அணுவும் தவறாமல்நடப்பதற்குமகாலெட்சுமியாகிய சீதாபிராட்டியால் உண்டாக்கப்பட்ட மிருத்தியுலிங்கத்தில் தெய்வீகத்தோற்றம் பொழிகிறபடியால் பிரதிஷ்டைக்கு உகந்தலிங்கம் இதுவே யன்றி பூலோக கைலாசமாகிய காசிநகரிலிருந்துவருவதல்ல, கைலாசமேகெந்தமாதனம் என்னும் மகாரகசியம் தேவரீருக்குத்தெரியாததல்லவே, ஆதலா



தேவரீர் இந்தலிங்கத்தை ஸ்தாபனம்செய்யத்துவங்குதல் உத்தமோத்தமமாகும் என்று நற்போதனைகூறினார்கள்.

அக்காலையில் அகத்தியமாமுனிவருடனவர் பிருகு, விசுவாமித்திரர், கௌதமர், காசிபர், ஆங்கீரா, வசிஷ்டர், மார்க்கண்டர், புலத்தியர், சூதர், வியாசர் முதலிய ரிஷீஸ்வரர்களுடன் சேதுவில் நீராடி நியமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு ஆதியந்தரகிதனாகிய ஈஸ்வரனை ராமச்சந்திரனால் தெரிசிக்கலாம் என்ற பேராவலுடன் அவ்விடம் வந்துசேர்ந்தார்கள்.

ஸ்ரீராமமூர்த்தியும் சீதாவுடன் லட்சுமணர்முதலிய யாவரும் சேதுஸ்நானம்செய்துமாவுரிகளைத்தரித்துக்கொண்டு ரிஷீஸ்வரர்களாலளிக்கப்பட்ட புலித்தோலாசனத்தில் சீதாபிராட்டிபிடித்த மிருத்தியுலிங்கத்துக்கருகில்அமர்ந்து,மஞ்சளினால் விக்னேஸ்வரரைப்பிடித்து அருகுசாற்றி, தூபதீபம்கொடுத்து ஸ்தோத்தரித்துப் பின்லிங்கத்துக்கு அபிஷேகாதிகள்செய்ய துவங்குகையில் அகத்தியர் முதலிய ரிஷிகள் சாமவேதபாராயணம்செய்ய வாரம்பித்தார்கள்.

ஆகமவிதிப்படி ஸுகந்தம், பஞ்சகவ்யம்,பஞ்சாமிர்தம், தேன் கரும்புச்சார், இளநீர் முதலிய 15 வகை அபிஷேகத் திரவியங்களால் லிங்கத்துக்கு அபிஷேகம்செய்துகடைசியாக, சேதுதீர்த்தாபிஷேகம்செய்து வில்வபத்திரம்சூட்டி, தூப தீப நைவேத்தியம் கொடுத்து அதர்மநாசஞ்செய்து தர்மோத்தாரணம்செய்தற்கு பூவின்கண் அவதரித்துள்ள ஸ்ரீமந் நாராயணனாகிய ராமச்சந்திரமூர்த்தியானவர் மிகுந்தபக்திசிரத்தையுடன் ஐம்புலன்களையும் அடக்கி ஏகாக்ரகசித்தனாய் பஞ்சாட்சர மூலமந்திரமாகிய (வாக், மாயா, ஹ்ரீம், க்ஷேம், க்ஷமம், சிவபரம:) மகாரகசியங்களைத் தியானித்துக்கொண்டு ஆசனத்தைவிட்டெழுந்து இருகையும்சிரமேற்கூப்பி சீதாதேவியின்துடர சிவலிங்கத்தைப் பூரணபிரதட்சணம்செய்து தீர்க்கதண்டம்சமர்ப்பித்து லிங்கேஸ்வரனை ராமநாதா எனப் பெயரிட்டழைத்து, அன்புமேலிட்டால் மெய்மறந்து ஆனந்தக்கண்ணீர்சொரிந்து ஹரா ஹரா,சம்போ

மஹாதேவ, மாதுபாகா, நீலகண்டா, சந்திரசேகரா, கெங்காதரா, ஜடாமுடபங்காளா, தற்பரானந்த சின்மயசொரூபா, ஞானவானந்த ஆதிநாதா,பரப்பிர்மமனே என பலவாறுஸ்தோத்திரம்செய்துநிற்கையில் சாட்சாத் ஸ்ரீகைலாசனுனவர் மான்மழு,சதுர்புஜ,காளகண்ட திரிநேத்ரதாரியாய் கோடிசூரிய உதயம்போல் லிங்கத்தின்மேல் தோன்றவும், அகிலமாதாவாகிய பரமேஸ்வரிபக்கத்தில் நிற்கவும் பிர்மதேவனாதி முப்பத்துமுக்கோடி தேவர்கள், ரிஷீஸ்வரர்கள், சிவகணங்கள்சூழ, காட்சியளித்துவாரும் ராமச்சந்திரா! நீர்நம்மை இப்பரிசுத்த ஸ்தலத்தில் பூஜித்து வழிபட்டபடியினாலே, மகாவரப்பிரசாதியும் பிர்ம்ம பௌத்திரனுமாகிய ராவணேஸ்வரனைக் கொன்ற பிர்ம்மஹத்தியானது உம்மைவிட்டு நீங்கிவிட்டதெனத் திருவாய் மலர்ந்ததும், பிர்ம்மஹத்தியானது கார்மேகத்தையொத்த நிறத்துடன் பெரும்பயங்கரத்தோற்றத்துடன் கோடையிடியை யொத்த பேரிரைச்சலிட்டுக்கொண்டு ஸ்ரீராமமூர்த்தியைவிட்டு ஓட்டம் பிடித்தது.

இவ்விதம் ஓடும் பிர்மஹத்தியைப் பார்த்த ஈஸ்வரனார் அதை ஓடிப்போய்விடாமல் காளபைரவரை ஏவித் தடுத்துப்பிடித்து அவ்விடத்திற்றனே ஓர் பிலத் துவாரத்தில்தள்ளிப் புதைப்பித்ததுந்தவிர காளபைரவரை அவ்விடத்தில் சிலகாலம் காவல்செய்யும்படி ஆக்ஞாபித்துப் பின் ஸ்ரீராமமூர்த்தியையும், தேவ ரிஷிகணங்களையும் பார்த்துக் கூறுவாராயினர். ஹே தேவர்களே, துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனார்த்தமாய் இப் பூமியிலவதரித்து ராவணாதி ராக்ஷச சம்ஹாரம் செய்து தர்மத்தை உலகில் நிலைநாட்டிய மகாவிஷ்ணுவாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைப்பற்றியிருந்த அகோரபிர்மஹத்திதோஷத்தை நிவாரணமாக்கி 'பரிசுத்தநிலையையளித்து, நம்மை இங்குளழுந்தருளச்செய்ததற்கு காரணமாகயிருந்தது நமக்கு மிகவும் உகந்த ஸ்தலமாகிய இக் கெந்தமாதனச் சேதுவேயாதலால் இன்றுமுதல் சேதுதீர்த்தமாடி அன்புடன் நம்மை பூஜிக்கின்றவர்கள் எப்படிப்பட்ட கொடிய பாபிகளாயிருந்த போதிலும் கிரகங்களின்பலனைய் கொடிய பிணியாளர்களாயும் கொடிய தரித்திரத்திலாழ்ந்தப் பட்டோ



ர்களாயுமிருந்தபோதிலும் அவைகளினின்றும் விடுதலை பெற்று இகபரம் இரண்டிலும் நிகாற்ற நிறைவாழ்வுபெற்று கடைசியில் பேரின்பவீடெய்தி பிர்ம்மானந்தர்களாய் வாழக்கடவர் என்பதாய்கிருபைமிகுவரம் அளித்து லிங்கத்திலேயே ஐக்கியமானர்.

—○—

## "காசிசென்ற ஹனுமானும் லிங்கமும்"

இங்ஙனமிருக்கையில் சிவலிங்கம்கொண்டுவர காசிமாநகரம் சென்றஅனுமான் கெங்கையில் நீராடி விஸ்வேஸ்வரர் ஆலயம்சென்று ஸ்தோத்திரம்செய்து ஸ்வயம்புலிங்கம் வேண்டி பிரார்த்தித்து நிற்கையில் ஸ்ரீவிஸ்வநாதனும் அனுமானின்பக்தியைச் சோதிக்கத்திருவுளங்கொண்டு வாளாவிருக்கவே, அனுமாரும் ஐம்புலன்களையும் அடக்கி ஏகமனதுடன் மகா உக்ரமாக விஸ்வநாதனைமனதிடை நிறுத்தி நெடுநேரம் தபஞ்செய்துகொண்டிருக்கையில் முகூர்த்த காலம் நெருங்கிவிட்டமைகண்டும் ஈஸ்வரன்பிரத்தியட்சமாய் லிங்கம் கொடுக்காமலிருப்பதைக்கண்டும் அனுமானனவர் ஆறுத்துயருற்று என்னசெய்வதென்று தோன்றாமல் திகைப்புற்று, லிங்கமன்னியில் ராமச்சந்திரமூர்த்தியின்முன் தோன்றுதல் நீதியல்லவென்றெண்ணிப்பின்னும் யோசிப்பாராயினர்.

முகூர்த்தநேரமாகிய உதயகாலத்துக்குள் லிங்கம் கொண்டுவருகிறேனெனக் கூறிவந்து அப்படிச்செய்யத்தவறி நான் இவ்வுலகில்

வாழ்வதைவிட இச் சோதனைக்கு என்னை ஆளாக்கிய கெங்காதரனாகிய விஸ்வநாதனின் பாதாரவிந்தங்களில் உயிரைமாய்த்துக்கொள்வதே சிலாக்யமெனத்துணிந்து ஹே! மகாதேவா, கருணைக்கடலே, இவ்வெளியேன் இனிஅரைக்கணமும் இக்காசீமா க்ஷேத்திரத்தில்தங்கேன் லிங்கமில்லாது ஸ்ரீராமமூர்த்திமுன்பும் தோன்றேன் இவ்விடம்தங்கவேண்டுமாயின் இதோ! என்உயிரை தேவரீர்பாதபத்மங்களில் சமர்ப்பிக்கிறேன் ஏற்றுக்கொள்ளும் தேவதேவாஎன்று கண்ணீர்தாரைதாரையாய் சொரிய உள்ளமுருகி ஏங்கி உயிரைவெறுத்து தலையைச்சுற்றி வில்வலிங்கபீடத்தின்மீது பலமாயடிக்கப்போகும்போது விஸ்வநாதனும் அனுமானின் பக்திவைராக்யத்தைக்கண்டுமகிழ்ந்து தட்சணம்லிங்கத்தின்மீது தோன்றி வாராய் பக்த, உனதுவைராக்யத்துக்கு நாம்மிகவும் மகிழ்ந்தோம். உனது வேண்டுகோள்படி இதோவாங்கிக்கொள் லிங்கம்என்று அனுமானிடம் சுயம்புலிங்கத்தைக்கொடுத்து அந்தரப்பிராப்தமானார்.

சிவனிடமிருந்து லிங்கத்தைப்பெற்றுக்கொண்ட அனுமான் ஆகாயமார்க்கமாய் எழும்பி கெந்தமாதனத்தைஅதிசீக்கிரத்திலடைந்து தான்கொண்டுவந்தலிங்கத்தை ஸ்ரீராமர்முன் வைத்ததும் அங்கு ஏற்கனவே சிவலிங்கப் பிரதிஷ்டையாகிவிட்டதை அறிந்தார். தனியாதஏக்கம்கொண்டார் அனுமார். வெறுப்பும், துயரமும், கோபமும் கொண்டு அவண்நடந்திருக்கும் காரியங்களைப்பார்த்துப் பார்த்துப் பெருமூச்செரிந்து யின்னதுதான் செய்வதெனப்புரியர்மல் மகாபாபியானேனே! மோசம்போனேனே! என்றுவாய்விட்டுப்புலம்பி அடியற்றமரம்போல் அப்படியே பூமியில்சாய்ந்து மூர்ச்சையானார்.

உடனே அருகிருந்த ஸ்ரீராமச்சந்திரர் அனுமானைஎடுத்துஉபசாரம்செய்து மூர்ச்சைத்தெளிவித்துவாராய் அஞ்சனைசுதா, நீ யாதுக்கும்விசனங்கொள்ளவேண்டாம். நீவருவதற்குள் ரிஷிகள் குறிப்பிட்டிருந்தமுகூர்த்தவேளையானது வந்துவிட்டபடியினாலும் சீதாவினாலுண்டாக்கப்பட்ட மிருத்தியுலிங்கத்தில் தெய்வஜோதிஒளிர்ந்ததனாலும் அதையேவைத்துப்பூஜித்தோம். நீகொண்டுவந்த லிங்கம் என்னால்பூஜிக்கப்படவில்லையேஎனக் கவலைகொள்ளாதே, இதுவரையில்



நீவேறு நான்வேறாகப்பாவித்து எக்காரியத்தையும் நான்செய்யவில்லையே, நீயேநானென்றும் நானேநீஎன்றும் திரிகரணசுத்தியாக நான்எண்ணிக்கொண்டிருக்குங்காலையில் உனது இந்தசெய்கைவித்தியாசத்தையல்லவா உண்டுபண்ணுகிறது. ஹே மாருதி! நான்பூஜித்த லிங்கம் உன்னுடைய தன்றி வேறில்லைஎனக்கொள்வாய். சர்வாந்திரியாய்உன்னிலும். என்னிலும், நீகொண்டுவந்தலிங்கத்திலும் நான்பூஜித்தலிங்கத்திலும் இருப்பது அந்தஒரேஈஸ்வரனே என்பதைச் சர்வகலையும்ஐயமறப்பயின்ற நீ அறியாதவிஷயமோ. ஹே, மாருதி கோபமுறாதே, சாந்தியடையக, நீகொணர்ந்தலிங்கத்தை நான் பூஜித்தலிங்கத்துக்குப் பக்கத்தில் உன்பேரால் இப்புண்யஸ்தலத்தில் பிரதிஷ்டைசெய்து பரமேஸ்வரனுடையஅன்புக்குப் பாத்திரமாவாயாகஎன பலபுத்திமதிகளைச்சொல்லி அனுமானை லிங்கஸ்தாபனம் செய்யுமாறு கோரினார்.

ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியினுடைய இவ் வார்த்தைகளைக்கேட்ட அனுமான் ஏக்கம்தணியாது மென்மேலும் வளரப்பெற்றவராய், நான்லிங்கப் பிரதிஷ்டைசெய்வதற்காகவா காசிக்ஷேத்திரம்சென்று ஈஸ்வரனைநோக்கி கடுந் தவம்புரிந்து என்உயிரையும்பலிகொடுக்கப் போனதின்பலனாக சிவனிடமிருந்து லிங்கம்கொண்டுவந்தேன்? முகூர்த்தகாலம் தவறிவிட்டால் வேறொருமுகூர்த்தத்தை வைத்துக்கொள்ளலாமன்றோ? இவ்வளவுகொடுத்து வைக்காத மகாபாவியாகவாநான்போய்விட்டேன், இப்படியெல்லாம்செய்வதற்காகவாஎன்னைகாசிக்ஷேத்ரத்துக்கு அனுப்பினீர். ஐயோ! இதுகாரும்செய்துவந்த என்னுடைய மாசற்றபணிக்கு இன்றுதினம் விக்னம்நேரிட்டுவிட்டதே, இப்புவியில் எனக்குவேண்டிய வல்லமைகளைக் கொடுத்து என்னை தாய்தந்தையர்போன்று ஆதரித்து இன்று உதாசீனம்செய்தது என்னுடையதவக்குறைவுதானோ! தேவரீர்எனனையும் என்தொண்டையும் ஆதரித்திருவுளங்கொள்வதாயிருக்கும்பக்ஷத்தில் முன்னர் ஸ்தாபித்தலிங்கத்தை எடுத்துவிட்டு நான்கொணர்ந்தலிங்கத்தை அந்தஸ்தானத்தில்வைத்துப் பூஜித்தல்வேண்டும். இன்றேல் தேவரீரதுசேவையைச்செவ்வனே செய்யத்தவறி, தேவரீர்வெருப்புக்கு

ஆளான இவ்வுடலுடன் நான்உயிர்தரிக்கமாட்டேன். என, ஓரேவை முக்யமாய் கண்களில் நீர்தாரைதாரையாய்வடிய அழுதவண்ணமாய் மொழிந்த அனுமந்தனுக்கு ஸ்ரீராமர்மேலும் சிலநீதிகளைப் புகன்று மாருதி! சீதாவால் பிடித்து என்னால் பிரதிஷ்டைசெய்த இந்தலிங்கத்தை இனியாராலும் அசைக்கமுடியாது, ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதற்கேற்ப உனது செய்கையிருக்கிறதே யொழிய நான்சொல்வதை நீகவனித்தாயில்லை. ஆதலால் இனிமேலாவது உனதுபிடிவாதத்தைவிடுத்து நான்சொல்லும்வண்ணம் உனதுபேரால் ஸ்வயம்புலிங்கத்தை நீயே பிரதிஷ்டைசெய், அப்படிஉன்னால் பிரதிஷ்டைசெய்யப்படும் லிங்கத்தைமுதலில் வழிபட்டுப் பின்எனது லிங்கத்தைப் பூஜித்தவர்கட்கே சர்வாபீஷ்டசித்திகளும் பாவநிவாரணமும் மோக்ஷபிராப்தியும் சேதுயாத்திரைபூரணபலனும்சித்திக்கும் என்பதாய் மகத்தான வரங்களைக்கொடுத்தும் கொஞ்சமும் கேளாது அனுமானவர் பிடிவாதமிகுதியுற்று நிற்கையில் ராமச்சந்திரமூர்த்தியும் நல்லதெனயோசித்து இவன்மூர்க்கத்தை இவன்வழியிலேயே விட்டுத்திருப்பவேண்டுமென்பதாய்க் கருதி அப்பா! மாருதி உன்னால்முடிந்தால் பிரதிஷ்டைசெய்த இந்தலிங்கத்தைப் பெயர்த்துப்போடு என்றதும் அனுமான்இலேசாக நினைத்து லிங்கத்தைக் கைகளால் பெயர்க்கமுயல அணுவும்அசையாததைக்கண்டுஉடனேவிஸ்வரூபம் கொண்டுகைகளால் பிடுங்கிவிடநினைத்துமுயல அதுவும்அசாத்யமாய்ப்போகக்கண்ட அனுமான் மகாஉக்ரங்கொண்டு தன்வாலால் இலிங்கத்தை மூன்றுசுத்தாகச்சுற்றி சுவாசபந்தனம்செய்து பூமியும்அஷ்டபர்வதங்களும் கிடுகிடுவென நடுங்கும்வண்ணம் அசைத்து ஆகாயத்தில் விசைகொண்டு உன்னி எழும்பியும் லிங்கத்தை அணுவும் அசைக்கமுடியாமற்போய் லிங்கத்தைச்சுற்றியிருந்த வாலானதுலைந்து அறுபட்டுவிடவே அனுமாரானவர் மேருகிரியைப்போன்றுபூமியில்வீழ்ந்து மரணத்துக்குச்சமமானமூர்ச்சை யடைந்தார்.

இவ்விதம் ஆகாயத்திலிருந்து பூமியில்வீழ்ந்த அனுமாரானவர் மண்டைஉடைந்துதேகத்தில்பலவிடங்களில்காயம்பட்டுரத்தமானது வெள்ளமாகப் பீறிட்டுஓடி, விழுந்த அதிர்ச்சியினால் அவ்விடத்தில்



பூமி சுக்கல்சுக்கலாகப் பிளவுபட்டு உண்டாகியிருந்தபெரியபள்ளத்திலூறிய நீருடன்கலந்து எங்கும்பெருகி மூர்ச்சையாகிக்கிடக்கும் அனுமான்மீதும்படவே நீர்தெளிக்கப்பட்ட அனுமானும் மூர்ச்சை தெளிந்து, பக்கத்தில் நீரைஅள்ளித்தெளித்துக்கொண்டும் சாமரையால்விசிறிக்கொண்டும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியும் சீதாபிராட்டியும் நிற்பதைக் கண்டவுடன் எழுந்துநின்று, உண்மை உணர்ந்தவராய் ஸ்ரீராமச்சந்திரனைப் பார்த்து பலவாறுஸ்தோத்திரஞ்செய்து ஸ்வாமி! சிறியோனறியாதுசெய்தபிழையை க்ஷமித்தருளும்எனவேண்டவும் அவ்வாறே ஸ்ரீராமசுவாமியும், அப்பா! நீ யாதுக்குங்கவலையுறவேண்டாம். இவையெல்லாம் நீஅறியாமையாற் செய்தவைகளேயொழிய அறிந்துசெய்தவையல்ல. ஆதலால் சர்வரக்ஷகனாகிய உமாபதியானவர் கருணையே உருவானவராதலால் உனதுசெய்கையைக்குறித்து பட்சாதாபப்பட்டு உனக்குஞானோதயமுண்டாக்கி உன்னை யாட்கொள்வாரே தவிர உன்னைக்கைவிட ஒருபோதும் இணங்கார்.

ஆதலால் மாருதி! இனிமேலாவது நீஉனதுபேரால் லிங்கத்தை ஸ்தாபிப்பாய்என்று ராமசுவாமிசொன்னதும் அவ்வாறேஸ்ரீராமலிங்கத்துக்கு வடபாரிசத்தில் தன்னுடைய விஸ்வலிங்கத்தை அனுமார் விதிப்படி பூஜிக்க ஸ்ரீராமமூர்த்தியானவர் விஸ்வலிங்கத்தை பூஜித்தவர்களடையும்பேற்றைவெளியிட எண்ணி விவரித்துரைக்கலாயினர்.

கேளுங்கள் ரிஷீஸ்வராதி ஈஸ்வரபக்தர்களே! அனுமானால் பிரதிஷ்டைசெய்யப்பட்ட விஸ்வேஸ்வரலிங்கத்தை முன்னர் பூஜிக்காது ராமலிங்கத்தை பூஜித்தவர்கள்எவ்விதபலனையும் அடையமாட்டார்கள். விஸ்வலிங்கத்தை எவரொருவர் எத்தலத்திலாயினும், எத்திசையிலாயினுமிருந்துகொண்டு மனதினால் நினைத்த மாத்திரத்தில் கைலாசத்தில் ஆயிரம் வருடம் அனுபவிக்கும் இன்பங்களைப்பெற்று பிரம்மானந்த வாழ்வெய்துவார்கள். நம்மால்சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டு முன்னிலும்பன்மடங்கு அதிகமகிமையோடு தீர்த்த, மூர்த்தி, ஸ்தலம் இம் மூன்றுவித பூரணமகிமைகளோடு விளங்கிக் கொண்டிருக்கும் இத்திவ்விய ஸ்தலத்துக்கு முன்னமேயே தேவர்களாலிடப்பட்ட தேவைப் பதி என்ற திருநாமமிருந் திட்டபோதி

னும்இன்றுமுதல் இராமேஸ்வரம்எனப் பெயர் விளங்கக்கடவதென் பதாய்வரங்களீய்ந்து சீதாபிராட்டிசமேதருய்லட்சுமணர் பின்தொடர வானராதி எழுபத்திரண்டுவெள்ளம்சேனைகளுடன் அகத்தியர்முத லானரிஷீஸ்வரர்கள் ஆசிகள்கூறி வழியனுப்ப பதினன்குவருடம் பூர்த்தியலடைந்ததும் கணநேரமும் தாமதியாது தன்னிடம் வந்து சேர்வதாக அன்று பரதனுக்குக் கூறியவாக்குப்படி பரதனைக்காண் பதற்கு அயோத்திமாநகரம்எவலுற்றுர்.

—o—



# கெந்தமாதன பாதாள பிராப்தமும். சேதுவின் நிரை உயர்வும்.

✣✣ * ✣✣

கெந்தமாதனகிரி என்ற கற்பக பர்வதத்தில் கூடிய தேவ சபையில், சத்ய லோகத்திலே வெண்டாமரை மலரில் வீற்றிருந்து ஈஸ்வர ஆக்ஞைப் பிரகாரம் படைப்புத்தொழில் புரியும் பிரம்மதேவன் பொன்மயமான தன் ஆசனத்தை விட்டெழுந்து, தேவர்களின் அதி ஆத்ம க்ஷேமாபி விர்த்தியின் பொருட்டும், தெய்வலோகம் ஜன நெருளால் சுமக்கப்படாது காக்க வேண்டியதை உத்தேசித்தும், வாடை பட்டதும் எப்படிப்பட்ட மகா பாபிகளையும் புனிதர்களாக்கி தெய்வலோக பிராப்தி யளிக்கவல்ல கெந்தமாதன கற்பகக் குன்றை பாதாளம் சேர்த்துவிட வேண்டுமென்றும்காரணம் கலியுகம் பிறப்ப தற்கு இன்னும் கொஞ்சதினமே இருப்பதாலும், கலியில் எந்த யுகத் திலும் உற்பவித்திரா வண்ணம் மானிடப் பிறப்புகள் அதிகமாகுமாத லாலும் அதர்மிகள் கோடானுகோடி அவ் யுகத்தில் தோன்றி அவர் களாலேயே சதுர்யுகத்தின் முடிவும். யுகப் பிரளயமும் ஆகவேண்டி யிருப்பது ஈஸ்வர சங்கற்பமும் தர்மமுமாதலாலும், இக்கெந்தமான மானது எப்போதும்போல் பூமியில் பிரகாசித்துக் கொண்டிருக்குமே யானல், கலியுகத்தில் அதர்மிகளைக் காண்பதே அரிதாகிவிடும்.

யுகதர்மம் பிரண்டு போய் பூலோகமென்றும் தெய்வலோக மென்றும் நரர் என்றும், தேவர் என்றும் தர்மமென்றும், அதர்ம மென்றும் இல்லாமல் ஒன்றோடொன்றாருய்ந்து கொண்டு யாவும் சீர்குலைந்து அகிலமே மாபெரும் துக்க சாகரத்திற்குள்ளாகி விடும் அஃதல்லாமலும் ஹே! தேவாதிகளே, என்னுடைய படைப்புத் தொழில் அதிகமான சிக்கலுக்குள்ளாகி அப்படியே ஸ்தம்பித்துப் போய்விடும். மஹாவிஷ்ணுவின் காத்தற்றொழில் அவ்வண்ணமே ஆகி ஸ்தம்பிப்பதும் தவிர அழித்தற்றொழில் கொண்ட பிரளய கர் தாவுக்கும் நிவர்த்திக்க முடியாத கஷ்டத்தை உண்டு பண்ணிவிடும்

ஆதலால் யுகப் பிரளயமும் நடைபெறப் போவதில்லை. கலிபுருடன் தனது தர்மத்தைச் செலுத்த முடியாது நைந்து போவானாகையால் ஹே தேவர்களே! யுகதர்மத்தை நிலைநிறுத்துதற்கு இப் பரிசுத்த மாமலையைப் பாதாளத்தில் சற்றும் தாமதமின்றி ஆழ்த்தி விட வேண்டியிருக்கிறதென்று சாங்கோபசாங்கமாய் பிரஸ்தாபிக்கவே மஹா விஷ்ணுவானவர் பிரமன் முதலியோர்களைப் பார்த்து பிரம்ம தேவன் கூறியதை முற்றிலும் ஆமோதித்து தேவர்களாகிய நாம் யுகதர்மத்தைப் பாதுகாத்து உலகத்தைக் கடைத்தேறச் செய்யும் நிமித்தம் வஸந்தஸ்தலமாகக் கொண்டு நாம் அடைந்துவரும் சுயநலத்தை, தியாகம் செய்து இக்குன்றை பாதாளத்திற்கனுப்பி விட வேண்டுமென்றும் கருணையே உருவாகவும், த்யாகமே நோக்கமாகவும் கொண்டுள்ள தேவர்களாகிய நீங்கள், இப்புனித கைங்கர்யத்தைச் செய்துமுடிக்க சற்றும் பின்வாங்க மாட்டீர்களெனக் கூறி பரமசிவனை நோக்கி இருகையும் கூப்பி ஹே! அனுதிமுக்தாகித, கிருபை புரிவாய் என ஸ்தோத்திரம் செய்து நின்றார்.

இவ்வரலாறுகளை அறிந்த இறையோனும் மகிழ்ந்து, அவ்வண்ணம் செய்து முடிக்கத் திருவருள் சுரந்து முன் விந்தியாசல பர்வதத்தை அங்குஷ்டத்தால் அமுக்கி கர்வபங்கம் செய்த மாபெரும் தபோதனராகிய அகத்திய மாமுனிவரை அழைத்து வாரும் முனிநாதா! யுக தர்மத்தை நிலை நிறுத்துவான் வேண்டி இப்புண்ய குன்றத்தைப் பாதாளத்தில் சேர்த்து விடுவீர் எனத் திருமொழி பகரவும் திருமிக்க அகத்தியனார் மிகுந்த கிலேசமுற்று கிரேதா, திரேதா, துவாபர இம் மூன்று யுகங்களிலும் தேவர், மானுடர் முதலிய சர்வ ஜீவர்களுக்கும் தெய்வீகச் சிறப்பை யளித்துக் காத்து வந்த கற்பகத்தைக் கலியுகத்தில் இல்லாமற் செய்துவிட்டால் மனுமக்களின் கதி என்ன? அவர்களுக்கு உய்வே கிடையாதோ? கலிபுருடனுக்கு அவர்களெல்லாரும் அடிமைகள் தானோ? என உள்ளந்துடிக்க முகமண்டலமானது சிவப்பேற இடி போன்று தேவ சபையில் முழக்கம் செய்தார்.



அகத்தியனாருடைய சோபத்தையும் சிக்கலான இப் பிரச்னையையும் பார்த்த தேவ சபையானது இன்னதுதான் செய்வதெனத் தோன்றாமல் ஈதென்ன விபரீதத்திற்கு இடமோ, யாது நேரிடுமோ எனக் கலங்கி மௌனத்திலாழ்ந்திருந்தது.

இங்ஙனமிருக்கையில் அங்கு எழுந்தருளியிருந்த மார்க்கண்டேய மஹரிஷியானவர் இதற்கு வழியாதென ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தவராய் பரமேஸ்வரனுடைய பாதாரவிந்தங்களில் வீழ்ந்து பிரார்த்திப்பாராயினர் ஹே, ஆதிமூலா, அடியார்க்கும் அடியோய் அகிலரக்ஷகனே தேவரீருக்குத் தெரியாத ஞாயம் ஒன்றுண்டோ தேவரீர் இவ்வாறு மௌனமாயிருந்தால் காரியம் நிறைவேறுவதெங்ஙனம் அகத்திய மாமுனிவருடைய பிரச்னையைத் தீர்த்தருளுமென இறைஞ்சி நின்றார்.

ஸ்ரீ கைலாசபதியும் தன்னிடம் அகலாத பக்தியுடைய மார்க்கண்டேயரின் வேண்டுகோளைக் கேட்டு மகிழ்ந்தவராய் குறுமுனியை நோக்கிக் கூறுவாராயினர். முனிநாத! ஜீவர்களின் மீது உமக்குள்ள கரைகாணா அன்புக்கு நாம் அடிமையாகி விட்டோம். உமது அன்பின் அபாரமகிமையை அளவிட்டுரைப்பது யாரால் இயலும்? ஹே, அன்புமுனியே என்று அகத்தியனாரை மார்போடணைத்து மேலும் சொல்லலுற்றார்.

பாதாளத்தில் அமுக்கப்படும் கெந்தமாதனமானது பாதிநிலத்திலும் பாதி புண்ய சொரூபமான சேது (சாகர, தீர்த்த, வேத சங்கமம்) விலும் சேர்ந்து விடுமாதலால் கெந்தமாதனத்தின் மகிமையில் பாதியைச் சேதுவானது பெற்று முன்னிலும் பன்மடங்கு மகிமை தங்கிய வரப்ரசாதியாய் இப்பூவுலகுள்ளளவும் நிகரற்று விளங்குமாறு நாம் பணித்திருப்பதால், உமது கவலையை விட்டு வீடுக சாஸ்திர விதிப்படி இக்கற்பகத்திற்கு மந்திர பூர்வமாய் த்ருப்தி செய்து பாதாளம் சேர்ப்பிக்க எனத் திருவாய் மொழிந்தருளினார் பரமேச்வரனின் அன்புமிக்க இவ்வார்த்தைகளைக் கேட்ட அகஸ்தியனார் அகமகிழ்வுற்று பரமேச்வரனின் கட்டளையை சிரமேற்கொண்டு

பாதாளப் பிரவேசம் செய்வதின் நியமவிதிகளை தேவர்களுக்குச் சொல்ல வேண்டி தேவ தேவாதிகளே! இக்கற்பகாசலமானது விந்தியம், மகாமேரு, மைநாகம் முதலிய பர்வதங்களைப் போன்று சதாரண மகிமை படைத்ததல்லவாதலாலும் சாக்ஷாத் பரமேச்வரனின் சொரூபமாயுள்ள திருக்கைலாயமே ஈதாதலாலும் இதற்கு ஒருமண்டலம்வரை வேதங்களின் நியமப்படி சாமவேத பாராயணம், எக்யம் முதலியவைகளை பூரணமாய் நிறைவேற்றிப்பின்னேதான் பாதாளப் பிரவேசம் செய்யப்பட வேண்டியிருக்கிறதென மொழிந்து மேலும் கூறுவாராயினர்.

அந்நாற்பத்தைந்து தினங்களிலும் வேத பாராயணம் எக்யங்கள் செய்வதுந்தவிர இக் கெந்தமாதனத்திலுள்ள சேது முதலான சகல புண்ய தீர்த்தங்களாலும் இக் கற்பகத்திற்கு அபிடேகம் செய்விக்க வேண்டுமென்பதாய் சகல நியம அனுஷ்டான விதிகளை சவிஸ்தாரமாகச் சொல்ல ஈசனும் கும்ப முனியினுடைய புத்தி நுட்பத்தைக் கண்டானந்தித்து கருணை மொழியாகிய "தமிழின்" இனிய சொற்களை அம்மொழியில் வல்லோனாகிய அகத்தியர் மூலம் கேட்டின்புற தனியா ஆவல் கொண்டு, சேதுஸ்தல தீர்த்தங்களின் மகத்வங்களை ஆதியோடந்தமாக இத்திருச் சபையில் விரித்துரைக்குமாறு வேண்ட கும்ப முனியும் தேவசபையில் சேதுவின்மகத்வத்தைபிரசங்கிக்கும் தன் பாக்யத்தை எண்ணிஉளங்கனிந்துஇன்னமுதமூட்டுவிக்கும் செந்தமிழ் நடையில் சேது மான்மியத்தை ஒரு மண்டலத்தில் சாங்கோப சாங்கமாகக் கூறி, மங்கள கானங்களுடன் இனிது முடித்து கற்பகத்திற்கு தூப தீபகங்களும் காட்டி தனது அங்குஷ்டத்தை அம்—மாமலை மீது வைக்கவும் அங்குஷ்ட ஸ்பரிச மாத்திரத்தில் கற்பகக் குன்றானது ஜெயஹோ! வென்ற பேரிரைச்சலுடன் தேவர்கள் மங்கள கீதம்பாடி மலர்மாரி தூவ பாதி நிலத்திலும பாதி சேது சாகரத்திலும் பாதாளத்தி லாழ்ந்தது. இவ்விதமாய் சேது வானது நாவாயிரம் படைத்த ஆதிசேடனாலும் சொல்லி முடியாத கெந்தமாதனத்தின் ஒப்புயர்வற்ற மகிமையில் பாதியை அடைந்து முன்னிலும் அதிக சிறப்பும், திருவும், மகிமையும் வரமும், பெற்று ஜெகஜோதியாய் மூவுலகிற்கும் முக்தி மார்க்கத்தை அளித்துக் கொண்டு நித்திய மங்களாகாரமாய் விளங்கிக் கொண்டிருக்கிறது.



## சேது நகரம் என்ற

## ராமேசுவர நகரச் சிறப்பு

பாதாளப்பிருப்தியான கெந்தமாதனக் கற்பகத்தின் ஓர்பாதி சேதுசாகரங் கொண்டும் மற்றோர் பாதி நிலமாக சேது சமுத்ரமத்தியில் யேற்பட்டதினால்அப்புனிததீவில்ஸ்ரீராமச்சந்திரருடைய வாக்குப்படி பிர்ம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்ரர் ஆகிய நான்கு வகுப்பினர்களையும், ஈகை, இரக்கம், தயவு, தாட்சண்யமே உருவாக வந்த சேதுமன்னர் பிரானின் போற்றலினால் சோலைகள் சூழ்ந்த மனோகரமான மாடமாளிகை கூட கோபுரங்களுடைய திருநகரம் அமைக்கப்பட்டு அதிலே அவர்களைக் குடியேற்றி அப் பட்டணத்திற்கு தெய்வ நகரமென்றும், ராமேசுவர மென்றும் திருப்பேர் சூட்டி சேதுமன்னரும் தனது சேதுராஜ்யத்தின் தலைநகராகக் கொண்டு நீதி தவறாது செங்கோலாட்சி வரும் சிறப்பை இயம்புதல் கேவலம் மனித சக்தியால் முற்றிலும் இயலாத காரியம்.

நாற்புறமும் சதாகாலமும் ஜெயஹோ! என்று பேரலைகளை எழுப்பி சப்தமிட்டுக் கொண்டிருக்கும் மாபெரும் புண்ய சாகரமாகிய, சேதுசமுத்ர மத்திலிருக்கும் இம்மாநகரம் பூமிபுகள் தமிழ்மாதின் எழில்மிகு கீராவி மண்டபம் போன்று விளங்கிக் கொண்டிருக்கும்.

எங்குபார்க்கினும் ரமணீகரமான சோலைகளும் அச் சோலைகளுள் அன்னங்கள் வாசஞ்செய்யும் தெள்நீர் நிறைந்து வழிந்து கொண்டிருக்கப்பட்ட தாமரைத் தடாகங்களும், அச் சோலைமரங்களில் சந்திர பிம்பங்களோ வெனதிகைக்கத்தக்க ரூபலாவண்ய மிக்க அத்தெய்வ நகர மங்கையர்கள், வாசனைத் திரவியங்களாலும் நறுமலர்களாலும் பொதியப்படாநின்ற கார்மேகத்தையும் ஆலம் விழுதையும் நிகர்த்துள்ள தங்களது அளகபாரங்கள் காற்றினால்விரித்துத்தூற்றப்பட்டு ஊஞ்சலாடிக்கொண்டிருக்கும் தோற்றமும் கண்கொள்ளாக் காட்சியாகவிருக்கும். நறுமலர்ச் சோலைகளிலுள்ள பூமலர்கள் இயற்கையாக சிறிதுதூரமே சுகந்தவாசனையைப்பரப்பிக் கொண்டிருப்பதைப்பார்த்த தென்றலானது வேகமாயடித்துசுகந்தத்தைப்பறித்து நகர்முழுமையும் நிரப்புதலானது சுகந்தநரகம்இதுவே யெனக் கொள்ளத்தகும். மகாலெட்சுமியும் சந்தோஷப்படும் படியாய் மானையும், சேல் மீனையும். நீலோர்ப பலத்தையும் பழித்த கண் களையுடைய மடந்தையர்கள் குயிலினுமினிய கானங்களைப் பாடிக் கொண்டு சேது தீரத்தில் உல்லாசமாக ஓடம் விடும் காட்சியானது இத்தெய்வநகரத்தில் வாழும் மாந்தர்கள் துன்பமே யின்னதென்றறியாதவர்களாய் சதாகாலமும் ஆனந்த மயமான இன்ப வாழ்க்கையை கொண்டிருக்கிறார்களெனத் தெரிவிக்கும்.

இதைவிடுத்து நகரில் பிரவேசிப்போமாயின் மிகப்படர்ந்து விசாலமாகவுள்ள பளிங்கு போன்றவீதிகளும் திராவிட சிற்பத்திறமையை அப்படியே படம் பிடித்தது போன்று வீடுகளும் மாடமாளிகைகளும் சேது மன்னரின் திருமிகு அரண்மனையும் குபேரனின் அளகாபுரி நாணித்தலைகுனியும் வண்ணம் திருமகள் கடாட்சம் மிகுந்து ஒளிர்ந்துகொண்டிருக்கும் நகரமத்தியில் ஸ்ரீராமநாதக்கடவுளின் திருவாலயம் பார்க்கப்பார்க்கத் தெவிட்டாத அமிர்தம் போன்று திகழுகின்றது வானளாவிய சிகரங்களையுடைய கோபுரங்களும் பாந்தகூடங்களும் அழகிய சுற்றுப் பிரகாரங்களும், பளிங்குமா மண்டபங்களும் ரம்மியமான மேடைகளும் திருக் குளங்களும் சொல்லொண்ணாக் காட்சி களையுடைய திருக்கல்யான மண்டபமும் இன்னும் நவ சக்தி மண்டபம் பள்ளியறை மண்டபம் அலங்கிர்த



மண்டபம்முதலியவைகளும்எண்ணிறந்தஅழகியசிறுகோவில்களும் ஸ்வர்ண விக்ரகங்கள், சுவர்ண வாகனங்கள். சுவர்ண ரதங்கள் முதலியன ஸ்ரீராம நாதன் ஸன்னதியில் சங்கையில்லாமல் விளங்கிக் கொண்டிருக்கும்

மேலும், கலைமகளின் உறைவிடம் இதுவோ, என ஐயுறும்படி கல்விச் சாலைகளனந்தம், மக்கட்கு சம்பிரமமாக அறுசுவை உண்டியளிக்கும் காமதேனுவுக் கொப்பான அன்னச் சாலைகளனந்தம், ஜீவாம்ருதத்தை யொத்த அவுழ்தங்களையுடைய வைத்திய சாலைகளனந்தம், இன்னும் முப்பத்திரண்டு அறங்களுக்கும் உற்பத்தி பீடமாக யிருக்கப் பட்ட இத் திருவிராமேச்வரத்திலே சத்ய சொரூபமாக யிருக்கப் பட்டவர்களும், நான்கு வருணத்தாருள் முதன்மை யானவர்களுமான பிராம்மணோத்மர்கள் வசிக்கும் அக்ராகாரங்களில் சென்றிடிலோ, சதா சர்வகாலங்களிலும் வேத பாராயண கோஷங்களும், சாஸ்திர ஆராய்ச்சிகளும், சத் கர்மானுஷ்டான பூஜாகைங்கரியங்களும், சத் கதா கால க்ஷேபங்களும், மாபெரும் யாகங்களும், பூரண மங்களமாக நிறைவேறிக் கொண்டிருக்கும்.

வேந்தர் முதலிய சகலரும் தன் கையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் வேளாளப் பெருமக்கள் வீதி வழி சென்றிடிலோ ஆண்மைமிக்கத்"தாளாண்மை,, (அன்புகொண்டு விரைந்து ஆகரித்தல், காத்தல்) என்பது அவர்களது ரத்தத்தில் தோய்ந்து போயிருப்பதைப் பார்க்கலாம். தாளாண்மை என்ற மாபெரும் தகைமை பூண்ட அவ் வேளாள மக்கள் எவ்வுயிரிடத்திலும் தளராத அன்பு கொண்டு விரைந்து அவர்களை ஆகரிக்கும் தன்மையாற்றான் வேளாண்மை என்னும் மாபெரும் சிறப்பு அவர்களிடத்தில் தங்கியிருப்பதைக் காணலாம். மேலும் அத்தெய்வ நகரில் வாழும் மாந்தர்கள் தத்தம் வழிகளில் நின்று நீதிநெறி தவறாது ஈஸ்வரனிடத்தில் தீவிர பக்தியுடன் ஒழுகுவது சாலச் சிறப்புடைத்து, கண்டோர்கள் யாவரும் இவர்களென்ன உம்பர்களோ வென்று புகழத் தக்க வண்ணமிருக்கும்.

இத் தேவையம்பதியாகிய ராமேச்வரமானது நாற்புறத்தேயும் சூழப்பட்ட மஹா சமுத்ரங்களால் அழிக்கப் படாமலிருக்கவும் துஷ்டர்களால் கெடுதல்கள் ஏற்படாதிருக்கவும் பாதுகாப்பாளர்களாக வடதிசையில் பார்த்தோர் கெற்பங்கலங்கும் வண்ணம் அகோரரூபத்துடன் இலங்கை மாகாளியும், தென் திசையிற்தெட்சிணமாகாளியும், கீழ்திசையிற் உச்சினமாகாளியும், மேற்திசையிற் அகோரபைரவரும் தேவஆக்ஞையின்படி காவல்புரிந்து வருவதாலித் தேவைப் பதியிற் திருடு, களவு, பிணி, பேய், பிசாசம் முதலிய எவ்விதபயமுமின்றி மக்கள் நிர்ப்பயமாக இன்புற்று வாழும் சாதனம் பெற்றிருக்கின்றார்கள்.



# சேதுக்ஷேத்ரம்.

++O++

இப்பாதகண்டத்தின் கண் விளங்கும் 1008 சிவஸ்தலங்களுள் ஸ்ரீகைலாசபதியாகிய உமா மகேஸ்வரனின் ஹிருதயம்உகந்த ஸ்தலம் இக்கெந்தமாதனமாகிய ஸ்ரீராமேச்சுரமேயாகும். வடக்கில்காசிமாக்ஷேத்திரமும், தெற்கில் இராமேச்சுரமும் ஹிந்துமகா ஜனங்களுக்கு இருபெரும்புண்ய க்ஷேத்ரங்களாக விளங்கிக்கொண்டிருக்கின்றன. காசிக்ஷேத்ரத்தைவிட சேதுக்ஷேத்ரமானது தலமகிமை, தீர்த்தமகிமை, மூர்த்திமகிமை இம்மூன்றும் முழுநிறையுடன் யிப்பூமண்டலத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பதினால் இருக்கு, யசுர், அதர்வணம் இம்மூன்றுவேதங்களாலும் ஸ்மிருதிகளாலும் புராணங்களாலும்பொன்எழுத்துக்களால் புகழ்ந்து போற்றப்பட்டிருக்கிறது.

சேது உற்பத்திக்குமுன்னம் இத்திவ்ய ஸ்தலமானது தேவர்கள் வசந்தமண்டபமாகிய கெந்தமாதன கற்பகபர்வதத்தை உடைத்தாயிருந்ததினால் இத்தலத்தின் பெருமையானது ஆதிகாலந்தொட்டு இந்நிலஉலகில் விளங்கிக் கொண்டிருக்கின்றது. இத் திவ்யக்ஷேத்ரமானது மு "லில்தேவர்கட் கென்றே உண்டாக்கப்பட்டு பின் தேவர்களுடன் ரிஷீஸ்வரர்கட்கும் அதன்பின் தேவர், முனிவர், மானிடர் ஆகிய மூவுலகத்தாருக்கும் உரித்தாகியிருப்பதால் இத் தலத்தின் மகிமையானது விசேஷ அம்சத்துடன் திரிலோகங்களிலும் ஒளிர்ந்து கொண்டிருக்கும்,

வால்மீகி ராமாயணம்.:—

(1) பரிதிமுன்பனிநீர்பட்ட சரிதையாம்புவியிலுறும்
விரிவியபாவமெல்லாம் வீரியசேதுமுன்னே
கருதியதெல்லாம்கூட்டும் கனதியவீட்டைக்காட்டும்
திருப்திதந்தொளிர்வரிங்கு திரிலோகத்துறைவர்தாமே

(2) வலம்புரிமுழங்கும்சேது மத்தியிலிலங்கும் தேவைத்
தலமதனில் இருந்து விமலமாய் நிற்பார்மாந்தர்
உலகுண்ட வலவன்ராமன் உபாசித்தாரமதன்
நலமிகுசேதுவயேற்றில் நனிசிறந்தொளிர்பாரே

(3) சேதுவையடைநுகாச்சென்மம் செகமதிலிருக்கும்வினை
பேதையோன்முன்னர் நிற்கும்கற்பகம்பயத்தல்யாதோ
மாதவத்தோர்க்கேசேது மண்ணின்மீதின்பமீயும்
மேன்தவால்மீகிசொன்ன மொழியிதுமானிடர்க்கே

மாரீசஸ்மிருதி.:—

(1) இகபரசித்தியுண்டுயியலபரோட்சஞானம்
திகழுவேமுக்தியுண்டு தீயவர்தனக்குமாங்கு
பகவன்ருள்பொங்கும் கெந்த மாதனத்தருகிலோங்கு
செக்மெலர்ம் வணங்குஞ்சேது க்ஷேத்ரங் கண்டவர்க்கே

(2) மானிடப்பிறப்பெடுத்துவாழ்ந்திடு நாட்கடன்னில்
பாணிசூழகத்திலோங்கும் பவித்திரத் தலங்களுள்ளே
வான்புகழ் கொண்டசேது வழங்கிய க்ஷேத்திரத்தும்
கோன்திரு விளங்குங்காஞ்சி குறிகொண்ட ச்மிருதியொ
[த்தே.

(3) வேங்கடாத்திரி ஸ்ரீசைலம்விண்மயச் சிரங்கந்தான்
பாங்குடன் பாரியாய தலங்களிலொன்றை யேனும்
ஓங்கும்சற்பதவி வேண்டி யாங்குமேசெல்வீரின்றேல்
தீங்குதான் முற்றிச்சென்மம் வேசரிப்பிறப்பெடுக்கும்.



யசுர்வேதத்தின் பாகமாகிய தைத்திரீயசம்ஹிதை.:—

(1) சாகரசேதுதீரம் சேர்ந்தவன்செய்ததானம்
பசகமேயாயிடினும் பகரும்வியாஹ்ருதிஸ்ரூப
ஆகமமாயனேக கோடிநாளாயுன்னிற்
ஏகமாயடையும் பேற்றை எளிதிலே ஏற்றுக்கொள்வர்

(2) பிரணவரூபமாக பிர்மத்தை யுகாந்தகாலம்
காணுதிசுத்தியாக கனிந்துதியானித்தபலனும்
திரன்பெற உகந்துமுலகிற் நிறம்பட வாழ்வர்மாந்தர்
அானருட்யாலிப்பேற்று அரவணைச் செல்வராவர்.

(3) ஆமிகும்சேதுபூமி ஆரியமாதவங்காண்
காமிகும் சேதுவாசம் கைலையின் வாசமப்பா
பாமிகும்சேதுமாண்பைத் தாயனூல்பணித்தவாறு
மாமிகும்சேதுயாத்ரை மக்களின் கடமையாமே

பாகவதபுராணம்.:—

(1) சுவர்க்க மத்தியபாதாள முத்தலத்துறைநாதர்கள்
சிவமயமாகிநின்றார் சீர்மிகுராமசேதுவில்
நவநாயகர்கள் நோக்கைநன்னய மாக்குமிந்தப்
பவநாசினியைப்பாரடைந்தோர் பாக்யந்தானே.

(2) ஆக்கியோனங்கைகூப்பிற்றவனி ஏகமதாய்க்கூடும்
பாக்கியமிகும்பவித்திரசேது ராமேச்சுரத்தை
காக்குதற்றொழிலேயோம்பும் காகுத்தன்சிறப்பித்தான்
தாக்குதற் கடவுளாங்கு ஆலயங்கொண்டான்தானே

(3) கொண்டதோராலயத்தின் கோடியமகிமைகோடி
தொண்டர்தம் தொண்டனை கண்டவின்மகிமைகோடி
அண்டரும் போற்றுஞ்சேது தெரிசனமனேகங்கோடி
மண்டலம்செய்தபேற்றை பாகசமுறைத்தவாறே

இசோவாஸ்ய உபநிஷத்.:—

(1) பாவமுந்தானுமேது பாழ்னகோடேழ்மையேது
ஆவிடைக்கவர்ந்துகொள்ளும்யமோபாதைதானுமேது
தீவினைப்பயனுமேது தீராதபிறவியேது
காவியம்புகழும்சேது கிட்டியகண்ணியர்க்கே

(2) கண்ணிய னவனேயாகும்கலைஞானஊற்றேயாவான்
புண்ணிய னவனேயன்றிப் புகல்வேறு புவியிலுண்டோ
தண்ணியநிலைமைகொண்டோன் தகைபரிசுத்தஆத்மன்
நண்ணியபுருடன் நித்தியனகண்ட பூரணனுமாமே

(3) இசைவாசியனும் சொன்னஇன்போப நிடத்தைப்பாரு
திசைபத்தும்போற்றுந்திவ்ய தலமதாமசேது
நிசாசானருணனே?நீநிலமுள்ளவாறும்
தசாகோடி சங்ககோடி தரிசனப்பலனுமாமே,

கூர்ம புராணம்.:—

(1) கெந்தமாதனத்திற் கூர்மம் கூறியசேதுமுன்பு
சந்திரப்பிறையணிந்தோன் சங்கரன்ராமனுதன்
மந்திரம்தெட்சினத் தேல் மாண்புடனெளிரும்பாரு
சுந்திரம்செல்வம்மோட்சம் வந்தனை புரிந்தகாலே.



(2) தெரிசனம் பூணுச்சென்மம் செகமதிற் பிறந்தும்வினை
பரிவுடன் சேதுசென்று பிதுர்சிராவணங்கள்செய்தோர்
உரிமையாளர் களாவர்உயர்பிதுர் ஆசிகட்கு
அரிதாயபதவிஎற்பர் அவனுளபிதுர்கடாமே

(ε) இன்புற்றிருப்போர்மாந்தர் இனையசேதுவைச்செபிக்கிற
பண்பாயதெரிசனத்தாற் பல்வியஞானியாவர்
மன்னியபாவமெல்லாம் சேதுநீராடில்மாளும்
அன்பே சிவமதான ஆற்றல்காண்சேதுவாசம்,

ஸ்காந்த புராணம்.:—

(I) சர்வதீர்த்தங்களாதி சற்சனத்தேவரீருய்
தர்மமேரூபமாகி தாணியிற்தேவைநாட்டில்
பிர்மமாயிலங்காநின்ற மகாலிங்கமூர்த்திதன்னை
நிர்மலமனத்துளோனுய் திரிகாலசேவைபூணே.

(2) பூணுவோரன்னைவர்க்கம் பிதாவின்றன்கிளைகளோடு
தானுமாயிருகோடி தாட்டியாய்காந்தமொத்து
மண்ணிலெத்தவங்கள்செய்தும்விதமாயகோயிற்சென்று
திண்ணமாய்க்கிட்டிடாத சாலோபத்துய்வர்தாமே [ம்

(3) ரகுவம்சதிலகன் செய்த ராமலிங்கேச்சுரனை
அகமதிலுன்னிற் காலனகந்தையுந்தனிந்துபோகும்
செகமதிற்காசிகயாசெவ்வியபிரயாகைமூன்றும்
ஏககாலத்திற் பெற்றயினைதருமிராமலிங்கம்

கௌதமஸ்மிருதி:—

(1) பாற்கடற் றுயிலுந்தூயோன் பாதமுற்பத்தியாகும்
நேரியாக நிகடன்னில் நலமிகுகெங்கைதானும்
கூறியேழுயிரண்டு குணமீயுமாயிரத்தெண்
சீரியபலபிருப்தி சிறந்தமொத்தத்தினாடே.

(2) திருமிகுநதியமுனை தீதறயதுவே தந்து
கிருட்டிணை வேணியோடு கௌதமி நவமாம்தாம்ர,
வருணியும் பல்குனியுமவ்வாறே மகிழ்ந்தளிக்கும்
நிருபிக்கும்அட்டமதை நிரைபிஞ்கினிகாவேரி

(3) துங்கபத்திரையினோடு துலங்கிய பீமரூறு
மங்களசப்தமீய மாநதிவஜ்ஜூலாவும்
சங்கையிலாறுதானே சற்பவ நாசியோடே
இங்கிதமானிடர்க்கு யிவ்வளவேயளிக்கும்,

(4) நிரைபலனுயிரத்து வெட்டையுமளிப்பதேதென்
றுரைத்திடிலும்பர்ஞானி கௌதமனங்கனாவில்
வரையறுத்திடிட்டவாக்கு பரைநாதனருளும்சேது
கரைகாணுசாகரத்தைச் சார்ந்துமேநின்றவாறே



அகத்தியர் பிரபஞ்ச சிருஷ்டி. 27000:—

(1) சத்தியாய் சர்வமாகி சாகர சங்கமத்தே
நித்திய மங்களமாய் நிறை பரிபூரணமாய்
மத்தியிற் கற்பகத்தே மாபெரும் மாதனத்தே
சித்தியிற் சிறந்த சத்தி சிவதமாய் நின்றவாறே.

(2) சிவனருள் பொலியும் சேது சின்மயானந்த ஜோதி
பவநாசி யவனகானி நவசக்தி பாணிரூபி
தவயோக போகஞான மோனவானந்த வாரி
புவியாரமான ஜோதி பூ'ரகள் புகழும் சேது,

(3) ஆதிற்றேன்றிப் பேயோடாடியாற் சிறப்புடைத்து
ஜோதியாய் சாகரத்து மத்தியில் விளங்கும் குன்றம்
நீதியாய்த் தேவர் மக்கள் நிலைகால நீதிக்கேற்ப
பாதியைச் சேதுக்கேய்ந்து பாதலம் சேர்ந்தவாறே.

(4) கெந்தமாதனத் தவத்தைச் சந்தத முகந்த சேது
பந்தனத்தா லுயர்ந்து பாரினில் பரிண மிக்கும்
எந்த லோகிலுமிதற்கு ஈடில்லை புண்ணியத்தில்
மந்திரமான ராம லிங்கத்தின் மகிமையாலே,

(5) சேடனுக்கியலா சேதுமாண்பினைக் கூறற்கும்பர்
நாடனுக்கு மியலா நாமென்ன ஈடோ சொல்வீர்
பாடல் பெற்றொளிரும் சேது யாத்திரை புவியினோர்க்கு
தேடற்கறிதாம் சர்வ லோக யாத்திரை யிதாமே.

(6) ராவணன் பிர்மஹத்தி ராமனை மடக்குங்காலை
பாவ நிவாரணைக்குப்பார்புகழித் தலத்தில்
தேவ தேவனைத் தொழுதான் தேவனும் லிங்கமாகி
உவகை பூண்டருட் பாலித்தான் உலகெலாம் உய்வதற்
[கே

(7) கெந்த மாதனத்தின் கண்ணே கெம்பீரசேது முன்பாய்
பந்த பாசங்களாய்ந்து பாகதியருட் சுரக்கும்
சந்திர சேகரன்றன் சுந்தரச் சேவை யேற்றல்
சந்ததம் மூவுலகும் செய்த நற்றவப் பயனே

(8) கெங்கையும் யமுனைவாணி மூவிதநதிகளொன்றாய்
சங்கமமான தீர்த்தம் சற்குருராமனாதன்
இங்கிதசடாபாரத்தில் இன்புடன்வருடிப்போர்கள்
மங்களம் நிறைந்தவாழ்வை மகிழ்வுடன்கொள்வாராமே

(9) சர்வதீர்த்தங்களானும் சதுர்மறை யாதிகளானும்
பர்வதங் கெந்தமாதனத்தினோர் பாகத்தானும்
துருவமுமுட்டுந்தூய சாகர மீண்டொன்றான
நிர்மலச்சேது நீரமெடுத்தரன் சடத்தில்வாரே

(10) வார்த்திடோர் லக்கம்சேது நீரதையரன்பாரத்தில்
ஓர்ந்திடுபஞ்ச அக்கரத்தையே மனத்தினுள்ளே
சார்ந்திடுமிப்பிறப்பின் சற்பயனுன்னிற்றப்பா
சேர்த்திடும்செகத்தையாளும் சக்கர பதியிற்றானே



(11) பொற்சிலைக் காமதேனு பொலிவுடனமைக்கப் பெற்று
சற்சன வேதியற்குச் சேது தீரத்திலீய
கொற்றவன் கொடுத்தோனாவான் கொன்மிகு தானமி
பெற்றவன் நரகிலாழ்வான் பிரம்ம சங்கற்பமாமே. [தை

(12) பசும் பொன்னால் கற்பகத்தைப் பதிவுடனமைத்து வாங்
விசயம் செய் சேதுதீரம் வார்த்திடு தருவில் நீரம். [கு
இசைமிகுக்க மனமுவந்து யீய்ந்திடுவோ ரந்தணர்க்கே
மாசற்றுக் குபேரவாழ்வு நீவாழ மாசுடைத்துப் போமவ
[ன் வாழ்வே.

(13) ஜென்மப் பிணியைப் போக்க சேதுவே சாதனங்காண்
பொன் கொண்டுதூக்குப் புகலின்றேல் களதௌதங்
கன்மப் பிணியாளன் சமனிடைக்கே ] [கொண்டுதூக்கு
மின்னொக்க மறையவர்தம் காத்திற்றானே. [கருதியிடு

(14) தூலபுருடாதி தானம் என்பதே யிதற்குப் பேரு
காலத்தில் தானமீய்ந்தோன் கருதிய பிணியறுப்பான்
ஓலமிட்டோடிவான் பெற்றோன் ஓரேழுதலைமுறைக்கும்
ஆலத்தை யொத்ததப்பா தூல புருடாதி தானம்.

(15) பஞ்சமா பாதகற்கும் பாவ பரிகார சேது
காஞ்சனத் தனுலாபதானம்கலைசேர்க்கும்கறையுளாறை
தீஞ்செயற்றவை யேற்றோன் தீதறப் பிராயச்சித்தம்
வாஞ்சையாத் தினமேழ்மூன்று ஆடல்நற்றெரி சனத்தே

(16) புத்திரப் பேறே வாழ்க்கை விரும்பிய பாக்யமாகும்
அத்தனின் திருவடிக்கு யன்பிலா ரருகால்லர்
இத்தியாம் சேதுதீரம் சென்றுசெய் சொர்ண சர்ப்ப
உத்தமதானம் ராமநாதனின் னருளைக் கூட்டும்,

—o—



# சேது மஹிமா யாத்திரை

இந்நில உலகில் வதியும் மக்கள்கட்கு ஆத்மார்த்திக பாரமார்த்திக மேம்பாடுகளை, தன்னை மனதிலே நினைத்தமாத்திரத்தில் சிறந்தளிக்கும் கருணைக் கடலாகத் திகழ்வதெது? அதிலும்பாகுபாடுகள் மிகுந்த இவ்வுலகில் தார்மிகளுக்கும், அதார்மிகளுக்கும், மானிடர்களுக்கும், தேவர்களுக்கும், பறப்பன நீர்வாழ்வன முதலிய எழுவகைத்தோற்றத்துயிர்கட்கும் சரிநிகர்சமமாக உயர்வு தாழ்வுவென்பதேயில்லாமல் அவரவர்கள் இஷ்ட காமியங்களை அளித்து பரிசுத்த தன்மையை அளித்துக்கொண்டிருக்கும் கருணைமிக்க சாகரம்எது? கொலை, களவு, கள், காமம், சூது முதலிய பஞ்சபாதகச்செயல்களில் தோய்ந்து அதே தொழில்களாகக் கொண்டுழலும் மா பாதகர்களை அவர்களுடைய பாவங்களினின்றும் விடுதலையாக்கி, பிதா தன் தீப் பழக்கமுள்ள மகவை இதமுடன் திருத்தி நல்வழிப்படுத்தி அன்புடன் அணைத்துக் கொள்வதேபோன்று, பாவியை விரைந்தழைத்து பரிசுத்தனாக்கிக்கொண்டிருக்கும் புனிதப் பெருக்கம்எது?

எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதங்களாக தோன்றித் தோன்றி மடிவதுந் தவிர பசி, தாகம், பிணி, குளிர், அனல், இடி, பேறு, ஆயுதம், நஞ்சு, மருந்து, நீர், காற்று, பொறாமை, கவலை, மூப்பு முதலிய வேதனைகளால் பிறப்பு முதலிறப்புவரை பிடிக்கப்பட்டு நொந்து கண்டப்பட்டு அல்லலுற்றுக்கொண்டேயிருக்கும் பிறவித் துன்பங்களை அறுத்தெறிந்து மக்கள்யாவர்க்கும் பேரின்பநிலையை யளித்துக்கொண்டிருக்கும் கருணைவாரிஎது? பிர்ம்ம சிருஷ்டிக் குட்பட்ட எல்லா உலகங்களிலுமுள்ள மகிமை தங்கிய வரப்பிரசாதங்களையுடைய புண்ய தீர்த்தங்களெல்லாம் ஏகமாக ஐக்யமாகி புண்யங்கட்கெல்லாம் உறைவிடமாகத் திகழ்வதெது? காற்று வாடையை ஸ்பரிசித்த மாத்திரத்தில் தெய்வலோக பிராப்தியை யளிக்கவல்ல கெந்தமாதனத்தின் போற்றலைப் பெற்ற தபோநிதி எது? பிர்ம்ம

விஷ்ணு, ருத்ரின் முதலிய சகலதேவர்களும் இன்புடன் சதாவசித்துக்கொண்டிருக்கும் தெய்வஸ்தானம்எது? பிர்ம்ம காயத்திரியை சதாபாராயணஞ் செய்து கொண்டிருக்கும் சர்வபவநாசினி எது? பிர்ம்மலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம் ஆகிய திரிலோகங்களையும் அடையும் வழிகாட்டி என ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியால் கோதண்டத்தின் கோடியினால் கீரிக்காட்டிய மோக்ஷபந்தஎது? பரதகண்டத்தில் தக்ஷிணபாகத்தில் ரெத்னாகர மஹோததி சாகர சங்கம "சேது, சேது,, என்று அப்பரிசுத்த நாமத்தை திரிகாணசுத்தியாக உச்சரித்துக் கொண்டே சாட்சாத் ஸ்ரீராமனுதனின் அருட்கடாட்சங்களைப்பெற்று இகபரம்யிரண்டிலும் இன்பவாழ்வெய்துவோமாக.

இத்தகைய பவித்திர சேதுயாத்திரையை இந்நில உலகில் கிடைத்தற்கரிய மானிடப்பிறவியை யடைந்தயாவரும் தத்தம் பத்தினி அன்னைபிதா புத்திர பௌத்திர குடும்பசகிதம், மனநிம்மதியுடனும் தூய்மையுடனும் தவறாது துடங்கி சேதுகோடிப் பின் அங்குபிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான புண்யதீர்த்தங்களில் முழ்கி சேதுமத்தியில் எழுந்தருளியிராநின்ற ஸ்ரீபர்வதவர்த்தனி சமேத ராமநாதக்கடவுளை தெரிசனம்செய்து இப்பிறப்பின் முழுப்பணியைஆற்றியவர்களாய்ஸ்ரீராமநாதனுகியசந்திரசேகரனின் அருள்பெற்று இச் சென்மத்தைச் சாபல்யமாக்கிக் கொள்வது மானுடமக்களின் இன்றியமையாக் கடமையாகும்.

திரிலோகங்களிலுமுள்ளசகலதேவர்,ரிஷீஸ்வராதிகளும் இப்பூஉலகை நாடிவந்து சேது தீர்த்மாடி பரிசுத்தர்களாகிச்செல்கிறார்களென்றால் இப்பூ உலகிலுள்ள நாம் நமது சமீபத்திலிருக்கும் "சேது,, ஸ்நானம், தெரிசனம் செய்யத் தவறி விடுவது நமது துர்ப்பாக்யமேயாகும். இது எப்படி யிருக்கிறதென்றால் விரும்பியவற்றை எல்லாம் அப்படியே கொடுக்கவல்ல கற்பகத்தரு, பேதையானவன் முன்னே நின்றால் அதுஎங்ஙனம்பயன்படும்? பயன்படாதது போன்றேயாம்.



எனவே நாமிச் சென்மத்தை நல்வழியில் பயன்படுத்திக் கொள்ளும் நிமித்தம் சேது யாத்திரையை நமது ஒப்பற்ற பாக்கியம் என்றெண்ணி ஸ்ரீமத் அகண்ட பரிபூரணனுகிய இராமநாதனைப் போற்றி துதிப்போமாக. இப்பவித்திரசேது மகாயாத்திரை சர்வலோக யாத்திரையின் பூரண நிரையை யளிப்பதாக முன்னர் தேவ சபையில் பிரகடணம் செய்யப் பட்டிருப்பதால் இதன் அபார மகிமையையுணர்ந்து சேதுயாத்திரை செய்யுமாறு மற்றொருவருக்கு உபதேசிப்பவர்கள் சேதுயாத்திரை செய்த பலனைப்பெற்று பிர்மானந்தராய் இஷ்டசித்திகளைப் பெற்று வாழ்வார்கள்.

சேது யாத்திரை செய்பவர்களுக்கு தம்மாலியன்ற பொருளுதவி செய்தவர்கள் சேது யாத்திரை செய்த பலனை அடைவதுடன் சேதுதீரத்தில் லெக்ஷம் பிராமண போஜனம் செய்வித்த பலனையும் மெய்துவார்கள். மேலும் சேது யாத்திரை செய்யச் சக்தி யற்றவர்கள் யிருந்த விட்டத்திலேயே வீற்றிருந்து திரிகாண சுத்தியாக சர்வபவநாசினியாகவும் ஜோதி சொரூபமாகவும் தெக்ஷிணத்தில் கெந்தமாதனத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சேதுவை மனதிடைநிறுத்தி த்யானிக்கும் மாத்திரம் சேதுயாத்ரை செய்த முழுப்பலனையுமடைந்தின் புறுவார்கள். இத்தகைய பரிசுத்த சேது மகா யாத்திரையானது சேதுகால், சேதுமுலம் என்றழைக்கப்படும் (உப்பூர், தேவிபட்டிணம்) ஸ்தலத்திலிருந்து ஆரம்பமாகின்றது.

(1)

## உப்பூர்

### ஸ்ரீ வெய்யிலுகந்த விநாயகர் தெரிசனம்.

ஸ்ரீராமர் சேதுபந்தனம் செய்வதற்கு முதன் முதலாக விநாயக பிரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்ட ஸ்தலம் இராமநாதபுறத்திற்கு வடகிழக்கே 22 மயில் தூரத்திலிருக்கிறது.

## தேவிபட்டணம்

(2)

++++

### சேது மூலமாகிய சமுத்ர ஸ்நானம்.

விநாயக பிரதிஷ்டைக்குப்பின் சேதுமூலத்தில் நவக்கிரக ஸ்தாபனம் செய்த நவபாஷாண ஸ்தலம். நவக்கிரகங்கட்கு விதிப்படி பூஜை புரிந்து, சமுத்ர ஸ்நானம் செய்ய வேண்டியது. இராமநாபுறத்திற்கு வடகிழக்கே 8. மயில் தூரத்தில் உப்பூருக்குப் போகும் ரஸ்தாவில் இருக்கிறது.

## திருப்புல்லாணி.

—o—

(3). திருவணைத் துவக்கமாகிய சமுத்ர ஸ்நானம்.

ஸ்ரீதேவியாகிய சீதாபிராட்டியை சிறை மீட்டும் நிமித்தம் சமுத்ரக் கரை யோரமாயுள்ள இத்தலத்திலிருந்து இலங்கை வரைக்கும், அமைக்கப் பட்டுள்ள திருவணையின் மீது நடக்கும்போது ஸ்ரீ வைகுண்ட நாதனுகிய, ராமச்சந்திர மூர்த்தியின்பாதாரவிந்தங்களில் பிரகாசிக்கா நின்ற சங்கு, சக்கர; ரேகைகள் வருணபகவான் முதுகின்மீதும் திருவணைமீதும்பதிந்து சமுத்ர அலைகள் அச் சங்கு, சக்கர, ரேகைள் மீதும் பட்டு சமுத்ர ஜலமானது மஹா பவித்ர தீர்த்தமாக விளங்கிக்கொண்டிருப்பதால் திருவணைத் துவக்கமாகிய அவ்விடத்தில் ஸ்நானம் செய்யவேண்டியது மிகமுக்யம்.

இவ்விடத்தில் சமுத்ர ஆழத்தையும் நீளத்தையும் தெரியும் பொருட்டு சமுத்ரகரையோரம் தற்பையைப்பறப்பி அதில்சயனித்து எழுதினம்வரைக்கும் ஸ்ரீராமர் வருணனைத் தியானித்தபடியால் இத் தலத்துக்கு "தெர்ப்பசயனம்,, என்ற பெயர் உண்டாயிற்று. இராமநாதபுரத்துக்குத்தெற்கே 7மயில்தூரத்திலிருக்கிறது.



(4) சக்கர தீர்த்த ஸ்நானம்.

ஊர் அழகிய குளம். திருப்புல்லாணி கோவில் முகப்பிலிருக்கிறது.

—o—

## மண்டபம்

வேதாள வரத தீர்த்த ஸ்நானம்.

[5]

மண்டபம் ரெயில்வேஸ்டேஷனுக்குத் தெற்கே இரண்டு மைல் தூரத்தில் வேதாளையென்ற சிற்றூரிலிருக்கிறது.

[6] பாபவிநாச தீர்த்த ஸ்நானம்.

மண்டபம் தென்சமுத்ர கரையோரமிருக்கின்றது

(இராமேஸ்வரம் தீவு)

## பாம்பன்

—o—

[7] வயிரவ தீர்த்த ஸ்நானம்

சமுத்திர ஸ்நானம் கபி தீர்த்தத்துக்கு பேர்கி லிருக்கிறது

(8) கபிதீர்த்த ஸ்நானம்.

நாற்புரமும் படித்துரைகளாலய ஓர் அழகிய தெள்நீர் தடாகம் பாம்பன் நகர மத்தியிலிருக்கின்றது.

## தங்கச்சிமடம்.

(9) சீதாபுஷ்கரணி தீர்த்த ஸ்நானம்.

ஓர் அழகிய திருக்குளம். தங்கச்சிமடத்துக்கு சமீபத்திலிருக்கின்றது.

(10) வில்லூரணி தீர்த்த ஸ்நானம்.

வடசமுத்திரத்தில் நன்னீர்குமுழிகள் கிளம்பிக்கொண்டிருக்கும் ஓர் அற்புததீர்த்தம். தங்கச்சிமடத்துக்கு சமீபத்தில் வடக்கேயிருக்கின்றது.

(11) மங்கள சரோவர் தீர்த்தஸ்நானம்.

நாற்புரமும் படித்துரைகளாலாய ஓர் அழகிய தாமரைத் தடாகம். தங்கச்சிமடத்துக்கு கீழ்புரமிருக்கின்றது.

(12) இரண விமோசன தீர்த்தஸ்நானம்.

ஓர் அழகிய நன்னீர் தடாகம். ஏகாந்தராமஸ்வாமி கோவிலுக்கும் ரஸ்தாவுக்கும் வடக்கி லிருக்கின்றது



(13) அமிர்தவாபி தீர்த்தஸ்நானம்.

அமிர்தத்துக்கு ஒப்பான இனிமைமிக்கதோர் கிணர் ஏகாந்தராமஸ்வாமிகோவிலுக் குள்ளிருக்கின்றது.

(14) ஏகாந்தராமஸ்வாமி தெரிசனம்.

அமிர்தவாபி தீர்த்தஸ்நானம் செய்தபின் அப்புனித தீர்த்தத்தை அர்த்தநாரீஸ்வரப் பாத்திரத்தில்எடுத்து அத்தீரத்தருகில் எழுந்தருளியிராநின்ற ஸ்ரீசீதாதேவிசமேத ராமச்சந்திரமூர்த்திக்கு அபிஷேகாதிகள் செய்யவேண்டியது.

## தனுஷ்கோடி

(15) ஸ்ரீஸேதுஸ்நானம்.

ஏகாந்தராமஸ்வாமி தெரிசனத்தைப் பெற்றவுடன்நேரே தனுஷ்கோடிசென்று அங்கு ஸ்டேஷனிலிருந்து மூன்று மைல் தூரத்தில்" ஜெகஜ்ஜோதியாய் சர்வபவநாசனியாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ரெத்னகாமகோதசி சாகரசங்கம சேதுஸ்நானம் செய்யவேண்டியது. பிதுர், தர்ப்பணம், தானம், யாகம் முதலிய கிரிகைகள் செய்தல் முக்யம்.

## கோதண்டராமன் கோயில்.

—o—

(16) ஸ்ரீகோதண்டதீட்சாகுரு தெரிசனம்.

தனுஷ்கோடியிலிருந்து ராமேஸ்வரம் வரும் வழியிலிருக்கும் ஒரு Flag Station இவ்விடத்தில் வருடம் ஒரு முறை. விபீஷணுள்வாருக்கு ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியால் இலங்கைமகுடாபிஷேகஞ்சுட்டும் வைபவம் வெகுசிறப்பாகநடைபெறுகின்றது. பிரதிசனிவாரங்தோறும் ஸ்ரீராமஸ்வாமி உற்சவதெரிசனம் மிகவும்சிலாக்யம்.

## (இராமேஸ்வரம்)

-oo-

(17) ஜடாமகுட தீர்த்தஸ்நானம்.

ஓர் அழகிய நன்னீர் தடாகம். கோதண்ட ராமஸ்வாமி கோவிலிலிருந்துவரும் வழியிலிருக்கின்றது. இராமேஸ்வரத்துக்குத்தெற்கே 2மைல் தூரத்திலுள்ள யிப்புண்ய தீர்த்தத்தில் பனிரெண்டு வருடங்களுக் கோர்முறை வியாழபகவான் சிம்மராசிக்குவரும் மாசிமாதத்தில் மகநக்ஷத்திரமும் பௌர்ணமியும்கூடும் சுபதினத்தில் ஸ்நானம்செய்தல் கும்பகோணத்தில் 12. மஹாமஹங்களில் தீர்த்தமாடிய பலனைக்கொடுக்கும்.



(18) சர்வரோகநிவாரணதீர்த்தஸ்நானம்.

ஓர் சக்திமிகுந்த நீரையுடைய கிணர். ஜடாமகுடதீர்த்தத்துக்கு சமீபமாய் ராமேஸ்வரத்துக்குத் தெற்கே 3. மைல் தூரத்திலிருக்கின்றது.

(19) தெக்ஷிணகாளிஎன்னும்
ஸ்ரீநம்புநாயகிஅம்பாள் தெரிசனம்.

சர்வரோக நிவாரண தீரக்கரையில் எழுந்தருளியிராநின்ற இப் பரமேஸ்வரியின் தெரிசனம் ஆரோக்யம், வீரம் தீர்க்காயுள் முதலிய வற்றை அளிக்கும்.

(20) தேவதீர்த்தஸ்நானம்.

ஸ்ரீநம்புநாயகி என்னும் தெட்சிணகாளி கோவிலுக்குக் கிழக்கேயுள்ள ஓர் நன்னீர் தடாகம். இத்தீரத்தில் தட்சிணத்துருவன் பச்சிமத்துருவன் என்னும் இரண்டு தபோதனர்கள் கற்ப கோடி காலங்கண்டவர்களாய் நிஷ்டைசமாதியிலிருந்து வருகிறார்கள். இதன்மேற்கே தேவவழியாறு என்னப்பட்ட ஓர் அழகிய மடுயிருக்கின்றது

(21) லட்சுமணதீர்த்த ஸ்நானம்.

ஓர் அழகிய திருக்குளம். இதன்மத்தியில் ஓர் அழகிய நீராழிமண்டபம் ஆக்கப்பட்டிருக்கின்றது

பிரதி தைப்பூசத்தன்றும் தெப்ப உற்சவம் பார்க்கத் தக்கது.

இத் தீர்த்தத்திலிருந்தே ஸ்ரீராமநாத தெரிசன யாத்திரை ஆரம்பமாகுவதால் இவ் விடத்தில் தீட்சை முதலிய வைகளைக்களைந்து தீர்த்தஸ்நானமாடி தீரக்கரையில் பிதுர்க்களுக்கு தில தர்ப்பணம் செய்தல் நன்று.

(22) ஸ்ரீலட்சுமணேஸ்வரர் தெரிசனம்.

லட்சுமண தீர்த்தக் கரையில் கோவில் கொண்டிருக்கும் லட்சுமணரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீலட்சும ணேஸ்வரரை வழிபடல்வேண்டும்.

(23) இராமதீர்த்தஸ்நானம்.

ஓர் திருக்குளம். லட்சுமண தீர்த்தத்துக்குகிழக்கே டவுனி லிருக்கின்றது.

(24) ஸ்ரீராமர் தெரிசனம்

இராமதீர்த்தக் கரையிலுள்ள ஓர் அழகிய சிறுகோவில் சீதா.லட்சுமண ஹநுமத் சமேத ஸ்ரீராமஸ்வாமி தெரிசனம்



(கெந்தமாதன பர்வதம் மெயின் ரஸ்தாவில்)

(25) சுக்ரீவ தீர்த்த ஸ்நானம்

ஓர் குளம் சாலைப் பாதைக்கு மேற்கி லிருக்கின்றது

(26) அங்கத தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர். சுக்ரீவ தீர்த்தத்திற்கு வடக்கிலிருக்கிறது

(27) ஜாம்புவ தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் அங்கத தீர்த்தத்திற்கு வடக்கிலிருக்கிறது

(28) வாலி தீர்த்த ஸ்நானம்

ஜாம்புவ தீர்த்தத்திற்கு வடக்கிலிருக்கிறது

(29) கெந்தமாதன ஹநுமார் தெரிசனம்

ஒரு அழகிய சிறுகோவில் கெந்தமாதன பர்வதத்தடியில் இருக்கும் இக்கோவிலானது மஹாபரிசுத்த பைராகி களாகிய திருப்பதி தேவஸ்தான மகந்துகளால் நிர்வகிக் கப்பட்டு வருகிறது

(30) ஸ்ரீ கெந்தமாதன பர்வத தெரிசனம்

இராமேஸ்வரம் மெயின் பஜாரிலிருந்து நேர் வடக்கில் 2 மைல் தூரத்திலிருக்கிறது இப்பர்வத மண்டபம்

இரண்டடுக்கு மாடிகளை யுடைய திருமிருந்த தோற்றத்துடன் நாற்புறமும் வனப்பு மிக்க வனங்களின் இயற்கைக் காட்சி களுக்கிடையே சதாகாலமும் தென்றலானது உவகைபூத்துக் குளிர்ந்து வீசிக் கொண்டிருக்க கெந்தமாதன பாவதமானது அங்கு வசிப்போர்கட்கு மனோ உற்சாகத்தை யளித்துக் கொண்டிருக்கிறது.

இப்பர்வத மண்டபத்தில் நின்று நோக்கினால் ராமேச்வாதீவு நாற்றிசையும் சூழ்ந்துள்ள சமுத்ரமும் தெற்றென தோன்றும்

இராமேஸ்வா யாத்திரைக்கு வரும் ஒவ்வொருவரும் புண்யசொரூபமான இக்கெந்தமாதன பர்வத தெரிசனமும் அங்கு ஸ்ரீராமபாத தெரிசனமும் அவசியம் செய்தல் வேண்டும்.

[அஷ்ட தீர்த்தம் சாலைப்பாதையில்]

(31) தர்மதீர்த்த ஸ்நானம்

ஓர் நன்னீர்த் தடாகம் கெந்தமாதன பர்வதச்சரிவில் சேதுவாரண்யத்தி லிருக்கிறது

(32) பீமதீர்த்த ஸ்நானம்

ஓர் தடாகம், தர்மதீர்த்தத்திற்கு கிழக்கிலிருக்கின்றது



(33) அர்ஜுன தீர்த்த ஸ்நானம்

ஓர் அழகிய குளம் பீம தீர்த்தத்திற்கு கிழக்கே இருக்கின்றது

(34) நகுலதீர்த்த ஸ்நானம்

ஓர் திருக்குளம் அர்ஜுன தீர்த்தத்திற்கு கிழக்கே இருக்கிறது

(35) சகாதேவ தீர்த்த ஸ்நானம்

ஓர் தடாகம் நகுல தீர்த்தத்திற்கு கிழக்கிலிருக்கிறது

(36) பிர்மகுண்ட ஸ்நானம்

ஓர் நீர்நிலைக்குண்டு சகாதேவ தீர்த்தத்திற்கு கிழக்கே இருக்கிறது

(37) பரசுராம தீர்த்த ஸ்நானம்

ஓர் அழகிய தடாகம் பிர்மகுண்டத்திற்கு தென்மேற்கில் இருக்கிறது

(38) த்ரௌபதை தீர்த்த ஸ்நானம்

ஓர் குளம் பிர்மகுண்டத்திற்கு தெற்கிலிருக்கிறது

(39) இலங்கை மாகாளி என்னும் உத்தரகாளி தெரிசனம்

த்ரௌபதை தீர்த்தத்திற்கு தெற்கிலிருக்கிறது ஓர் அழகிய கோவில் வருடம் ஓர்முறை இங்கு உற்சவம் மிகுந்த ஆடம்பரமாய் நடைபெறும்

(40) அனுமகுண்ட ஸ்நானம்

ஓர் திருக்குளம். உத்தர மாகாளி கோவிலுக்குத் தெற்கிலிருக்கின்றது. இத்தீரத்தில் புத்திரகாமேஷ்டி யாகம், நாகலிங்க பிரதிஷ்டைசெய்தல் சாஸ்திரோக்தம்.

இத் தீர்த்தக்கரையில் கோயில் கொண்டிருக்கும் வால்அறு பட்ட அனுமார்தெரிசனே செய்ய வேண்டியது.

(41) அகஸ்திய தீர்த்த ஸ்நானம்.

ஓர் சிறுகுளம். அனுமகுண்டத்திலிருந்து கிழக்கிலோடும் சாலைப்பாதை வழியே சென்றால் கீழ்சமுத்ரக் கரையிலிருக்கும் இத்தீர்த்தத்தை அடையலாம். அகத்தியமாமுனிவரால் பிரதிஷ்டைசெய்யப்பட்ட சந்தான விநாயகக்கடவுள் தெரிசனம் செய்யவேண்டியது.

(42) அக்கினிதீர்த்த ஸ்நானம்.

கீழ்சமுத்திர ஸ்நானம் இவ்விடத்தில் பிதுர்தெர்ப்பணம் சிரார்த்தம் செய்தல் நன்று.

(43) பூர்வ காளி என்ற உஜ்ஜினிமாகாளி தெரிசனம்

சன்னதித்தெருவில் அக்கினிதீர்த்த சமுத்ரக் கரையிலிருக்கும்



ஓர் அழகிய கோவில்.

(44) நாகதீர்த்த ஸ்நானம்

ஓர் திருக்குளம். கீழரதவீதியில் ராமமந்திர மடத்துக்குள்ளிருக்கின்றது.

[ஸ்ரீராமநாத திருஆலயத்திற்குள்]

(45) மகாலெக்ஷ்மி தீர்த்த ஸ்நானம்

ஓர் அழகிய தடாகம் அனுமார் சன்னதிக் கெதிரில் இருக்கின்றது

(46) காயத்ரீ தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் அனுமார் கோவிலுக்கு மேற்கே சுவாமி சன்னதி மெயின் கேட்டுக்கு வடக்கே கிழக்குக் கோட்டை ஓரமாக இருக்கின்றது

(47) சாவித்ரீ தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர், காயத்ரீ தீர்த்தத்திற்கு அடுத்திருக்கிறது

(48) சாஸ்வதி தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் சாவித்ரீ தீர்த்தத்திற்கு அடுத்திருக்கிறது மேற்கண்ட காயத்ரீ, சாவித்ரீ, சரஸ்வதி இம் மூன்று

தீர்த்தங்களும் மூன்று தடுக்குகளேயுடைய ஒரே கிணராக இருக்கிறது.

(49) சங்கதீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் கிழக்கு இரண்டாம் பிரகாரத்தில் வடபக்கம் இருக்கின்றது

(50) சக்கர தீர்த்த ஸ்நானம்

ஓர்கிணர் கிழக்கு இரண்டாம் பிரகாரத்தில் தென்பக்கம்

(51) சிவதீர்த்த ஸ்நானம்

ஓர் திருமிகுந்தடாகம் சுவாமிசன்னதி நந்திக்குத் தென்பக்க மிருக்கிறது

(52) கயாதீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் வடக்கு இரண்டாவது பிரகாரத்தில் கீழ்பக்க மிருக்கின்றது

(53) கங்கா தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர். ஷெடி பிரகாரத்தில் கயாதீர்த்தத்துக்கு மேற்கி லிருக்கின்றது.

(54) யமுனா தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர். கங்கா தீர்த்தத்துக்கு தென் கிழக்கிலி ருக்கின்றது



[55] சூர்ய தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் கங்கா தீர்த்ததுக்கு வடமேற்கி லிருக்கின்றது

(56) சந்திர தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் சூர்ய தீர்த்துக்கு மேற்கி லிருக்கின்றது

(57) பிர்மஹத்தி விமோசன தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் சந்திர தீர்த்தத்துக்கு மேற்கி லிருக்கின்றது

(58) சர்வ தீர்த்த ஸ்நானம்

ஓர் அழகிய கிணர் ஸ்வாமி சன்னதியில் கிழக்கு முதற் பிரகாரத்தில் தென் கிழக்குப் பக்க மிருக்கின்றது

(59) சாத்யாமிர்த தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் அம்மன் சன்னதியில் கொடி மரத்துக்கு அருகிலிருக்கின்றது

(60) சேதுமாதவ தீர்த்த ஸ்நானம்

ஓர் அழகிய படித்துறைகளுள்ளவாய திருக்குளம். மேற்கு மூன்றும் பிரகாரத்தி லிருக்கின்றது

(61) நள தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் சேது மாதவர் கோவிலுக்குள் சன்னிதிக்கு தெற்கிலிருக்கிறது

(62) நீல தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் நளதீர்த்தத்துக்குமேற்கிலிருக்கின்றது

63) கவயதீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் நீல தீர்த்தத்துக்கு மேற்கிலிருக்கின்றது

(64) கவாட்ச தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் கவய தீர்த்தத்துக்கு தென் கிழக்கிலிருக்கின்றது

(65) கெந்தமாதன தீர்த்தஸ்நானம்

ஓர் கிணர் கவாட்ச தீர்த்தத்துக்கு வடகிழக்கிலிருக்கின்றது



(66) கோடி தீர்த்த ஸ்நானம்

ஓர் கிணர் சுவாமி சன்னதியில் முதற் பிரகாரத்தில் விசாலாட்சி கோவிலுக்கு கிழக்கி லிருக்கின்றது கடைசியாக யித் தீர்த்தத்திலாடியதும் சேது தீர்த்த யாத்திரை பூர்த்தி யடைகின்றது. இப்பவித்ர கோடி தீர்த்தத்தை இராமேசுரம் பிரசாதமாக யாத்ரீகர்கள் எடுத்துச்சென்று பந்து மித்திரர்களுக்கு வழங்குதல் சாஸ்திர யுக்தம், வழக்கம்.

(67) ஸ்ரீ ஹனுமத் லிங்கமாகிய
காசி விஸ்வநாதர் தெரிசனம்

ஸ்ரீ இராமநாத ஆலயத்துக்கு வடக்கி லிருக்கின்றது

(68) ஸ்ரீ இராம லிங்கமாகிய
ஸ்ரீ ராமநாத சுவாமி தெரிசனம்

இப் பிரதம தெரிசனத்தை ஆகம விதிப்படி கொள்ளல் வேண்டும்

(69) ஸ்ரீ பர்வத வர்த்தனி அம்பாள்
தெரிசனம்

ஸ்ரீ ராமநாத சன்னதிக்கு தெற்கிலிருக்கிறது

(70) ஸ்ரீ ஆஞ்சநேயர் தெரிசனம்

சுவாமி சன்னதியின் பிரதமவாசல் முகப்பிலிருக்கிறது

(71) சேது மாதவ தெரிசனம்

மூன்றும் பிரகாரத்தில் மேலக்கோபுரத்தண்டையிலிருக்கின்றது

[72] சாட்சிவிநாயகர் தெரிசனம்

பாம்பன் ரஸ்தாவிலிருக்கும் ஓர் அழகிய கோவில் இராமேஸ்வரம் டவுனிலிருந்து 2 மயில் மேற்கிலிருக்கின்றது வனங்களிடையே யிக் கோவிலிருப்பதால் இதற்கு "காட்டுப்பிள்ளையார்கோவில்,, என வழங்கப் படுகின்றது

[73] சேதுபீட தெரிசனம்

இராமநாதபுரத்தில் "ராமலிங்கவிலாசம்,, அரண்மனையில் ஸ்ரீசேதுபீட தெரிசனத்தினால் சேது யாத்திரையின் பூரண பலன் சித்திக்கின்றது.

## ஸ்தல காண்டம் முற்றிற்று



# தீர்த்த மகத்துவ காண்டம்

## நவபாஷாண தீர்த்தம்

மகாலட்சுமியாகிய சீதாபிராட்டியை மீட்டிவரும் நிமித்தம் இலங்கையை அடைவதற்கு சேது சமுத்திரத்தைக் கடந்து செல்ல அணை கட்டித்தீர வேண்டி யிருப்பதால், ஜோதி சொரூபமாக யிருக்கப்பட்ட சேதுவைப் பந்தனம் செய்வது மகாதோஷம் என்பதை உணர்ந்த ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி, வருணபகவானால் ஸ்ரீசேது மூலத்தில் நவக்கிரகங்களை ஸ்தாபித்து விதிப்படி பூஜித்தால் சேதுவை பந்தனம் செய்வதாலுண்டாகும் தோஷங்கள் விலகிப்போம் என்று உபதேசிக்கப் பட்டவராய் சேது மூலமாகிய சமுத்ரத்தில் ஒன்பது சிலைகளைநாட்டி விதிப்படிவழிபட்டு சேதுமூலத்திற்கு "நவபாஷாண தீர்த்தம்,, என நாமமிட்டு சேதுபந்தனம் செய்ய தெற்கெசயனம் புறப்பட்டார்.

இத்தீர்த்தத்தில் ஸ்நானமாடி இங்கு ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் நவக்கிரகங்களைப்பூஜித்தோர் கொடியகிரகங்களின் பார்வையாலுண்டாகும் சொல்லொணா கஷ்டங்களினின்றும் விடுவிக்கப் பட்டு தேக ஆரோக்ய ஸ்தர்களாகவும், இஷ்ட காமியங்களைப் பெற்று இன்புறுவர். என வாழ்த்திச் சொல்லப் பட்டதால் யித் தீர்த்தம் அபார மகிமை படைத்து இப்புவியில் விளங்கிக் கொண்டிருக்கிறது.

(1) மாளவ தேசத்தை ஆளப்பட்ட பத்மாரஜேஸ்வான் கொடிய கிரக தோஷங்களால் பீடிக்கப் பட்டு நாடு நகர் பெண்டு பிள்ளைகளைப் பிரிந்து சித்த சுவாதீன மற்றவனாய்

நாடோடியாகத் திரிகையில் ஓர் நாள் அவ்வரசனை கானக மார்க்கத்தில் சந்தித்த பதஞ்சலி மாமுனிவர் அவனது வரலாறுகளை மானசீகமாக அறிந்து அவன் மீது சித்த மிறங்கி அவனைத் தன்கூட அழைத்து வந்து நவபாஷாணத்தில் தீர்த்தமாடி வைத்ததும் அவனைப்பிடித்த கிரகங்களின் உக்ரம் படிப்படியாய் தணிந்து புத்தி சுவாதீனமாகிவருகையில் 10ம் நாள் நவபாஷாணத்தில் தீர்த்தமாடிக் கொண்டிருக்கும் சமயம் அநாதியாக அவண் வந்து தீர்த்த மாடிக் கொண்டிருக்கும் தன் நாயகியைக் கண்டு களிப்புற்று எல்லாம் தெய்வச் செயல்எனத்துணிந்து பதஞ்சலிமுனிவர் ஆசீர்வாதம் பெற்று பூரண சுகிர்தனாய் தனது நாடுபோய் இழந்த ராஜ்யத்தைக் கைப்பற்றி இனிது செங்கோலோச்சி வாழ்ந்து வந்தான்.

—o—



தர்ம புஷ்கரணி என்ற,

## சக்கர தீர்த்தம்

தர்ம தேவதையானது ஸ்ரீ கைலாசபதியாகிய பரமேஸ்வரன் மேலுள்ள அன்புமேலீட்டால் யார்க்கும் கிடைத்தற்கரிதாம் ஈஸ்வரத்திருமேனியைச் சதா சுமந்து கொண்டிருக்கும் சாதனத்தை யடைய ஆவல் கொண்டு பரமேஸ்வரனை நோக்கித் தவம்செய்து கொண்டிருக்கையில் ஈஸ்வரன் தர்மதேவதை முன்னே பிரசன்னமாகி ஹே! தருமு உனது விரதம் யாதோ? விளம்பாய் என்றதும், தேவ, நின் பொற் திருமேனியைச் சுமக்கும் ரிஷபரூபம் தந்தாட் கொள் என்பதாய் இறைஞ்சி நின்றது.

தன்மீது தருமதேவதைக் குண்டான அளவிடற்கரிய அன்பைக்கண்ட ஈசன் மகிழ்ச்சி பூண்டு அவ்விடத்திலோர் தடாகத்தை தெய்வீகமாக அக்கணமே உண்டு பண்ணி, வாராய் தர்மதேவே, உனது விரதம் இப்புனித தீர்த்தத்தில் மூழ்கியதும் இனிது நிறைவேறுமாதலால் நீராடுக, எனப் பணித்தருளினர்.

அங்ஙனமே தீர்த்தமாடியதும் அழகு பொருந்திய ரிஷபமேனி பெற்று தன்னையாட் கொள்ளும்படி பரமேஸ்வரனைத் தொழுது நின்ற தருமதேவதையைப்பார்த்து பரமேஸ்வரன் சொல்வாராயினர் இன்றுமுதல் உனதுஇஷ்டத்தை நிறைவேற்றிய இத்தெய்வீக தீர்த்தம் "தர்ம புஷ்கரணி" என்ற நாமத்துடன் இதில் நீராடுவோர்கட்கு இஷ்டகாமியங்களை அளித்துக் கொண்டிருக்கக் கடவதென்றாசிர் வதித்து அந்த ரிஷபத்தில் ஆரோகணித்துக் கைலையை அடைந்தார்.

## இத் தீர்த்தத்திற்கு சக்கர தீர்த்தம் என்ற பேர் வந்த வரலாறு

(1) காளவ மாமுனியின் தவத்திற்கு அரக்கர்களால் இடையூறுகள் நேராவண்ணம் மகாவிஷ்ணுவால் அனுப்பப் பட்ட சக்கரமானது காளவ ரிஷியை பாதுகாத்து வருகையில் ஓர் நாள் பயங்கர அசுரன் ஒருவன் வந்து காளவரைப் பக்ஷிக்க வருகையில் சக்கரமானது சிவ்வென்று பறந்து அரக்கனைச் சம்ஹரித்து, முனிவர் வாக்குப்படி தரும புட்கரணியில் ஆடியதும் அரக்கனைக் கொன்ற தோஷத்தினின்று விடுதலை பெற்றுச் சந்தோஷ மிகுதியால் நான்மூழ்கிய யித் தீர்த்தத்திற்கு சக்கர தீர்த்தமென்றும் பெயர் வழங்குவதோடு பூத, பிரேத, பைசாச, வேதாள, அலகை முதலியவைகளால் பீடிக்கப் பட்டவர்களும், அவைகளைக் கொன்ற தோஷமும் யித் தீர்த்தத்தால் விடுதலை பெறக் கடவர்கள் என்பதாய் வரமளித்து வைகுண்ட மடைந்து ஸ்ரீமந் நாராயணன் திருக் கரத்தில் அமர்ந்தது.



# வேதாள வரத தீர்த்தம்

—o—

உத்திபணன் என்ற வேதாள அரசனானது பூர்வ ஜென்மப் பயனாய் சாட்சாத் சிவபெருமானைத் தெரிசித்து இச்சென்மத்தைப் போக்கிக் கொள்ள ஆவல் பூண்டுஏகாக்ரக சித்தனாகி பரமனை நோக்கி சிந்தித்திருக்கையில் பரமனும் பிரத்யட்சமாகி நீ மோட்சவீடெய்துதற்கு போதிய தவம் செய்யவில்லைஎன்றும் இன்னும் ஜென்மங்கள் எடுக்க வேண்டியிருக்கிற தென்றும் மோட்ச சாம்பிராச்யங்களை அடைவதற் குறிய மானிட சரீரத்தைக் கொடுக்க நினைத்து அவ்விடம் ஓர் தீர்த்த முண்டாக்கி அதில் வேதாள அரசனைத் தீர்த்த மாடச் செய்யவே திவ்யமான மானிட சரீரத்துடன் வேதாள அரசன் தோன்றினான் பின்னும் தபசு சித்திக்குறிய மந்திரோபாயங்களை ஈஸ்வரனால் உபதேசிக்கப் பட்டதுந் தவிர அத் தீர்த்தத்திற்கு வேதாள வரத தீர்த்தம் என நாமமிட்டு மோட்ச பிராப்தியும் ஞானோதயமும் இத்தீர்த்த பலன் என்பதாய் வெளியிட்டு கைலைக் கெழுந் தருளினார்

(1) காளவ மகரிஷியின் சாபத்தால் நாளுகவும் வேதாளமாகவும் சாபம் பெற்ற சுதரிசனன் சுகன்னன் என்னுமிரு காந்தர்வ வாலிபர்கள் தங்களுடைய சாபத்தை இத்தீர்த்தம் பட்டதும் நிவர்த்திக்கப் பட்டு தங்களில்லம் சென்றார்கள்

(2) நாகேஸ்வரி என்ற பாண்டியனின் தங்கையை ஜடாமுனி என்னும் ஓர் இராட்சதன் பிடித்து அதினால் அவன்

சரீரம் மெலிவுற்று ஆடைகளைக் கழற்றி எறிவதும் பற்களைக் கடிப்பதும் நகைப்பது மாயிருந்தவள் இவ் வரத தீர்த்தத்தில் மூழ்கியதும் ஜடா முனியானது பெருஞ் சப்த மிட்டு பெண்ணை விட்டு ஒடி விடவே நாகேஸ்வரி என்ற ராஜ தன்கை யானவள் சுய நினைவு பெற்று சந்தோஷமாக தன் நாடு சென்று இன்புற்று வாழ்ந்தனள்.

—o—



# பாப நாச தீர்த்தம்.

{ o }

ஹிமயமலைச் சாரலிலேயுள்ள பிர்ம்மவாச்ரமமென்னும் தபோ வனமானது, நீண்டு அகண்ட பரப்புடையதாக வானளாவிய தருக் களடர்ந்து படர்ந்து, காட்டாறுகளும், நீரோடைகளும், மலையருவி களும், நிறைந்து அன்னங்களும், மயில்களும் ஆட, குயில்கள் பாட, வண்டுகள் ரீங்காரம் செய்ய, இயற்கை இன்பங்கள் நிறைந்திருக்கும் இத் தகைய மனோகரமான வனத்தில் எங்குபார்க்கினும் ஆச்ரமங் களும், பர்ணகசாலைகளும், தவச்சாலைகளும், ரிஷிகள், முனிவர்கள் கும்பலுமாகவே காணப்பட்டன.

ஓர்நாள் திடமுகன் என்னும் பெயரினை யுடைய ஓர் காரானன் வேத சாஸ்திரங்களைப் பயில ஆர்வமிக்க ஆவல் கொண்டு இத்தபோ வனத்தை யடைந்து அங்கு குழுமியிருந்த முனிவர்களை வணங்கி இருகையுங்கூப்பிக் கேளுங்கள், தவ சிரேஷ்டர்களே, அடியேன் வெகுநாளாக வேத சாஸ்திரங்களைக் கற்க வேண்டுமென்று ஆவல் மிகுதி யுற்றவனாகி பெரியோர்களாகிய உங்களிடத்தில் கற்றுப் போகலாமென வந்துள்ளேன். என்னை ஆதரித்து என் இஷ்டத்தை பூர்த்திசெய்து வைக்கப் பிரார்த்திக்கின்றேன். என்று பயபக்தி யுடன் நின்றான்.

இவ்வாறு பணிந்து நிற்கும் திடமுகனைப் பார்த்து ஏ! திடமுக னென்னும் சூத்ரா, நீ தாழ்ந்த குலத்தில் பிறந்தவனா யிருப்பதால் வேதாதி எக்ய கர்மங்களைச் செய்யவும் வேத மந்திரங்களை நாவினும் சொல்லவும், நினைக்கவும் கூடாது. போ. போ. உனது இவ்வபேக்ஷை நிறைவேற வேண்டுமானால் இச் சென்மத்தில் சன்மார்க்கமாய் நடந் தால் அடுத்த ஜன்மங்களில் வைசிய, க்ஷத்திரிய குலப் பிறப்பியும் பின் பிரமண குலத்திலேபிறக்கும்போது இவைகளெல்லாம் தானே

உனக்குறிக்கும் என்று முனிவருரைக்கவே, எப்படியும் கிருபைபுரிய வேண்டுமென திடமுகன் மன்றாடியும் நிர்ப்பிரயோஜன மாயிருப்பதைக்கண்டு ஆற்றொணாத் துயருற்று ஏங்கிப், புலம்பி ஹிருதயம் துடிக்க, மெய்சிலிர்க்க, பரிசுத்தமான அவன் ஹிருதயத்தின் அடிப் பாகத்திலிருந்து பின்வரும் மொழிகளை எடுத்துரைக்கலானான்.

ஏ, முனிவர்களே, நான் பஞ்சபூத சாட்சியாயாய் திரிகரண சுத்தியாக ஈஸ்வரனால் நமக்களிக்கப் பட்ட வேத, சாஸ்திரங்களைக் கற்றுக்கொள்வதில் ஆர்வமுடைத்து அதன்நிமித்தம் சர்வதியாகங்களும் செய்வதில் சித்தனாயிருப்பது வாஸ்தமேயானால், எனக்குப் பயிற்சியளிக்கமறுத்த இம்முனிவர்களெல்லோரும் மகாசண்டாளர்களாகி தானம், தவம், ஒழுக்கம், ஞானமிழந்து போகக்கடவர் என சாபமிட்டுத் தன்னில்லம் திரும்பினான்.

இவன் சாபம் நம்மை என்ன செய்யுமென்று இறுமாப்புக் கொண்டிருந்த முனிவர்கள் நாளுக்குநாள் ஆறிவிழந்தும், ஞானமிழந்தும், தேஜஸ்யிழந்தும் அஞ்ஞானிகளாகி ஆச்ரமங்களை துறந்து குடி, களவு, காமம், புலாலுண்ணல், கொலை முதலிய பல நீசச் செயல்களைச்செய்து கொண்டு விலங்குகளுக்குச் சமமாக வனத்தில் சஞ்சரித்து வரும்போது அவ்வழியே ஓர்தினம் சென்று கொண்டிருந்த அகத்திய மாமுனிவர் இக்கும்பலின் வரலாற்றை யறிந்தவராய் அவர்களை யணுகி அவர்வள்மீது தனது கரங்களை வைக்கவும், சிறிது ஞானமுண்டாகி மாமுனியைப் பணிந்து ஆட்கொண்டருளும் ஐயனே என எல்லோரும் சாஷ்டாங்கமாக அகத்தியரைத் தொழுது நிற்க வாருங்கள் முனிவர்களே, நீங்களடைந்த சாபமானது மிக உக்ரமாகவிருப்பதால் நீங்களெல்லோரும் கெந்தமாதனகிரி சாரலில் ஈஸ்வரனை நோக்கித் தபம் செய்வீர்களேயானால் அவர் பிரசன்னமாகி உங்களது சாபத்தை நிவர்த்திப்பாரேயன்றி வேறுயாவராலும் சாத்யமன்று என்பதாய் புத்திமதிகளைக் கூறி பஞ்சாட்சரத்தை அவர்களுடைய நாவில்எழுதி கெந்தமாதனத்திற் கனுப்பினார் மாமுனிவரனுப்பிய வண்ணம் ரிஷிகள் கும்பலானது கெந்தமாதன



த்தை யடைந்து நெடுங்காலம் ஈஸ்வரனைத் தியானித்துக் கொண்டு வருங்காலையில் பரமனும் இவர்கள் முன்னே பிரத்யட்சமாகி ஏ, முனிவர்காள், ஆர்வமுள்ளவனுக்கு கல்வி தானம் அளிக்க மறுத்ததினால் உண்டான பாபமும், திடமுகனின் ஹிருதயமாழ்ந்த சாபமும் நிவர்த்தியாக வேண்டுமானால் இதோ உங்கள் நிமித்தம் தெய்வீகமாக உண்டு பண்ணப்பட்ட பாவநாச தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து கொண்டும் பஞ்சாட்சரத்தை ஜெபித்துக் கொண்டும் இருப்பீர்களேயானால் சாபநிவர்த்தி பெற்று முன்போன்ற உயர் நிலையை யடைவீர்கள் என்பதாய்த் திருமொழி பகர்ந்து விடைமீதாரோகணித்து கயிலை சென்றார்.

இங்கு ஈஸ்வரனருளியவாறே முனிவர் கும்பல் 10–ஆயிரம் வருடம் தீர்த்தஸ்நான ஜபதபங்களைச் செய்து வருகையில் ஓர்நாள் ஆகாயத்தில் அசரீரியானது உங்கள்சாபம் நிவர்த்தியாகி பரிசுத்தர்களானீர்கள் என்று மொழியவே மிகுந்த சந்தோஷத்துடனும் ஆரவாரத்துடனும் தங்களுடைய பிர்ம்ம வாச்ரமத்திற்கு எழுந்தருளினார்கள்.

—o—

## வயிரவ தீர்த்தம்

—o—

சிவ பிரானின் திருக்குமாரர்களில் ஒருவராகிய வைரவ மூர்த்தி புண்ய சொரூபமான கெந்தமாதனத்திலுள்ள புண்ய தீர்த்தங்களைக் கண் பார்க்க வந்த சமயம் சேதுத் தீவின் மேல் சமுத்ரமானது வைரவ மூர்த்தியின் வரவைக் கண்டதும் சந்தோஷமேலீட்டால் ஆனந்தம் கொண்டு அலைகளாகிய கைகளை எழுப்பிக் கூப்பி நமஸ்கரித்தும் அவ்வாழியிலுள்ள மகாபரிசுத்த வஸ்துக்களாகிய பாஞ்ச சன்யமும் வலம்புரியும் சமுத்ர மேல் மட்டத்துக்கு வந்து பம் பம் என முழக்கியும் வரவேற்ற அசாதாரணக் காட்சிகளைக் கண்ட வைரவமூர்த்தியானவர் மகிழ்ச்சி பூண்டு அத்தகைய மங்கள ஆரவாரங்கள் காணப்பட்ட ஸ்தலத்தை என்றென்றும் அம்மகிமையை யளிக்கும் நிரந்தர ஸ்தலமாக்கக் கருதி அவ்விடத்தில் தீர்த்த மாடுதற்கு சமுத்திரத்திலிறங்கு கையில் பாஞ்ச சன்யமும் வலம்புரியும் சமுத்ர ஜலத்தை நிரத் தெடுத்து வந்து வயிரவ மூர்த்தியின் ஜடாபாரத்தில் ஜெய ஜெய வென வருஷித்தது பாஞ்ச சன்யம் தட்சிணாவர்த்தம் என்ற இருபெருஞ்சாங்காபிஷேகம்பூண்ட ஸ்ரீவயிரவமூர்த்தியானவர் அப் புனித தீர்த்தத்துக்கு வயிரவ தீர்த்தம் என்று நாமகரணம் சூட்டி யித்தீர்த்தத்தி லாடுபவர்கள் பூர்ண ஆயுளுடன் இகபரம் இரண்டிலும் இனிய வாழ்வெய்துவார்களாக என்பதாய் வரப்பிரசாதங்களருளிப் பின் சாகர சங்கமத்துக்கு எழுந்தருளினர்.

[1] அதி பால்யத்திலேயே தகப்பனை யிழந்த மகுடவர்த்தன் என்னும் சேரநாட்டு இளைஞன் வறுமையால் பாதிக்கப் பட்டு தன் தாயுடன் வாழ்ந்து வரும் நாளில் ஓர் தினம் அவ் வழியே சென்ற ஓர் மஹான் இவ்விளைஞனைப் பார்த்ததும் நின்ற விடத்திலேயே ஸ்தம்பனமாகி விட்டார் இச் செய்கையைப் பார்த்த இளைஞனும் யிதுயாதோ என ஐயுற்று ஞானியின் பாதார விந்தங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து ஸ்வாமி தேவரீர் என்னைப் பார்த்ததும் இவ்வாறு ஸ்தம்பிதமானது ஏதனால் என்பதை அடியேனுக்கு தெரிவித்தருளும் என பிரார்த்தித்தான் அப்பா என்றதைத் தவிர வேறொன்றையும் சொல்வதற்கு நாவெழாதவராய் துயருற்ற சிந்தையினராய்த் தோற்றப் பட்ட அம்மகானை விடாப் பிடியாய் இளைஞனவன் வற்புறுத்திப் பிரார்த்திக்க அப்பா நின் ஆருயிர் நாளை உதயத்தில் மறலி கைப்பொருளாகும் என்றுரைத்ததும் தாயும் மகனும் ஆற்றொணா துயருற்று ஞானியிடம் உயிர்ப் பிச்சை வேண்டி மன்றாடினர்.



[2] பெற்ற தாயின் ஹிருதயம் பிளக்கும் புலம்பலுக்கும் இளைஞனின் பக்திக்கும் மன மிரங்கின வராய் அம் மகானவர் அவ் விளைஞனைத் தேற்றி கெந்தமாதனத் திடையோங்கும் இப் புண்ய தீர்த்தத்தில் மறு நாளுதயத்தில் காலன் வரும் சரியான நேரத்தில் இளைஞனை இத்தீர்த்தத்திலாடச் செய்தார் இளைஞனும் தீர்த்தமாடி கரையேறவும் அங்கு தன்னுண்மை கெட்டு நின்ற தென் திசைக் கூற்றுவன் இளைஞனை ஆசீர்வதித்து முனிவரைப் பணிந்து ஏமாற்றத்துடன் தன் திசை நோக்கிச் சென்றான். இவற்றிற் கெல்லாம் காரணஸ்தராக விருந்த மகான் பதஞ்சலி முனிவரே யாகும்.

## கபி தீர்த்தம்

ராம ராவண யுத்தத்தில் அரக்கர்களை சின்ன பின்னப் பசித்தி மாய்த்த ஸ்ரீ ராம மூர்த்தியின் சைன்யங்களாகிய 72 வெள்ளம் வானர சேனை வீரர்களும் தங்கள் தோஷம் தீர கெந்த மாதனத்தில் நளனால் ஓர் தடாகம் அழகுற அமைக்கச் செய்து அத் தடாகத்தில் 72 வெள்ளம் சேனை சைன்யங்களும் ஸ்ரீராம மந்திரமாகிய தாரகத்தை திரிகரண சுத்தியாக தியானித்துக் கொண்டே தீர்த்தமாடி கரை யேறியதும் உங்கள் தோஷமானது யாவும் நிவர்த்தியாகி பரிசுத்தர் களானீர்கள் என்று கண கண வென அசரீரி மொழியவே எல்லோ ரும் ஆனந்த சாகரத்திலாழ்ந் திருக்கும் போது ஸ்ரீ ராமரும் அவ் விடம் பிரப்தமாகி அங்கு நடந்த வற்றை யெல்லாம் அறிந்து சந்தோஷங் கொண்டு என்னுடைய அன்பிற்குரிய சைன்யங் களின் ஜீவ ஹத்தி தோஷத்தை நிவர்த்தி செய்து பரிசுத்தர்களாக் கிய இத்தீர்த்த மானது இன்று முதல் கபி தீர்த்த மெனப் பேர் பொருந்தி தன்னகத்தே வந்து தீர்த்தமாடும் எந்த ஜீவராசிகளுக்கும் புண்ய நதிகளாகிய யமுனை கோதாவரி காவேரி இம் மூன்றிலு மாடிய பலனைக் கொடுத்துக் கொண்டு இப் புவி உள்ளளவும் பிரகாசித் துக் கடவது என்று வர மருளினர்.

(1) விஸ்வா மித்திர மஹரிஷியின் தபத்தை அழித்து வரும் படி தேவேந்திரனால் அனுப்பப் பட்ட ரம்பை யானவள் பூலோகத்தில் வந்து நதி தீரத்தில் மகா வைராக்யத் தோடு பஞ்சாக்கினி மத்தியில் நின்று தபம் செய்யும் விஸ்வா மித்திரரைக் கண்டு மன்மதனைத் துணைக் கொண்டு காமக் கணைகளை ரிஷியின் மேல் ஏவி சுகந்தங்களால் பொதியப் பட்டதன் அளக பாரத்தை விரித்து காற்று வாக்கில் நிற்க வும் மன்மதன் கணையாலும் சுகந்த வாடை யினாலும் ரிஷியானவர் சற்று பாதிக்கப் பட்டவராய் கண் விழித்துப் பார்க்கவே எதிரில் ரம்பையானவள் பாதி நிர்வாணமாய் நிற்பதைக் கண்டு ஓகோ இவளாலல்லவா நமது தவத்திற்கு இடையூறு விளைந்த தென்றுணர்ந்து அவளைக் கல்லாய் சபிக்கவே தேவ மாதானவள் நடு நடுங்கி யிவ்வாபத்துக்கு என் செய்வதென் றறியாமல் ஏங்கித் தவித்து முனிவரின் பாத பத்மங்களில் வீழ்ந்து சாப விமோசனம் வேண்ட முனிவரும் சற்று மனமிளகி உனது கற்சிலை கெந்த மாதனத் திலோங்கும் மா மகிமை பொருந்திய கபி தீர்த்தம் பட்ட மாத்திரத்தில் ஸ்வரூபம் பெற்று தெய்வலோகம் போய்ச் சேர் வாயென உடனே அந் நதிக் கரையிலேயே கற்சிலை யாகி நின்றாள் அரம்பை என்னும் தேவ மாது.



(2) வெகு காலத்திற்குப் பின்னர் அவ்விடத்தில் தபம் செய்து கொண்டிருந்த சுவேத ரிஷியை அங்காரகி என்னும் அரக்கி விழுங்க வர சுவேதர் அருகில் நின்ற கற் சிலையை பிடுங்கி அரக்கி மீது விசையாய் எறியவே கல்லடியால் மாய்ந்த அரக்கியின் உடலும் கற்சிலையும் கபி தீர்த்தத்தில் விழவே கற்சிலை ரம்பையின் சுயரூபத்தையும் அரக்கியின் உடல் தேவரூபத்தையும் அடைந்தன.

—o—

## சீதா புஷ்கரணி

இலங்காதி பதியாகிய ராவணேஸ்வரனால் அசோகவனத்தில் அரக்கிகள் சூழச் சிறைப்படுத்தி வைத்திருந்த சீதா தேவியை, ராவணாதி ராக்ஷஸ சம்மாரஞ்செய்து மீட்டி வரும் வழியில் கெந்த மாதனத்தை அணுகியதும் தேவியின் கற்புநிலையை உலகினுக்குக் காட்டுவாண் வேண்டி. அவ்விடத்தில் அக்கினி வளர்த்து அதில் குளித்து வர ஸ்ரீராமர் கட்டளையிட, அவ்வாறே சீதா பிராட்டியும் ஆயத்தமாகி அக்கினிச் சுவாலைகளை வீசிக்கொண்டு ஜ்வலித்துக் கொண்டிருந்த அக்கினியில் மூழ்கி திருமேனியில் பூசப்பட்டிருந்த மஞ்சள் ஒளிமின்ன, சூடிய புஷ்பங்கள் வாடாமல், பூசிய கலவை ஈரம் வாங்காமல், அன்றலர்ந்த புதுமலர்போன்ற சரீரத்துடன், தர்ம தேவதைபுகழ்ந்து தாண்டவமாட, தேவமாதர்கள் மங்களகீதம்பாட நாற்புறமும் திவ்யதேஜஸின் ஒளியானது மின்ன அக்கினி குண்டத்தினின்று வெளியேறி வந்து ஸ்ரீராமபிரானை வணங்கி நின்றாள்.

அக்காலையில் ஆகாயவீதியில் தேவர்கள் அம்மையின்மீது புட்பமாரி பொழிந்து ஆர்ப்பரித்தனர். தேவர்களால் அம்மையின் மீது வருடிக்கப்பட்ட புட்பங்கள் தேவியின் திருமேனியிற் பட்டு நிலத்தில் வீழவும் அப்புஷ்பங்கள் ஒவ்வொன்றும் நீர்த் துளிகளாக மாறி, ஒருபெரும்நன்னீர்த் தடாகமாக விளங்கிற்று.

இப்படிப்பட்ட மகிமைமிக்க இத் தெய்வீக புஷ்கரணியில் அன்னை சீதாவுடன் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி தன் பரிவாரங்களுடன் தீர்த்தமாடி அத்திவ்ய தீர்தத்திற்கு "சீதாபுஷ்கரணி" என்ற நாமம் சூட்டி இத்தீர்த்தி லாடுவோர்கட்கு அஷ்ட ஐசுவரியங்களையும் அளிக்கும் வரத்தையும் அத் தீர்த்தத்திற்குக் கொடுத்துச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வதற்குக் கெந்தமாதன கிரிமேல் சென்றனர்.



(1) கசி என்னும் முனிவரிடத்தில் பிறந்தவனும் மகாபலிஷ்டனும் பிர்மதேவனிடத்தில் அநேக வரப்ரசாதங்களைப் பெற்றவனுமாகிய கபாலபாண னென்னும் ராட்சஸனைக் கொன்ற பிர்மஹத்தி தீர பிர்ம்ம தேவன் கட்டளைப்படி தேவேந்திரனானவன் இத்தீர்த்தத்தில் ஸ்நானமாடி தோஷ நிவர்த்தி செய்து தெய்வலோகம் சேர்ந்தனன்.

—o—

## வில்லூர்ணி தீர்த்தம்

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி இராவண வதம்செய்து புட்பகவிமானத்தில் ஆரோகணித்து சமுத்ரமத்தியில் திரும்பிவந்து கொண்டிருக்குங்காலையில் தாகவிடாயால் களைப்படைந்த சீதாதேவி ராமரிடம் தண்ணீர்வேண்ட, ஸ்ரீராமமூர்த்தியும் சகலரும் காண தெய்வத் திருவிளையாடல்புரிய எண்ணி ஓர் அம்பை யெடுத்து ஹே, சீதா! இதோ இந்த அஸ்திரம் எந்தயிடத்தில் பூமியில் பாய்கின்றதோ அவ்விடத்தில் பாணத்தை ஊன்றியவுடன் கையால் பிடித்திழுத்தால் நன்னீர் கிடைக்குமென மொழிந்து அம்பைவிட, மகாலக்ஷ்மியாகிய சீதாவும் பூர்வங்யானம் படைத்து சிவ்வெனப் பறந்து அம்பைப் பின்தொடர்ந்து சென்று, அம்பானது சமுத்திரத்தில் பாய்ந்ததால், உடனே அம்பைப் பிடித்திழுக்க அவ்விடத்தில் நன்னீர்க் குமுழிகள் தோன்றவும் வேண்டுவன தானருந்தி ஸ்ரீராமருக்குக் கொடுக்கும் நிமித்தம் அந்நீர்க் குமுழிகளை அள்ளிப் பந்து போற்றிரட்டி சமுத்திரத்தின் மேலெழும்பி அன்னப் பேடொத்துப் பறந்து சென்று புட்பகத்தி லமர்ந்திருந்த நாயகனுக் களித்தாள்.

ஜானகியால் கொடுக்கப்பட்ட தண்ணீரை அங்குள்ளவானராதி சைன்யங்களுடன் விபீஷணன், ஹனுமான், சுக்ரீவன், லட்சுமணன் சகிதம் யாவரும் நிரைந்து உட் கொண்டார்கள். அமிழ்தொத்த யிப் பானத்தை அருந்திய ஸ்ரீராம மூர்த்தி மகிழ்வுற்று எனது பாணத்தா லுற்பவித்த நன்னீர்க் குமுழிகளையுடைய இத் தீர்த்தம் அபார மகிமையுடைத்ததாய் என்றென்றும் நன்னீர்க் குமுழிகளைத் தோற்றுவித்துக்கொண்டு இதில்தீர்த்தமாடுவோர்கட்குஅவரவர்கள் அத்யந்த கோரிக்கைகளை சித்தியாக்கி நிறை வாழ் வளித்துக் கொண்டிருக்கக் கடவதென்று வரப்ரசாதமளித்து இத் தீர்த்தத்திற்கு வில்லூர்ணி தீர்த்தம் எனத் திருநாமமும் யிட்டார்.



(1) சித்த நாகார்ச்சுனன் என்ற சித்தன் ஒருவன் தேவலோகத்திற்கு போக்கு வரத்துச் செய்து கொண்டிருக்க ஆவல் கொண்டு இத் தீரத்தில் ஆயிரத்தெட்டு நிசிவேளைகளில் தீர்த்தமாடியதும் கமனக் குளிகைகளினால் சாத்தியமற்ற போக்கு வரத்துச் சாதனங்களை நினைத்த மாத்திரத்தி லடைந்ததுடன் தேவலோக சஞ்சாரமும் சித்தியாயின.

## மங்கள தீர்த்தம்

ஆதியில் பிர்ம்ம தேவனானவர், தேவலோக சிருஷ்டி காலத்தில் தேவர்களுக்கு நித்திய மங்களத்துவம் உண்டாக்குவான் வேண்டி ஸ்ரீ மஹாலெட்சுமியைத் தியானிக்கவும், மஹாலட்சுமி யானவள் கெந்தமாதனச் சாரலில் ஓர் திவ்ய தடாகத்தில் செந்தாமரை புஷ்பத்தில் வீற்றிருந்து, காட்சியளித்து ஓ பிர்மாதி தேவர்களே ! யித்தீர்த்தமானது. நித்திய மங்கத்துவத்தையளிக்க வல்லாதாதலால்,யி தில்தீர்த்தமாடி உங்கள பீஷ்டத்தை நிரைவேறறிக்கொள்க; என மொழிந்து அத்தடாகத்திலுள்ள அத்தாமரைமலரிலேயே ஐக்கியமானாள். அதுமுதல்தேவர்களால் நித்தியமாடப்படுமிப்புனிததீர்த்தம் மங்கள தீர்த்தமெனப் பெயர் பூண்டு கெந்தமாதனத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

பாற்கடலில் அமிழ்தம் எடுக்கும்வரை இத்தீர்த்தத்தில்சதாதேவ சஞ்சாரமாயிருந்தன

1 சயிந்தவபுரிக் கரசனாகிய மனோசவ னென்னும் உத்தமன் பாராசர மகரிஷியின் உபதேசப்படி யித் தீர்த்தத்தில் ஸ்நானமாடி இராமநாதனை தெரிசித்த படியால் யிழந்த தன் தேசத்தையும் செல்வத்தையும் திரும்ப அடையும் வலிமையும்,அருளும் பெற்று யின்புற்று வாழ்ந்து, இறுதிக் காலத்தில் மோட்சப் பிருப்தியையும் அடைந்தான்.

2 பாஞ்சால தேசத்தைச் சேர்ந்த உதக மூர்த்தி



என்ற வேத பிருமணன் தன் னில்லக்கிழத்தியுடன் சேது ஸ்நானம் செய்தற்கு பயணப்பட்டு வரும் வழியில் திடீரென மாரடைப்பால் உதகமூர்த்தியானவ னிறந்து போக வே,பதிவ்ரதா சிரோமணியாகிய அவன் மனைவி யானவள் அழுதுபுலம்பி திக்கற்றவளாய் தன் நாயகனின் உடலை தோள் மீது சுமந்து சென்று மங்கள தீர்த்தத்துக்கு எதிரிலுள்ள காட்டில் தகனம் செய்து பிடஎண்ணி பிரேதத்தை குளிப்பாட்டி வைப்பதற்கு மங்கள தீர்த்தை யடைந்து மங்களேஸ்வரியாகிய மகாலட்கமியை மனதிடை நிறுத்தி,பிரேத மீது மங்கள தீர்த்தத்தை வருஷிக்கவே துயிலெழுந்தவன் போன்று உதகமூர்த்தியானவன் எழுந்தனன். இவ்வற்புத தீர்த்தத்தால் மாங்கல்யத்துவம்பெற்றஅப்பதிவிரதாசிரோன் மணி தன்பதியுடன் சேது தீர்த்ததுக்கு ஏகலுற்றனள்

# இரண விமோசன தீர்த்தம்

மாபெருந் தபோ தனராகிய அத்திரி மகரிஷி யானவர் மயேஸ்வர யாகம் செய்வதற்கு வேண்டிய தன சகாயம் பெற்றுவரக்கருதி குபேரனிடம் செல்ல, குபேரனானவன், ரிஷி சிரேஷ்டர் வருகையை யறிந்தும் காலவித்தியாசத்தால் அலட்சியமாயிருக்கக் கண்ட ரிஷீஸ்வரர் ருத்ராகாரமான கோபங்கொண்டு ஏ, குபேர! நமது வருகையைக் கண்டும் அலட்சியமாக நீயிருப்பது செல்வத்தினால் உனக்கேற்பட்ட மமதையாலல்லவா? இதோ உனது செல்வத்தையும் மமதையையும் பார்க்கிறேன் எனக்கூறி "அதிசீக்ரத்தில் உனது பொக்ஷம் காலியாகி உனது சீரும் சிறப்பும் நிலைகுலையக் கடவ,,தென பயங்கரமான சாபத்தைப் போட்டு சற்றும் அவ்விடம் நிற்காமல் தன் யாக கிருத்தியங்களைக் கவனிக்கும் பொருட்டு சென்றார்.

கொடிய சாபத்தை யடைந்த குபேரன் தன்நிதிகள் அதிசீக்ரம்வற்றிவிட்டதைக்கண்டும் சற்றும் அஞ்சாமல் வங்காள தேசத்தரசனாகிய நிருர்த்த சந்திரனிடமிருந்து ஏராளமான பொற் காசுகளைப்பெற்றுக் கொண்டு போய் பொக்ஷங்களை நிறப்ப அதுவும் ரிஷியினுடைய வாக்குப்பிரகாரம் குறைந்து வற்றிவிடவே கடன் கொடுத்த வங்க தேசாதிபதி குபேரனைத்துடர்ந்து அவனது ராஜ்யம் முதலிய வற்றைக் கைப்பற்றிக் கொண்டான்.

இங்ஙனம் குபேரனானவன் நாடிழந்து, செல்வமிழந்து தரித்திரமேலிட்டு அறிவிழந்தவனாய் பூவுலகையடைந்து பிச்சைக்காரனைப் போலத் திரிந்துவரும் ஓர் நாளில் கெந்தமாதனச் சாரலை யடைந்து



அவ்விடம் குந்தியிருக்கையில் பர்வதத்தினின்றிறங்கி சேதுஸ்நான நிமித்தம் அப்போது வந்துகொண்டிருந்த அத்திரி மகாரிஷியானவர் அவனின் பரிதாப நிலையைப் பார்த்து அவன் மேலிரக்கங் கொண்டு அவனை ரட்சிக்கக் கருதி அவன் சமீபமாய் வர, குபேரனும் அவர் வரவைக் கண்டு பயபக்தி விஸ்வாசத்துடன் அவர் பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு சுவாமி, அடியேன் மீது கிருபை பூண்டு, நாயேன்செய்த பிழையைப் பொருத்தருளும்படி பிரார்த்தித்து நின்றான்.

இவ் வண்ணம் தஞ்சம் அடைந்த குபேரனை முனிவரானவர் தேற்றி, அவனை யழைத்துப் போய், தன்மகிமையால் ருணபந்தங்களை நிவர்த்தித்து அஷ்ட ஐசுவரியங்களை யளிக்கக்கூடிய சக்தி வாய்ந்த ஓர்தீர்த்தத்தை யுண்டு பண்ணி, அதில்குபேரனை தீர்த்தமாடும்படி ஆக்ஞாபிக்க குபேரனும் அவ்வாறே முழுகிகரையேறுகையில் நவநிதிகளும் பெண்கள் ரூபமாகவந்து குபேரனை ஆதரித்து ஆசிகள் கூறின, குபேரனும் சந்தோஷங் கொண்டு முனிவரைப் பணிந்து நின்றான்.

இவ்வித மகிழ்ச்சிகரமான காட்சியையும் குபேரனின் பணிவையும் அத்திரி முனிவர் பார்த்து ஏ! குபேர, பிர்ம்மகைங்கர்யமான மகேஸ்வர யாகத்தினிமித்தமே முன் உன்னிடம் நாம்வந்தோம் அதை நீ அலட்சியம் செய்தபடியினால் ஈஸ்வரனுக்கும், நம்மை அலட்சியம் செய்தபடியினால் வேதசாஸ்திரங்களில் சொல்லியவாறு குரு தபசிகளுக்கும் கடனபருதியாகப் போய் அவைகளெல்லாம் இத்தீர்த்தத்திலாடியதும் நிவர்த்தியாகி அஷ்ட ஐசுவரியங்களையும் ஈஸ்வர கடாட்சத்தையும் நீ அடைந்து விட்டபடியால் இன்று

முதல் யித்தீர்த்தத்துக்கு ருண விமோசனதீர்த்தம் எனப்பேர் விளங்கிக்கொண்டு, பிதுர், தேவ, ரிஷி, மானிடர் முதலியவர்களுக்கு எத்துறையிலும் செலுத்தத் தவறிய ருணதோஷங்களை நிவர்த்தித்துக்கொண்டு யிப்பூவுலகில் பிரசித்தி பெறக்கடவது என்று வரப்பிரசாதமருளி குபேரனையு மழைத்துக்கொண்டு சேதுநீரம் சென்றார்.

—o—



# அமிர்த வாபி தீர்த்தம்

ஸ்ரீ ராமமூர்த்தியானவர் ராவணேஸ்வரனைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷந்தீர கெந்தமாதனத்தில் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்ததும், அக்கெந்தமாதனத்திலேயே ஏகாந்தமாகவீற்றிருந்து சிரமபரிகாரம் செய்துகொள்ள நினைத்து சிற்பனாகிய நளனிடம்ஏகாந்தமண்டபம் அமைக்க உத்திரவிட நளனும் இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் ஓர்அழகிய மணிமண்டபத்தை நிறுவிக் கொடுத்தான்

இதுகாறும் தன்னைச்சூழ்ந்திருந்த லட்சுமணாதி சேனாவீரர்களையும் சீதாவையும், கெந்தமாதனத்திலேயே அகத்தியாச்ரமத்தில் விட்டு தான்மட்டும் தனிமையாக ஏகாந்த மண்டபத்தில் பிரவேசிக்கையில் அங்குநடைபெற்ற தெய்விக காட்சியை என்னென் றியம்புவது? ஆயிரம் பணா முடிகளையுடைத்து பார்ப்பதற்குப் பயங்கரமாகச் சீறிப் புரண்டு கொண்டிருந்த ஆதிசேடன் என்ற சர்ப்பமானதுஸ்ரீமந் நாராயணனாகிய ராமனைக் கண்டதும் சீற்றந்தணிந்து நாகரெத்தினங்கள் ஆயிரம் பணாமுடிகளிலும் தக தக வென ஜ்வலிக்கப் படமெடுத்து பஞ்சணைபோன்று தன்னுடலைசுற்றவும் ஸ்ரீ ராமமூர்த்தியானவர் அதன் மீதமர்ந்து துயில் கொள்ளலானார்.

அனந்தசயனத்திலாழ்ந்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி, துயிலெழுந்ததும் ஆதிசேடனுக்கு வைகுண்டம் செல்லுமாறு கட்டளையிடவே தேவசயம்பாகி அமிர்தத்தை பொற்தட்டில்ஏந்தி அமுதுண்ணப்பிரார்த்தித்து நின்றான். அப்பொழுது ஸ்ரீ ராமர் தாமாகவே அமிர்தமருந்தமனமில்லாதவராய் தன்னாருயிர் காதலியுடன் ஹனுமான்விபீஷணன் யிவ்விருவரையும் வருவித்து நால்வரும்புசிக்க எண்ணுகையில், அமிர்தம் கொஞ்சமாக இருப்பதைக்கண்ட ஸ்ரீராமமூர்த்தி, மனதிடைநினைத்தமாத்திரத்தில், அமிர்தமான துமாரிபோல் கா கா வென வந்து

ஸ்ரீராமர் கரங்களில் நிறைந்துவழிந்து அங்கோர் மடுவாகின்றது.

அங்காலையில் ஸ்ரீராமரானவர், அம்மூவர்களுடனும் மடுவினிருந்து அமிர்தத்தை அள்ளிப்புசித்து இனிதுவீற்றிருக்கையில் அனுமானுக்கும் விபீஷணனுக்கும் சிரஞ்சீவிபட்டமளித்தார்.

அமிர்தமானது அவ்விடத்தில் மடுவாகத்தங்கிவிட்டதினால் அதற்கு அமிர்தவாபி என்று திருநாமமிட்டு அம்மடுவில் தீர்த்தமாடும் எந்தஜீவராசிகளும் நீண்டகாலஜீவிதமும் முக்தியும்பெற்று யின்புறுவார்கள் என்பதாய் வரப்பிர சாதமருளியபடியானீ தீர்த்தத்தின் மகிமையானது இமயச்சிகரம் போன்ற உச்சஸ்தானமுடையதாயிருக்கிறது.

[1] அகத்தியரின் சகோதரராகிய காரணமகரிஷி யானவர் யித்தீரத்திலாடுவதும் நிஷ்டை புரிவது மாயிருந்து, கற்ப கோடிகாலம்தபஞ்செய்தாலும்கிடைத்தற்கரிய, பிரமஸைதன்யக்கலப்பை, மிகச்சிறியகாலத்தில பெற்றார்



# லட்சுமண தீர்த்தம்

லட்சுமணர் இந்திரஜித்தைக் கொன்ற பாவந்தீர லிங்கஸ்தாபனஞ் செய்து உண்டாக்கிய தீர்த்தம். இத் தீர்த்தத்தில் ஸ்நானமாடி தீரத்தி லெழுந்தருளி யிராநின்ற ஸ்ரீ லட்சுமணேஸ்வரரைத் தெரிசித்தல் அஸ்வமேத யாகம், ஹிரண்ய கெற்ப யாகம், சோம யாகம் இவைகளில் அவ்ரவர்கள் பக்தி சிரத்தைக்கேற்ப யாதேனுமொரு யாகத்தின் பலனைப் பெற்றிடுவார்களாதலால் யித்தகைய வரப்ரசாதங்களையுடைய யிப்புனித தீர்த்தம் முதன்மை பெற்று விளங்கிக் கொண்டிருக்கிறது.

[1] ஸ்ரீ கிருஷ்ண பகவானின் தமையனாகிய பல ராமர், வர்க்கலா சூரனை சம்மரித்த பிர்மஹத்தி தோஷந்தீர இப் பூவுலகிலுள்ள கெங்கா, யமுனா, சரஸ்வதி, கோதாவரி, காவேரி, மகாமகம் முதலிய தீர்த்தங்களிலாடியும்பயனில்லாமற்போய் கடைசியாய் நைமிசாரண்ய முனிவர்களுடைய உபதேசப்படி யித் தீர்த்தத்தி லாடியதும் பிரம்மஹத்தி யானது பறந்தோடிப் போயிற்று.

[2] காந்தார தேசத்தரசனானவன் தன் தேசத்தில் திருவும் செல்வமும் சதா குடிகொண்டிருக்கத் தக்க சாதனங்களைப், பல துறைகளிலும் செய்து யாதும் பயனற்றுப் போயினதைப்பார்த்து ராஜகுருவாகிய வசிட்டரிடம் வழியாதென பிரார்த்திக்க, வாரும் ராஜசேகரா! உனது எண்ணப்படி

ராஜ்பத்தில் சதா திருவும் செல்வமும் தாண்டவமாட வேண்டுமாயின் நீ உனது தேசத்து மக்கள் சகிதம் ஓர் முறை கெந்தமாதனத்தி லுள்ள "லட்சுமண தீர்த்தத்தில்,, ஸ்நானமாடக்கடவை என்றுப தேசித்துச் சென்றார்.

வசிட்டரிஷிவாக்குப்படியே அரசனைவன் குடிபடைகள் சகிதம் யித் தீர்த்தத்தை யடைந்து ஹிருதய பூர்வமான பக்தி சிரத்தையுடன் தீர்த்தமாடிக் கரையேறுகையில் ஓ! அரசே, நீயும் உனது குடிகளும் பக்தி சிரத்தையுடனித் தீர்த்தத்திலாடிய படியால் அஸ்வமேதம், ஹிரண்யகெற்பம் மகேசுரம் இம்மூன்று யாகப் பலனையும் அடைந்து விட்டீர்கள். என, அசரீரி மொழியவே அரசனும், குடிகளும் மகிழ்ந்து தங்கள் நாடு சேர்ந்து இன்பவாழ் வெய்தினர்கள்



# இராம தீர்த்தம்

—o—

துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனார்த்தமாய் யிப்புவியின் கண் அவதரித்துள்ள அகிலலோக நாயகனாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி யானவர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தபின் அயோத்திமா நகரம் திரும்புங்காலையில், யிந்நிலஉலகம் உள்ளளவும் நமதுபோரால் ஓர்தீர்த்த மிக் கெந்தமாதனத் திலிருக்க வேண்டுமென நினைத்து அவ்வண்ணமே மிக அழகாகவோர் தடாகம் நிர்மாணிக்கப்பட்டு அத்தீர்த்தத்துக்கு மானிடஜென்மம் சாபல்யமடையும் மாட்சிமை பொருந்திய வார்த்தை அருளினார்,

[1] கும்பமுனி என்றும், குறு முனிவரென்றும் பேர் பெற்று விளங்கும் மாபெருந் தபோதனராகிய அகத்திய மஹரிஷியின் மாணாக்கர்களில் ஒருவராகிய சுதீட்டனர் என்பவர் யித்தீர்த்தத்தில் ஸ்நானபான ஜெபதபங்களைச் செய்து கொண்டிருக்கையில் ஈஸ்வரா னுக்ரகமும் அணிமாதி அட்டமா சித்திகளும் பெற்றார்.

[2] துரியோதனாதிகளுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த பாரதப்போரில் குருவாகிய துரோணாச்சாரியாரை சூழ்ச்சியால் இறக்கும்படி செய்வதற்கு அசுவத்தாமன் இறந்தான் என்று தருமபுத்திரர் பொய்மொழி புகன்றபடியால் அத்தோஷந்தீர வேதவியாச பகவானால் உபதேசிக்கப்பட்டபடி யித்தீர்த்தத்தை யடைந்து நீராடி வருங்காலையில் ஓர்

தினம் அருணோதய காலத்தில் நீராடிகரையேறுகையில் ஏ, யுதிஷ்டிர, குருயிறப்பதற்கு காரணமான பொய்புகன்ற தோஷம் உன்னைவிட்டு விலகிவிட்டது என அசரீரி மொழியவே தருமபுத்திரரானவர் எல்லையற்ற மகிழ்ச்சிகொண்டு அஸ்தினாபுரம் நோக்கிப்புறப்பட்டனர்.



# சுக்ரீவ தீர்த்தம்

வானராதிபனாகிய சுக்ரீவனால் சிவலிங்க ஸ்தாபனம் செய்து யேற்படுத்திய தீர்த்தம். வாலியைக் கொல்லுவித்த சகோதரத் துரோகம் தீர 8-தினங்களித் தீர்த்தத்தில் ஸ்நானமாடி பக்தி சிரத்தையுடன் ஈஸ்வரத்யானம் செய்து 9-வது தினம் தீர்த்தமாடிக் கரையேறுந் தருணம் ஹே, சுக்ரீவ! சகோதரத் துரோகம், ராக்ஷஸ வதை உன்னைப் பற்றியிருந்த தோஷங்கள் யாவும் யித் தீர்த்தத்திலாடியதும் நிவர்த்தியாயின தென்று ஆகாயவாணி முழங்கவே சுக்ரீவனானவன் பரமானந்தனாய் கெந்தமாதன சேதுத் தலத்தைப் போற்றிப் புகழ்ந்து சென்றனன். சுக்ரீவனா லேற்பட்ட யித்தீர்த்தத்திற்கு சுக்ரீவ தீர்த்தமெனப் பேர் வழங்குகிறது.

[1] சேர நாட்டுக் கருணிகான் என்னும் ஓர் அழகிய க்ஷத்ரிய சேனாவீரன், தினகரதாஸன் என்ற வேதசாஸ்திர குருவின் புத்திரியானவள் தேவமாதர்களும் கண்டு நாணித் தலைகுனியும் வண்ணம் அதிரூப லாவண்யமா யிருப்பதைக் கண்டு அவளை மணமுடித்துத் தருமாறு வேதியனிடம் கேட்க, அறிவிற் சிறந்தோனும், சத்ய சீலனுமாகிய வேதியன் ஓ, இளைஞ! அவ்விஷயத்தைப் பற்றி என்னைக் கேட்பதில் பயனென்ன! எனதுபுத்திரி உம்மைக் காதலிப்பாளேயானால் நீர்தானே அவளின்பதி எனவே, எனது அனுமதி இவ்விஷயத்தில் வேண்டியதில்லை என்று மொழிய, க்ஷத்திரிய இளைஞனும் நேரே பெண்ணையணுகி ஓ, பெண்கள் நாயகமே! உம்மீது நீங்காக் காதலுடன் உம்மை வரித்துக்கொள்ள விரும்புவதா லென்னை ஆதரித்து என் பெருந்திரளானசெல்வத்திற்கு அதிபதியாவாய் என்றான்.

இவ்வார்த்தையைக்கேட்டபெண்ணரசியானவள், இனிய குரலுடன், ஐய, தாங்கள் கூறுவது சரியாயினும் தங்கள்மீது எனக்குஉண்மையான அன்புபிறக்கவில்லையே? அப்படியிருக்கும்போது என் மனசாட்சிக்கு விரோதமாக உம்மை வரிப்பேனாயின் நாம் எங்ஙனம் இன்புற்று வாழமுடியும்? காதலின்பம் என்பது இருபாலரும் ஒருமித்த கருத்தால் யேற்படுவதென்பது தாங்களறியாததல்லவே? ஆகையால் இவ்வுண்மையைத் தாங்களறிந்து போய்வாருங்கள். என்று கூறித் தன்னலுவல்களைப் பார்ப்பதற்கு அடியெடுத்து வைப்பதற்குள் க்ஷத்திரிய இளைஞனானவன் காமாக்கினியால் தகிக்கப்பட்டவனாய்த் தன்னையடக்கச் சக்தியற்று ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து குருமகளின் கரங்களைப் பற்றியிழுத்து மார்போடணைத்துப் பலவந்தமாகத்தழுவி முத்தமிட்டான்.

ஆ! பின் நடந்த கோரச்செயல் ஹிருதயத்தைப் பிளக்கச் செய்கிறது! உயர் குடிப்பிறப்பினர்கள் மானக்கேடு வந்த காலையில் உயிர்தரித்து வாழாராதலாலதை யொத்து மாற்றுயர்ந்த பசும்பொன்னை யொத்த அம்மடந்தை நல்லாள் கணநேரமும் தாமதியாது நிறையழிந்த அச் சரீரத்தைத் தாங்கி வாழ யிசையாது பிராணத்யாகம் செய்துகொண்டனள்.

நிற்க, தன்னருமை மகளுக்கு நேரிட்ட யிவ் விபத்தைப் பார்த்து மனம்நொந்த வேதிய குலாதிபன், அறிவிழந்து அடாதுபுரிந்துநின்ற கொடி க்ஷத்திரிய இளைஞனைக் கடிந்து அடா, துரோகி! கொடிய குஷ்டரோகம் உன்னைப்பிடிக்கப் பட்டு உனது வாழ்நாளெல்லாமழுந்துக; எனச்சபித்தார்.

அக்கணமே கைகால் முடங்கி குஷ்டத்தால் பிடிக்கப் பட்ட இளைஞன் வேதியனைப் போற்றித் துதித்து பிழை பொருத்தாட் கொள்ள இறைஞ்ச, சாகரம் போன்ற கரு-



ணையும், அன்பும், தயாளமும் கொண்டவ் வேதியன் இளைஞனின் மீதிரக்கங் கொண்டு அப்பா! இச்சாபம் நிவர்த்தியாக வேண்டுமேயானால் கெந்தமாதனத்தில் வானராதிபதியும், சூர்ய புத்திரனுமாகிய சுக்ரீவனால் உண்டாக்கப் பட்ட ஓர்புனித தீர்த்த மிருக்கிறது அங்கு நீ எப்படியாகிலும் சென்று ஒரு மண்டலம் வரை அத்தீர்த்தத்திலாடுவையேயாகில் நீயேற்ற சாபம் நிவர்த்தியாகி குஷ்டமும்போம் ஆதலால், செல்லுக என்றார். க்ஷத்திரிய இளைஞனும் அவ்வாறே கெந்தமாதனத்தை யடைந்து யித் தீர்த்தத்திலாடி சாப விமோசனம் பெற்று திவ்ய சரீரியானான்.

## அங்கத தீர்த்தம்

—o—

மாபெரும் பலிஷ்டனாகிய வாலியின் புத்திரன் அங்கதனானவன், உலகவாழ்க்கையில் வெறுப்புற்றவனாய் ஈஸ்வரனைத்தியானித்து முத்திவீடெய்த ஆவல்பூண்டு கெந்தமாதன கிரிவந்து, அங்குள்ள ரிஷீஷ்வரர்களைக்கண்டு தெரிசித்துதனது ஆவலைத்தெரிவிக்க, அவர்களும் இவன்பேரில் அன்புகொண்டு முன்பாற்கடலில் அமிர்தம்கடையுங்கால் ஓர்பக்கம் அசுரர்களும்,மற்றோர்பக்கம் தேவர்களும் நின்று மந்தரமலையை மத்தாகவும் வாசுகியை கயிறாகவும் கொண்டு கடைந்துவந்ததில் அசுரர்களுக்கு சமமாகதேவர்களால் கயிரிழுக்க முடியாது போய்விட்டசேதியறிந்த வாலியானவர் அக்கணமேபுறப்பட்டுவந்து தேவர்களுக்காக தானொருவனாகவேநின்று அமிர்தப் கடைந்துகொடுத்த பேருபகாரத்தை நினைத்து விஸ்வாசத்துடன் அங்கதனுக்குவேத மந்திரங்களை உபதேசித்துதபசு நிலையையும் காண்பித்துதங்கள்கும்பலுடனேயே அங்கதனையும் சேர்த்துக்கொண்டார்கள்.

நாளடைவில் அங்கதனானவன் வேதாங்க விற்பன்னனாகவும் மஹாதபஸ்வியாகவும் விளங்கிதன் தபோமகிமையால் யிப்புனிததடாகத்தை உண்டுபண்ணி அத்தடாகமத்தியில் நின்றுசிவபிரானை மனதிடைநிறுத்தி நெடுநாள் அகோரதபம் புரிந்துகடைசியில் பிர்ம்மசைதன்யத்துடனிரண்டறக்கலந்தனன்.

—o—



## சாம்பவ தீர்த்தம்

வானர சேனைகளின் படைத்தலைவர்களில் ஒருவனாகிய சாம்பவன் தன்வயோதிக காலத்தில், அங்கதனுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி மோட்ச சாம்பிராச்சியங்களை யடையஇச்சைகொண்டு கெந்தமாதனத்தில் அங்கததீர்த்தத்துக் கருகாமையில் ஓர்தடாகமுண்டுபண்ணி யதில்ஸ்நானமாடி அத்தீர்த்தத்திலேயே நின்று அன்னாகாரம், நித்திரை முதலியவைகளைத் துறந்து, தாரகமந்திரத்தியான ஏகாக்கிரகசித்தனாய், மஹாவிஷ்ணுவை மனதிடைநிறுத்தி வெகுகாலம் அகோரதபசுசெய்து கொண்டிருக்கையில் விஷ்ணுவும் சாம்பவன்தபத்துக்கு மகிழ்ந்தவராய் பிரசன்னமாகி வைகுந்த ப்ராப்தி யளித்துமேலும் சொல்வாராயினர் மகாவைராக்யனாகிய சாம்பவ, நீயித்தீர்த்தத்தில் நின்றுநம்மைக்கோரி தபஞ்செய்து மோட்சவீடெய்தியதினால் யித்தீர்த்தமானது தன்னகத்தே வந்து தீர்த்தமாடுவோர்கட்கு யிப் பூவுலகுள்ளளவும் வைகுந்த போகங்களை யளித்துப் பின் நமதுபதத்தில் சேர்ப்பிக்கும் ஆற்றலுடைத்தாய் விளங்குக என்றாசீர்வதித்து ஸ்ரீவைகுண்டம் சேர்ந்தார்.

# வாலி தீர்த்தம்

கிட்கிந்தா புரியை அரசு செலுத்தி வந்த வாலி என்னும் ஒப்புயர்வற்ற மாபெரும் பராக்ரம சாலியாகிய வானர அரசன் பிரதிதினமும் அருணோதயத்திற்கு முன்னெழுந்து சப்தசாகரங்களாகிய ஏழு மஹா சமுத்ரங்களையும் ஏழு பாய்ச்சலில் தாண்டி ஒவ்வொரு சமுத்ரத்திலும் ஸ்நானமாடி அவ்வச் சமுத்ர தீரங்களில் சிவலிங்க பூஜை செய்துவிட்டு அருணோதய நேரத்தில் கிட்கிந்தா புரியை அடைவது வழக்கமாதலால், ஓர்நாளவ்விதம் சமுத்ரங்களைத் தாண்டி வருகையில் பாற்கடலில் அப்பொழுதுதான் துயிலெழுந்திருந்த மஹா விட்ணுவைப் பார்த்து பரமானந்தனாகி பகவானைத் துதித்து பரந்தாம, அடியேன் நின்திருக் காங்களாலன்றி வேறே யாவராலும் சாகாதிருக்க வர மீயும்படி பிரார்த்திக்க, பகவானும் கிருபை கூர்ந்து அப்ப, நீ நாளையதினம் காலையில் மகா சமுத்ரங்களைத் தாண்டிக் கொண்டு வருகையில் மஹோததி மகாசாகரக் கரையோரம் கெந்தமாதனத்தில் வருகையில் உன் கண்களுக்குத் தெய்வீகமாக ஓர் தீர்த்தம் தென்படும் அத் தீர்த்தத்தில் நீராடினால் உனது எண்ணம் நிறைவேறும். எனக் கடாட்சித்தார்.

பகவான் கூறிய வண்ணமே அடுத்ததினம் கெந்தமாதனச் சாரலில் தெய்வீகமாக ஓர் தீர்த்தம் தோன்றவே, வாலியும் அதில் பக்தி சிரத்தையுடன் நீராடி எழும்போது ஆகாயவீதியானது தேவர் கும்பல்களால் நிறையப்பட்டு மத்தியில் கோடி சூரிய உதயம் போன்று மகாலட்சுமி சமேதராய் விட்ணு பகவான் வீற்றிருந்து வாருய் வாலி, பதினான்குலகிலும் இணையற்ற மகாபராக்ரமசாலியும்



தேவாமிர்த சகாயனுமாகிய உனது பேராலிப் புண்ணியக் கெந்தமாதனத்திலோர் தீர்த்தம் விளங்கவேண்டுமென்பதற்காகவே உம்மையிவ்வாறு செய்தோம். நீ ஆடிய யித்தீர்த்த மகிமையால் தான் தேவாதிகள் ஆகாயவீதி நிறைய இவண் பிரத்யட்சமாகி உன்னை ஆசீர்வதிக்கின்றனர். மேலும், நாம் நேற்றுனக்குக் கொடுத்த வரமும் பலிதமாயிற்றாதலாலின்று முதல் யித்தீர்த்தம் சகல தேவானுக்ரகத்தையும் ஜீவகர்களுக்கு அளிக்கக் கடவது. என்று வரப்ரசாதமளித்து அந்தர்ப் பிரப்தமாயினர். வாலியும் சந்தோஷமிகுந்து கிட்கிந்தையை அடைந்தனன்.

[1] தெலுங்க்தேசத் தரசனான சியாமசந்திரன் யித் தீர்த்தத்திலாடி கெந்தமாதனத்தில் வடதிசையில் எழுந்தருளியிரா நின்ற இலங்கைமா காளியை ஸ்தோத்தரித்துக் கடைசியில் அவள் தெரிசனமும், ஆதரவும் பெற்று கொங்கணம், திராவிடம் முதலிய தேசங்களைச் ஜெயித்து மகா புஜபலபராக்ரமம் பொருந்தி அரசுபுரிந்து வந்தான்.

# தர்ம தீர்த்தம்

அஸ்தினபுரியை அரசாட்சிசெய்யப்பட்ட தருமபுத்திர மகாராஜனவர் ராஜசூயயாகம் அஸ்வமேதயாகம் செய்யக்கருதி ஓர் நாள் அவண்வந்திருந்த ஸ்ரீகிருஷ்ணபகவானிடம் தனதுஇஷ்டத்தை முறையிட அவரும்தர்மபுத்திரரைச் சோதிக்கக்கருதி அஸ்வமேத யாகம் செய்யவேண்டுமே யானல்யிந் நிலஉலகிலுள்ள அதிவீரசூர பராக்கிரம சாலிகளாகிய அரசர்களைஜெயித்து போரில் வெற்றிபெற வேண்டுமே! மகாவிஷ்ணுவின் அம்சமாய் திரிமூர்த்திகளாலும் ஜெயிக்கமுடியாத வல்லமைபடைத்த அரசர்களையும், பூதவேதாள ராக்ஷஸ கணங்களைத் தன்சேனைசைன்யங்களாகக் கொண்டோர்களையும் நீரெப்படி போரில்வென்று ஜெயக்கொடிநாட்டமுடியும்? ஒருக்கால் துணிந்து போர்புரிந்தாலும் எந்ததேசத்தரசனிடமாவது நாம் தோல்வியடைந்து விட்டால்உமது யாகத்துக்கு விக்னம் நேரிட்டு விடுவதுந்தவிர உலகத்தாரெல்லாம் நம்மைப்பார்த்து நகையாடுவார்கள் இதல்லாமலும் ராஜசூயயாகம் பண்ணவேண்டுமானல் மலைகள் போன்ற நிதிக்குவியல்கள் வேண்டும் ஆதலால்தர்மநந்தன, வீணையிச்செயல்களில் மனதைச்செலுத்தாமல் யிக்கணமேயிந்த யோசனையை கவிட்டுவிடும் எனக்கூறித் துவாரகைக்கேகினர்.

இதுகாறும் தன்னிஷ்டங்களைப் பூர்த்திசெய்வித்து எல்லாவழிகளிலும் ஆதரித்துவந்த கிருஷ்ணபகவான் இன்றுதினம் கைவிட்டதிலிருந்து நமக்கினிமேல் என்னமகுத்துவமிருக்கின்றது எனப்பலவாறு சிந்தனையுற்று, ராஜ்யத்தை தம்பிமார்கள் வசம் ஒப்பிவித்து யாரென்ன சொன்னபோதிலும் ஒரேவைராக்யமாய் புண்ய க்ஷேத்ரங்களைத் தெரிசிக்கும்யாத்திரை துவங்கினர்.



காசி முதலிய புண்யக்ஷேத்ரங்களைத் தெரிசித்துவிட்டு கந்தமாதனத்தை யடைந்து சேது ஸ்நானம் முதலியவைகள் செய்து [illegible] டத்திலேயே தன் வாழ்நாளைக் கழித்துவிட என்ணி [illegible] லோர் தடாகம் நிர்மாணிப்பதற்கு பூமியைத்தோண்டும் போது அவ்விடத்தில் ஸ்படிகக் கற்களாலாய ஓர் அழகிய படித்துறைத்தடாகம் மண்ணில் புதைந்திருக்கக்கண்டார்கள் இந்நிகழ்ச்சிகளைத் தர்மநந்தனருனவர் கண்ணுற்று அடங்காமகிழ்ச்சி கொண்டுமண்ணைவெட்டி எடுத்து தடாகத்தைச் சுத்திசெய்யவே அத்தடாகமானது தெய்வலோகத்திலுள்ள சந்திரகாந்த புஷ்கரணியைப்போல் ஜ்வலிக்கவும் அதிலிருந்து ஒன்றின்பின்ஒன்ருக 108சுயம்புலிங்கங்கள் [illegible] துக்குவா தருமர் அவைகளை இருகரங்களாலுமெடுத்து அத்தீர்த்தத்திலே பிரதிஷ்டை செய்யக்கருதி அத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து கரையேறுகையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் நகுல, சகாதேவ, பீமனுடனும் துரோபதையுடனும் பிரசன்னமாகவே தர்மர் பரமகிருதார்த்தருகி கபடநாடக சூத்திரதாரியாகிய கிருஷ்ணனை ஸ்தோத்தரித்து சித்தம் வைத்தருள் என, அதெல்லாமிருக்கட்டும் அஸ்தினபுரி போகலாம் வாரும் என்ருர் ஸ்ரீ கிருஷ்ணன்.

120754

இராஜசூயம் அசுவமேதமிவ்விரு யாகங்களும் செவ்வனே நிறைவேற அருளவீரின்றேல் நான் எனது நாட்டை எட்டியும் பாரேன் பெண்டும் பிள்ளையும் சோதரரும் வேண்டேன் யிது நிச்சயம் என்ருர் தருமர்.

தருமரின் வைருக்யம் கண்ண பிரானின் சூதை வென்றது. கண்ணனும் உம்மைச் சோதித்தேன், காண்டீபந்தரித்த பார்த்தனிருக்கும்போதும், கதாயுதமேந்திய பீமனிருக்கும்போதும் உமக்கியலாதகாரியம் புவியிலுளதோ? இராஜசூயம் அஸ்வமேதமிவ்விரண்டு மாபெரும் யாகங்களும் இனிது நிறைவேறும். ஆதலால் வருக, எனத் திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீகிருஷ்ணனை, தருமர் வினவுவாராயினர். துவாரகாதிப! இவ் விடத்திலுள்ள யிந்த ஸ்படிகத் திருக்

குளத்தின் வரலாற்றையும் அதிலிருந்து கிடைத்துள்ள சுயம்பு லிங்கங்களைப்பற்றியும் எமக்குப் போதித்தருளும் என்று வேண்டினார்.

[ஜீவலிங்க தீர்த்தமாகிய " ஸ்படிகக்குளத்தின் வரலாறு]

ஆதியிற் பிர்ம்மதேவன் பிர்ம்ம வருடத்திற்கோர் முறை தன் சிருஷ்டி மகிமைகளை யெல்லாம் ஒருங்கு திரட்டி மகாமகத்வமுடைய ஜீவ சிவலிங்க முண்டுபண்ணி பிர்ம்மசைதன்ய மகாபூஜை செய்யக்கருதி கெந்தமாதனத்தை யடைந்து அம் மலைச்சாரலாயுள்ள யிவ்விடத்தில் யித்தடாகத்தை யுண்டுபண்ணி வருடமோர் முறை இத் தீர்த்தத்தில் நீராடி யித் தீர்த்திலேயே ஐந்து நாழிகை பரியந்தம் நிஷ்டையிலிருப்பார். நிஷ்டை தெளிந்தெழும் நேரத்தில் ஸ்வயம்புவாகிய ஜீவலிங்கம் மகா கலையோடு யித்திருக்குள மேல் மட்டத்தில் தோன்றும்.

இவ்வாறு பிர்ம்ம தேவனின் சிருஷ்டி தத்துவத்தால் யிக்குள மத்தியில் தோன்றிய ஜீவலிங்கத்தை ஓரிமைப் பொழுதில் பிர்ம்மா பூஜை செய்வதும் பின் அந்த லிங்கம் அந்தரப் பிரப்தமாவதுமாய் அனேக பிர்ம்ம வருடங்களில் நடைபெற்றன.

பின் பிர்ம்மதேவனுக்கும் விஷ்ணுபகவானுக்கும் ந ட ந் த போரின் பயனாக பிர்ம்மதேவனுக்கு சிவானுக்ரகம் குறைவு பட்டதிலிருந்து இத்திருக்குளம் மண்மேடிட்டுப் போயின. தேவானுக்ரகம் உம்மீது பூரணமாக யிருப்பதினால் இன்று நீர் யிப் புனித தடாகத்தைக் கண்டீர். மேலும் 108 சிவலிங்கங்கள் தோன்றியதுயாதெனிலென்றால், பிர்ம்மதேவன் இச் சிவலிங்க பூஜையை விட்டு இன்றைக்கு 108 பிர்ம்ம வருடங்களாயின வாதலால், அந்த 108 வருடங்களிலும் உற்பத்தியான 108 லிங்கங்கள் ஏககாலத்தி லின்று



உமது யாகங்கள் பூரண மங்களத்துடன் நிறைவேறுதற் பொருட்டு உமக்குக் கிடைத்தனவே, தருமநந்தனா! பிர்ம்ம தேவனுடைய தபோமகிமைகளைக் கொண்டு வளர்ந்த இந்த 108 ஜீவலிங்கங்களை ஏககாலத்தில் பெற்ற உம்மைப் போன்ற மகாபாக்யவான் பதினான் குலகிலுமில்லை பிர்ம்மதேவனு மிப்படிப்பட்ட பாக்கியத்தைப் பெறவில்லையே! தர்மபூபதி, இந்த லிங்கங்கள் உம்மிடமிருக்கும் வரைக்கும் பதினான்குலகிலும் நீர் ஏகசக்ராதிபதியாவீர். என்றாசீர்வதித்து அஸ்தினாபுரி அழைத்துச் சென்றார்.

பிர்ம்ம தேவனின் ஜீவலிங்க தீர்த்தமானது தர்மரால் புனருத்தாரணம் செய்யப்பட்டதால் அன்றுமுதல் " தர்ம தீர்த்தம் " எனப் பெயர் பெற்று விளங்குகிறது.

[1] நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் அறுபத்துனான்கு கலைக்யானம் முதலிய சகல சாஸ்திரங்களையும் ஐயமறக் கற்றுப் பயின்ற ஞானபானு என்ற சோழநாட்டு வேதியன் என்ன கற்றும் முற்பிறப்பின் வரலாற்றை அறிய முடியாதிருக்கின்றதே யென்றேங்கி பல தேயங்கள் சென்று ஆங்காங்குள்ள ஞானிகளைப் பணிந்து தன் கோரிக்கை எங்ஙனம் அறியப்படும் என்று வினவிவர, ஒருவரும் பயனளிக்கும் முறையில் விடையளிக்காததைக் கண்டு மனச் சலிப்புற்றவனாய்ச் சேதாரண்யத்தை அடுத்து வருகையில் தெய்வாதீனமாய் யித் தீர்த்தத்தைக் கண்டு இதில் நீராடிக் கொண்டு வருங்காலையில் வளர்பிறை போன்று நாளுக்கு நாள் பூர்வ ஜென்மாந்திர நிகழ்ச்சிகளெல்லாம் அவனுக்கு விளங்கவே, ஆனந்த சாகரத்தி லாழ்ந்தவனாய் தனதில்லம் திரும்பினான்.

[2] பாஞ்சால தேசத்தை அரசாண்டு வந்த வீரவர்த்தன் என்னுமரசன், தன் குடிகளெல்லாம் செல்வ மிகுந்து இன்

புற்று வாழ, நித்யானந்தனாய் நீதி நெறி தவறாது அரசு புரிந்து வருங்காலையில் தன்னுடைய முற்பிறப்பின் வரலாற்றை அறிய ஆவல் பூண்டிருக்கையில், ஓர் நாள் அவன் கொலு நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு முனிவரை அரசன் எதிர்கொண்டழைத்து ஆசனத்திலமர்த்தி தன் கோரிக்கைநிறைவேறும் மார்க்கம் யாது? ஐயனே என்றிறைஞ்சினான்.

முனிவருரைத்தபடி அரசனித் தீர்த்தத்தை யடைந்து நீராடி வருகையில், நாளுக்கு நாள் பூர்வஞ் ஞானம் அபிவிருத்தியாகி பூரண சித்திபெற்றதும் தன் நாடு போய்ச் சேர்ந்தான்.



## பீம தீர்த்தம்

தர்ம புத்திரர் செய்யப்போகும் ராஜசூய யாகத்தில் முக்யமான பணியாளர்கள் மகா பரிசுத்தர்களாக இருக்க வேண்டுவது சாஸ்திர சம்மதமாதலால், தர்மபுத்திரரை திருப்தி செய்து அழைத்துப்போக வந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானால் இத் தீர்த்தம் உண்டாக்கப்பட்டு பீமசேனனை இதில் நீராட்டிப் பரிசுத்தனாக்கியதால் யித் தீர்த்தத்திற்கு "பீம தீர்த்தம்" எனப்பெயர் விளங்கிக்கொண்டிருக்கிறது.

[1] சோமநந்தன் என்னும் காந்தார தேசத்தரசன் புண்யமாகிய பல அரிய தானங்களைச் செவ்வனே செய்ததின் பயனாய் சுவர்க்க பதவியைப்பெற்று அனேககாலம் சுவர்க்க போகங்களை அனுபவித்துக் கொண்டு வருகையில் ஓர்நாள் கர்வங்கொண்டு தான்செய்த தானங்களின் சிறப்பைப் புகழ்ந்து வார்த்தையாடியதினால், சுவர்க்கத்திலிருந்து தள்ளப்பட்டவனாய் பூமிக்குவந்து கொடிய துன்பத்திற்கு ஆளாகி வருந்துகையில் ஓர்நாள் நைமிசாரண்யத்தை யடைந்தங்குள்ள முனிபுங்கவர்களை ஸ்தோத்தரித்து ஸ்வர்க்க போகத்தைத் திரும்ப அடையும்வழி யாதெனக் கேட்டான்

தான்செய்த தானங்களைச் சிறப்பாகச் சொல்லித்திரிந்த தற்புகழ்ச்சியாளனே! ஊழ்வினைப் பயனாலிது நிகழ்ந்தது யாதெனில் பூவுலக வாழ்க்கையில் கொஞ்சம் நுகரவேண்டியது பாக்கி நின்றமையாலேயாம். திரும்பவும் சொர்க்க பதவியில் உம்மைச் சேர்ப்பிக்க ஓர் உபாயம் சொல்கிறோம்

அது யாதெனில், கெந்தமாதனத்திடை யோங்கும் பீமதீர்த்தத்தில் நீராடுவீரே யாகில் காரிய சித்தியாகும். என்று உபதேசித் தனுப்பினர்.

ரிஷிகளுரைத்த வண்ணம் யித் தீர்த்தத்தில் நீராடிக் கரை யேறியதும் தெய்வ லோகத்திலிருந்து புட்பகம்வர அதில் ஆரோகணித்து சுவர்க்கம் சேர்ந்தனன்.



## அர்ஜுன தீர்த்தம்

பஞ்ச பாண்டவர்களுக்கும் துரியோதனாதிகளுக்கும் நடந்த பாரதப் பெரும்போரில் தன்னால் கொல்லப் பட்ட கர்ணன் தன் உடன் பிறந்த சகோதரன் என்பதை படுகளத்திலழுது புலம்பிய தன் தாய் குந்திமா தேவியினாலறிந்த அர்ஜுனனானவன் சகிக்க முடியாத துயருற்று பிதாவுக்குச் சமமான சகோதரனைக் கொன்ற தோஷந்தீர வழிகாட்ட வேண்டுமாயும் அதற்காக சர்வ தியாகமும் செய்ய சித்தனாயிருப்பதாகவும் வியாச பகவானைப் பிரார்த்திக்க, வியாசரும் அர்ஜுனன் மீதிரங்கி ஓ! அர்ஜுன, இச்சகோதர ஹத்தி நிவாரணமாக வேண்டுமாயின் ஸ்ரீ கைலாசபதியின் தெரிசனத்தாலன்றி வேறெவ் வுபாயத்தாலும் முடியாதாகையால், நீ தட்சணம் கெந்தமாதன மென்னும் சேதுமத்தியில் ஈஸ்வரனை நோக்கித் தபம் செய்வாய். எனக் கட்டளையிட்டுச் சென்றார்.

வியாசருரைத்த வண்ணம் அர்ஜுனன் கெந்தமாதனத்தை அடைந்து ஆரண்யத்தில் அமர்ந்து ஐம்புலன்களையும் அடக்கி ஈஸ்வரனை நோக்கிநிஷ்டையிலிருக்கையில்ஸ்ரீ கைலாசபதி பிரத்யட்சமாகி ஏ! பார்த்த, இதோ யித் தீர்த்தத்திலாடிவா, எனச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவ்விடத்திலோர் தடாகம் தோன்றிற்று ஈஸ்வர கட்டளைப் பிரகாரம் அத் தீர்த்தத்திலாடி பரமேஸ்வரனின் பாதகமலங்களில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து பலவாறு புகழ்ந்து பிரார்த்தித்த அர்ஜுனனை நோக்கி ஏ! விஜய, கெந்தமாதனத்தில் விளங்கு மித் தீர்த்தத்தில் நீராடி நம்மை வழிபட்ட படியினால் உன்னைச் சார்ந்திருந்த சகோதர ஹத்தியும், மற்றும் பாரதப்போரில் துரோணாச்சாரி, கிருபாச்சாரி, வீஷ்டுமாச்சாரி முதலிய பெரியோர்களைக் கூரிய பாணங்களினால் ஹிம்சித்த தோஷமும், முன்னர் கால

கேயகிவாத கவசாள் முதலிய வாப்ரசாதிகளை வொருத்த தோஷமும் நிவர்த்திபாகி விட்டது இத்தகைய பரிசுத்த தன்மை வாய்ந்த யித் தீர்த்தத்தில் எவரொருவர் தீர்த்தமாடி நம்மை வணங்குகின்றனரோ அவர்கள் புனிதத்தன்மையை யடைவதுடன் சோதாஹத்தி, குரு ஹத்தி முதலிய தோஷங்களும் நிவர்த்திக்கப் பெறுவர்கள் என்ப தாய் வராருளி அந்தரப் பிருப்தமாயினர்.

[1] மேனகை என்னும் தேவமாது இந்திரனுடைய கோபத்திற்காளாகி நரஜென்மமாகச் சபிக்கப்பட்டுப் பின் இந்திரனுடைய அனுக்கிரகப்படியே இத் தீர்த்தத்திலாடி சாபவிமோசனம் பெற்று உம்பருலகம் சேர்ந்தனள்.

[2] கூர்ஜர தேசத்தரசனுகிய மிருத்யூமன் என்பவனிடம் பிரதம பண்டிதனுயிருந்த அங்காரகேதுவின் கிரகத்தில் நடந்த ஓர் விசேட பந்தி போஜனத்தில் அன்ன பதார்த்தங்கள் பரிமாறிக் கொண்டிருந்த ஸ்வயாமினி என்னும் சுயம் பாகமாதை மந்திரவித்தை மாமேதாவியாகிய அப் பிரதம பண்டிதனின் குமாரனுனவன் அலங்கோலப் படுத்த வேணுமாய் விளையாட்டாய் நினைத்து அவள் பரிமாறிக் கொண்டிருக்கும் போது மந்திரோச்சாடணம் செய்து அவளது ஆடை தேகத்தில் தரியாது நழுவி விழும்படி செய்தான்.

அப் பெண்ணனவள் தன்னலானமட்டும் முயற்சித்தும் ஆடை அரையில் தங்குவதாயில்லை. எனவே இச் செய்கை பந்தியிலுள்ளோர் களாலல்லாது வேறே யாவருமல்ல



வென்பதை நிச்சயித்தவளாய் தனக்கு இச்சபையில் நேரிட்ட அவமானத்தை நினைத்து கண்களில் நீர் தாரை தாரையாய் வழிந்தோடவே, சபையோர்களே, என்று பெருங்குரலிட்டு, நீங்கள் பெண் பிறவிகளுடன் பிறந்தும் மிருகத்தன்மையை யடைந்து என்னையிங்கு அவமானப்படுத்தினதினுல் இன்றுமுதல் உங்கள் வம்சத்தின் கருக்களெல்லாமழிந்துகுலநாசமாகக்கடவதென உள்ளமுருகச் சபித்து நிர்வர்ணத்துடனேயே அவ்விடத்தை விட்டு வெளியேறினுள். இக்கொடிய சாபத்தால் குலநாசமும் கருஅழிவும் ஏற்பட்டுவந்த பிரதம பண்டிதன் வம்சத்தார்கள் யித் தீர்த்தத்திலாடி அசரீரி மொழிய சாபவிமோசனம் பெற்றுர்கள்.

## நகுல தீர்த்தம்

தர்ம புத்திரர் செய்த இராஜசூய யாகத்தில் பிரதம பணியாளர்களுள் ஒருவனாகிய நகுலனை பாவ தோஷங்களினின்றும் பவித்திரனாக்குவதற்கு ஸ்ரீ கிருஷ்ணபகவானால் இப்புண்ய கெந்தமாதனத்தில் தெய்வீகமாக உண்டுபண்ணிய தீர்த்தம். இக பர சித்திகளை யளிக்கும் வல்லமை இத் தீர்த்தத்திற்கு அகிலநாயகனான கண்ண பிரானால் அளிக்கப்பட்டிருக்கிறது.

[1] விஸ்வபாதனன் என்னும் பாண்டியதேச முதன் மந்திரி இத்தீரக் சுனையில் தபசுநிலையம் நிறுவி ஓர் சுபமுகூர்த்தத்தில் யித் தீர்த்த ஸ்நாடி சர்வ சித்து புருஷனாகத் திகழ்ந்தான்.



## சகாதேவ தீர்த்தம்

ஸ்ரீ கிருஷ்ணபகவானால் தெய்வீகமாக உண்டாக்கப் பட்ட தீர்த்தம். கிருஷ்ணனுடைய கட்டளைப் பிரகாரம் யித் தீர்த்தத்திலாடிய சகாதேவன் மாயனை நோக்கி, பரந்தாம, பாண்டவர்களின் போராலிக் கெந்தமாதனத்தில் ஒளிரும் தீர்த்தங்கள் சூரிய, சந்திரர் உள்ளளவும் தன்னகத்தே வந்து தீர்த்தமாடுவோர்கட்கு இக, பரமிரண்டிலும் உயர்பதவியும், தீர்க்காயுளும் அளித்துக்கொண்டிருக்க வரமருள வேண்டும். என பிரார்த்தித்து நிற்க, மாயனும் மகிழ்ந்தவ் வரங்களருளித் தானுமப் புண்ணிய தடாகத்திலாடி நியம நிட்டை புரிந்தார்.

[1] துவாரகா வாசிகளாகிய ஹரித்துய்மன், ஹரிபதங்கன் என்ற இரு சகோதர சிஸ்யர்கள் சுகுணபாதர் என்னும் இருடியின் நிட்டைக்குப்பங்கம் செய்ததால் அவர்களேற்ற சாபம் இத் தீர்த்தத்தால் விமோசனமாயிற்று.

(2) கேகய தேசத்து அரசன் ஓர் நாள் தன் குமாரர்கள் பன்னிருவர்களின் குணாதிசயங்களையும் வித்வத் தன்மையையும் சோதிக்கக் கருதி அவர்களை யழைத்துப் பரீக்ஷிக்கையில், ஒருவன் தவிர மற்றெல்லோரும் சகல வித்தைகளில் நிபுணர்களாயிருக்கவே, அவர்களுக்கு நல்ல பரிசு கொடுத்தனுப்பி விட்டு முட்டாளாக யிருந்த பிள்ளையைத் துரத்தி ஓட்டி விட்டான்.

இவ்விதம் அநாதையாகக் காட்டில் திரிந்த ராஜகுமாரனை கருணை மூர்த்தியாகிய அகத்தியமா முனிவர் தன்னுடன் அழைத்துப்போயித் தீர்த்தத்திலாடிக் கொண்டிருக்கும்படி கட்டளையிட, அவ்வண்ணமே தீர்த்தமாடிக் கொண்டிருந்த ராஜகுமாரன் அதியாச்சர்யமாய் ஒரே மண்டலத்தில் எத்திசையிலும் தனக்கு நிகரற்ற விதமாய் வித்வத்தன்மையையும், வில்லாண்மையையும் பெற்று தன்னை முன் வெறுத்த தகப்பனுக்கு நற்றுணை யாயினன்.



# பிர்ம்ம தீர்த்தம்

ஆதியில் பிர்ம்மதேவனும், மகாவிஷ்ணுவும் ஒருவர்க்கொருவர் தாம்தாம் பெரியவர் என்பதாய் மமதையுற்று அவரவர்கள் பிரதாபங்களையும், கீர்த்திகளையும் சொல்லிக் கொண்டு தன்னை மறந்தவர்களாய் மகா உக்ரமாக கைகலந்து போர் செய்கையில் அவர்களுடைய படைத்தல், காத்தல் தொழிலுக்குள் ப்பட்ட உலகங்களெல்லாம் நசுங்கவும், சூரிய, சந்திரர் பிரகாசமிழந்து திசைதடுமாறி நிற்கவும், ரிஷிகள், தேவர்கள் துன்புறவும் உலகமானது இவ்வண்ணம் தத்தளித்துக் கொண்டிருக்கையில், யிதையறிந்த சாக்ஷாத் சர்வேஸ்வரனானவர் பிர்ம்ம, விஷ்ணு இருவர்களின் மமதையை அடக்குதல்வேண்டி சண்டைசெய்து கொண்டிருக்கும் இருவருக்கும் மத்தியில் அடிமுடியைக் காணமுடியாத அக்னி மலையாகத் தோன்றி நின்றார்,

அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் ஒரே பரப்பாகத் தோன்றிய இந்த அக்னி மலையின் அடியையாவது, முடியையாவது யார்கண்டு வருகிறார்களோ அவர்களே பெரியவராவார். என்பதாய் இருவரும் முடிவுக்கு வந்து, பன்றி உருவெடுத்து அடியைக் காண்கிறேனென மகாவிஷ்ணுவும், அன்ன உருவெடுத்து முடியைப் பார்க்கிறேனென பிர்ம்மாவும் முறையே பாதாளத்திலும், ஆகாயத்திலும் தோண்டியும், பறந்தும் சென்றார்கள்.

இவ்விதம் சென்றவர்களில் விஷ்ணுபகவான் பாதாளம் வரை சென்றும் அடியைக் காணமுடியாது மிகவும் இளைத்து சக்தியற்றுப் போய் பரம்பொருளே யாவர்க்கும் பெரியவர் என்னும் வாய்மையை யுணர்ந்து திரும்பி விட்டார்.

பிர்ம்மதேவன் அன்ன உருவுடன் மேலுலகங்களிலெல்லாம் பறந்து சென்றும் முடியைக்காண்பது அசாத்யமெனத் தோன்றக்

கொண்டிருக்கையில், பரமசிவன் முடியிலிருந்து கீழே விழுந்து கொண்டிருந்த தாழம்பூவைக் கண்டு அதை எடுத்துக் கொண்டு மேலும் மேலும் முயற்சித்துப்பார்த்து இளைத்துக்களைத்து ஒன்றும் முடியாமல் ஏங்கிக் கடைசியில் ஏதோ ஓர் எண்ணங்கொண்டு இதோ விஷ்ணுவிடம் சென்று பந்தயத்தை ஜெயித்து விடுகிறேனென தனக்குத்தானே சொல்லிக் கொண்டு திரும்பலாயினர்.

இவ்வண்ணம் திரும்பிவந்த பிர்ம்மனை, விஷ்ணு பார்த்து முடியைக் கண்டீரோ? அடியை என்னால் காண்பதற்கியலாது போய் விட்டது ஆதலால் நான் பெரியோனல்ல என்றார்.

ஆம்; முடியைப் பார்த்தேன்; இதோ இம்-மலையின் முடியிலிருந்த தாழம்பூவை நான் பார்த்ததற்கு மெய்க்கோளாக எடுத்து வந்தேன் பார். எனத் தாழம்பூவைக் காட்டினார் பிர்ம்மதேவன்.

பிர்ம்மதேவன் புகன்ற பொய்மொழியின்விஷத் தன்மையான சப்தமானது எதிர்நின்ற அப்-பரிசுத்த அக்கினிமலையில் தாக்கவே, மலையானது திடீரென இருபிளப்பாக வெடித்து அதில் கோடி சூரியப் பிரகாசம் போன்று மான், மழு, சதுர்புஜ, காலகண்ட, திரிநேத்ர தாரியாய் உமாதேவி, இடம் அமர, வெள்விடை மீதாரோகணித்து ஹே, பிர்ம்மதேவா! அக்னிமலை ரூபமாக நின்ற நமது முடியைக் கண்டதாகவும் நமது முடியிலிருந்து கீழ்விழுந்த தாழம்பூவை வழியில் எடுத்துக் கொண்டு முடியிலேயே எடுத்து வந்ததாகவும் பொய்புகன்ற தாலின்றுமுதல் உனக்குறிய ஆலய வந்தனை வழிபாடுகள் யாவும் அற்றுப்போகக் கடவதென்றுசாபமிட்டு பக்கத்தில்நின்ற மகாவிஷ்ணுவை மார்போடணைத்து வாரும்பரந்தாமா உண்மைகூறியபடியால்நீரே,நம்மினும் பெரியவர்என்று கொண்டாடி வாழ்த்தினர். ஈஸ்வரானுக்ரகத்தை யிழந்து ஈஸ்வரசாபத்தைப்பெற்ற பிர்ம்மதேவன் தன்னறியாமையையுணர்ந்து பரமேஸ்வரனின்பாதாரவிந்தங்களில்விழுந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு மகாதேவ, பிழை பொறுத்தாட்கொள் என்றுமன்றாடவும், கருணைகூறிய ஈசனும்



பிர்ம்மனின்மீதிரங்கி, வாரும்பிர்ம்மதேவ, நீ தட்சிணத்தில் கெந்தமாதனச்சேதுமத்தியில் அகிலஉலகிலுமுள்ள ஜீவாசிகளையும் திருப்தி செய்விக்கும்படியாய் ஓர்யாகம்செய்வையேயாகில் நாம்விதித்தசாபத்தில் கோடியிலொன்றுனக்கு யில்லாதுபோய் விடுவதுதவிற மற்ற வந்தனைவழிபாடுகளை வெகுசம்பிரமமாக அடைவாய். எனஉபதேசித்து அந்தரப் பிரும்தமாயினர்.

ஸ்ரீகைலாசபதியின் உபதேசப்படியே பிர்ம்மனுமிக்கெந்தமாதனத்தையடைந்து பிர்ம்மாண்டயாகத்தை பூரணமாகச்செய்து முடித்து சகலஜீவாசிகளாலும் வழிபடும்பாக்கியத்தை திரும்பப்பெற்றார்

பிர்ம்மதேவன் செய்தயாக குண்டமானதுதீர்த்தகுண்டமாகத் திகழ்வதுடன் பிர்ம்மதேவனால் அநேக மாட்சிமைதங்கிய வரங்களைப்பெற்றிருக்கின்றது.

[1] காசியை அரசுபுரிந்து வந்தமாவிந்தன்என்னும் ஈஸ்வரபக்தனை அரசன்சோமயாகம் செய்யக்கருதி அதற்குத்தகுதியான பரிசுத்தமான ஸ்தலம் எங்கிருக்கிறதென யாககுருவாக ஏற்படுத்தி யிருந்த வசிஷ்ட மாமுனிவரை வினவ, கெந்தமாதனத்தில் பிர்ம்மதேவனால் செய்யப்பட்ட பிர்ம்மாண்ட மஹாயாககுண்டமானது தீர்த்தகுண்டமாக விளங்குவதாலத் தீர்த்தக்கரையில் யாகம் செய்தல் அநேக கோடி பலனைத்தரும் என்றுரைத்தபடி அரசனும்கெந்தமாதனத்தையடைந்து அதிவிமரிசையுடன் யாகத்தைநிறைவேற்றி பெறுதற்கரிய பரமனின் அருட் கடாட்சத்தைப் பெற்றான்.

[2] நவநாயகர்களில் மஹாகொடியவனாகிய சனி பகவான்ஈஸ்வரனைப்பிடித்தாட்டி · இம்சித்தமகா தோஷமானது பிடி

புண்யதீர்த்த ஸ்பரிசமாத்திரத்தில் நிவர்த்தி யாகிற்றென் றுலித்தீர்த்த மகிமையை யியம்புதல் நாவாயிரம்கொண்ட சேடனுக்கு மியலாக்காரிய மேயாகும்.

---



## பரசுராமதீர்த்தம்

பூலோகத்தில் க்ஷத்திரியதர்மம் சீர்குலைய ஆரம்பித்தன. எங்கும் வலிமைபடைத்தோர்க்கே நீதியும், சுகமும் வாழ்வுங்கிடைத்தன கோடிக்கணக்கானஏழைமக்கள் சகை, இரக்கமற்ற கொடுங்கோன்மை காரணமாக பசிப்பிணிக்கு இரையாகிமடிந்தனர். கோடிக்கணக்கான நிரபராதிகள் நெறிதவறிய அரசர்களால் ஹிம்சிக்கப் பட்டார்கள் பிரம்மணர்கள் எங்கும் வதைசெய்யப் பட்டார்கள். அக்காலையில் சூரிய குலத்தரசர்களே யிவ்வுலகத்தை ஆண்டு இவ்வகை அநீதிகளைச் செய்துவந்தார்கள்.

ஜெமதக்கினி என்றநாமம்பூண்ட ஓர்பிராம்மண மகரிஷி திருகாலக்யானியாய் சதாசர்வேஸ்வரனைத் தியானித்துக்கொண்டு கஷ்டப்படும் குடிகளுக்கு நல்லுபதேசம் புரிந்துவந்தார் அரசர்கள் செய்யும் அநீதியானது நாளுக்குநாள் விருத்தியாகி மகாகோரமாகக் காணப்பட்டது. இந்தசந்தர்ப்பத்தில் பூமியில் தர்மத்தைநிலைநாட்டுதற்கு ஸ்ரீவைகுந்த வாசனாகிய மகாவிஷ்ணு அவதாரம் செய்ய நினைத்து ஜெமதக்கினி மகரிஷிக்கு பரசுராமனென்னும் புத்திரனாக ஜெனித்து இளமையிலேயே சகலசாஸ்திரங்களையும் பயின்றதுடன் அஸ்திரசாஸ்திர வித்தையில் தேர்ந்து நிகரற்று விளங்கினார்.

பரசுஎன்ற ஆயுதத்தை எப்போதுந்தாங்கி நின்றபடியால் பரசுராமர் எனப்பேர்பூண்டு துஷ்டசம்ஹார தினத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஓர்தினம் ஜெமதக்கினிமகரிஷியானவர் நிஷ்டையிலாழ்ந்திருக்கையில் சிலக்ஷத்திரிய அரசர்கள் வந்து தியானத்திலிருந்த முனிவரைக் கொலைசெய்து போட்டுப் போய்விட்டார்கள். அச்சமயம் வெளியேபோயிருந்தபரசுராமர்வந்து இக்கோரக்கொலையைப்பார்த்து

மிகவும்துக்கித்து நடந்தவற்றையெல்லாம் தெரிந்து அடங்காகோபங்கொண்டு கண்களில் நெருப்புப்பொறிபறக்க பரசுவெடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு இதோ யிம்மகாபாதகத்தைச் செய்த அரசர்களை இப்பூவுலகில் கருவறுத்து விடுகிறேன் என ஆகாயவாணி பூமிதேவி சாட்சியாக சபதம்கூறித் தன்பிதாவை அடக்கம்செய்துவிட்டு சம்ஹாரம் செய்யப்புறப்பட்டார்.

தனது நிகரற்ற வில்லாண்மையாலும் பரசின் உக்ரத்தன்மையாலும் பரசுராமரானவர் அரசர்களை அழித்துவரும்போது பிரளய கால ருத்திரனைப் போன்றே விளங்கினர். இறந்து பட்டவர்போக பாக்கியுள்ள அரசர்கள் காடுகளிலும் மலைகளிலும் ஓடிப்போய் ஒழிந்து கொண்டார்கள் என்றாலும் அநீதிபுரிந்த அரசர்களில் பெரும்பாலோரை பரசுராமர் தனது அஸ்திரத்துக்கு இரையாக்கியதும் கோபந்தணிந்து சாந்தமடைந்து சூரியகுல அரசர்களைக் கருவறுத்த பாபம் தீர அனேக பிராயச்சித்தங்கள்செய்தும் புண்யதீர்த்தமாடியும் முற்றும் தீராமலிருக்கமனக்கலக்கமுற்றிருக்குங்காலையிலோர்நாள் ஓ! பரசுராம மூர்த்தியே உமது தோஷநிவாரணையாக வேண்டுமேயானல் கெந்தமாதனத்தில் உமது பரசினல் ஒருதீர்த்தமுண்டுபண்ணி ஈஸ்வரனை அகத்தில்நிறுத்தி நீராடுவீராகில் எத்தோஷங்களும் நிவாரணமாகிவிடும் என்று அசரீரி மொழிய, அதைக்கேட்ட பரசுராமரும் கெந்தமாதனம் சென்று பஞ்செழுத்தையுண்ணி பரசைபூமியில்பிரயோகிக்க அவ்விடம் ஓர் அழகிய தீர்த்தம் உண்டாயிற்று அதில்பரசுராமர் நீராடி மகாபரிசுத்தஆத்மனாய் அத்தீர்த்தத்திற்கு பல அரியவரங்களை ஈய்ந்து தன் ஆச்ரமத்துககுச் சென்றார்.

(1) வேங்கடேஸ்வரத் திருவாலயத்திலே உபஸ்தானீக உத்தியோகம் பார்த்த விசுவாதி என்ற ஓர்பிராமணன் அக்கோயில் தாசியுடன் திருவாலயத்துக்குள் புணர்ச்சிநுகர்ந்திருக்குங்காலையில் தலைமைஸ்தானீகரால் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களிருவரையும் சேதுமத்தியில் கெந்தமாதனத்



தில் பிரகாசித்துக்கொண்டிருக்கு மித்தீர்த்தத்திலாடி வரக் கட்டளையிட்டார். அவ்வாறே யித்தீர்த்தத்தை அடைந்த உபஸ்தானீகனும் தாசியும் மூன்றுமாதங்கள் வரை தீர்த்தமாடி ஸ்ரீராமநாதனைத் தொழுதுவருகையில் ஓர்நாள் தீர்த்தமாடிஎழுகையில் ஓ! விசுவாதி, திருவாலயத்தில் புணர்ந்த தோஷம் உன்னைவிட்டு நீங்கிற்றென அசரீரிமொழிய, சந்தோஷ சாகரத்திலாழ்ந்தவனாய் தன்னிருப்பிடம் சேர்ந்து உத்தமனாய் வாழ்ந்தான்.

## துரோபதைதீர்த்தம்

ஸ்ரீகிருஷ்ண பகவானால் பாண்டவ பத்தினியாகியதுரோபதா தேவியின் நிமித்தம் உண்டாக்கிய பரிசுத்த தீர்த்தம் இராஜசூயம் என்ற மாபெரும் யாகத்தை செய்யப்போகும் தர்மபுத்திரரின் தர்மபத்தினியாகிய திரோபதி ஸ்ரீகிருஷ்ணனின் ஆக்ஞையின்படி யித்தீர்த்தத்திலாடி தர்மமே உருவெடுத்து வந்ததுபோன்று மகா தேஜஸோடு கரையேறி நின்று, யித்தீர்த்தம் அஷ்டஐஸ்வரியங்களை யும் கற்புலட்சணங்களையும் தீர்த்தமாடுவோர்கட்கு அளிக்கக்கடவ தென வரங்கொடுக்க ஸ்ரீகிருஷ்ணன் ஆசீர்வதிக்க பின் தருமனந்த னர் முதலிய யாவரும் அஸ்தினபுரிசென்றனர்.



## தேவதீர்த்தம்

பூர்வகாலத்தில் தேவர்கள் கெந்தமாதனச்சாரலில் மகேஸ் வரயாகம் செய்தகாலையில் ஏற்படுத்தியிருந்த அக்கினிக்குண்ட மானது, யாகம் சம்பூரணமுற்றவுடன் யாக கர்த்தாவாகயிருந்த பிர்ம்மதேவனால் புண்யதீர்த்தகுண்டமாக்கப்பட்டு மகாமகத்வம் பொருந்தி விளங்கிக்கொண்டிருக்கின்றது.

ஓமகுண்டத்தை தீர்த்தகுண்டமாகச்செய்த காலையில் பிர்ம்ம தேவனானவர் அங்கு குழுமியிருந்த தேவாதி இருடிகளைப் பார்த்து ஓ, தேவர்களே, யித்தீர்த்தமானது நாம் செய்த மகேஸ்வர யாகத்தின் பலனை நமக்கு சித்தித்ததாதலாலித் தீர்த்தமகிமை சொல்லுதற்கரிய ஒப்புயர்வற்ற மகத்வத்துடன் விளங்குகின்றது. மகேஸ்வரயாகத்தின் பூரண பலனித் தீர்த்தத்திலாடுவோர்கட்கு கிடைக்குமாதலால் யிதில் நாமெல்லோரும் திரிகரணசுத்தியாக மகேஸ்வரனாகிய சாக்ஷாத் உமாபதியைப்போற்றி தீர்த்தமாடுவோ மாக மேலும் யித்தீர்த்தத்தில் எவரொருவர் தீர்த்தமாடுகிறாகளோ அவர்கள் யிப்பூ உலகில் மகத்தான சுகபோகங்களை யெய்தி உமா பதியின் பூரணகடாட்சத்தைப் பெற்று பாகதி யடைவார்களாக என்று சீர்வதித்து சகல தேவர்களும் தீர்த்தமாடி சந்தோஷ ஆர வாரங்களுடன் தேவருலகம் சேர்ந்தனர்.

இத்தீரத்தில் நிடதபுரி தேசாதிபதி கிருதவர்மன் தனது எழு பத்திரண்டாவது வயதில் புத்திரபாக்யம் பெறுதற்கு, கௌதம மஹரிஷியின் மாணாக்கனாகிய சாம்பூப மஹரிஷியின்வாக்குப்படி தம்பதிசமேதம் மந்திரி பிரதானி முதலிய பரிவாரங்கள்சூழ விஜயம் செய்து சாஸ்திர விதிப்படி 15,தினங்கள் பூர்வபட்சம்

தொடங்கி ஸ்நானம் செய்து அன்னதானம் சொர்ண தானம், கோதானம், வித்யாதானம் முதலிய அறங்களை திருப்தியாய் செய்து ஸ்ரீராமநாதனைவழிபட்டு வருகையில் தன்பத்தினி கர்ப்பவதியாகக்கண்டு மகிழ்வுற்றவனாய் நிடதபுரிதிரும்பி புத்திர பாக்யத்தையடைந்து முன்னிலும் அதிக சம்பத்துடன் தேவர்கள் புகழ அரசுபுரிந்து இறுதியில் சாயுட்சயப் பேற்றையுமித்தீர்த்தத்தில் முழுகிய பலனையடைந்தான்.



# அநுமதீர்த்தம்

ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி பிர்ம்ம பௌத்திரனாகிய ராவணேஸ்வரனைக்கொன்ற பிர்ம்மஹத்திதோஷந்தீர கெந்தமாதன பர்வதத்தில் சிவலிங்க பிரதிட்டைசெய்தற்கு காசிமாக்ஷேத்ரம் சென்று லிங்கம் கொண்டுவரும்படியாய் அனுமானுக்கு உத்திரவிட அனுமானும் மகாபாக்யமென ஸ்ரீராமருடைய கட்டளையை சிரமேற்கொண்டு விஸ்வரூபமெடுத்து காசிக்ஷேத்ரம் சென்று ஈஸ்வரனை சிந்தையிலிறுத்தி நிஷ்டைபுரிந்து ஈஸ்வரதெரிசனமும் சிவலிங்கமும் பெற்று கெந்தமாதனம் திரும்புமுன் லிங்கப் பிரதிட்டைசெய்தற்கு ரிஷீஸ்வரர்களால் நிச்சயிக்கப்பட்ட முகூர்த்தகாலம் வந்துவிட்டதால் சீதாபிராட்டியாலுண்டுபண்ணிய மிருத்தியுலிங்கத்தை ஸ்ரீராமமூர்த்தி பிரதிட்டை செய்துவிடவே, லிங்கம்கொண்டுவந்த அனுமான் ஏமாற்றமடைந்து எப்படியும் தான்கொண்டுவந்த லிங்கத்தை பூஜை செய்ய வேண்டுமென்றும் பிரதிட்டைசெய்யப்பட்ட லிங்கத்தை பெயர்த்துவிட வேண்டுமாயும் ஸ்ரீராமனைப்பிரார்த்தித்து நின்றார். பிரதிஷ்டைசெய்யப்பட்ட லிங்கத்தை பெயர்ப்பதற்கு உன்னால் முடியாதென்றும், காசிலிங்கத்தை உன்போல் பிரதிஷ்டைசெய்யென்றும் ஸ்ரீராமர் மாருதிக்குகூற ஓரேவைராக்யமாகவும், பிடிவாதமாகவும், மிருத்தியுலிங்கத்தை பிடுங்கி அந்தஸ்தானத்தில் தான் கொண்டுவந்த காசிலிங்கத்தை பிரதிட்டைசெய்தல் வேண்டும் என மாருதிகூற உனதிஷ்டம்போல்செய் என்று ஸ்ரீராமர் மொழிந்து அங்கு நடப்பவைகளை கவனித்திருந்தார்.

மிருத்தியுலிங்கத்தின் மகிமை தெரியாது கைகளால் பெயர்த்துவிடலாமென முயன்றார் அனுமான் ஒன்றும் சாத்யமில்லை முழுப்

பலத்துடனும் சேர்த்துப் பிடித்து அசைக்கமுயன்றார். அதுவும் அசாத்யமாயிற்று. கோபங்கொண்டார் அனுமார். உடனே விஸ்வ ரூபமெடுத்தார். நீண்டவாலால் லிங்கத்தைச் சுற்றினார். இருகைகளை யும் பூமியிலூன்றிக்கொண்டு சுவாசபந்தனம் செய்துவிசைகொண்டு ஆகாயத்திலெழும்பினார். மஹா உக்ரத்தோடு அனுமாரானவர் ஆகாயத்திலெழும்பும் போது அண்டாண்டங்களெல்லாம் கிடு கிடு வென நடுங்கியும் லிங்கமானது சற்றும் அசையாததுடன் லிங்கத் தைச் சுற்றியிருந்த வாலானது கரைந்து அறுபட்டுவிடவே ஆகாய வீதியில் சுவாசபந்தன உக்ரத்துடன் எழும்பிக் கொண்டிருந்த அனுமார் பூமியானது சுக்கல் சுக்கலாக கிழிந்து பள்ளமிட தரையில் பொத்தென்று விழுந்து தேகம்நைந்து ரெத்தம்பெருகியோட மாண் மூர்ச்சையாயினர்.

ஆகாயத்திலிருந்து விழுந்த அதிர்ச்சியால் பூமியானது பாதா ளம்வரை விரிவுபட்டு அப்பள்ளங்களில் ஊறிநின்ற தண்ணீருடன் அனுமானின்ரெத்தமும் கலந்து செந்நிறமாக நின்றது.

இவ்வண்ணம் மூர்ச்சையாகிக்கிடக்கும் அனுமானை ஸ்ரீராம மூர்த்தி தன்கையால் தூக்கி மடிமேல்வைத்துக்கொள்ள சீதாபிராட் டியார் விசிறிகொண்டு வீச பள்ளங்களில் தங்கியிருந்த நீரை அள்ளி அனுமானின்மீது தெளிக்கவே, நித்திரைஎழுந்தவன் போன்று அனுமான் எழுந்துநின்று பயபக்தி விஸ்வாசத்துடன் போற்றித் துதித்து அறியாது செய்தபிழையைப் பொறுத்தாட்கொள்ளுமாறு வேண்டி நின்றார். சீதாபிராட்டியால் உண்டுபண்ணிய சிவலிங்க உண்மையை உணர்ந்த அனுமானை ஸ்ரீராமர் அன்போடாதரித்து அனுமலிங்க பிரதிஷ்டை செய்ய ஸ்ரீராமலிங்கத்துக்கு வடபாரிசத் துக்கு அழைத்துவந்தார்.

அனுமானை அழைத்துவர ஆயத்தமாயிருக்கையில் அனுமானி ன் உயிருக்கு சஞ்சீவியாக யிருந்தது பள்ளத்திலுள்ள நீரகையால் இப்புனித நீரால் எனது உயிருக் குயிராய் யிருக்கப் பட்டவனும் குமாரனுக்குச் சமமாக என்னால் பாவிக்கப்படுபவனுமாகிய மாரு



தியின் உயிர் காக்கப்பட்டு எங்களுக்குக் கிடைத்தானதலாலின்று முதல் இந்த நீர் நிலையானது மஹா பாவித்திர தீர்த்தமாகி இதில் நீரோடுவோர்கட்கு புத்திரபாக்யத்தை திருப்தியாக மகிழ்ந்தளித்து க் கொண்டிருக்கக்கடவது என்று வரமருளி அனுமலிங்கப் பிரதிஷ் டை செய்வதற்கு மாருதியை அழைத்துச் சென்றார்.

[புத்திரகாமேஷ்டியாகங்கள்.]

(1) புத்திர பாக்யமில்லாதவர்கள் இத்தீர்த்தத்தில் புத்திரபாக் யத்தை சிறப்புடனடையக் கடவது என அகிலநாயகனாகி ய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியால் வரமளிக்கப் பட்டிருப்பதால் காசிவாசியாகிய ஸ்ரீ தரன் என்னும் வேதசாஸ்திர தலைவன் தம்பதிசமேதமாய் யித் தீரத்தில் புத்திரகாமேஷ்டியாகம் செய்து புத்திரப்பேற்றையடைந்தான்.

(2) காசிவாசியாகிய கலிங்கபாலன் என்னும் கோடீஸ்வரனை வைசியன் ஒருவன் அன்னதானம், சொர்ணதானம், கல்வி தானம் முதலிய முப்பத்திரண்டு அறங்களையும் செவ்வனே செய்தும் சத்திரம், சாவடி, சோலை, நந்தவனம், தண்ணீர் பந்தல் முதலியவைகளை சங்கையற்று நிறுவியும், பிராம் மணர்களை ஆதரித்தும் ஏழைகளைக் காத்தும் ஆலயங்கட்டு வித்தும் புத்திரபாக்ய விஷயத்தில்மட்டும் ஈஸ்வரகடாட்சம் அவனுக்கு யில்லாதிருந்தது.
கடைசியில் இத்தீரத்தையடைந்து தீர்த்தமாடி சாஸ்திரிய மப்படி நாகலிங்கப் பிரதிட்டை செய்து நிகரற்ற புத்திரபாக்யத்தை யடைந்தான்.

[3] காசிராஜனாகிய விஜயசந்திரன் தன்பத்தினியுடன் இத் தீர்த்தத்தில் ஒருமண்டலம் ஸ்நானமாடியதும் தன்பத்தினி கெற்பவதியாயிருப்பதை அறிந்து இத்தீர்த்த மகத்துவத்தைப் போற்றிப் புகழ்ந்திருக்கையில் நிறைமாதமும் சென்றதும் உலகத்துக்கே ஞானவிளக்கேற்றக்கூடிய ஓர் புத்திரனைப் பெற்றெடுத்தான்.

(4) கூர்ஜர தேசத்து நிகேதனி என்னும் 16.வயதுடைய ஓர் அழகிய நங்கை சரஸ்வதியோவென திகைக்கத்தக்க கல்வியறிவு,வும்பகுத்தறிவுமுடையோளாகி,ஈகை,இரக்கம், வீரம், பகுத்தறிதலுடைய வாலிபனை யல்லாது வேறெவரையும் வரிக்கேன் என்பதாய் வைராக்யம் பூண்டு நெடுநாள் தக்க வரனுக்காகக் காத்திருந்தும் கிடைக்காமையால் வெளிச் சென்று வரன் தேடலானாள்.

தேசத்தையாளப்பட்ட மஹா ராஜகுமாரன் ஈகையிரக்கம் எனக்குண்டு என்னை வதுவை செய்துகொள்என்றான் அப்படியானால் உமதுபிரஜைகளை ராஜாஎன அழைத்துமரியாதைசெய்வீரா? என்றாள். எனக்கியலாதகாரியம், என்றதும் நான்உம்மைவேண்டேன் எனப்புறப்பட்டாள். தன்னலமற்ற பிரசித்தி பெற்ற தேசத் தலைவன் இவளுடைய பிரதிக்ஞையைக் கேள்வியுற்றான். வதுவைசெய்ய வேண்டினள் வந்தவளை மிகமரியாதையுடன் வரவேற்று சாப்பாட்டு நேரமானதால் ஓர்தட்டில் சிற்றுண்டிகள் நிறைத்து அருந்தும்படி வேண்டினான் புசித்துக் கொண்டிருக்கும்போது ஓர் பிச்சைக்காரன் அன்னந்தாயேஎன்றான். தட்டிலுள்ள சிற்றுண்டிகள் பூராவும்பிச்சைக்காரனுக் களித்து அவனைப் புசிக்கச் செய்தான்



உடனேஐயா, தாங்கள் போய்வாருங்கள் தங்களைவதுவை செய்யேன்என்றாள் தேசத்தலைவனை நோக்கிநம் நங்கைநல்லாள். மறுமொழிகூறாது தலைவனும்நகன்றான்.

இவ்விதம் பற்பலநிகழ்ச்சிகள் நடந்தும்யாவும் பயனற்றுப் போயின. கடைசியாயிம்மாது கெந்தமாதனத்தை யடைந்து இத் தீர்த்திலே லாசஞ்செய்து வருகையில்,

ஓர் நாள் அருணோதய நேரத்தில் தீர்த்தமாடிக் கொண்டிருக்கும்போது படித்துறையினின்றுந் தவறி குளத்தினுள் வீழ்ந்துவிட்டாள். அக்காலையில் தற்செயலாக அங்கு தோன்றிய ஓர் இளஞ்செம்மல் இச்சம்பவத்தைக் கண்ணுற்று சரேலென நீரில் பாய்ந்து அப்பெண்ணைத் தூக்கி மிகுந்தசிரமத்துடன் படிக்கட்டுகளில் தள்ளுவதற்குள் ஐந்தாறுதடவை நீரைக்குடித்தும் தைரியத்தைவிடாதவனாய் ஆழமானபாகத்திலிருந்தபடியே படித்துறைகளில் பெண்ணைத் தள்ளிவிட்டு தான் கரையேறுவதற்குள் மூச்சுத்திணறி நீரினுள்ளாழ்ந்து போயினன்.

இக்கோரசம்பவத்தை கரையில்நின்று பார்த்துக்கொண்டிருந்தோர்கள் பெண்ணைதூக்கி உபசாரணைபுரிய அம்மங்கையும் தெளிச்சியுற்று நம்மைக்காப்பாற்றிய வாலிபன் நீரிலாழ்ந்திறந்தான் எனக்கேட்டதும் ஆராத்துயருற்று உம்மிலுமிச் சடலம் பெரிதோ ஆ! தியாகி! என வாய் விட்டழுது தானுமக்குளத்தின் ஆழமானயிடத்திலே குதித்து மூழ்கிப் போய்விட்டாள்.

ஆகாயத்திலிருந்து அண்டபிண்டங்களெல்லாமதிர பூமியில் வீழ்ந்து தேகம்சிதைவுண்டு மரணமேயாகி விட்டாரென்றிருந்த அனுமானின் ஆருயிரைக் காப்பாற்றிய இப்புனித தீர்த்தம் இவ்விருமானிட ரெத்தினங்களின் உயிரையா

கவர்ந்துகொள்ளும்? ஆ! இத் தீர்த்தத்தின் மகிமையே மகிமை! நீரில்மூழ்கிய இளைஞனும் நங்கையும் விழுந்தசற்று நேரத்திலெல்லாம் அந்தடாகத்தில் அன்னங்களைப்போல் நீந்திவிளையாடிக் கொண்டு நீரில்புஷ்பித்திருந்த புஷ்பங்களைப்பறித்து கொடிகளில் நார்கிழித்துத் தொடுத்து ஒருவர்க்கொருவர் மலர்மாலைசூட்டி ஆனந்தமாய் விளையாடிக் கரையேறி மனமொத்த தம்பதிகளாகி அத்தீவிலேயே வாழ்ந்துவருகையில் ஸ்ரீராமச்சந்திரனருளால் சூரியன் போன்றோர் ஆண்மகவை ஈன்றெடுத்து சுகமாய்த்தங்கள் நாடுபோய்ச் சேர்ந்தார்கள்.

[5] பாற்கடலால் சூழப்பட்டதும் கிரௌஞ்சம் என்னும் மகா பர்வதமிருக்கப்பட்டதும் குமாரக்கடவுளின் வேலாயுதத்தால் துளைக்கப்பட்டு பயங்கரமான தாழ்வரைபிரதேசங்களையுடையதும் அபையாதி அமிர்தவுகா தீர்த்தவதிஎனப் பட்டசப்த நதிகளையுடையதுமான கிரௌஞ்சம் என்னும் தீவை அரசாட்சிசெய்துவந்த கிருதபிரதிஷ்ட பூபன் என்பவன் சகலபாக்யங்களிலிருந்தும்புத்திரபாக்யமில்லாதுபோனமை குறித்து வியாகூலமுற்று ராஜ்யத்தை மந்திரிபிரதானிகள் வசம் ஒப்புவித்துவிட்டு கிரௌஞ்ச பர்வதமீதமர்ந்து பிர்ம தேவனை நோக்கி தபம் செய்யலானான்.

மெய்யுகந்த இவனது தபமானது பிர்ம்மதேவனை மகிழ்வித்தது. அரசன்முன் பிரயத்யட்சமாகி யாதுவேண்டும்? என வினவ, தேவா! நின்னருட்கடாட்சத்துக்கு பாத்திரனாகிய எனக்கு யிப்புவியில் யாதும் குறைவுபடுமோ? தேவா, யான் மக்கட்பேறு வேண்டுகின்றேன் என்றிறைஞ்சி நின்றான். கருணைபூண்ட நான்முகனும் கிருதபிரஷ்டா, உனதபீஷ்டம் கெந்தமாதனத்திலோங்கும் புனித நீராகிய அனுமகுண்டத்தில் நீ உனது மனையாளுடன் நீராடுங்கால் நிறைவேறும்



அங்குசெல்க; எனப் பணித்து மறைந்தார்.

திசைமுகனினுபதேசப்படி கிருதபூபனும் அவனது பத்தினியும் கெந்தமாதனத்தை யடைந்து அனும தீர்த்தத்தில் ஸ்நானமாடிவருகையில் அரசன் மனைவி கற்பவதியாயினள்.

அனுமதீர்த்த ஸ்நானநிமித்தம் கிரௌஞ்ச த்வீபாதிபன் இவ்வுலகெலாம் புகழத்தக்க மேம்பாடுடைய ஆமோதன், சுதர்மன், வனபதி, லோகஉதாரன், துவகன், ரஞ்சிஷ்டன் மேகபபிரதிட்டன் என்னும் எழுவரை பெற்றெடுத்து இன்னரசு செலுத்திவந்தான்.

## அகஸ்தியர் தீர்த்தம்

ஆதியில் சிவபெருமானால் உற்பத்திசெய்யப் பட்ட தமிழ் மொழிக்கு இலக்கண இலக்கியங்களை நயம்பட வகுக்குமாறு குறு முனிவருக்கு சிவபிரான் கட்டளையிட, அவ்வாறே அநேகவருட பிரயாசையின்பேரில் ஆக்கிய இலக்கியங்களை அரங்கேற்றுமுன் கெந்தமாதனத்தில் விநாயகப் பிரதிஷ்டை செய்யக் கருதி, தமது தபோமகிமையினால் அங்கோர் தடாகமுண்டாக்கி அதில் ஸ்நானம் செய்து கமண்டலத்திலத்தீர்த்தத்தை நிறப்பி கரைசேர்ந்து ஏட்டுப் பிரதிகளை எடுக்குங்காலையில் கமண்டலத்திலடைக்கப் பட்டிருந்த நீரில் ஓர் துளி இவ்வேட்டில் படவே ஏடுகள் பொன் உருவம் பெற்று விளங்கிற்று. இவ்வதிசயம்கண்ட அகத்தியர் இதுவும் ஈஸ்வரனுக்ரகந்தானென எண்ணி அம் மகத்துவமுடைய தீர்த்தத்துக்கு தமிழமிர்தம் எனத்திருநாமஞ்சூட்டி யித்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வோர்கள் மகாஞானிகளாகத் திகழ்வதுடன் சகலசம்பத்துக்களையும் பெற்று வாழக்கடவர்கள் என வரமிட்டு அத் தீரக்கரையிலேயே விநாயகப் பிரதிஷ்டையும் செய்துமுடித்தார்.

அன்றுமுதல் இத்தீர்த்தமானது தமிழமுர்தமென்றும் அகஸ்தியதீர்த்தமென்று பெயர்வழங்கப் பெற்று வருகின்றது.

[2] வைகுந்தநாயகனாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்திக்கு பூதானம் செய்தமகாபலிச் சக்ரவர்த்தியானவர் பிரதிவருடந்தோறும் சுதல லோகத்திலிருந்து பூலோகத்துக்கு திருக்கார்த்திகை தினத்தன்று வருங்காலையிலிப் புனிததீர்த் தத்திலாடிப் போவதால்தான் சுதல லோகவாசிகள் க்ஷாமம் தரித்திரம்



என்பதையே அறியாதவர்களாயும் பகவத் பக்தியிற் சிறந்தோர்களாயும் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே அவருக்கு துவாரபாலகராக அமர்ந்து சதாதெரிசனம் கொடுத்து வருவதுமான சகலபாக்யங்களையுமடைந்து வருவதுந்தவிர மகாபலியானவர்சுதலலோகநாயகனாகவும்விளங்கிவருகிறார்.

# அக்னி தீர்த்தம்

இலங்காதிபனாகிய இராவணேச்வரனால் சிறைப்படுத்தப் பட்டிருந்த சீதாதேவியை ராவணசம்மாரம்செய்து மீட்டிவந்தகாலையில் சீதாதேவியின் கற்பை உலகுக்குக்காட்டவேண்டி, கெந்தமாதனச் சாலில் பிர்ம்மாண்டமாக அக்னியை வளர்த்தி, அதில் அன்னையை முழுகிவருமாறு ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி கட்டளையிட அவ்வண்ணமே தீக்குழியிலிறங்கிய லோகமாதாவாகிய சீதாபிராட்டி அளகபாரத்தில்சூடிய புட்பங்கள்வாடாமலும் முன்னினும் அதிக தேஜஸோடு தீக்குளித்துக் கொண்டிருக்கும்போது சீதாவின் கற்பென்னும் பெருந் தீயால் வாட்டப்பட்ட அக்னிதேவனானவன் கற்புத்தீயினால் மிகவும் நொந்து தாங்கமாட்டாதவனாய் சீதாவை ஸ்ரீராமர் முன்னே விட்டு சாஸ்டாங்கமாக நமஸ்கரித்து ஸ்வாமி! தேவரீருக்கு யான் செய்த தவறென்ன? அருந்ததியும் போற்றி வணங்கும் கற்பரசியாகிய சீதாவை என்னில் விடுத்து அவ் வன்னையின் பதிவிரதாக்கினியால் என்னை சுடும்படி செய்தீரே? ஐயனே, லோகமாதாவை சோதித்த மகாபாவியாக என்னைச் செய்து விட்டீரே? சாதாரண உலகப்பெண்களைப்போல் இந்தச் சீதையை எண்ணி தேவரீர் இவ்விதம் செய்யலாகுமோ? எல்லாம்தெரிந்த நீர் இவ்விதம் செய்ததின் காரணந்தான் என்னவோ? நான்ஏதும் தவறிழைத்திருப்பின் அவைகளை க்ஷமித்தருளுதல் நின் கடமையன்றோ? ஜெகன்மாதாவாகிய சீதையை சோதித்த பாவந்தீர வழிகாட்டியருளும் அய்யனே! என்றிறைஞ்சி நின்றான்.

இவ்வாறு ஸ்தோத்தரித்து நிற்கும்அக்னிபகவானை ஸ்ரீராமமூர்த்தி உபசரித்துவரும் அக்னிதேவ, உமது யித்தோஷந்தீரபிதோ கலங்கமற்று விளங்கிக்கொண்டிருக்கும் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்து வருவீராக; என்றாசீர்வதித்தார்.



ராமசுவாமியின் ஆக்ஞைப்படி அக்னிதேவன் சமுத்ர ஸ்நானம் செய்து பாவநிவாரணம் செய்து கொண்டதும் ஸ்ரீராமரானவர் அச்சமுத்ர தீர்த்தத்துக்கு "அக்னிதீர்த்தம்" என நாமஞ்சூட்டி, யித்தீர்த்தத்தில் நீராடுவோர்கள் கற்பு, மாட்சிமை என்னு மிருலட்சணங்களையும் முழுநிறையுடன் பெற்று புகழொடுதோன்றுவார்களாக என்று வரமிட்டு அக்னிதேவனுக்கு விடைகொடுத்தனுப்பினார்.

[1] தண்டகாரண்யத்தில் வசித்துவந்த சிலமா என்னும் வேடன் ஒருவன் வில்வித்தையிற்றேர்ச்சியுற்று வனத்தில் வாழும் விலங்குகளையும் பட்சிகளையும் அவைகளின் குஞ்சுகளையும் அம்பாலெய்து கொன்று வரும் நாளில் ஓர்தினம் ஓர்மைனாவானது இறைதேடிவந்து தன்குஞ்சுக்கு ஊட்டிக் கொண்டிருக்கும் சமயம் இவ்வேடுவனின் அம்புக்கு இறையாகி தாயும் குஞ்சும் மடிந்து கீழ்விழுந்தன. இந்தப்பரிதாபகரமான காட்சியை அப்போதுஅவண்வழிநடந்து கொண்டிருந்த அகத்திய மாமுனிவர் கண்ணுற்று வேடனை அணுகி அப்பா சற்றும் இரக்கமின்றி குஞ்சுக்கு இறையூட்டும் பட்சியைக் கொன்று வீழ்த்தினையே? இதே போன்று எத்தனை உயிர்களை மாய்த்திருப்பாய்? இந்தப்பழிபாவம் உன்னைச் சும்மாவிடுமோ? இதோ! இந்தப்பரிதாப கரமானதும் கல்லும் கரையக்கூடியதுமான காட்சியைப் பார் என்று சொல்லி தாய்ப்பட்சியை மாத்திரம் தன்கமண்டலத் தண்ணீரைத் தெளித்து உயிருண்டாக்கினார் உயிர்த்தெழுந்த தாய்ப்பறவை யானது இறந்துகிடந்த தன்குஞ்சை அணுகி தனதுஇறகுகளினால் தடவிக்கொடுத்தும் உயிரற்றிருப்பதை அறிந்து படபடவென அடித்துக் கொண்டு மரத்தில்போய் மோதி தேகம்பூராவும் காயமாகி ரெத்தம் வழிய மூர்ச்சையாகி கீழேவிழுந்தது சற்றுநேரத்தில்மூர்ச்சை தெளிந்ததும் குஞ்சைநோக்குவதும் மரத்தில்மோது

வது மாயிருந்து கடைசியில் உயிர்துறந்தது. இக்கோரக்காட்சியைக்கண்ட வேடனின் கல்மனமானது தண்ணீர் போலிளகி ஜீவகாருண்யனாகி அடிகளின் பாதாரவிந்தத்தில் வீழ்ந்து ஐயனே, இப்பாதகத்தொழிலை ஒழித்தேன் இதுகாறும் செய்த பாவத்துக்கு பரிகாரம் யாதுஎன ஸ்தோரித்து நின்றான்.

அகத்தியர் சொன்னவாறு யித்தீர்த்தத்தி லாடியவேடன் அசரீரிமொழிய பவித்திரனாகி தன்னில்லம் சேர்ந்து நற்றொழிலில் பிரவேசிக்கலானான்.

[2] வனப்புமிக்க தாருக வனத்தில் சிஷ்ய கோடிகள்சதா பணிவிடைகள் செய்ய, வேதசாஸ்திர யோகஞானங்களை உலகினோர்க்கு ஐயமற போதித்துக் கொண்டிருந்த ஞானியாகிய திரும்பக மஹரிஷி ஓர்அழகிய பத்தினியை அடைய விரும்பி பூவுலகு முழுவதும் தேடியும் தன்விருப்புக்கேற்ற அழகியை காணாதவராய் காந்தர்வ லோகம் சென்று பார்த்து வருகையில் அழகெலாம் திரண்டோர் வடிவெடுத்தாற் போன்றோர் இளமங்கை ஓர் உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்ததை ரிஷீஸ்வரர் பார்த்துஅவள் பேரில் காதல்கொண்டு அவளின் பிதாவான அதிக்ருட்டன் என்பவனிடம் போக, ஞானியின் வரவைக்கண்ட அவன் எதிர்கொண்டழைத்து இவ்வெளியேனில்லத்துக்கு எழுந்தருளியது யாதுகாரணமோ? அருளுவீர் சுவாமி என்று பணிவுடன் உபசரித்து நின்றான்.

யாம் வேண்டுவதை நீர்கொடுப்பிரோ வெனஞானிகேட்க கொடை வள்ளலாகிய அதிக்ருட்டன், தருவேன் விளம்புக; என்றான். உமதருமை மகளை எனக்கு வதுவை



செய்து கொடும் எனமொழிந்து நின்றமஹரிஷிக்கு அவ்வண்ணமே செய்து கொடுப்பதாக உறுதிகூறி மகளின் அந்தப்புரம் சென்று குமாரி, உன்னையோர் மஹரிஷிக்கு வதுவை செய்ய வாக்களித்து உன்னை அழைத்துப் போக வந்தேன் வருகஎன்றான் இடிபோன்ற இவ்வார்த்தையைக் கேட்ட அவ்விளங்கொடியாள் தான் இதுகாறும் அடைவதற்குஎண்ணிவந்த இன்பவாழ்வும் காதலித்தசுந்தரனும் தனக்கு கிட்டாது போய்விட்டதை எண்ணிய போதிலும் அதற்காக சற்றும் மனவருத்தப்படாமல்தன்னைப் பெற்று வளர்த்து பரிபாலனம் செய்துவந்த பிதாவின் வாக்கைக் காப்பாற்றும் ஒரேநோக்குடன் பிதாவைப்பின் தொடர்ந்து சென்று முனிவருக்கு மாலையிட்டாள் தம்பதிகள் சிறிதுநாளங்கிருந்து தாருக ஆச்ரமத்துக்கு திரும்பலாயினர்.

முனிவரின் ஆச்ரமத்தில் பரிசுத்தமான வாழ்க்கையை நடத்திவருகையில் ஓர்நாள் சிஷ்யகோடி களுடன் காந்த சக்திபோன்றதோர் உருவைப்பார்த்ததும் ரிஷிபத்தினியின்மனமானது பட்டபாட்டை என்னென்றுவிளம்புவது? ஆ! இவன்யார், நாம்முன்னம் எனதுபிதாவின் பூங்காவனத்தில் சந்தித்த காலை என திருதயத்தைக் கொள்ளைகொண்ட சுந்தரன் தானோஇவன்? இல்லை, அவன் சுகபோகங்களையுடைய இல்வாழ்க்கையை விட்டு கஷ்டமும் நிபந்தனைகளுமுடைய துறவரத்தை ஒருக்காலும் விரும்பமாட்டான்இது யாதோ அவன்சாயலாகத் தோன்றுகிறது இருக்கட்டும் சந்தர்ப்பம் நேரிடும்போது விசாரித்தறியலாம் என்றுதனக்குத்தானே யோசித்து தனக்குரிய ஆச்ரமஅலுவல்களை கவனிக்கலானாள்.

சமயலறை சுத்தம்செய்யும் வேலைஇவ் வாலிபனுக்கு விதிக்கப்பட்டது. இவன் தனித்து வேலைசெய்து கொண்டிருப்பதைப்பார்த்த ரிஷிபத்தினி அவ்விடம்சென்று ஐயா தாங்கள் யாவரோ? இவ்வாச்ரமத்தை அடைந்து எவ்வளவு காலமாயிற்று எனவினவினள். குனிந்துவேலை பார்த்துக் கொண்டிருந்த வாலிபன் சப்தத்தைக் கேட்டவுடனேநிமிர்ந்து பார்த்ததும் சற்றுநேரம் வரைக்கும் யாதும்சொல்வதற்கு நாவெழாமல் நின்றான். அவனதுஹிருதயம் படபடவென்த்துடித்தது ஆ! என்அன்பே, இவ்வாச்ரமத்துக்குத் தலைவியாக நீசெய்தபாக்கியமே பாக்கியம்; அன்றோர்நாள் பூங்காவனத்தில் உன்னைநான் சந்தித்ததை மறந்துவிட்டாயோ? நின்தந்தை உன்னையோர சன்யாசிக்கு பத்தினியாக்கிவிட்டாரென நான்கேள்வியுற்ற அக்ஷணமே எனது ஆஸ்தி, செல்வம் முதலிய யாவற்றையுந் துறந்து யிக்கோலங்கொண்டு யிந்தஆச்ரமத்தில் சேர்ந்து வாழ்ந்துவருகின்றேன். இன்று,நீ அடைந்த பதிஎனது குருநாதன் என்பதை அறிந்து மிகவும்சந்தோஷப் படுகின்றேன்தாயேஎனச் சொல்லி நமஸ்கரித்து தன்னலுவல்களை மேற்கொண்டான்.

நாளடைவில் காந்தர்வ கன்னிகையாகிய ரிஷிபத்தினிக்கு தனதுமாசற்ற காதலுக்குரிய அவ்விளைஞனின் மேல் அன்றோர்நாள் கொண்ட காதலானது புனர்ஜென்மமெடுத்து வளர்பிறை போன்று வளர்ந்து அவளது இருதயத்தை துளைக்கலாயிற்று தாயேஎன்பதைத் தவிற வேறொன்றும் நினைக்காத அச்சுந்தரன்உண்மையில் இவளைத்தாயென்றே எண்ணலாயினன் எனவே அம்மடந்தை கொண்ட காதல் ஒருதரப்புக் காதல்என்றே சொல்லுதல் வேண்டும்.



நாட்களாயின. அச்சுந்தரி தன்னகத்தே வளர்பிறை போன்று வளர்ந்து பூரித்துநின்றகாதல் வலையை அவ்விளைஞனின்மீது வீசி அவனது குருபக்தியையும் வைராக்யத்தையும் சிதைக்கச்செய்து அவனையும் தன் வலைக்குள் ளிழுத்து விட்டாள்.

இச்சேதி மகரிஷிக்குத் தெரிந்துவிட்டது. இருவரையும் வரவழைத்தார். புன்னகை தவழ்ந்தமுகத்துடனப் பெரியார் இவ்விருவர்களையும் நோக்கி எ, காதலர்களே! வரம்புகடந்து நீங்களிருவரும் தவறிழைத்து விட்டீர்கள். கற்பாகிய நிறையழிவு பட்டீர்கள். எனினும் உங்களிருவருக்கும் சமயலறையில் நடந்த சம்பாஷணையிலிருந்து யிக் குற்றம் உங்களைமாத்திரம் சார்ந்ததல்லவென்பதையும் என்னையும் அதிக்ருட்டனையும் சேர்ந்ததென்பதையும் தெரிந்து கொண்டேன். முதலில் யிப் பெண்ணானவள் உன்னைக் காதலித்திருக்கும் கருத்தையறிந்து பெண்ணின் தகப்பனை தந்திரத்தால் வெல்லாமல் கடிமணப் புரிந்திருப்பேனாகில் யிந்தக் குற்றம் நடந்திருக்காது. எனவே தந்திரத்தால் தகப்பனை வென்றும் பெண்சம்மதியைப் பெருமலும் வலுவில் மணமுடித்துக் கொண்டேனாதலால் நான் குற்றவாளியாகவும், இதேமாதிரி இருதரப்பாருக்குமுள்ள பொருத்தத்தைக் கவனியாது சுயேட்சாதிகாரமாய் பெண்ணின் சுதந்திரத்தை நசுக்கி மணமுடித்துக் கொடுத்ததால் பெண்ணின் தகப்பன் குற்றவாளியாகவும், மணமாலைசூட்டிய நாயகனை வஞ்சித்து பரபுருஷனைச்சேர்ந்ததால் பெண் குற்றவாளியாகவும், குருபத்தினியைச் சோரமார்க்கமாகச்சேர்ந்ததால் யிவ்விளைஞன் குற்றவாளியாகவும் ஆகிவிட்டோம். ஆகவே யிந்த குற்றவாளிகள் நால்வருள் நீங்களிருவர்களே தண்டிக்கப் படத் தகுந்தவர்கள் என்பது உலகநீதி யாதலால் கண்ணாலும் பார்க்கத்தகாத அவ்வளவு பாபிகளாகி தர்மதேவதை

யின் கொடிய தண்டனைக்கு ஆளாகிவிட்டீர்கள். இவ்விடத்தைவிட்டு நகருங்கள் பாபிகளே! என்றார்.

ரிஷிசிரேஷ்டரின் நீதி நெறிததும்பும் காந்தவார்த்தைகளானது இருவர்களின் நெஞ்சையும் பிளந்து சென்றது. கோ வென்றலறினார்கள். பெரியாரின் பாத பத்மங்களில் சாஷ்டாங்கமாக கும்பிட்டு வீழ்ந்து கடைத்தேறும் வழி காட்டும் ஐயனே! அறியாது செய்த பிழை பொருத்தாட்கொள்ளுதல் கருணைமூர்த்தியாகிய உமது கடமை யன்றோ! தேவரீரால் வெறுத்துத் தள்ளப்பட்ட யாங்கள் செல்லுந்திக்குத்தான்யாது! தேவரீரின் கிருபா கடாட்சமின்றி யாங்கள் எவ்விதம் வாழமுடியும்? தேவரீருக்கு அபசாரம் புரிந்த இந்த உடலை தாங்கி நாங்கள் வாழ்வதைவிட தேவரீரின் திருக் கரங்களால் கூறுகூறாக வெட்டப் பட்டிறத்தலே எங்கட்கு இன்பத்தையும் மோட்சத்தையும் அளிக்கும் என்று இருவரும் ஏகவாக்யமாக கண்களில் நீர் தாரைதாரையாய் பெருகி ஓட அழுது தொழுதவண்ணம் சொல்லும் வசனமானது ஞானமூர்த்தியாகிய ரிஷீஸ்வரரின் உள்ளத்தை இளக்கி கருணை நோக்கை உண்டாக்கிற்று.

ஏ, நிறையழிந்த காமுகர்களே! கடைத்தேறுதற்கு உண்மையில் ஆர்வங்கொண்ட நீங்கள் ஈஸ்வரதியானத்தையன்றி வேறெவ்வித இச்சையிலும் நினைவு வைக்காமல் தெற்கு நோக்கி வழிநடந்து செல்வீர்களாகில் மஹாபரிசுத்த ஸ்தலமாகிய சேதுமத்தியில் கெந்தமாதனச் சாரலில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியினால் உன்னதமான வரப்பிரசாதங்களைப்பெற்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் அக்னிதீர்த்தத்தில் ஒருமண்டலம் நீராடி அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமநாதக் கடவுளை பூஜிப்பீராகில் உங்கள் தோஷங்கள் நிவாரணமாகி பவித்திரர் களாவீர்கள். அங்ஙனமே புனிதநீராடி இவண் வந்து சேருங்கள் என வாழ்த்தியனுப்பினர்.



மகரிஷி சொன்ன பிரகாரம் அக்னிதீர்த்தஸ்நானமாடி வந்த குணேந்திரன் என்ற இளைஞனும், ஷண்பகதேவிஎன்ற ரிஷிபத்தினியும் சர்வபாவ நிவாரணர் களாகி ஆச்ரமத்தையடைந்து திரும்பக மகரிஷியைக்கண்டு பயபக்தியுடன் வணங்க, அத்தயாள ரிஷிபுருஷர் தனதுபூஜைக்காக வைத்திருந்த புஷ்பஆரத்தை எடுத்து ஷண்பகதேவிஎன்ற அப்பெண்ணிடம் கொடுத்து ஹே! பெண்பாவாய் நான்உன்னை மணந்திருந்த போதிலும் உனது காதலுக்குகந்த மணாளன் நானல்லவாதலால் அதுமணமாகாது கணவனாகநானிருப்பதும் தெய்வசம்மதமல்ல எனவேஇதோ, நடக்கப்போவது தெய்வசம்மதம் என்பதற்கறிகுறியாக ஈஸ்வரபூஜைக்கு வைத்திருந்த பூவாரத்தைவாங்கி உனதுஹிருதயம் உகந்தகாதலனாகிய குணேந்திரனுக்குசூட்டி மங்களமான இன்பவாழ்வை அடைவீர்களாக என்றாசீர்வதித்து மணமாலையை அப்பெண்மணியின் கையில் கொடுத்து இளைஞனுக்குச் சூட்டுவித்து நல்லாசி கூறி அவர்களில்லத்திற் கனுப்பி வைத்தார்.

## நாக தீர்த்தம்

பாற்கடலில் அமிர்தம் கடையும்போது மந்தரகிரியை மத்தாகவும், வாசுகியென்ற நாகேந்திரனை கயறாகவும் கொண்டு உபயோகிக்கும்போது வெண்ணை திரண்டு வருகையில், திரிக்கும்கயறாகயிருந்த நாகேந்திரன், உடல் நோவுற்று விஷத்தைக் கக்கவும், தேவர்கள் மனக்கிலேசமுற்று பூவுலகில் நீர், குட்டைகளில் மண்டூகம், பூச்சி புழுக்களைத் தின்றுதிரியும் நீர்ப் பாம்பாகக் கடவாய் என திடீரென சபித்துவிடவே, நாகராஜன்பயந்து, உடல் நோவுற்றதினால் செய்த இப்பிழையை பொறுத்து சாபவிமோசனஞ்செய்யும்படி பிரார்த்தித்து நிற்கையில், நாகன் கக்கிய விஷத்தை பானம் செய்து சுத்த அமுதை தேவர்கட்கீய்ந்த சந்திர ஜடாதர மூர்த்தியானவர் அநேக சமாதானங்களைத் தேவர்கட்குச் சொல்லிசாப விமோசனஞ் செய்யுமாறு கோறினார்.

விமலனாகிய சிவபிரானின் ஆக்ஞையை தேவர்கள் சிரமேற்கொண்டு, நீர்ப் பாம்புருவாய் வசித்துவருகையில் ஓர்நாள் கெந்தமாதனச் சாரலில் ஓர் குட்டையின் கரையில் தவளைகளைப் பிடித்துத்தின்னக் காத்திருக்கும்போது கற்பக மாமலையில் ஈஸ்வரனுக்குச் சாற்றிய வில்வதலம் ஒன்று உன் மீதுபடும் அப்போது சாப விமோசனமாகி நாகலோகஞ் சென்று முன்போல் அரசாள்வாய் என்பதாய் அனுக்ரகித்தார்கள்.

தேவர்கள் சாபத்தைப் பெற்ற வாசுகி நீர்ப்பாம்பு உருவுடன் அநேக நீர்க் குட்டைகளில் வசித்து கெந்தமாதனச் சாரலில் ஓர் குட்டையில் காலங்கழித்து வரும்போது ஓர்தினம் வில்வதலம்



ஒன்று தன்மீதுபட சாபவிமோசனமாகி, இரண்டாயிரம் பணாமுடிகளும் தகதகவென ஒளிர, மிகுந்த தேஜஸோடு எழுந்து நின்று தன்னைப்புனிதனாக்கிய அவ்வில்வதலத்தை எடுத்து அபிமந்திரித்து அதை குளத்திலிட்டு இன்றுமுதலித் தீர்த்தமானது எப்படிப்பட்ட இழிதன்மை யுடையோர்களான போதிலும் அவர்களை மேன்மையும் தியாகமும் பொருந்திய உத்தமனாக்கி அஷ்டஐசுவரியங் களையும் அளிக்கக் கடவதுஎன வரமிட்டு நாகலோகஞ் சென்று மந்திரிபிரதானிகள் சூழ நாககன்னிகைகள் மங்கள ஆராத்திரிக ளெடுக்க கொலு மண்டபத்தை யடைந்து செங்கோ லோச்சலாயினன்.

## மகாலட்சுமி தீர்த்தம்

—[*]—

வைகுந்தத்தில் ஆயிரம் பணாமுடிகளை யுடைய ஆதிசேஷ சயனத்திலிரா நின்ற ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை நோக்கி ஸ்ரீமகாலட்சுமியானவள் கூறலாயினள். நாயக, தேவரீரது அகண்டாகார விஸ்வரூப தெரிசனத்தைக் காணும் பாக்யத்தை அடியாளுக் கனுக்ரகிக்க வேண்டுமென வணங்கி நிற்க, மாதே! உனதிஷ்டம் நிறைவேற வேண்டுமேயானால், பூலோகத்தில் கெந்தமாதனத்தில் நம்மை நோக்கி விரதமிருக்கக் கடவாய் எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வண்ணமே மகாலட்சுமியும் வைகுந்தத்தைவிட்டு கெந்தமாதனத்தை யடைந்து அவ்விடத்திலோர் தீர்த்தம் உண்டாக்கி அதில் முக்காலமும் நீராடி ஸ்ரீமந்நாராயணனை இருதய கமலத்திடம் நிறுத்தி தபம் செய்து கொண்டிருக்கும்போது தேவியின் தபோ உக்ரமானது அகில லோகங்களையும் தாக்கும்போது ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் கருடவாகன ரூடராய் தேவிமுன் பிரசன்னமாகி பாராய் மாதே! என்றதும். மகாவிஷ்ணுவானவர் வான்முட்டிய உருவத்துடன் அனேகங்கோடி முகாரவிந்தங்களுடனும், பயங்கரமான நானாவித ஆயுதங்களைக் கொண்ட கோடானுகோடி கைகளுடனும், மார்பினிடமாக அகில உலகங்களு மதிலுள்ள சகல ஜீவராசிகளும், வயிற்றினிடமாக சப்த சமுத்ரங்களும் நதிகளும், சிரசில் அஷ்ட பர்வதங்களும், தேவர்கள், ரிஷீஸ்வரர்கள், முதலிய சகலரும் தன்னுள்ளடங்க பார்ப்பதற்கு மகா பயங்கரமாக யிருக்கப்பட்ட விஸ்வரூபத்தை எடுத்து நின்றார்.



இத்தகைய மகோன்னதமானதும் எளிதில் கிடைத்தற்கரியதுமான விஸ்வரூப தெரிசனத்தைக் கண்டுகளித்த மகாலட்சுமி ஆனந்த நர்த்தனம் புரிந்து சுவாமியை ஸ்தோத்தரித்து புளகாங்கித மெய்தி நின்றாள். பின்னர் மகாவிஷ்ணு பகவான் விஸ்வரூபத்தை விடுத்து மகாலட்சுமியை அழைத்துப் போகையில் ஹே! மாதே, நீ யித் தீர்த்தத்திலாடிய வண்மையால் உனக்கு தபோவைராக்ய சித்தி கிடைத்ததுடனும் தேவாதிகட்கும் கிடைத்தற்கரிய நமது விஸ்வரூப தெரிசனத்தைப் பெற்றாயாதலால், இன்றுமுதல் யித் தீர்த்தமானது உனது பெயரால் விளங்கிக்கொண்டு புவியினோர்க்கு இஷ்டகாமியங்களை அளித்துக் கொண்டிருக்கக் கடவுது என வரப்ரசாதங் கொடுத்து மகாலட்சுமி சமேதராய் ஸ்ரீ வைகுந்தம் சேரலானார்.

## காயத்ரீ, சாவித்ரீ, சரஸ்வதி தீர்த்தம்.

ஈஸ்வராக்ஞையின் மீது அகில புவனங்களைப் படைத்துக் கொண்டிருக்கும். பிரம்மதேவன் தானிதுகாறும் சிருஷ்டித் திராத அதிரூப சௌந்தர்யம் வாய்ந்த வாகினி என்னும் பேரமைந்த ஓர் பெண்ணைப் படைத்து அவள் மங்கைப்பருவ மடைந்ததும் அவளைச் சேர விருப்பங்கொண்டு அவளது கரங்களைப் பற்றப் போகையில் அப்-பெண்ணானவள் துடி துடித்து ஏ பிதா, நான் உம்மால் படைக்கப்பட்டும், வளர்க்கப்பட்டு மிருப்பதால் நான் தேவரீருக்குப் புத்திரியன்றோ? ஆகையால், தேவரீர் நெறிதவறிச் செய்யும் யிக் காரியத்தை விட்டுவிடுங்கள். என்று பல நீதிகளைச் சொல்லியும் சிற்றின்ப வேட்கையால் பாதிக்கப்பட்ட நான்முகன் அறிவிழந்து அவளைச்சேர நெருங்கவும் அப்-பெண்ணானவள் சம்மதியாது அவ்விடத்தை விட்டு ஓட்டம் பிடிக்கவே பிர்மனும் விடாது பின் தொடர்ந்து சென்றான்.

தன்னை விடாது துரத்திவரும் பிர்ம்மதேவனின் உக்ரத்தைக் கண்டு பயந்தவளாய் வாகினியானவள் பறவையுருக் கொண்டு ஆகாயத்தில் பறந்து செல்ல பிர்மனும் பறவை யுருவெடுத்து பின் தொடர்ந்தான். இவ் வநீதத்தை தேவர்கள்முறைப்பாடு மூல மறிந்த பரமசிவன் தன் வில்லினிடமாக ஓர் அம்பைத் தொடுத்து பறவை யுருவெடுத்த பிர்மனின்மீது எய்தினார்.

பினாகம் என்ற மாபெரும் வில்லினிடமிருந் தெய்யப்பட்ட அம்பான து சிவ்வெனப்பாய்ந்துபறவையுருவுடன்சென்ற பிர்ம்மனின் உயிரைக கவர்ந்தது. உடனே வாகினியானவள் ஆறாத்துயமுற்று



தன்னைப் படைத்து, வளர்த்து பரிபாலனம் செய்துவந்த பிதாவுக்கு சமமான பிர்ம்மதேவனுக்கு, தன் நிமித்தம் மரணம் ஏற்பட்டு விட்டதே! இப்பழிக்கு ஆளாகி உலகில் வாழுதல் இழுக்கன்றோ? ஆதலால், எனது தந்தைக்கு ஏற்பட்ட கெதி எனக்கும் ஏற்படட்டும்! என்பதாய் பூமியில் பொத்தென்று வீழ்ந்து அங்கங்கள் உடைந்து மரணமானாள்.

இங்கிவ்வாறிருக்க, வாகினிமீது மோகமுற்று அவளைத்துன்புறுத்தியதால் சிவனுடைய அம்புபட்டு தனது பர்த்தா உயிர்துறந்தார் எனக் கேள்விப்பட்டதும் பிர்ம்ம பத்தினிகளாகிய காயத்ரீ, சாவித்ரீ, சரஸ்வதி யிம் மூவர்களும் துக்கசாகரத்திலே மூழ்கிப் போய்விட்டார்கள். நாரத மாமுனிவரால் ஆறுதல் கூறப்பட்ட பிர்ம்ம பத்தினிகள். அன்னார் உபதேசப்படியே புண்ய க்ஷேத்ரமாகிய கெந்தமாதனத்தை யடைந்து மூவர்களும் மூன்று தீர்த்தங்களுண்டுபண்ணி அதில் முக்காலமும் நீராடி ஈஸ்வரனை அகத்தில் நிறுத்தி மாங்கல்யப்பிச்சை வேண்டி விரத மிருந்தார்கள்.

சரஸ்வதி முதலிய பெண்களின் விரத நோக்கைத் தெரிந்த ஸ்ரீ உமாதேவி தன் பதியாகிய பரமசிவனிடம் பிர்ம்ம பத்தினிகளுக்கு மாங்கல்யப்பிச்சை யளிக்கவேண்டிய அவசியத்தை விரித்துரைத்து, கிருபை புரியுமாறு வேண்டவே, பரமனும் பார்வதி சமேதம் வெள்விடை மீதமர்ந்து காயத்ரீ, சாவித்ரீ, சரஸ்வதி இம் மூவர்கள் முன்பு காட்சியளித்து அம்-மூவர்களின் வேண்டுகோளின்படி பிர்ம்மதேவனை எழுப்பிக் கொடுத்ததுமன்றி சரஸ்வதி முதலிய பிர்ம்ம பத்தினிகள் மாங்கல்யபலத்தை யடைந்ததற்கு இப்புனித தீர்த்தங்களே காரணப் பொருளானதினால் இன்றுமுதல் இத் தீர்த்தத்தில் ஸ்நானமாடுவோர்கள் சதிபதிகளின் ஒற்றுமை

யையும், அன்பையும் பெற்று நீடூழி வாழக் கடவர். என்பதாய் வரப்ரசாதம் கொடுத்து திருக்கைலைக் கெழுந்தருளும்போது நாயக! என்ற ஆர்வமிருந்த சொல்லுடன் ஈதென்ன ஓரம்? என மொழிந்தாள் மலைமடந்தை. பரமேஸ்வரியினிவ் வார்த்தையைக் கேட்டவுடன் ஈஸ்வரன் முதலிய யாவரும்யாதும் புரியாமல்திகைத் துப்போயினர். நீதிதவறிய பிர்ம்மனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தும் நீதியும், கற்பும் உள்ள வாகினிக்கு உயிர் கொடாததுந்தான் ஈஸ்வர நீதியோ? என பரமேஸ்வரி பின்னும் விரிவுரைசெய்து நிற்க, எதிர்க்க முடியாத இவ்வாய்மையைக்கேட்ட ஈஸ்வரன் மிகமகிழ்ந்து வாகினி எனக் கூப்பிட்ட மாத்திரத்தில் ரூபலாவண்ய சிங்காரி யாகிய வாகினி அன்றலர்ந்த புதுமலர் போன்று தோன்றி ஈஸ்வர ஸ்தோத்திரம் செய்து நின்றாள்.

உனக்கு வேண்டுவது யாது சொல்வாய் வாகினி யெனும் பெண்ணே? என்றார் விமலனாகிய பரமசிவன். பிர்ம்ம, விஷ்ணுக் களுக்கும் கிடைத்தற்கரிய ஈஸ்வரானுக்ரகம் தன்மீது பூரணமாயிருப்பதை யறிந்த வாகினி ஆனந்த சாகரத்திலாழ்ந்த வளாய் தன்னையே மறந்து தேவதேவனை நாவாறப் போற்றி என் ஐயனே, தேவரீரின் வரப்ரசாதம் பெற்று மகாமகிமை யுற்ற காயத்ரீ, சாவித்ரீ, சரஸ்வதி தீர்த்தங்களில் நானும் தீர்த்த ரூபமாகக் கலந்திருக்கவும், இன்னுமித் தீர்த்தங்கள் பெண்களுக்கு வேண்டிய கல்வி யறிவு வீரம், தீர்க்க சுமங்கல்யத்வம் முதலியவைகளை அளித்துக் கொண்டிருக்கவும் தேவரீர் கிருபை செய்யவேண்டும். இவைகளே நான் வேண்டுவன என்க, சரஸ்வதி முதலிய தீர்த்தங்களில் தீர்த்த ரூபமாக வசிக்க விரும்பும் வாகினியாகிய நீ இன்றுமுதல் பிரவாகினியாகக் கடவாய் என்றும் வாகினி கோறிய வரங்களை யெல்லாம் கொடுத்தும் சிவபெருமானானவர் கைலைக் கெழுந்தருளினர்.



(1) அஸ்தினாபுரியை அரசாட்சி செய்துவந்த பரீட்சித்து மகாராஜனானவன் வனவேட்டையாடித் திரும்புகையில் அங்கோர் ஆச்ரமத்தில் சமாதி நிஷ்டையிலிருந்த சமீக மகரிஷியின் கழுத்தில் ஓர் உயிரற்ற சர்ப்பத்தை எடுத்து மாலையாகப் போட்டுப் போய்விட, ரிஷிகுமாரன் வந்து தன் தகப்பனின் அலங்கோலத்தைப் பார்த்து சகிக்க மாட்டாதவனாய் "இத்துஷ்ட செய்கையைச் செய்தவன் கார்க்கோடகன் என்ற பெரும் பாம்பால் சாகக் கடவன்" என்று சாபமிட்டான்.

மகரிஷி குமாரனின் கொடிய சாபத்தைக் கேள்விப்பட்ட பரீட்சித்து ராஜன் பாம்புக் கடியினின்றும் தப்புவதற்கு சமுத்ர மத்தியில் ஓர் மாளிகை நிறுவி அதில் ஜாக்ரதை யுடன் வாழ்ந்து வருநாளில் கார்க்கோடகன் ராஜனைக் கடிக்கச் செல்கையில் வழியில் காசிபன் என்னும் ஓர் பிராமணனைச் சந்தித்து ஓய், பிராமணோத்மா! எங்கு செல்கு றீர். என வினவ, நான் பரீட்சித்தை விஷக் கடியினின் றும் எழுப்பப் போகிறேன் எனக் காசிபன் கூறினான்.

இதைக்கேட்ட சர்ப்ப ராஜன், நான்தான் பரீட்சித்தைக் கடிக்கச் செல்பவன், உனக்கு என்னால் பஸ்மீகரம் செய்யப் பட்டவைகளை உயிர்ப்பிக்கும் தன்மை யிருக்குமேயானால், இதோ இம்–மரத்தைக் கடித்து எரித்துப் போடுகிறேன். அதை மீண்டும் உயிர்ப்பி பார்ப்போம். என்று சொல்லி ஓர் மரத்தைத் தன் விஷத்தால் எரிக்க, காசிபன் உடனே விஞ்சை மந்திரம் ஓதி மரத்தைத் துளிர்க்கச் செய்யவே, நாகம் கண்டு பயபக்தியுடன் வாரும் உத்தம, எனது பிரதாபமும், மகரிஷி புதல்வன் வாக்கும் நிறைவேற வேண்டியிருப்பதால் நீர் பரீட்சித்திடம் போக வேண்டியதில்லை,

நானே உமக்கு வேண்டிய பொன் தருகிறேன். பெற்றுக்கொண்டு உமது நகரம் சென்று சுகமேவாழும். என்றுகூறி ஓர் விலைமதிக்கவியலாத நாகரெத்தினத்தைக் கக்கிக் கொடுத்துக் காசிபனை வந்த வழிபார்த்து அனுப்பி வைத்துவிட்டு பரீட்சித்தைத் தீண்டி அவனுயிரை மாய்த்தது.

ஓர் உயிரைக் காப்பாற்றுவதற்குச் செல்கையில் வழியில் லஞ்சம் பெற்றுக்கொண்டு மனசாட்சிக்கு விரோதஞ்செய்து அவ்வுயிரை மாய்ப்பதற்கு உடந்தையாளியான காசிபனெனும் பிராமணன் சாகுல்ய முனிவருபதேசப்படி கெந்தமாதனத்திலோங்கும் யித் தீர்த்தத்திலாடி சர்வ தோஷங்களையும் நிவாரணம் செய்து கொண்டு கலைமகளின் அருட்கடாட்சத்திற்கும் பாத்திரனாகி ஒப்புயர்வற்ற கலைஞானியாக விளங்கினன்.



# கெங்கா, யமுனா, கயா தீர்த்தம்

பூலோக கைலாசம் என்று சொல்லப்பட்ட காசிமா க்ஷேத்திரத்தில் புண்யமயமாக விளங்கிக் கொண்டிருக்கும் கங்காநதியும் ஆக்ரா, கோகுலம், பிருந்தாவனம், கோவர்த்தனம் என்னும் திருவிளையாடல் பெற்ற க்ஷேத்ரங்களில் பரிசுத்தமாகத் திகழும் யமுனா நதியும், கயா தீர்த்தமும் கெந்தமாதன தெரிசனம், சேதுதெரிசனம் செய்யக்கருதி பாதாளவாகினிகளாக பிரவேசித்து கெந்தமாதனச் சாரலைச்சமீபித்ததும் மூன்றுநதிகளும் பெண்ணுருவந்தாங்கி நடந்து வரும்போது மலைச்சாரலில் பஞ்சாக்கினிமத்தியில் நின்று ஐம்புலன்களையுமடக்கி தபஞ்செய்துகொண்டிருந்த ரயுக்வமுனிவர் என்றுமே கண்டிராததும், மனோஉற்சாகத்தை யளிக்கத்தக்கதுமான ஓர்வகை குளிர்ந்தகாற்றானது தன்மீது படவே முனிவரும் கண்விழித்துப் பார்க்கும்போது கெங்கை, யமுனை, கயா என்னும் மூன்று புண்ய நதிகளும் பெண்ணுருவங்கள் தாங்கிவருவதையும் அதனால் தானிவ்வகை குளிர்ந்த காற்றடிப்பதையும் உணர்ந்தார் மாமுனிவரிருக்கையைக்கண்டதும் அம்மூன்று மங்கையர்களும் நமஸ்கரித்துநிற்க அப் பெண்களை முனிவரும் ஆசீர்வதித்து இங்குற்றகாரணம் யாதென விளம்பினார். கெந்தமாதனம், சேது தெரிசன நிமித்தம் யாங்கள் இங்குவந்துள்ளோம் வரும்வழியில் தாங்கள்தெரிசனத்தைப் பெறும் பாக்யத்தையும் பெற்றோம் என்பதாய் தங்கள்கருத்தை அம்மங்கையர்கள் வெளியிட்டார்கள்.

இவ்வார்த்தைகளால் மிகவும் சந்தோஷமெய்திய முனிவர் ஓ! கெங்கா, யமுனா, கயா வென்னும் பெயரினையுடைத்து சொல்லுதற்கரிய அபார மகிமைபூண்டு சர்வபாவ தோஷங்களையும் ஸ்பரி

மாத்திரத்தில் நிவர்த்திசெய்ய வல்லபுனித தீர்த்த சொரூபங்களையுடைய மாதர்களே, உங்களிடம் நான் ஓர் வரம் கேட்க ஆவலுற்றிருக்கிறேன். அதாவது நீங்கள் மூவர்களும் கெந்தமாதன தெரிசனம் செய்துவிட்டு உங்களிருப்பிடம் சென்று விடுதல் தர்மமன்று நீவிர் மூவரும் இப் புனித கெந்தமாதனச் சாரலிலேயே தீர்த்த சொரூபமாக நிலைநின்று உலகமாந்தர்களை அவரவர்கள் பாவகர்மங்களிலிருந்து விடுதலையாக்கி கிருதார்த்தர்களாக செய்துகொண்டிருத்தல் வேண்டும். இதுதான் எனது ஆவல் என்றார் முனி சிரேஷ்டர்.

கெந்தமாதனச் சாரலில் சேதுமுன்பு வசிக்கும் தங்கள் பெரும்பேற்றைஎண்ணி கெங்கா, யமுனா, கயா மூன்றுபெண்களும் அகமகிழ்ந்து அவ்வாறே தீர்த்தங்களாக திகழ்ந்து நின்றார்கள்



# பிர்ம்ம ஹத்தி விமோசன தீர்த்தம்

தசரதச் சக்கரவர்த்தியின் தனயனாகிய ஸ்ரீ ராமச்சந்திரன், பிர்ம்மதேவனின் பௌத்திரனும், யாவராலும் செய்தற்கரிய அதி பயங்கரமான தவங்களைச் செய்தவனும், அதி உன்னதமான வரப்பிரசாதங்களைப் பெற்றவனும், தேவேந்திராதி தேவர்களையெல்லாம் ஜெயித்து பதினான்குலகிலும் வீரக்கொடி நாட்டி இலங்காபுரிப் பட்டணத்தைத் தனது ராஜதானியாகக் கொண்டு மந்திரி பிரதானிகள், சகோதரர்கள், புத்திர பௌத்திரர்கள், சமுத்திரம் போன்றுள்ள சேனாசைன்யங்கள் சூழ தேவர்கள் தொண்டுபுரிய அரசாட்சி செய்தவனுமாகிய தசமுகனாகிய இராவணேச்வரனைக் கொன்று சீதா தேவியை மீட்டி வருங்காலையில் ராவணனைக் கொன்ற பிர்ம்ம ஹத்தி தோஷமானது ஸ்ரீ ராமனைச் சார்ந்து மெய் வருத்தினமையால் அத்தோஷ நிவாரணைக்காக அகத்தியர் முதலிய மகரிஷிகள் வாக்குப்படி கெந்தமாதனத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து ஸ்தோத்தரித்து நிற்கும்போது ஸ்ரீராம லிங்கத்திலேயே ஜெகஜோதியாய் பிறைச் சந்திரனை ஜடாபாரத்தில் தரித்திரா நின்ற ஸ்ரீ கைலாசபதியாகிய சிவபெருமான் மான்மழு, சதுர்புஜ, காலகண்ட திரிநேத்ரதாரியாய் பிரசன்னமாகி வாரும், ராமச்சந்திரா, என்றழைத்து அவ்விடத்திலோர் திவ்விய தீர்த்தத்தைத் தன் பினாகத்தா லுண்டுபண்ணி அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துவாச்சொல்ல, அவ்வாறே ஸ்ரீராமரும் தீர்த்தமாடிக் கரையேறவும் பிர்ம்ம ஹத்தியானது மகா கோரரூபத்துடன் ஸ்ரீராமனை விட்டு ஓடுவதைக் கண்ட ஈசன் யிப் பிர்ம்மஹத்தியைத் தன்னிச்சையாக விடக் கூடாதென்பதாய்க் கருதி காளபைரவனை ஏவிப் பிடித்தங்கோர் பிலத்திலடைத்து விட்டார்கள்.

ஸ்ரீ ராமசந்திரனைச் சார்ந்திருந்த பிர்ம்மஹத்தி யித் தீர்த்த மகத்வத்தால் நிவாரணமான படியால் யித் தீர்த்தத்திற்குப் "பிர்ம்மஹத்தி விமோசன தீர்த்தம்" என்று சிவபெருமானால் திருநாமம் சூட்டப்பட்டு அனேக திவ்ய வரங்களைப்பெற்று சக்தி மிகுந்து ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.



## சங்க தீர்த்தம்

எங்குபார்க்கினும் சதா தேவர்கள் சஞ்சாரமும் வேள்விகளும் தபசுகளுமாயிருக்கப்பட்ட புண்யசொரூபமாகிய கெந்தமாதனத்திலுள்ள தேவாதிகளை துரத்தி அம்---மாமலையைக் கைப்பற்றுதற்கு பூர்வகாலத்தில் அசுரர்கள் திரண்டு, படை படையாகவும், தனித்தனியாகவும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் தாக்க எத்தனிக்கையில் ஸ்ரீமகாவிஷ்ணுவால் அம்---மாமலையை காவல் செய்து கொண்டிருக்கும்படி பறக்க விட்டிருக்கும் சக்கரத்துக்குத் துணையாக தனதோர்கையில் விளங்காநின்ற பாஞ்சசன்யமென்று சொல்லப்பட்ட சங்கத்தையும் ஏவி அசுரர்கள் வருகையை சங்கநாதம்மூலம் சக்கரத்துக்குத் தெரிவிக்கும்படி கட்டளையிட்டிருந்தார்.

பகவானின் கட்டளைப் பிரகாரமே அசுரர்கள் வருகையையுணர்ந்ததும் பாஞ்சசன்யமென்ற சங்கமானது த்வனித்து சக்கரத்தை எச்சரிக்கும். உடனே சக்கரமானது பாய்ந்து அசுரர்களின் சிரத்தை அரிந்துதள்ளும். சம்ஹார மானதுக்கு பின்னுமோர் முறை வெற்றி முழக்கம் செய்யும்.

இவ்வண்ணம் மஹாவிஷ்ணுவின் இருகரங்களிலுமுள்ள சங்கு சக்கரம் என்ற இருபெரும்புனித வஸ்துக்களும் அசுரசம்ஹாரம் செய்துகொண்டு தேவர்களையும் கெந்தமாதனத்தையும் பாதுகாத்து வருகையில் ஹத்திதோஷங்களால் இவ்விரு வஸ்துக்களும் சக்தி குன்றினமைகண்ட விஷ்ணுபகவான் நாராயணாஸ்திரப் பிரயோகத்

தால் இருதீர்த்தங்களை யுண்டாக்கி ஒன்றில்சக்கரத்தையும் மற்றொன்றில் சங்கையும் தீர்த்தமாடச் செய்து அப்புனித தீர்த்தமகிமையால் சங்கும்சக்கரமும் முழுவலிமையும் பெற்று தகதகவென ஒளிர எம்பெருமானின் திருக் கரங்களில் அமர்ந்தன.

பாஞ்சசன்ய மஹாசங்கம் ஓங்காரகானத்தை முழு வன்மையுடன் த்வனிக்கும் வல்லபத்தை யித்தீர்த்தம் திரும்பவும் அதற்களித்த தாலன்றுமுதல்" சங்கதீர்த்தம்" என்றநாமத்துடன் மகா பவித்திரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.



## சக்கர தீர்த்தம்

எங்குபார்க்கினும் சதா தேவசஞ்சாரமும் மகரிஷிகளின் வேள்விகளும் தபசுகளுமாயிருக்கப்பட்ட கெந்தமாதனபர்வதத்தில் அசுரர்களின் சஞ்சாரம் தடுக்கப்படும் பொருட்டு சங்குசக்கரநாராயணரிய மகாவிஷ்ணு தனது ஆக்ஞைசக்கரத்தை மேலேபறக்கவிட்டிருந்தார்.

பூர்வகாலத்தில் சுரர்களுக்கும் அசுரர்களுக்கும் பெருத்த சண்டை சச்சரவுகளிருந்ததினால் அனேக அசுரர்கள் இக்கெந்தமாதனத்தைக் கைப்பற்றுதற்கு முயன்றனர். அக்காலையில் பர்வதத்தைச் சுற்றி மேலேபறந்துகொண்டிருந்தசக்கரமானதுசிவ்வெனப்பாய்ந்து அசுரர்களைக் கொன்று மாய்த்துக் கொண்டிருந்தது.

இங்ஙனம் சக்கரமானது அனேக வலிமைமிக்க அசுரர்களையும், அரியதவங்களைச்செய்து அதிஉன்னத வரப்பிரசாதங்களைப் பெற்ற பிராம்மண அசுரர்களையும் வேதசாஸ்திரகலாவிற் பன்னர்களாயும், தனுர்வேத சம்பன்ன வீராதிவீர மகா மாயதந்தசாலிகளாயுமுள்ள எண்ணிலடங்காத அரக்கர் தலைவர்களையும் உடல்வேறு, சிரம்வேறாக அரிந்துதள்ளிய காரணத்தினால் பிர்ம்மஹத்தி தோஷமானது சக்கரத்தைச்சார்ந்து அதனால் சக்கரமானது நாளுக்குநாள் தன் வலிமை குன்றிப்போய்வந்தது.

இவ் வாய்மையை யறிந்த மகாவிஷ்ணுவானவர் அவ் விடத்திலோர் திவ்யதீர்த்தத்தை யுண்டுபண்ணி அதில் சக்கரத்துக்கு ஸ்நானம் செய்வித்தாலன்றி சக்கரம் தன் முழுஆற்றலையும் அடைய முடியாதுஎன்பதாய் தீர்மானித்து மகாபயங்கரமானதம் அகில

புவனங்களையே அதம்செய்ய வல்லதுமான நாராயணாஸ்திரத்தைத் தொடுத்து பூமியில் விட்டார். அவ்வஸ்திரமானது பாதாளம் வரைக்கும் துளைத்து நொடிப் பொழுதிலோர் புனிததீர்த்தத்தை யுண்டு பண்ணித் திரும்பிவந்து ஸ்ரீநாராயணனை வலம்புரிந்து தன்னிருப் பிடஞ் சேர்ந்தது.

இவ்வாறுண்டுபண்ணிய தீர்த்தத்தில் நீராடும்படி மகா விஷ்ணுவானவர் சக்கரத்திற்கு உத்திரவிட, அவ்வண்ணமே தீர்த்த மாடிய சக்கரமானது சர்வஹத்தி தோஷங்களும் களையப்பெற்று தகதகவென ஒளிவீசிக்கொண்டு முழுஆற்றலும் பெற்று விஷ்ணு தேவனை பிரதட்சணம்செய்து அவரது திருக்கரத்தில் அமர்ந்தது.

நாராயணாஸ்திரப் பிரயோகத்தால் உற்பவித்த தீர்த்தத்தால் சக்கரமானது ஸ்நானமாடி சர்வ சித்திகளையுமடைந்தபடியால் இத்தீர்த்தத்திற்கு "சக்கரதீர்த்தம்" என்று ஸ்ரீமந்நாராயணனால் நாமஞ்சூட்டப்பட்டு இகபரசித்திகளை அளிக்கக்கூடிய வரப்பிரசாதங் களைப்பெற்று கெந்தமாதனத்தி[l] பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

[1] சாமளபுரி என்ற பட்டணத்தில் வாழ்ந்துவந்த அரியான் என்னும் பெயரினையுடைய அந்தணன் மகரிஷிகளின் தெரிசனத்தை நாடி தண்டக ஆரண்யம் வருகையில் எதிர் பாராதவிதமாய் ஓர்வேடனின் அம்புபட்டு இருகால்களும் துண்டிக்கப்பட்டுவிடவே வேதனையுற்ற பிராமணன் மகரிஷி களின் ஞானத்தினால் இடங்கொண்டு அவர்களுபதேசித்தபடி இச்சக்கர தீர்த்தத்திலாடுகையில் யித்தீர்த்த ஸ்பரிசமாத் திரத்தில் முடமான கால்களிரண்டும் முன்போன்று வளரப் பெற்று அகமகிழ்வுற்றவனாய் தன் தேசம்போய்ச் சேர்ந்து இனிது வாழ்ந்தான்.



## சூரிய புஷ்கரணி தீர்த்தம்

⊰ ○ ⊱

தேவப்ரீதியான கெந்தமாதனத்தில் சர்வ ஜீவராசிகளுக் கும் அதிஷ்டாதாவாக யிருக்கின்ற சூரியபகவான் உண்டுபண்ணிய தீர்த்தம். இத்-தீர்த்தமானது ஞானேதயப் பிரும்பத்தியையும், தேகா ரோக்ய செல்வத்தையும் மானிடர்களுக்கு அளித்துக் கொண்டிருக் கும் வரத்தை சூரிய பகவானால் பெற்று மிளிர்ந்து கொண்டிருக் கிறது.

[1] மாபெரும் தபோதனர்களும் பெருவிரலொத்த சரீரப்பிர மாணமுள்ளவர் களுமான வாலகில்லியர் என்ற அறுபதி னாயிரவர்களும் சதா சர்வகாலமும் சூரிய பகவானுடைய பிரியா நட்பையும், தெரிசனத்தையும் பெறவேண்டி கெந்த மாதனத்திலுள்ள யித் தீர்த்தத்தில் தபஞ்செய்து காயத்ரீ முதலான சந்தஸ்ஸுகளுடைய பேர்களைக் கொண்ட ஏழு அசுவங்களைப்பூட்டி அருணனால் சாரத்தியம் செய்யப்பட்ட ரதத்தில் இவ்வறுபதினாயிரவர்களும் நின்று கொண்டு தங்கள் முன் நிற்கும் பிர்ம்ம சொரூபமாய் விளங்கப்பட்ட சூரிய பகவானின் நானாவிதலீலா நாம ஸ்தோத்திரம்புரிந்து கொண்டு அவரை உபாஸித்துக் கொண்டிருக்கும் பாக்யத் தைப் பெற்றார்கள்.

## சந்திர புஷ்கரணி தீர்த்தம்

—(++)—

ஈஸ்வரப்பிரீதி யானதும் சாற்றுதற்கரிய மகோன்னத புனித ரூபமாயுள்ளதுமான கெந்தமாதனத்தில் சூரியபகவான் தன் பேரால் ஓர் தீர்த்தத்தை யுண்டுபண்ணுங்காலையில் சந்திரனும் தன் பேரா லுண்டுபண்ணிய தீர்த்தம்.

கெந்தமாதனத்திலுள்ள இத் தீர்த்தம் சந்திரனால் அளிக்கப் பட்ட வரப்பிரசாதங்களையுடையதேயாயினும் முப்பத்து முக்கோடி தேவர்களாலும் மும்மூர்த்திகளாலும் ஏகவசனமாக "உற்சாகவாழ்வையும் தீர்க்காயுளையும்" கொடுத்துக் கொண்டிருக்கும் வரத்தினைப் பெற்று சூரியதீர்த்தத்தைவிட மிகப்பிரக்யாதி பெற்று விளங்குகின்றது.



## சிவ தீர்த்தம்

சாட்சாத் ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்த சின்மய சொரூபத்திலேயே சதாகாலமும் மனதைச்செலுத்தித் திரியும் கௌதம மகரிஷியும், அகத்திய மகரிஷியும் முன்னர் ஓர்காலத்தில் கெந்த மாதனச்சாரலில் அமர்ந்து ஸ்ரீ உமாமகேஸ்வரனை நோக்கி உக்ரமாக தபஞ் செய்யலாயினர்.

இவ்விருமாபெரும் மகரிஷிகளின் தவத்துக்கு மகிழ்ந்தவராய் சிவபெருமானும் விடைமீதா ரோகணித்து சிவகணங்கள்சூழ முனிவர்களுக்கு காட்சியளித்து அவர்கள் கோரியபடி ஓர் மகத்துவமிக்க தடாகத்தையுண்டுபண்ணி அத்தீர்த்த ஸ்பரிசமாத்திரத்தில் நிகரற்ற செல்வத்தையும் சகல சித்துகளையுமடைந்து இனியவாழ்வும் நமது பதமும் பெறுவார்களாக என்றாசீர்வதித்து கெந்தமாதனபர்வத சிகரத்துக் கெழுந்தருளினர்.

[1] பூர்வகாலத்தில் கைலயங்கிரி மண்டபத்தில் பரமேஸ்வரனைக் காணும்பொருட்டு சென்றிருந்த பிர்ம்மதேவன் ஈசுவரன் வெளியே போயிருந்ததினால் காணாது அவர்வரும்வரைக்கும் அவ்விடத்திலமைத்திருந்த ஓர் ஆசனத்திலமர்ந்திருந்தார். அச்சமயம் உமாதேவியார் அம்மண்டபத்தில் பிரவேசித்து ஐந்துமுகத்துடன் உட்கார்ந்திருக்கும் பிர்ம்மதேவனை தமது நாயகனென்றே எண்ணி பரபரப்புடன் நாதா! என்றுகூப்பிட்டுக் கொண்டே மண்டபத்தினுள் வரவும், பிர்ம்மதேவன் திகைத்து பரமேஸ்வரியின் பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஈஸ்வர தெரிசனத்துக்கு வந்ததாகவும்

சொன்னார். உட்கார்ந்திருப்பவர் பிர்ம்மதேவன் என்றறிந்ததும் பரமேஸ்வரியானவர் மிகவும் நாணித் தன்னைத் தானே நொந்து கொண்டார். அப்பால் பரமேஸ்வரன் வரவும் நடந்த வரலாற்றை யெல்லாம் தெரிந்து நானும் பிர்ம்மதேவனும் ஐந்து முகங்களுடனி ருப்பதாலல்லவா, யிச்சம்பவம் நடைபெற ஏதுவாயிற்று ஆதலாலிச் சங்கடத்தை ஒழிக்க வேண்டுமெனக் கருதி பிர்ம்மனைநோக்கி ஏ, பிர்ம்மதேவே! நம்மிருவர்களில் யாருவ தொருவர் ஒருதலையைக் குறைத்துக் கொள்ளவேண்டும் இன்றேல் இவ்வித சம்பவங்கள் சர்வசாதாரணமாக நடப்பதோடு கஷ்டங்களும் சம்பவிக்க நேரிடும் ஒருசிரம் குறைக்கும் யோசனையை விட்டு நம்மில் யாருவதொருவர் ஆறுசிரங்களைக் கொள்வதின் நிமித்தம்ஓர்சிரம் அதிகமாய்சேர்த்துக் கொண்டாலும் முன்னரே ஆறுசிரங்களுடன் சிவசுப்பிரமணியக் கடவுள் திகழ்கிறார் எனவே ஒருசிரம் அதிகம்செய்யும் யோசனை யை விடுத்து ஓர்சிரம் குறைத்தலே சரியான யோசனை என்றுஉண் மைகளை எடுத்துரைத்தார். பிர்ம்மா இதைக்கேட்டவுடன் நானேஓர் சிரத்தை தியாகம்செய்து விடுகிறேனென முன்வந்து சிவபிரானை ஸ்தோத்தரித்து நின்றார்.

இவ்வண்ணமே தியாகம்செய்ய முன்நிற்கும் பிர்ம்மதேவனைப் புகழ்ந்து ஈஸ்வரனானவர் காளவைரவரை நினைக்க, ரெத்தம் தோய்ந்த அனேகமாயிரம் நாக்குகளுடனும் கரங்களுடனும் நெருப்பை வீசும் கண்களுடனும் அகோரசொரூபத்துடன் வைரவர்தோன்றி பணிந்துநிற்க, வாரும் காளவைரவ! நீ உடனே இதோநிற்கும்பிர்ம் மதேவனின் சிரங்களில் ஒன்றைக்கொய்துபோடுவாய் என்றாக்ஞா பித்தார்.

சிவபிரானின் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு வைரவமூர்த் தியானவர் ஒரேபாய்ச்சலாகப் பாய்ந்து பிர்ம்மனுடைய ஐந்து சிரங்களில் ஒன்றை கிள்ளியெடுக்க அச் சிரமானது வைரவமூர்த்தியி னுடைய கைகளில் ஒட்டிக்கொண்டு அவரை ஹிம்சை செய்ய ஆரம்பித்தது.



பிர்ம்மதேவனுடைய சிரத்தைக்கொய்த பிர்ம்மஹத்திதோஷ மானது அக்கணமுதல் வைரவரைவாட்டவும், சிரமானது கரங்களில் ஒட்டிக்கொள்ளவும், இவற்றைசகிக் கமாட்டாத வைவமூர்த்தி சிவபிரானை ஸ்தோத்தரித்து யித்தோஷத்தை நிவர்த்திக்கும் மார்க் கத்தைக் காட்டியருளும் தேவதேவா, ஆதிமூலா, அரிபிர்மர்களுக்கு மறியாமுதலே என்று கைகட்டி வாய்புதைத்து நின்றார்.

ஹே! காளவைரவ, என்ற கருணைத்வனியுடன் சிவபெருமான் வைரவமூர்த்தியை அழைத்து புண்யதீர்த்த ஸ்நானங்களிலேயே யித்தோஷம் உன்னைவிட்டு நீங்குமாதலால் நீஉடனே காசி, ஹரித் வாரம், ரிஷிகேஷம், கங்கோத்ரி, தேவப்பிரயாக், பத்ரிநாதம், மகா மகம் முதலிய க்ஷேத்ரதீர்த்தமாடி வருகையில் அப்புண்ய வசத்தால் கையில் ஒட்டிக்கொண்டிருந்த பிர்ம்ம சிரமானது பொத்தென்று தரைமீது விழும். வீழ்ந்த அவ்விடம் மகாபுண்ய ஸ்தலமாக விளங்கும். அங்கோர் தீர்த்தத்தை உண்டுபண்ணி அதில்நீராடு வீரேயாகில் ஓ வயிரவமூர்த்தியே உம்மைச் சார்ந்திருந்த பிர்ம்மஹத்தி தோஷமானது கால்பங்கு நிவர்த்தியாகியும் முக்கால் பங்கும்மை விட்டகலா திருக்குமாதலால் கெந்தமாதனம் சென்று அங்கு மாபெரும் தபோதனர்களாகிய கௌதம, அகத்தியமகரிஷி களின்நிமித்தம் நம்மால் உற்பத்தி செய்விக்கப்பட்ட சிவ தீர்த்தத்தில் ஸ்நானமாடுவீரேயாகில் அம்முக்கால்வாசி தோஷமும் நிவர்த்தியாகிவிடும் என சிவவாக்குமுழங்கக்கேட்டவைரவர் ஆனந்த மெய்தி அவ்விதமே "பிர்மகபால க்ஷேத்ரம்" உண்டுபண்ணி அனேகம் உயரிய வரப்பிரசாதங்களை அருளி நேரே கெந்த மாதனத்தை நோக்கிப் புறப்பட்டு சிவதீர்த்தத்தை அடைந்தார்.

பஞ்சாட்சர மஹா மகாமந்திர தியானராய் ஸ்ரீவைரவமூர்த்தி யானவர் சிவதீர்த்த ஸ்நானமாடி கரையேறுகையில் அந்நாட்கதி

த்தில் சிவகணங்கள்சூழ சாட்சாத் ஸ்ரீகைலாசபதியானவர் ஒப்புயர்வற்ற பிர்ம்மானந்த தெரிசனத்தைக் கொடுத்து நல்லாசி கூறினார் விடையேறிய விமலனை ஸ்ரீவைரவர்போற்றினார், துதித்தார், ஆனந்தக்கூத்தாடி அவனின் மெய்பத்தில் ஐக்யமானார்.

(1) நிரூபதன் என்னும் பைராகி பசுவைக்கொன்ற மகாபாவ மித்தீர்த்தத்தில் மூன்று மண்டலம் நீராடியதின் பலனாய் பஞ்சாட்சர மகாமந்திர உச்சாடண ஸ்வயஞானோதயமுண்டாகி பின்பஞ்சாட்சரத்தை தியானித்து யித்தீர்த்தத்தி லாடியதும் அம் மகாபாவம் அவனைவிட்டு நீங்கிற்று.

[2] சோழமண்டலத்தைச் சேர்ந்தகார்பூத்தநாயனார்என்னும் சிவபக்தன் மகாமந்திரமாகிய பஞ்சாட்சரத்தை விதிப்படி ஓரேமுறை ஜெபித்துக் கொண்டு யித் தீர்த்தத்தில் ஸ்நானமாடியதால் குபேர செல்வத்தை நிகர்த்த ஐசுவரியத்தைப் பெற்று பிரக்யாதி பெற்று வாழ்ந்தான்.

[3] வறுமைப் பிணியால் மிகவும் பாதிக்கப்பட்டு பெண்டு பிள்ளைகளின் பரிதாபகரமான பசிநோயின் உபத்திரவத்தாலெழுந்த கொடிய கஷ்டத்தைக் கண்டு சகிக்க மாட்டாதவனாய் பிராணத்தியாகம் செய்ய எத்தனம் செய்து கொண்டிருந்த உமையநாதன் என்னும் நாமமுடைய மதக தேசத்தினன் அகஸ்திய பகவானின் உபதேசப்படி யித்தீர்த்தத்தில் மூன்று மண்டலம்வரைக்கும் சந்திஸ்நானம் செய்து அபார செல்வத்தைப் பெற்று புகழ்பெற வாழ்ந்தனன்.

[4] மதக தேசத்து பூதகேசன் என்னும் லோபி தனக்குத் திரண்ட செல்வமிருந்தும் மேலும் செல்வந்திரட்ட ஆசை பூண்டவனாய் கெந்தமாதனத்தில் ஸ்ரீ ராலிங்கத்திற்கு அரு



காமையிலோங்கும் யிப்புனித தீர்த்தத்தில் ஸ்நானமாடி ஸ்ரீ ராமநாதனைத் தொழுது வர யித்தீர்த்த மகிமையானது எப்படிப்பட்டவர்களுக்கும் அஷ்ட ஐசுவரியத்தை யளிக்கக்கூடியதாதலால், இந்த லோபிக்கும் நிகரற்ற ஐசுவர சம்பத்துக்களை யீந்ததுந்தவிர அவனைச்சார்ந்திருந்த லோபிக்குணமானது அறவேயொழிந்து தர்மசிந்தனை நிறைந்த தயாளச் செல்வனானான்.

# சாத்யாமிர்த தீர்த்தம்

மாபெரும் க்ஷேத்ரமாகிய கெந்தமாதனத்தில் ஒளிரும் தேவைப்பதியில் யிப் புனிததீர்த்தம் சப்தரிஷிகளாலுண்டாக்கப் பட்டது. வசிஷ்டாதி எழுவர்களும் ஒருங்குகூடி வேதமந்திர உச்சாடணத்தால் ஓர் பிர்ம்மாண்டமான அக்கினிகுண்டம் வளர்த்தி அதில் தங்களுடைய தபோபலங்களை எல்லாம் திரட்டி அவ்வக்கினி குண்டத்தினிடமாக ஏராளமான அமுதங்களைப் பெற்று நாடோறும் 48-ஆயிரம் ரிஷிமுனிவராளுக்கு கொடுத்து தாங்களும் புசித்துக்கொண்டு வந்தார்கள்.

இச் சேதியறிந்த தேவர்கள் மஹாவிஷ்ணுவிடம் முறையிட விஷ்ணுதேவனும் ரிஷிகளை அடக்கி யாள்வதற்கோ அவர்களுக்கு இடையூறுவிளைவிப்பதற்கோ அச்சங்கொண்டவராய் ரிஷீஸ்வரர்களை அன்புகொண்டே வெல்லுதல் சிலாக்யம்எனத் துணிந்து சப்தரிஷிகளின் முன்னிலையிற்றோன்றி ஏ, மாதவசிரேஷ்டர்களே, நீங்கள் வேறு, தேவர்கள் வேறாகயிருந்தாலல்லவோ நீங்கள் தனியாக அமுதுண்டுபண்ணி உண்ணல்வேண்டும். உங்களுக்கு அமிர்தமென்ன ஓர் அரிய வஸ்துவோ? தேவர்களே உங்களை அழைத்து அமுதூட்டமாட்டார்களா? இங்ஙனமிருக்கையில் நீங்களேன் நமக்குள் தேவர்கள் என்றும் ரிஷிகளென்றும் வித்யாசத்தைக் காட்டவேண்டும்? ஆகையால் தவ சிரேஷ்டர்களே! நமக்குள் எவ்வகையிலும் பிளவுவேண்டாம். நாம் நமக்குள் பிளவுபட்டோமேயானால் நமது எதிரிகளாகிய அசுரர்கட்கு பலம் அதிகரித்துப்போய் நமக்கு மிகவும் அல்லல்புரிவார்கள். எனவே நாளைமுதல் நமது வர்க்கத்தினர்கள் எல்லோரும் தேவைப்படும் போதெல்லாம் அமிர்த சாலைக்கு விஜயம் செய்து நமது ஒற்றுமையை நமது விரோதிகட்குக்காட்டுதல் வேண்டும். இயம்புதற்கரிய பிரயாசையின்மேல் தேவர்களும்



ரிஷீஸ்வரர்களும் அசுரர்களும் பாற்கடலில் கடைந்தெடுத்த அமிர்தத்தை தங்கள் தபோபலத்தின் வன்மையால் நினைத்தமாத்திரத்தில் அடைந்த சப்த மகரிஷிகளே! என்றார் யுகப்பிரளயங்களில் ஆலிலைமேல் பள்ளிகொள்ளும் லீலாவினோதன்.

சாட்சாத் ஸ்ரீமந்நாராயணனின் வேண்டுகோளுக் கிணங்கியவர்களாய் சப்தமாரிஷிகளும் இதுகாறும் தங்கட்கமுதளித்துக் கொண்டிருந்த அக்கினிக்குண்டத்தை இமைப்பொழுதில் ஓர் தீர்த்தகுண்டமாக்கினார்கள். சதாகாலமும் ஈஸ்வர சிந்தாமயமாகவிருக்கப் பட்ட அம் மகரிஷிகள் முதன்முதலி லித்தீர்த்தத்திலாடி ஈஸ்வரகலை பொழிந்த திருமேனியுடன் கரையேறிநின்று அப் பவித்திரதீர்த்தத்தைப் பார்த்துச் சொல்லலாயினர். ஹே, ஜீவகலைமிக்க தீர்த்தராஜ! எங்களின் தபோபலத்தினால் உற்பத்திசெய்யப்பட்ட நீ இன்றுமுதலிப்பவித்திர கெந்தமாதனத்தில் சத்யமானது இப் பாரினில் துளியளவுள்ள வரைக்கும் மகாமகிமையோடு விளங்கிக்கொண்டு உன்னில் பக்தியுடன் தீர்த்தமாடுவோர்களின் அத்யந்தகோரிக்கைகளையளித்துக்கொண்டிருக்கக்கடவாய் என்று வரம்அருளி தெய்வலோகம் எழுந்தருளினார்கள் இப்பேர்பட்ட மகத்வமிக்க சாத்யாமிர்த தீர்த்தத்தில் எண்ணற்ற அற்புதசம்பவங்களும் சாபவிமோசனங்களும் நாடோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

[1] இத்தீர்த்தத்தில் புரூருவச் சக்ரவர்த்தி தன்னுடன் கூடிச் சுகித்திருந்த ஊர்வசிஎன்னும் தெய்வகன்னிகையை தும்புருமுதலியவர்களின் சாபங்களால் இருமுறைபிரிந்திருந்து பின் மகரிஷிகளின் உபதேசப்படி யித்தீர்த்தத்தில் ஸ்நானமாடி சாபவிமோசனஞ் செய்துகொண்டதால் ஊர்வசியைத் திரும்பவும் அடைந்ததுடன் தேவலோக போக்குவரத்தும் சித்தியாயிற்று.

[2] சௌராஷ்டிரதேசத்தைச் சேர்ந்த குமுதினி, ரங்கவேணி என்ற இருபெண்களையும் ஓர் ஜடாமுனி வெகுநாளாகப் பிடித்து அல்லற்படுத்திக் கொண்டிருக்கையில் இவ்வுலகிலுள்ள மகாமந்திரவாதிகளை எல்லாம் வருவித்து அம்முனியை ஓட்டுவதற்கு முயர்ச்சித்தும் பயன்படாது போனதுந்தவிற எத்தனையோமுறைகளை எல்லாம் அனுஷ்டித்தும் ஜடாமுனியின் தொந்திரை குறைந்தபாடில்லை ஓர் தினம் இரவு இவ்விருபெண்களின் பிதாவானவர் நன்கு துயிலும்போது ஓர் விசித்திரமான கனவு கண்டான் அதாவது:—“நாற்புறமும் போலைகளை எழுப்பி கர்ஜித்துக் கொண்டிருக்கும் சமுத்திரமும் அச்சமுத்திர மத்தியில் ஓர் பர்வதமும் அதிலோர் அழகிய சிவன்கோயிலும் அக்கோயிலில் அம்மன் சன்னதி கொடிமரத் தருகிலோர் சுனையிருப்பதாகவும் அதில் தான் தனது பெண்களுடன் நீராடிக் கொண்டிருக்கும்போது ஜடாமுனியானது பெருஞ்சப்தமிட்டுபெண்களைவிட்டோடிக்கொண்டிருப்பதாகவும் கனவு கண்டெழுந்து விடியவும் அதன் பொருளை பெரியோர்களாலுணர்ந்து கனவில்கண்ட கெந்தமாதனத்தையடைந்து இச்சாத்யாமிர்த தீர்த்தத்திலாடியதும் ஜடாமுனியானது விலக அப் பெண்கள் ஸ்ரீபர்வதவர்த்தினியை தெரிசித்து சகல இன்பங்களையும்பெற்று வாழ்ந்திருந்தனர்.

[3] ஸ்ரீ ராமலிங்கத்திற்கு தென்பாரிசத்திலே ஸ்ரீபர்வதவர்த்தனி அம்பாளின் சந்நிதிக்கு முன்னே மகா பரிசுத்தமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்குமித் தீர்த்தத்தில் முன் ஒரு காலத்தில் திரும்பேஸ்வரம் என்னும் க்ஷேத்திரத்திலே வசிக்கப்பட்ட தருமகுப்தன் என்றழைக்கப்படும் ஓர்திடபுருஷன் இவ்வுலகெலாம் புகழும் கீர்த்தியுடன் தன் வாழ்வு அமை



தல் வேண்டும். இன்றேல் சாத்தல் நன்று எனத் துணிந்து அதற்கு வேண்டிய திறம், தைரியம், கல்வி இவைகள் தன்னிடம் அமையப் பெருதிருப்பதைக் கண்டு வெறுப்புற்றிருக்கையில், சப்த ரிஷிகளாலுண்டு பண்ணப்பட்ட யித் தீர்த்த மகத்வத்தைக் கேட்டதும், இவண் வந்து சப்த ரிஷிகளை மனதிடை நிறுத்தி தீர்த்த ஸ்நானம் செய்து வருங்காலையில் சப்த ரிஷிகளின் ஆத்ம சக்திகளை ஸ்வந்தரிக்கப்பட்டவனாய் நினைத்தவற்றை அக்கணமே முடிக்கும் ஆற்றலுடைத்து ஒப்புயர்வற்று திரிலோகமும் புகழ நெடுநாள் வாழ்ந்தனன்.

## மாதவ தீர்த்தம்

—o—

மதுராபுரி பட்டணத்தை அரசாட்சி செய்துவந்த சுந்திர பாண்டியன் என்னும் திருநாமமுடைய ஓர் உத்தம அரசன் தனக்கோர் ஆண்குழந்தை யிருந்தும் பெண் குழந்தையில்லாத குறையை யுத்தேசித்து அனேகம் தான தர்மங்களைச் செய்தும் இஷ்டம் ஈடேறாது போகவே, அவ்வரசனானவன் கெந்தமாதனத்திலோங்கும் ஜோதி சொரூபமான சேதுவிலே ஸ்நானம் செய்து தன் ஆயுட்காலத்தை அதிதிகள் உபசாரத்திலேயே கழிக்க எண்ணங்கொண்டு சேதுவை யடைந்து தீர்த்தமாடி அக்கரையிலேயே முப்பத்திரண்டு அறங்களையும் தினசரி செய்து வருங்காலையில், இவ்வரசன் பெண் மகவில்லாக் குறையினால் கொணடுள்ள பக்தியை ஸ்ரீ மகாலட்சுமியானவள் அறிந்து அவன் மீது கிருபை பாலிக்கத் திருவுளங் கொண்டாள்.

ஸ்ரீ வைகுந்தத்தில் அகில புவனங்களையும் அதிலுள்ள சர்வ ஜீவராசிகளையும் ரக்ஷித்திலங்கா நின்ற சாட்சாத் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைப் பிரிந்தாள் ஸ்ரீதேவி. சேதுதீரத்தில் அருணோதயத்தில் தானதர்மாதிகளை இன்புடன் செய்துநிற்கும் சுந்திரபாண்டிய வள்ளலின்முன் ஓர் அழகிய பெண்குழந்தையாகத் தோன்றி அப்புண்ய மணலின்மீது அங்குமிங்கும் தவழ்ந்து விளையாடினாள். மிகுந்த தேஜஸுடைய இப்-பெண் குழந்தையைக் கண்டவுடன் சுந்திர பாண்டியனுக்கும், அவன் பத்தினிக்கும் தான் என்ன ஆசை! உடனே நான்முன் நீ பின் எனப் போட்டியிட்டு அம்-மகவை நோக்கி ஓடினர் தம்பதிகள். ஓடோடியும் சென்று தங்களிரு கரங்களாலும் குழந்தையை வாரியெடுத்து உச்சிமுகர்ந்து முத்தமிட்டு



சீராட்டிப் பாராட்டினார்கள். கருணைவாரியாகிய சேதுவைப் புகழ்ந்து நாவாறப் போற்றி அப்-பெண் மகவிற்கு அவ்விடத்திற்றானே "சேதுலட்சுமி" எனத் திருநாமமிட்டார்கள்.

சேதுலட்சுமி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வாலப் பிராயத்தை யெய்தினாள். நந்தவனத்திற் சென்று தன்பிதா சுந்திர பாண்டியனின் பூஜைக்கு வேண்டிய புட்பங்கள் கொய்து வருவது வழக்கம். வழக்கப்பிரகாரம் ஓர்தினம் நந்தவனத்தில் புட்பங்களை எடுத்துக் கொண்டிருக்கும் சமயம், மகாலட்சுமியைப் பிரிந்திருந்த விஷ்ணுவானவர் ஓர் பிராமண வடிவெடுத்து வந்து அவளது கரங்களைப்பற்றி யிழுக்கலாயினர். மிகுந்த நாணத்துடனப் பெண்ணரசியானவள் கைகளைமீட்க முயன்றுமியலாது போய்விடவே, அச்சத்தாலும் பயத்தாலும் பீடிக்கப்பட்டு கோ! வென்றழுது கூச்சலிட்டாள்.

தன் திருக்குமாரியின் கூச்சலைக்கேட்ட அரசன் வாளையுருவிக் கையிலேந்தி ஓடிவரும்போது பற்றிநின்ற கையைவிடுத்து அப்படியே நின்றார் பிராமண வடிவந்தாங்கிய எம்பெருமான். அரசனின் கொடிய ஆக்கினைக்கு அப்-பிராமண வடிவினன் ஆளாகி, ராஜ சேவகர்களால் விலங்குகள் பூட்டப்பட்டு சிறையிலடைக்கப் பெற்றார்.

அன்றிரவு அயர்ந்த துயில். சிறையில் பூட்டப்பட்ட பிராமணன் சங்கு, சக்கரங்களைக் கரங்களில் தரித்து நீலமேனியுடனிருப்பது போலவும், கன்னிமாடத்தில் ஹம்ச மஞ்சத்தில் தாதியர்கள் சூழத் துயிலும் தன் அருமைக் குமாரி செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் மகாலட்சுமி போன்றுமிருக்கக் கனவு கண்டான் சுந்திர பாண்டியனெனும் ராஜேந்திரன். தான்கண்ட கனவைச் சோதிக்கத் தூண்டியது அவனது மனம் உடனே கண்ணிமாடம் சென்று பார்த்தான் ஆ! என்ன அதிசயம் சாட்சாத் லோகமாதாவாகிய மங்களேஸ்

வரியே தன் மகளாகத் தான் கனவு கண்டவாறே தாமரை மலரில் வீற்றிருப்பதைப் பார்த்ததும் சிறைக்கூடம் ஏகி அங்கு பார்க்க விலங்கு பூட்டப்பட்டிருந்த பிராமணன் நீலமேனியுடன் சங்குசக்ர கதாபாணியாய் நிற்பதையும் கண்டு சிறைக்கதவை யுடைத்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஐயனே, எளியேனை இவ்வபசாரமெல்லாம் புரிவதற்கேன் அளாக்கினையோ ? நின் திருமேனி நோவுற நான் செய்த இவ்வடாத தீவினைக்குப் பிருயச்சித்தம் யாதோ ? ஆபத்தில் காக்கும் மெய்யனே, நாயேனறியாது செய்த யிப் பெரும் பிழையைப் பொருத்தட் கொள்ளும். என இறைஞ்சி நின்றான்.

விஷ்ணு பகவானும் தனக்கு மாமனாகப்போகும் சுந்திர பாண்டியனை ஆதரித்துத் தேற்றி மும்மூர்த்திகட்கும் மிகப்பிரியமான கெந்தமானத்திலேயே ஸ்ரீ சேதுலட்சுமி தேவியார் சமேதமாய் திருக்கோயில் கொண்டெழுந்தருளினர்.

இவ்வண்ணம் திருவிளையாடல்புரிந்த ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் தினசரி செப்புதற்கரிய புண்ய தீர்த்தமாகிய சேது தீர்த்தக் காவடி கட்டி அருணோதயத்திற்கு முன் ஸ்ரீ ராமலிங்கத்திற்கு அபிஷேகிக்கப்பட்ட தீர்த்தமானது ஊற்றுக்கண்களின் வழியாக வந்து ஸ்ரீ ராமலிங்கத்திற்குப் பக்கத்திலே ஓர் தடாகமாகத் தோன்றி நின்றது. இதைக் கண்ணுற்ற திருமாலானவர் அத்-தடாகத்திற்கு தனது நாமத்தைச் சூட்டி அனேக அரிய வரப்ரசாதங்களருளி யித் தீர்த்தத்தில் மூழ்குவோர் பிறவித் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று மோட்ச சாம்ப்ருட்சியங்களைப் பெறுவார்கள். என்பதாய்க் கடாட்சித் திருப்பதாலித் தீர்த்த மகிமை ஸ்ரீ சேதுவை நிகர்த்துக் கெந்தமாதனத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.



## நள தீர்த்தம்

*ை++ை*

இராவண சம்ஹாரநிமித்தம் ஸ்ரீராம சேனைசைன்யங்கள் இலங்கையை யடைவதற்கு சேதுசாகரத்தில் 100 யோசனை நீளமுள்ள திருவணையைக் கட்டிமுடித்த வானரச்சிற்பனும் வீரனும், முன் ஜன்மத்தில் தெய்வலோக சிற்பனுமாகிய நளன் என்பவன் தன்னுடன் அணைகட்டுங் காலையில் இன்றியமையாத் துணைவர்களாயிருந்தவர்களான நீலன், கவயன், கவாட்சன், கெந்தமாதனன் ஆகிய நால்வருடன் ஸ்ரீராமமூர்த்தி கெந்தமாதனத்தில் லிங்கப் பிரதிஸ்டை செய்துமுடிந்ததும் அவரையணுகி ஏதோ ஆவலுள்ளவர்களாய் பணிந்து நின்றான்.

இவர்களுடைய குறிப்பைக் கண்டவராய் ஸ்ரீராமச்சந்திரன் வாருங்கள் உபகாரிகளே! உங்கட்கு வேண்டுவது யாது? கேளுங்கள், தருகிறேம்என அன்புடன் கேட்கவே, பரமபுருஷ! தேவதைகள் பிரத்யட்சமாய் நடமாடுமிப் பவித்திர கெந்தமாதனத்திலே எங்கள் ஐவர் பேரும் தனித்தனி தீர்த்தங்களுண்டாக்கி அத் தீர்த்தங்கள் தியாகம், தவம், ஒழுக்கம், கல்வி, வீரம் இவ்வைந்து பேற்றையும் இதில் தீர்த்தமாடும் சீவர்களுக்கு அருளும் வரத்தினைக் கொடுத்து சூரியசந்திர பூமியுள்ளளவுமிக் கெந்தமாதனத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கக் கிருபை செய்தல் வேண்டும். இதுவன்றி வேறு யாங்கள் வேண்டுவதொன்றில்லை. எனப் பயபக்தி விஸ்வாசத்துடன் பிரார்த்தனை செய்தார்கள்.

வானர வீரர்கள் கோரியபடியே செய்து தருவதாக வாக்களித்து ஸ்ரீராம பிரானும் தனது கோதண்டத்தை யெடுத்து நாணேற்றி

அதில் ஐந்து திவ்யாஸ்திரங்களை எடுத்துத் தொடுத்து ஒரே எய்தலில் ஐந்து பாணங்களையும் ஐந்து இடங்களில் பூமியில் விடவும், அக்கணைகளானது பூமியைத்துளைத்து நீர் நிலைகளாக்கியதுந் தவிற ஸ்ரீ ராமச்சந்திரனுடைய விற்றிறமையானது கண்டோர்கள் பிரமிக்கும் வண்ணம் பின்னும் சில கணைகளை விடுத்து தீர்த்தங்களைத்திரட்டிக் கொண்டு வந்து ஐவர்களுடைய சிரசிலும் வார்த்துப் பின்னர் ஸ்ரீராமரிடம் வந்து சேர்ந்தன.

இவ்வித அற்புதங்களைச் செய்த அஸ்திரங்களில் எல்லாவற்றிற்கும் முதலில் வந்த கணையானது தீர்த்தத்தை எடுத்து நளனுக்கு அபிஷேகித்ததால் ஸ்ரீ ராமரும் இத் தீர்த்தத்திற்கு "நள தீர்த்தம்' எனப் பெயர் சூட்டி, நளதீர்த்த ஸ்நானத்தினால் "எம் மனிதனும் தியாக போக்கைப் பூரணமாய்ப்பெற்று திரிலோகத்திலும் கொண்டாடப்படும் உன்னத நிலையை யடைவான்" என்பதாய் வரப்பிரசாதம் அருளி நளனை ஆசிர்வதித்தார்.



# கெந்தமாதன தீர்த்தம்

நளதீர்த்தமகத்வத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் ஸ்ரீராமரால் கோதண்டத்தினிடமிருந்து பிரயோகிக்கப்பட்ட திவ்ய அஸ்திரங்களாகிய ஸ்ரீராமபாணங்களில் ஐந்தாவதாக தீர்த்தந்திரட்டி வந்தவைகள் அப்புனிததீர்த்தத்தை கெந்தமாதனன் என்னும் வானர வீரனின் சிரத்தில் ஜெயஜெயவென வருடித்ததால் அத்தீர்த்தம் ஸ்ரீராமசந்திரனால் கெந்தமாதனதீர்த்தம் என்றழைக்கப்பட்டு வீரலட்சுமிகடாட்சத்தை நிறைந் தளித்துக்கொண்டிருக்கும் வரத்தினைப் பெற்று ஒப்புயர்வற்று கெந்தமாதனச்சாலில் சேதுசமீபம் ஒளிர்ந்துகொண்டிருக்கின்றது.

## கவ்ய தீர்த்தம்

நள தீர்த்த மகத்வத்தில் சொல்லப்பட்டபடி ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியால் கோதண்டத்தினிட மிருந்து விடப்பட்ட அஸ்திரங்களில் மூன்றாவதாக தீர்த்தந் திரட்டிவந்த கணைகளானது அத்தீர்த்தத்தைக் கவயனுடைய சிரத்தில் வருஷித்துச் சென்றதாலித் தீர்த்தத்திற்கு "கவய தீர்த்தம்" என நாமகரணம் சூட்டுவித்து புருஷார்த்தங்களில் ஒழுக்கம் என்னும் உயரிய பேற்றையித் தீர்த்த ஸ்நானத்தால் மனுமக்கள் அடையக் கடவர். என்பதாய் வரப்ரசாதத்தைப் பெற்று ஜெகஜோதியாய் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.



## கவாட்ச தீர்த்தம்

நளதீர்த்த மகுத்துவத்தில் சொல்லப் பட்டபடி ஸ்ரீராமச் சந்திரனால் கோதண்டத் தினின்று விடப்பட்ட பாணங்களில் நான்காவதாக தீர்த்தந் திரட்டிவந்த அஸ்திரங்கள் தீர்த்தத்தை கவாட்சனுடைய சிரோபாரத்தில் வருடித்த தாலத்தீர்த்தம் கவாட்சதீர்த்தமெனப் பேர்பூண்டு ஸ்ரீராமபிரானால் மக்கட் கின்றியமையாத செல்வமாகிய கல்வி என்றமாபெரும் பேற்றை மக்கட்களிக்கும் வரத்தினைப் பெற்றொளிர்கின்றது.

## நீல தீர்த்தம்

நளதீர்த்த மகத்வத்தில் சொல்லப்பட்டபடி ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியால் விடப்பட்ட கணைகளில் இரண்டாவதாக தீர்த்தந் திரட்டிவந்த அஸ்திரங்களானது அத்தீர்த்தத்தை நீலனுடைய சிரசில் வார்த்துச் சென்றதாலத் தீர்த்தத்துக்கு நீலதீர்த்தம் எனவும் அத்தீர்த்தபலன் "தவநெறிகள்" என்றும் ஸ்ரீராம மூர்த்தி யானவர் வரப்பிரசாதங் கொடுத்து நீலனை வாழ்த்திப் புகழ்ந்தார்.



## சர்வ தீர்த்தம்

முன்னொரு காலத்தில் பிருகு மகரிஷியின் வமிசத்தைச் சேர்ந்த சுதரிசனன் என்னும் பிராமணன் தான் தபோதத்துவங்களுக்கு வேண்டிய வைராக்யத்தை யுடையவனாயிருந்தும் பிறவிக்குருடனாக ஜெனித்ததினாலே நேத்திரானந்த போகங்களை யிழந்தும் வயோதிக திசையை யடைந்துமிருப்பதை நினைத்து இச் சென்மம் நிர்ப் பிரயோஜனமாக மடியப் போகிறதே என ஏங்கி ஆராத் துயரில் ஆழ்ந்திருந்தான்.

ஓர்நாள் கீழ்கண்டவாறெண்ணுவானாயினன்:— ஈதென்ன மடமை! நமது ஆயுட்காலத்தை வீணே போக்கி விட்டோமே! இனிமேல் அரைக்கணமேனும் தாமதியாது இப்பிறவியெடுத்ததற்கு ஏதேனுமொரு நற்செய்கை புரிந்து சென்மத்தை சாபல்யமடையச் செய்தல் வேண்டும்,, என்றெண்ணி அதற்கு யாது செய்தல் நன்றென தனக்குத்தானே யோசித்து உடனே மகா பரிசுத்த ஸ்தலமாகிய கெந்தமாதனத்தை அடைவதற்கெண்ணி தெக்ஷிண திசையை நோக்கிப் புறப்படலாயினான்.

காடு, வனம், வனாந்திரம் முதலியவைகளெல்லாம் மிகுந்த சிரமத்துடன் கடந்து ஜோதி சொரூபமான சேது பிரகாசித்துக் கொண்டிருக்கும் கெந்தமாதன பர்வதச் சாரலை அடைந்தான். உற்சாகமிகுதியால் தூண்டப்பட்டு பஞ்ச அக்னிகளை வளர்த்தினான். சர்வபவநாசினியான சேதுவில் ஸ்நானம் செய்து அக்கினிகள் சூழ மத்தியில் நின்று விமலனாகிய சிவபிரானை மனத்திடை நிறுத்தி மிகக்

கூரிய வைராக்யத்துடன் தபம் செய்தான். இவன் தபத்தின் எல்லையைச் சோதிக்க எம்பெருமானும் வாளாவிருந்தனர். காலமும் நீண்டு கழிந்தன.

அடியார்க்கடியனை சிவபெருமானை சுதர்சனனின் கொடூரமான தபம் பற்றியிழுத்தது. கருணைகரனாகிய ஈசன் பிறவிக்குருடனின் துன்பங்களைக் களைந்து அவனை ரட்சித்தாட்கொள்ள திருவுளமிரங்கினார். கெந்தமாதனச் சாரலில் பஞ்சாக்னி மத்தியில் நிற்கும் சுதரிசனன் முன் சிவகணங்கள் சூழ பிரசன்னமாகி, சுதரிசனர் பிறவிக் குருடரானதால் அவருக்கு ஞானக் கண்களளித்து, பாராய் சுதரிசனா, என்றார் ஜெகரட்சகனாகிய திரிநேத்ரதாரியான சாம்பமூர்த்தி.

ஞானக் கண்களளிக்கப் பெற்ற சுதரிசனன் ஆனந்த பரவசனாகி அரி அயர்க்குமரிதாகிய சாம்பசிவமூர்த்தியின் தெரிசனத்தைக் கண்ணாரக்கண்டு களிப்பேருவகை பூத்து, ஆனந்த நடனமாடிய வண்ணம் ஹரஹர சம்போ கெங்காதரா, கௌரிமனோகரா, கைலைவாசா, திரிபுரமெரித்த குருமகாதேவா, திங்கள்சூடும் தீனதயாளா, பஞ்சாட்சர மஹா மந்திர சொரூபா, வேதவேதாந்த மூலா, சின்மய சொரூபா, எங்கினும் நிறைந்திலங்கும் ஏகநாதா, அண்ட பிண்டங்களுமகிலமுமானாகி அரி அயனுக்குமெட்டா முதலாகு சிவபோ என்று பலவாறு ஸ்தோத்தரித்து நிற்கும் சுதரிசனருக்கு பரமனானவர் ஆசிகூறி. நின் இச்சை யாது? கேட்பாய் சுதரிசனா என்றதும் தேவா, யான் இப்பூவுலகிலுள்ள சர்வ புனித தீர்த்தங்களிலும் தினந்தோறும் ஸ்நானமாடிட விரும்புகின்றேன். அடியேனுக்கருள் புரியும். என்று பிரார்த்தித்து நிற்க, அவ்வாறே ஈசனும் பூவுலகிலுள்ள சர்வ தீர்த்தங்களையும் அவ்விடத்திற்றானே வரவழைத்து அதற்கு "சர்வ தீர்த்தம்" எனத் திருநாமமிட்டு சுதரிசனரை அதில் தீர்த்தமாடும்படி ஆக்ஞாபித்தார்.



அந்தகத் தன்மையும் மூப்பும் மேவிநின்ற சுதரிசனன் இத்தீர்த்தத்தில் மூழ்கி எழுந்ததும் வாலப் பிராயமும் நேத்திர ஒளியும் பெற்று திவ்ய தேஜசுடன் தன்மேனி விளங்குவதைக்கண்டு ஈஸ்வர கடாட்சத்தையும் தீர்த்த மகிமையையும் போற்றிக் கரையேறி வர விடையேறிய விமலனுமப் புனித தீர்த்தத்திற்கு மேலும் வரப்ரசாதங்களையீய உத்தேசித்து ஏ! சுதரிசனா, நீ இத்தீர்த்தத்தில் மூழ்கி பிறப்புமுதல் உனக்கேற்பட்டிருந்த அந்தகத் தன்மையைப் போக்கிக் கொண்டதுந் தவிர நரை, திரை, மூப்பு விலகி திவ்ய சரீரியாகி விட்டபடியால் இன்றுமுதல் இச் சர்வதீர்த்தத்தில் ஸ்நானமாடுவோர்கள் நரை, திரை, மூப்பு முதலியவைகளினின்றும் விடுதலை பெற்று இன்பவாழ்வு எய்துவார்களாக; என்றாசீர்வதித்து திருக்கைலைக் கெழுந்தருளினார்.

## ஜடாமகுட தீர்த்தம்

இராம—ராவண யுத்தத்தில் பிர்மாண்டமான அரக்கர் சேனைகளை மாய்த்து இராவணன், இந்திரசித்தன், கும்பகர்ணன் முதலியோரை கைவேறு, கால்வேறு, உடல்வேறு, சிரம்வேறாக அரிந்து தள்ளி வதம்செய்தபின் சீதையைச் சிறைமீட்டி புட்பகவிமானமேறி கெந்தமாதனபர்வதத் திலிறங்கி, யுத்தாங்கத்தில் அறுபட்ட அரக்கர்களின் இரத்தமானது ஸ்ரீராமரின் ஜடாபாரத்தில் தோய்ந்திருந்தபடியால் அவற்றைச் சுத்தம்செய்யும் பொருட்டு உண்டு பண்ணிய தடாகம். ஸ்ரீராமர்யித்தீர்த்தத்திலாடி ஜடாபாரத்தி லுறைந்துள்ள இரத்தத்தை சுத்திசெய்து கொண்டதா லித்தீர்த்தத்துக்கு ஜடாமகுடதீர்த்தம் எனப் பெயர்வாய்ந்திருக்கின்றது.

இத் தீர்த்தமானது சீவர்களை காம, குரோத, லோப, மோகமென்னும் மயக்கங்களிலிருந்து விடுதலை செய்வித்து இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி என்னும் பேரின்பசாதனங்களை யடைவதற்கு மூலாதாரமாகியஏகாக்ர சித்த அந்தக்கரணசுத்தியை அளிக்கவல்ல மாஹிமை பொருந்திய வரப் பிரசாதத்தை ஸ்ரீராமச் சந்திரமூர்த்தியாலடைந்து சாட்சாத்காரமாய் கெந்தமாதனசாரலில் சேதுவினருகில் விளங்கிக் கொண்டிருக்கின்றது. இத்தீர்த்தத்தில்

(1) வேதவியாச பகவானின் குமாரராகிய சுகர் என்பவர் எத்தனையோ யாகங்களையும் வேள்விகளையும் வேதமந்திர பாராயணங்களையும் செய்தும் சாட்சாத் சின்மயானந்த சொரூபஏகவெளியில் லயிக்கும் ஏகாக்ர சித்த வைராக்யத்தை



யடையமுடியாமல் கவலையுற்று வியாசபகவானை யடைந்து பிரார்த்தனை புரிந்துநிற்க, வியாசரும் சுகரைராஜரிஷியாகிய ஜெனகரிடத்திற் கனுப்பிவைத்தார். ஜெனகமகரிஷியும் எத்தனையோ விதமாய் சுகரை வழிப்படுத்தமுயற்சித்தும் விழலுக்கிறைத்த நீராகவே போயிற்று. ஏகாக்ர சித்தசித்தியாகிய மனதை ஒருவழிப்படுத்துதலின்றி சமாதி முதலிய யோகநிஷ்டைகள் புரிவதும், பிர்ம்ம சொரூபத்துட னிரண்டறக்கலப்பது மியலாக் காரியமாதலால் ஏ! சுக, உனக்கு அந்தக் காணசுத்தி முதலிய சகல சிவயோகசித்திகளும் உண்டாகவேண்டுமாயின் "சதாதேவதைகள் நடமாடும் ஒப்புயர்வற்ற புனித ஸ்தலமாகிய கெந்தமாதனச் சாரலை நீ எவ்விதமேனும் அடையவேண்டும். அங்கு மகாபுரி சுத்தமானதும் தபோயோகஞான சித்திகளை அளிக்கவல்லதும் ஸ்ரீராமபிரானால் உண்டுபண்ணப் பட்டதுமான ஜடாமகுட தீர்த்தம் என்றோர் தீர்த்தமிருக்கின்றது. அதில் நீர் போய் நீராடுவீராகில் கடைத்தேறுவீர்" என அனுக்ரஹித் தனுப்பினர்.

சனக ரிஷியின் உபதேசப்படி கெந்தமாதனத்திலோங்குமிப்புனித தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீ ராமனாதனைப் போற்றிவந்தசுகர்சகல கலாஞானியாகி, சாலச்சிறந்த ஏகாக்ர சித்த நிலைபெற்று சர்வ யோகங்களுக்கும் தாயகமாய் சுகர் என்னும் வேதவியாச பகவானின் குமாரர் நின்றார். ஜடாமகுட தீர்த்த மகத்துவத்தாலென்றதும் தேவசபையிலிருந்த ஒவ்வொருவருமித் தகைய புனிததீர்த்த ஸ்நானத்தை இக்கணமே செய்துவிட்டு வேறுகாரியம் பார்த்தல் வேண்டும் என தமக்குத் தாமே முடிவுகட்டி தேவசபை கலையும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

(2) கொடுங்கோபியாகிய துர்வாசமகரிஷியும் சாந்தசீலராகிய பிருகுமஹரிஷியுமிப் புனித தீர்த்த ஸ்நானபலனைப் வெவ்வேறு காலங்களில் நவிலுதற்கரிதாய யோகசக்திகளைப்பெற்று நித்தியானந்தமாய் நிரஞ்சனமாய் நிராதாரமாய் நிர்மலமாய் நிர்விகற்பமாயிலங்குவதும் சாலோப, சாமீப, சாரூபமென்னும் பதவிகளுக்கெல்லாம் உச்சியிலிருப்பதுமான பிர்மசைதன்ய கலப்பெனும் சாயுட்சயப் பெரும் பதவியை அடைந்துளார்கள்.



# கோடி தீர்த்தம்

தேவதைகள் நடமாடும் கெந்தமாதனத்தில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தகாலையில் லிங்கமூர்த்திக்கு ஸ்வயப்புவாய கெங்காதீர்த்த அபிஷேகம் செய்விக்கஎண்ணி கெங்காபவானியை மனதிலைதியானித்து அவ்விடத்திற்றானே தனது கோதண்டத்தின் கோடியை பூமியில் ஊன்றியமாத்திரம் கெங்காதேவியும் அகமகிழ்ந்து பவித்திர கெந்தமாதனத்தில் ஜோதிசொரூபமான சேதுதீரத்தில் சர்வேஸ்வரனாகிய ஸ்ரீராமனாதனுக்கருகிலிருந்து சதாகாலமும் வாழும் பாக்யங்கிடைத்ததை எண்ணி பாதாளமார்க்கமாய் பிரவேசித்து அதிகவேகமாய் வந்து ஸ்ரீராமலிங்கத்துக்கருகில் நிலைகொண்டு பன்னீர் போன்றுமேலெழும்பி ஸ்ரீராமலிங்கத்தின்மேல் வருடித்தவண்ணமிருந்தது.

ஸ்ரீமந்நாராயணனின் அவதாரமாகிய ராமச் சந்திரமூர்த்தியானவர் மந்திரகானஞ்செய்து ஸ்வயமாக அபிஷேகித்துக்கொண்டிருக்கும் கெங்காதீர்த்தத்துக்கு கோடிதீர்த்தம் என நாமகரணஞ்சூட்டியதும் சிவலிங்கத்திலே கோடிய-சந்திரோதயம் போன்ற ஒளியானது தகதகவென ஒளிர்ந்திலங்கியது அக்காலையில் ஸ்ரீராமானவர் சுயமாகவருஷித்துக் கொண்டிருக்கும் கெங்காபகவானியைப் பார்த்து வாராய் பரிசுத்த தீர்த்தஜோதியே, ஸ்ரீராமலிங்கத்தை மகிழ்வித்த நீயின்றுமுதலித்தீர்த்தலதத்திலேயே வாசஞ்செய்துகொண்டு சீவர்களுக்கு அன்னதானம், கன்னிகாதானம்,கோதானம், சத்திரம்,சாவடி,சோலை,நந்தவனம். தண்ணீர்பந்தல்,பசுகாத்தல்,வித்யாதானம், வைத்யதானம், விலைகொடுத்துயிர்காத்தல், ஏறுவிடுதல், மகவளர்த்தல் முதலிய முப்பத்திரண்டு அறங்களைச் செய்த பூரணபலனை உன்

னில் ஒருதரம் தீர்த்தமாடுவோர்கட் களித்துக்கொண்டு ஜெகஜோதியாக விளங்கக்கடவாய் என்று வரப்பிரசாதங்கொடுத்து மேலுங்கூறுவார். ஓ! ஈஸ்வரபக்தர்களே, அளவிடற்கரிய மகிமைவாய்ந்த யிக் கோடிதீர்த்தத்தை எவரொருவர் செம்பிலடைத்து பூஜைசெய்து வருகிறார்களோ அவர்கள் மகாபாக்யசாலிகளாகவும் இத் தீர்த்தமிருக்கும் கிரகங்களில் சதா அஷ்டலட்சுமி ஆனந்தநிர்த்தனம் புரிந்துகொண்டிருப்பாளாதலால் யிப்புனித கோடிதீர்த்தம் ஸ்ரீராமலிங்கப்பிரசாதமாக விளங்கிக்கொண்டிருக்கக்கடவது என்று வரப்பிரசாதமிட்டார். இத்தீர்த்தத்தில்

[1] மகரிஷிகள், முனீஸ்வரர்கள் முதலிய தபோதனர்களுக்கு அளவற்ற தீவினைகளிழைத்து வந்த கம்ஸன் என்னும் கொடியோனை மஹாவிஷ்ணுவின் அம்சமாய் பாரதப் போர் முடித்துவைக்க புவியின்கண் அவதரித்துள்ள ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா கம்ஸ சம்ஹாரஞ்செய்து அத்தோஷந்தீர நாரத மகரிஷியின் உபதேசப்படி சேதுவில்பிரகாசிக்குமிக் கோடி தீர்த்தத்தில் ஸ்நானமாடி மாமனாகிய கம்ஸனைக்கொன்ற தோஷத்தினின்றும் விமோசனம் பெற்றார்.



# சர்வரோகநிவாரண தீர்த்தம்

பஞ்சநதிகள்பாயும் செழிப்புற்றோங்கிய பாஞ்சாலநாட்டிலே அஷ்டபூதி என்னும் பிராமண குலோத்தமன் சுசீந்திரை என்னும் நற்குடிப் பெண்ணுடன் இல்வாழ்க்கை நடத்திவருகையில் சுசீந்திரை என்னுமப்பெண்ணரசியானவள் கெர்ப்பமுற்று நிறைத் திங்களில் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். குழந்தையின் அவயவ அமைப்புகள் நன்கு தோன்றினபோதிலும் முக தேஜஸானது பிரகாசமிழந்து வெளுத்த நிறத்துடன் வியாதிகளால் பிடிக்கப் பட்டிருப்பதாகத் தோன்றிற்று

நாளுக்குநாள் குழந்தையானது உற்சாகமற்று வந்ததுந் தவிர அவயங்களெல்லாம் பயங்கரப் படத்தக்க விதமாய் கொடியரோகங்களின் சின்னங்களால் அலங்கரிக்கப்பட்டு கைதேர்ந்த வைத்தியர்களாலும் பெயர் குறிப்பிட்டு இன்னதென்று விவரித்துரைக்க யியலாத ஜென்ம வியாதியாகத் தோன்றிற்று

தாய்தந்தையர் மெத்தவும் வருந்தி பற்பல ஔஷதங்களையும் சிகிச்சைகளையும் செய்தும், தேசம் தேசமாகச் சென்று ஆங்காங்குள்ள பிரபல வைத்திய சிரேஷ்டர்களிடம் சிகிச்சை செய்தும் சற்றும் குணப்படாது வியாதியானது மென்மேலும் பெருக்கமடைந்ததே யொழிய கொஞ்சமேனும் குணப்பட்ட பாடில்லை. புத்திரன் மேலுள்ள வாஞ்சையினால் அஷ்டபூதியும் அவன் மனைவியும் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் பதினைந்து வருடகாலமாக வீடுவாசல்களையும் சுக போகங்களையும் துறந்து புண்யாத்மாக்களைக் காண்பதும் அவர்களிடம் சிகிச்சைகள் செய்தும் தேவதைப் பிரார்த்தனைகள்

புரிவதும் புண்ய தீர்த்தங்களாடுவதுமாய் தேசாந்திரியாகத் திரிந்து வருகையில், அஷ்டபூதியானவன் தன் பிள்ளை படுந்துயரைக் கண்டு சகிக்க மாட்டாதவனாய் அன்னாகார நிக்ரகம் செய்து அந்தோ! கானக மார்க்கமாய் நடந்து செல்கையில், துக்கம் நிறைந்த இவ்வுலகை விட்டும், துரதிர்ஷ்டம்பிடித்த பெண்டுபிள்ளையைப் பிரிந்தும் பரலோகப் பிரப்தியானான்.

இடமோ நிர்மானுஷ்யமான காட்டுப்பாதை. இப்-பரிதாபகரமான சந்தர்ப்பத்தால் உத்தமியான சுசீந்திரை என்னபாடு பட்டிருப்பாள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பிராணகாந்தன் திடீரெனப் பூமியிற்சாயவும் அடியற்ற மரம்போல் தானும் வீழ்ந்து மூர்ச்சையாயினள். ரோகியாகிய இவர்கள் மைந்தனும் தான் படும் துயரோடு இத் துயரையும் சேர்த்து அனுபவிக்கலாயினன். சற்று நேரத்தில் மூர்ச்சை யடைந்த சுசீந்திரியானவள் தெளிந்தெழுந்து கண்களில் நீர் தாரைதாரையாய்ப் பெருகியோட அழுதாள், புலம்பினாள், மோதினாள், கீழ்விழுந்து புரண்டழுதாள், தெய்வத்தை நொந்தாள் யாதுபயன்? அநாதையான அவளுக்கு ஆறுதல் கூறுவாருமில்லை. நெடுநாள் பட்டினியாதலால் தலை கிறுகிறுவெனச் சுத்தத் தாயும் பிள்ளையும் மறுபடியும் சோர்ந்து மயங்கி மூர்ச்சித்துத் தரையில் வீழ்ந்துகிடந்தனர்.

கடவுள் ஆபத்பாந்தவனல்லவா? இவ்வுத்தமியின் அழுகுரல் அவரைச் சும்மா விட்டிருக்குமோ? ஆஹா! கருணையே உருவாகத் திகழும் அவன் இம்-மாதை ரட்சிக்கத் திருவுளங்கொண்டு அவ்வழியே ஓர் சன்யாசி உருவெடுத்துவந்து அநாதையாக மூர்ச்சையாகிக் கிடக்கும் அம்-மாது முன் தோன்றி கமண்டலத்திலுள்ள ஜலத்தை அவள் மேற்றெளிக்க, மூர்ச்சை தெளிந்தெழுந்த அம்மாது தன்முன் நிற்கும் தபோதனரின் பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து அவரிரு பாதங்களைக் கையாற் பிடித்துக் கொண்டு



பாதுகாத்தருளும் ஐயனே என்று இறைந்து அப்படியே மறுமுறையும் மூர்ச்சையானாள். பின்னும் சாதுவால் களை தீர்க்கப்பட்ட அம்-மாதரசியானவள் சாதுவினுதவி கொண்டு தன் புருடனுடலைக் காட்டில் தகனம் செய்துவிட்டுப் பின் சாதுவால் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களைத் தானும் தன் மகனும் அருந்தி யிருக்கையில் சாது வேடம் புனைந்து வந்த சர்வேஸ்வரன் சுசீந்திரையை நோக்கி ஏ! மாதே, உனது நாயகர் சுவர்க்கலோகத்தில் உனதுவருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறானாதலால் இனிமேல் அவனைப் பற்றியகவலையை ஒழிக்கக்கடவாய். மேலும் நீ உனதிந்த ரோகியான பிள்ளையை யிட்டுக்கொண்டு தெட்சிண பாகத்தில் கெந்தமாதனச் சாலையடைந்து ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியா லுண்டாக்கப்பட்ட ஜடாமகுட தீர்த்தத்திற்கருகில் உள்ள வானளாவிய ஆலவிருட்சத்தினடியில் அமாவாசைதினம் வைகறையில் தங்கியிருப்பாயேயானால் அமாவாசை புண்ய காலத்தில் சாட்சாத் ஸ்ரீ பரமேஸ்வரனின் வாமபாகத்திலமர்ந்திரா நின்ற பரமேஸ்வரியானவள் சேதுவில் ஸ்நானம் செய்துவிட்டு தெய்வ கன்னிகைகள் சூழ இவ்வாலவிருட்சத்தினடியில் தங்குவார். அப்போது நீ சற்றும் பயப்படாமல் தேவியின் பாத பத்மங்களில் நீயும், உன்னுடை பிள்ளையும் சாஷ்டாங்கமாக வீழ்ந்து அவளனுக்கிரகத்திற்காக மன்றாடு. அக்காலையில் ஸ்ரீ தேவியின் பூரண அருட்கடாட்சம் உங்களுக்குக் கிடைக்கும். ரோகியான உன் பிள்ளையும் சுகசரீரியாவான். நானோ நெடுந்தூரமுள்ள எனதாச்ரமத்திற்குச் செல்லவேண்டியிருக்கிறது ஆகையால் நான் சொல்லியவாறு கெந்தமாதனத்தை யடைந்து சுகஜீவியாக வாழ்கவென்று வாழ்த்தி அக்-கருணை மிக்க சாது வழிநடந்தார்,

இங்கு சுசீந்திரையானவள் தனது ரோகியான குமாரனுடன் மிகுந்த கஷ்டப்பட்டு கெந்தமாதனச் சாலையடைந்து முனிவர் சொல்லிய ஆலமரத்தண்டை வைகறைநேரத்தில் அமாவாசை புண்ய காலத்தன்று ஈஸ்வரியின் வரவை நோக்கிக் காத்திருந்தாள்,

ஜெகன்மாதாவாகிய பரமேஸ்வரியானவள் தேவகணங்கள்சூழ சேதுஸ்நானம் செய்துவிட்டு பார்ப்பதற்கு பயங்கரமான மகாகோடி கலையுடனே பிண்டி, சூலம், வேல் முதலிய ஆயுதங்களைத் தரித்து பெண் பூதங்கள் சுமந்துவந்த பல்லக்கிலிருந்து இறங்கி ஆலமரத்தடியில் உட்காரவும், சுசீந்திரையானவள் தன் குமாரனுடன் சென்று இருகையும் சிரமேற் கூப்பிக்கொண்டு பரமேஸ்வரியைப் பிரதட்சணம் செய்து தீர்க்க தண்டன் சமர்ப்பித்து ரோகியான தன் புத்திரனைக் காத்தருள வேண்டினள்.

பரமேஸ்வரனருள் மிகுந்த இப்-பெண்மணியின் வரலாற்றை தெரிந்துகொண்டு பரமேஸ்வரியானவள் வாரும் சுசீந்திரை என்னும் மாதே ஜென்மாந்திரங்களின் கன்மானுபவம் காரணமாய் உனது குமாரனை தீராத இப்பிறவி ரோகம் பீடித்திருப்பதாலிதில் உழலுவதைத் தவிற வேறு நிவர்த்திமார்க்கம் கிடையாது எனினும் இப்பிள்ளையினிமித்தம் உலகை உய்விக்கும் ஈஸ்வரானுக்ரகம் பிறந்திருப்பதால் இன்று நீ நம்மை தெரிசித்தாய். ஆதலால் மாதே இதோ நம்மாலுண்டு பண்ணப்படும் தீர்த்தத்தில் நீ உனது குமாரனுடன் தீர்த்தமாடி வருவாய். எனத் திருவாய்மலர்ந்து தனது கரத்தில் தகதகவென மின்னிக்கொண்டிருந்த சத்திவேலை பூமியிலூன்றி நாவாயிரம் படைத்த ஆதிசேடனாலும் வியம்புதற்கரிதாய மகத்வம் உடைய ஓர் தீர்த்தத்தை உண்டுபண்ண, அதில் நீராடிய சுசீந்திரை பரிமளம் வீசும் சரீரத்துடனும், ரோகியான பிள்ளை, சர்வரோகங்களும் தீர்த்த மகிமையால் நிர்மூலமாக்கப்பட்டு மன்மதாகாரமான திவ்ய சரீரமுடனும் பார்போர்கள் நிக்பிரமையடையும் வண்ணம் கரையேறிவந்து ஈஸ்வரியை நாவாறப் போற்றித் துதித்து நிற்க ஈஸ்வரியானவள் கூறலாயினள், தீராரோகங்களைத் தீர்க்கும் சக்திமிகுந்த வித் தீர்த்தமானது சூரியசந்திரர்கள் உள்ளளவுமிப் புவியில் நின்று இதில் தீர்த்தமாடுவோர்களின் ரோகங்களை அறவே கண்டித்து ஆரோக்ய வாழ்வையளித்துக் கொண்டிருக்கக்கடவதென



உயரிய வரப்ரசாதமிட்டு சுசீந்திரையையும் அவளது புத்திரனையும் வாழ்த்த, தெய்வலோகத்திலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த புட்பகமானது இவ்விருவர்களையும் ஏற்றுக்கொண்டு தேவலோகம் சென்றது. அங்கு சுசீந்திரையானவள் தன் கனவன் அஷ்டபூதியுடனும் குமாரனுடனும் இனிது வாழ்ந்திருந்தனள்.

# விபீஷண தீர்த்தம்

அசுரர்கள்வர்க்கத்தில் மிகுந்த ஞானவானாகவும், பராக்கிரமசாலியாகவும் அகிலவுலகமெல்லாம் சஞ்சரித்துக்கொண்டிருப்பவனுமாகிய சுமாலியென்பவனுக்கு சந்திரபிம்பம் போன்ற அதிரூபலாவண்யமான கைகேசியென்னும் ஓர் பெண் பிறந்து வாலப்பருவமடைந்திருக்கையில், தன் புத்திரியை எல்லாவகையிலும் மேன்மையுற்ற நாயகனுக்கு வதுவைசெய்விக்க ஆவல்கொண்டு வரனைத் தேடி மேலுலகங்களெலாம் அலைந்தும் தகுந்தவான்கிடைக்காமையால் பூலோகத்தில்பார்ப்போம் என்றெண்ணி வரும்போது, பிர்மதேவனின் பௌத்திரனும் புஜபல பராக்ரமத்தில் நிகரற்றவனும் வேத சாஸ்திரங்களில் சமுத்திரத்தைப் போன்றவனும் அகிலபுவனங்களிளெல்லாம் மாபெரும் கீர்த்திபெற்றவனுமாகி விச்சிரவாமாஎன்பவன் ஈஸ்வரனைநோக்கி தபம்செய்துகொண்டிருப்பதைப் பார்த்து சந்தோஷமடைந்து நமது புத்திரியை யிச் சிரேஷ்டனுக்கே விவாகம்செய்து கொடுத்தால்தான் அகில புவனங்களையெல்லாம் அரசாட்சிசெய்யத்தக்க புஜபல பராக்கிரமமிக்க பிள்ளைகள்பிறந்து நமது குலமும் அபிவிருத்தியும் கீர்த்தியும் அடையும் என்று தீர்மானித்து தனதரும் புத்திரியை நோக்கிச் சொல்லலாயினன்.

வாராய் எனதருமைச்செல்வமே, நானிதுகாறும் உன்னை உனக்கேற்ற மேன்மைபொருந்திய மணாளன் கிடைக்காததினால் நீ வாலப்பருவமெய்தி வெகுநாளாகியும் மணம்செய்து அக்கண் காட்சியைப் பார்ப்பதற்கியலாது போய்விட்டேன். இன்றோ நீ, உனது ரூபலாவண்ய சௌந்திரியத்திற்கும், பசுங்குணத்திற்கும் ஏற்றபடித்தக்க புருஷனை வரிக்கும் தருணமாதலால், இதோ சாட்சாத்



ஸ்ரீஉமாமகேசனை அகமகிழ்ந்திருத்தி நிஷ்டையிலிருக்கும் பிரமபௌத்திரனாகிய விச்சிரவாமாவைப்பார்! அழகும், புஜபலமும், உன்னதயோகப்போக்கும் ஒருங்கே அமையப்பெற்ற இச் சுகுணபுருஷன் நிஷ்டை தெளியும்நேரம் அவரிடம் சென்று அவரை யணைந்து சுகஜீவியாக வாழக்கடவாய் என்று அனுமதிகொடுத்துவிட்டுச் சென்றான்.

சுமாலியின் அனுமதிபெற்ற கைகேசி விச்சிரவாமாவிடம் சென்று நமஸ்கரித்து நாணம்மேலிட்டால் தலைகுனிந்து ஒருபுறம் திரும்பி நின்றான். விச்சிரவாமாவும் இவ்வழகியின் நோக்குயாதென தெரிவான்வேண்டி பெண்பாவாய், உனது பேர்யாது? தந்தைதாய் யாவரோ! நீ தனித்து இங்குற்றகாரணம் என்ன? என்று வினவ, என் தகப்பன் சுமாலிஎன்று சொல்லப்படுபவர் கைகேசி எனதுபேர். எனதுபிதாவின் ஆக்ஞையின் மீதும் பூரணசம்மதியின்மேலும் என்னிருதயம் உகந்த காதலை தங்களிடம் சமர்ப்பிக்கின்றேன். தேவரீர் அடியாளை ஏற்று அருளல்வேண்டும் என மிகப் பணிவுடன் குயில் போன்ற இனிய மொழியில் கூவிநின்றாள்.

விச்சிரவாமாவும் சற்று யோசித்து இவளை ஆதரிக்க வேண்டியது ஞாயமும் தெய்வசங்கற்பமுமாயிருக்கின்றதெனத் துணிந்து அவளை தன்னாருயிர் காதலியாகக்கோண்டு கூடிச் சுகித்திருக்கையில் கைகேசியானவள் ராவணகும்பகர்ணாதி நான்குபுத்திரர்களைப் பெற்றெடுத்தாள். அந் நான்குபுத்திரர்களும் திரிலோகங்களிலும் தனக்கு நிகரில்லாத புஜபல பராக்ரமவீரர்களாக யிருந்திட்டபோதிலும் ராவணாதி மூன்றுபுத்திரர்கள் கொடிய துன்மார்க்கர்களாகவும் விபீஷணன் ஒருவன் மாத்திரம் சற்குணங்களுக்கே பாத்திரமாகவும், தெய்வவிசுவாசியாகவும் சிரஞ்சீவியாய் திரிலோகமும் புகழும்வண்ணம் அரசு புரிபவனாகவுமிருப்பான் என விச்ரவாமா சொன்னபடி ராவணகும்பகர்ணாதிகள் மாபெருங்கொடியவர்களாகி மஹா லட்சுமியாகிய சீதையை சிறைப்படுத்தியதினால் ஸ்ரீராமச் சந்திரமூர்த்தியால்

கொல்லப்பட்டார்கள். விபீஷணனோ துன்மார்க்கர்களாகிய தன் சகோதரர்களின் அடாச் செயல்களுக்கிணங்காது நீதி வழிநின்றதினால் ஸ்ரீராமச் சந்திரமூர்த்தியின் பேரருளுக்கு பாத்திரனாகி ஸ்ரீராமபிரானால் லங்காபுரியை ஆளும் மகுடாபிஷேகஞ் சூட்டப்பெற்று ஸ்ரீசீதாசமேத ராமமூர்த்தியை புட்பகத்திலமர்த்தி கெந்தமாதனம் வரை வந்து வழியனுப்பும்போது ஸ்ரீராமச்சந்திரனை விட்டுப் பிரியும் நேரம்வந்துவிட்டதே என்றேங்கி கவலையுற்று ஸ்ரீராமரின் பாதபத்மங்களை தன்னிருகரங்களாலும் கட்டிப் பிடித்துக்கொண்டான்.

அன்புப் பெருக்கத்தால் தன்னை மறந்து செயல்புரியும் விபீஷணாள்வாரை ஸ்ரீராமமூர்த்தியானவர் மார்போடணைத்து அன்ப, உமது விருப்பம்யாது? எவ்வகைப்பட்ட போதிலும் ஈவோம் என்றனர் தியாகமே உருவெடுத்த ஸ்ரீராமன். திரிமூர்த்திகளாலும் ஜெயிக்கமுடியாத தசமுகனையும் அவனது சாகரமொத்த மூலபல சேனைசைன்யங்களையும் அதம்செய்த வீரர்களுக்கெல்லாம் ஓர்வீரா! என்மீது தேவரீருக்கு மாசற்ற அன்பிருக்குமேயாகில் தேவரீர் கெங்காபவானியை வரவழைத்ததுபோல், தேவரீரன் ஜென்மபூமியும் சப்தபுரிகளில் ஒன்றுமாகிய அயோத்திமாநகரத்தில் பரிசுத்தமாக விளங்கிக் கொண்டிருக்கும் சரயுநதியை இக் கெந்தமாதன புண்யதலத்துக்கு வரவழைத்துக் கொடுக்கவேண்டும். அப் புனிததீர்த்தத்தால் நான் தினந்தோறும் தேவரீரால் பிரதிட்டை செய்யப்பட்ட ஸ்ரீராமலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் பாக்யத்தை என் பாலளிக்க கிருபை செய்க என வாஞ்சையுடன் சொல்லிநிற்கும் விபீஷ்ணனுக்கு அவன் கோறியவாறே சாயூநதியை வரவழைத்து கெந்தமாதனத்தில் நிலைநிறுத்தி விபீஷணனை மகிழ்வித்தார்.

இப்பரிசுத்த சாயூநதி தீர்த்தத்தை இலங்கேஸ்வரனாகிய விபீஷணாள்வார் தினம் அருணோதயங்களில் ஸ்ரீராம லிங்கத்திற்கும் ஸ்ரீரெங்கத்தில் கோயில்கொண்டிரா நின்ற ஸ்ரீகோதண்ட தீட்சா



குருவுக்கும் அபிஷேகித்து வருவதாலித்தீர்த்தம் விபீஷணாள்வாருடைய பேரைப்பெற்று கெந்தமாதனச் சாரலில் புண்யசொரூபமாகவே விளங்கிக்கொண்டிருக்கிறது.

ஜோதிசொரூபமாகிய

# சேது தீர்த்தம்.

(அல்லது)

## தனுஷ்கோடி.

தேவைப்பதியாகிய கேந்தமாதன ராமேச்வர க்ஷேத்திரத்தில், ஆதிஷேடனாலும் விரித்துரைக்க வியலாத அத்தனை மகிமை பூண்டு, ஈரேழு பதினான்குலகிலுள்ள சர்வ ஜீவராசிகளுக்கும் சாலோக, சாமீப, சாரூப, சாயுட்ச மென்னும் மோட்ச சாம்பிராச்யங்களை அளிக்க வல்லதாய் ஜெகஜோதியாய் சர்வபவநாசினியாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் "ஸேது" மஹா தீர்த்தத்தின் உற்பத்தியைப் பற்றிய வரலாறுகளை இப்-புத்தகம் 4—வது பக்கத்தில்

"சேது ஜெனனம் என்ற அத்தியாயத்தைப் பார்க்க"

---

பதினான்கு உலகிலுள்ள புண்ய தீர்த்தங்கள், நதிகள் யாவற்றையும் வரவழைத்து அதன் பெருக்கால் இருபெரும் சாகரங்களை சங்கமமாக்கி "ஸேது" என்ற நாமகரணம் சூட்டும்போது ரிஷபவாகனரூடராய் சேதுதீர்த்தி லாடிநின்ற பரமேஸ்வரனார் அங்குகுழுமியிருந்த தேவாதிகளையும், ரிஷீஸ்வரர்களையும் பார்த்து ஸ்ரீஸேது மகத்வத்தை உபதேசிப்பாராயினர்.

கேளுங்கள்! தேவர்களே, மறைநான்கின் அடிமுடியாக விளங்கும் நாமே இம்-மாபெரும் தீர்த்தமாகிய சேதுவாகயிருக்கிறோம் என்பதை உணருங்கள். மறை நான்குமாகத் திகழும் மிச்



சேது வேதசாரமாகிய காயத்ரீ மகாமந்திரத்தை இரவும் பகலும் சதா பாராயணம் பண்ணிக் கொண்டிருப்பதால் தான் சர்வ பாவங்களையும், அஞ்ஞானங்களையும் நாசம் செய்யக்கூடிய சக்தியுடைத்திருக்கின்றதென்பதையும் அறியுங்கள்.

மேலும், தேவர்களே! கண்ணால் பார்த்த மாத்திரத்திலும், காற்றின்ஸ்பரிச மாத்திரத்திலும் தேய்வலோகப் பிராப்தியை அளிக்கவல்ல கெந்தமாதன மென்னும் கற்பக பர்வதத்தின் ஒப்பற்ற மகிமை இத்தூய சேதுவைச் சேர்ந்துவிட்டதால் இச்சேதுவானது பிர்மானந்த நித்தியானந்தப்பேரின்ப முக்திவீட்டை யளித்துக் கொண்டிருக்கின்றதென்பதையும் அறியுங்கள். பதினான்கு உலகங்களிலுமுள்ள வரப்ரசாதமிக்க புண்ய தீர்த்தங்கள், புண்ய நதிகள் யாவுமிச் சேதுவில் பிரகாசித்துக் கொண்டிருப்பதினால் ஜீவர்களின் மனோபீஷ்டங்களை அவ்வாறே நிறைந்தளித்துக் கொண்டிருக்கின்றன என்பதையும் தேவர்களே! அறியுங்கள். ரத்னாகரம், மகோததி என்னுமிரு மகா சாகரங்களும் சர்வலோக தீர்த்தங்களினால் சங்கமமாகி அகில உலகிலுமுள்ள எல்லாவகை சத்துள்ள ஜலங்களும் சேதுவில் ஒன்றாகக் கலந்துகொண்டிருப்பதினால் யிச்சேதுவானது சர்வரோகங்களையும் பரிதிமுன் பனிமறையும் காட்சி போன்று, நிர்மூலமாக்கி சீவர்களுக்கு தேஜஸ்மிக்க திடசரீரத்தை அளித்துக் கொண்டிருப்பதையும் அறியுங்கள்.

இத்தகைய சொல்லிமுடியாத கோடானுகோடி மகிமைப் பிரதாபங்களையுடைய சேதுவை அகிலஉலகங்களிலுமுள்ள தேவர்கள் ரிஷிகள், கெந்தர்வர்கள், அசுரர்கள், நாகர்கள், மானிடர்கள், விலங்குகள், பறவைகள் முதலிய சர்வசீவராசிகளுக்கும் இஷ்டகாமியங்களைப்பெற்று உய்யும் நிமித்தம் நம்மால் உண்டாக்கப்பட்டிருப்பதால் இதைவிடுத்து காய கற்பமென்னும் மருந்துக[illegible]ல் வேண்டியதில்லை. சரியை, கிரியை, ஞானயோகம் முதலிய,

வைகளை அனுஷ்டிக்கத் தேவையில்லை. தேகத்தைச் சுக்காக உலர்த்தி பஞ்சேந்திரியங்களையடக்கி சருகுகளோடும் வாயுவையும் பட்சணம்செய்துகொண்டு பஞ்சாக்னிமத்தியில் நின்று வாடி பலவுகை அங்க ஆசனங்களிருத்திக்கொண்டு கடுவெயிலிலும், ஊசி போன்று தேகத்தில் தைக்கும் கொடியபனியிலும், மழையிலும் நனைந்து வருடக்கணக்காய் தபசுகளும் நிஷ்டைகளும் புரியவேண்டாம். தேசமெங்கும் அலைந்துதிரிந்து க்ஷேத்ரதெரிசனம் தீர்த்தஸ்நானம் செய்யவேண்டாம். மந்திரங்களை ஆவிபோகும்வரை உச்சரித்துக் கொண்டிருக்கவேண்டாம். யாகாதிகிர்த்தியங்களை மிகச் சிரமப்பட்டுச் செய்து கொண்டிருக்கவேண்டாம். ஆனால், ஜோதிசொரூபமான சேதுவில் ஒருதடவை தீர்த்தமாடிய மாத்திரம் வேதாகம ஞானவிளக்காகத் திகழ்வதுடன் அவ் விளக்கின் கூரியகிரணங்களானது சாலோப, சாமீப, சாரூபமென்னும் முத்திவீடுகளைத்தாண்டி பிர்மமயமாய் ஜெகஜோதியாய் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் சாயுட்சய சமவெளி முட்டும்வரை வழிகாட்டி வழிநடத்தி இடம் சேர்த்துவைக்கும் என்ற யிச்சத்யவசனத்தை ஓ தேவர்களே உணருங்கள்.

மேலும், இச்சேதுவில் பிர்ம்மரிஷிகளில் எவரும் சதுர்யுகப் பிரளய நேரத்தில் மிகுந்த தைரியத்துடனே ஸ்நானம் செய்வார்களேயானால் சிவசொரூபத்துடனிரண்டறக் கலந்து பிர்ம்மானந்தப் பெரும்பேற்றை அடைவார்கள். யுகசந்திநேரத்தில் 27 தடவை யிப் புனிதசேதுவில் பிர்ம்மதேவன் நீராடினால் மஹாவிஷ்ணுபதவியும் இவ்விதம் நான்குயுகசந்தியிலும் தவாது சேதுநீராடும் மஹாவிஷ்ணுக்கள் ருத்ரபதவியும் பெறுவார்கள். அறுபது வருடங்களுக்கோர் முறை அறுபதாவதுவருடசரியான சந்திநேரத்தில் இப் புனித சேதுநீராடலால் தேவர்கள் இந்திரபதவியை எய்துவார்கள்.



## அர்த்தோதய மஹா புண்யகாலஸ்நானம்

இதல்லாமலும் சேதுஸ்நானத்துக்குகந்த உத்தமோத்தமமான புண்யகாலமாகிய "அர்த்தோதய மஹா புண்யகாலமானது" தைமாதத்தில் அமாவாசையும், திருவோணநட்சத்திரமும் ஞாயற்றுக்கிழமையன்று சூரியஉதயத்தில் பொருந்தியிருக்கும். இச்சுபகாலம் அறுபதுவருடங்களுக் கோர்முறைதான் வருமாதலால் இப்படிப்பட்ட புண்யதினத்தன்று சேதுவில்ஸ்நானமாடும் பாக்யசாலிகளின் உன்னதப் பெரும்பேற்றை என்னென்றெடுத் துரைப்பது? தானிப்பிறப்பிலும் முற்பிறப்புகளிலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகலபாவங்களும் பிர்மஹத்திமுதலிய சர்வதோஷங்களும் புடம்போட்ட ஸ்வர்ணமானது அதன் சர்வ களங்கங்களும் நீங்கி மாற்றுயர்ந்து பிரகாசிப்பது போன்று அர்த்தோதய புண்யகால சேதுஸ்நானமாடியோர்கள் விளங்குவார்கள்.

மேலும் அப்படிப்பட்ட புண்யவான்கள் இப்பிறப்பிலேயே யிப்புவியிலுள்ள அதிஉன்னதயோக போகங்களை எல்லாம் குறையற அனுபவித்து விடுவார்களென்பது பின் ஒருக்காலும் யோனிவாயிலே பிறந்துழலும் பிறவித்துன்பமே அவர்களுக்குக்கிடையாது என்னும் வாய்மையினால் சத்ய வசனமாகின்றது. அர்த்தோதய மகா புண்யகால சேதுஸ்நானஞ்செய்து பிறவித்துன்பங்களைக் களைந்தெறிந்த பாக்யசாலிகள் தெய்வப்பிறப்பினை அடையும் சம்பிரமத்தை யுரைப்போம் கேட்பீர்களாக தேவர்களே! என்று விரிவுரை நிகழ்த்தலானார் அணுவுள் அணுவாக நின்று அகில புவனங்களை படைத்து காத்து அழித்து உத்தாரணம்செய்யும் ஆதிநாதன்.

பார்த்தவுடன் மோகனம், மயக்கம், ஸ்தம்பனம், ஆகர்ஷண மிகுத்தொளிரும் சிற்பக் கற்பனாலங்காரங்களை தெய்வ தச்சனைவன் பச்சை, வைடூரியம், கோமேதகம் முதலிய நவரெத்தினக் கற்களில் பிடித்தக் கற்களால் படித்துறை களமைத்தும் பாரிஜாத ?

தாமரை முதலிய புஷ்பங்கள் மலர்ந்து நறுமணங்களை வீசிக்கொண்டிருக்கவும், அன்னங்கள் நீந்தி விளையாடவும், அதிஅற்புத ஊற்றுக்கண்களிலிருந்து நன்னீர் சுரந்து கொண்டிருக்கும் சந்திரகாந்த புஷ்கரணி" யில் உதயகால ஸ்நானமும், தேவாமிர்த உணவும், பளிங்குமாமட உப்பரிகை வாசமும், தெய்வ கன்னிகைகள் உபசரணையும், சதா தேவ, ரிஷி, புண்யாத்மாக்கள் சேர்க்கையும், சத்கதா க்ஷேபங்களும், ஆடல் பாடல் முதலிய கண்காட்சிகளும், இன்னும் சொல்லிமுடியாத இந்திர போகங்களும், சேதுவில் அர்த்தோதய மஹா புண்யகாலத்தில் ஸ்நானமாடிய பாக்யசாலிகளுக்கு அனேகங்கோடி தேவ வருடங்கள் வரைக்கும் உரிமையாகும்.

## மஹோதய புண்யகால ஸ்நானம்.

தை மாதத்திலே அமாவாசை தினத்தன்று திருவோண நட்சத்திரம் திங்கட்கிழமையன்று பொருந்தியிருப்பதற்கு மஹோதய புண்யகாலமெனப் பெயர். இப்புண்ய காலத்தில் ஜெகஜ்ஜோதியாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சேதுவில் தீர்த்தமாடும் புண்யவான்கள் சாட்சாத் ஸ்ரீ உமாகாந்தனின் பேரருட் கடாட்சத்தால் அனேகங்கோடி புண்யங்களைப் பெற்று தர்மார்த்த காம மோட்சமென்னும் நான்கு புருஷார்த்தங்களையும் குறைவறப் பெற்று பரமேஸ்வரனிடத்தில் அகலாதபக்திபூண்டு ஒழுகுவார்கள். மேலும் இப்புண்ய காலத்தின்போது அந்தணர்களுக்கும், ஏழைகளுக்கும் செய்யப்படும் தான தர்மங்களும் தர்ப்பணங்களும் நற்பலன் தரும்.

## மஹாலய புண்யகால ஸ்நானம், சிரார்த்தம்

புரட்டாசி மாதத்து அபரபக்ஷத்தும் பிரதமைமுதற் பூர்வபக்கத்துச் சதுர்த்திமட்டுமுள்ள காலத்துக்கு மாளய புண்யகாலம்



என்றுபேர். இப்புண்யகாலங்கள் பிதுர்க்களை ஆனந்தசாகரத்திலாழ்த்துவிக்கும் நாட்களென வேதசாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன. எனவே, இக்காலங்களில் ஒவ்வொரு மானிடர்களும் இறந்துபோன தத்தம் மாதா, பிதா முதலிய பிதுர்க்களுக்கு பொது சிரார்த்தம் செய்து பிதுர்க்களுடைய நல்லாசியைப் பெற்று அதன் பலனாய் தீர்க்காயுளும், செல்வப்பெருக்கும், ஈஸ்வரபக்தியும், ஈகை, இரக்கம், தைரியம், தயவுமுதலிய வீரச்செயல்களும் நிறைந்தஇன்ப வாழ்வு வாழ்வார்கள். பிதுர்வர்க்கங்களும் இப்புனித பொதுசிரார்த்தத்தால் தங்களுடைய துன்பங்களெல்லாம் ஒழியப்பெற்று யோக போக வாழ்வெய்தி இனிது வாழ்வார்கள்.

பிதுர்க்களுக்கு மனமகிழ்ச்சியை உண்டாக்க வல்லவிம்மாளய சிரார்த்தத்தை எவனொருவன் செய்யவில்லையோ அப்படிப்பட்டவன் மா பாவி என்றும் பிதுர்க்களுடைய நிர்தாட்சண்யமான கொடிய சாபங்களுக்கு கட்டாயம் ஆளாகி பூவுலகில் கொடியதுன்பங்களை அடைவார்களென்றும் சுருதி நூற்கள் முறையிடுகின்றன.

இத்தகைய பிதுர்-ஆனந்த-புண்ய காலமாகிய மஹாளயபட்சத்தில் அவரவர்கள் பிதுர்க்கள் இறந்ததிதியன்று புண்யசொரூபமாகத்திகழும் சேதுவில் நீராடி அத்தீரத்தில் உத்தமர்களாயிருக்கும் மறையவர்கள் வேதமந்திரங்களை யுச்சரித்து கிரிகைகளை நடத்திவைக்க சிரார்த்தம்செய்பவர்கள் கோடானுகோடி இனிய உபாயங்களினால் பிதுர்க்களைத் திருப்தி செய்தவர்களாகி தானிதுகாறும் மஹாளயம் முதலிய எவ்வித சிரார்த்தங்களையும் பிதுர்களுக்குச் செய்திராதிருந்தபோதிலும் சேதுதீரத்தில் செய்த விம் மஹாளயத்தின் மகிமையால் சொல்லிமுடியாத பரம திருப்தியையடைவார்கள். பிதுர்க்களிறந்த திதியன்று சிரார்த்தம் கொடுக்கத் தவறியவர்கள் மஹாளய அமாவாசை புண்யதினத்தன்று சேதுதீரத்தில் தத்தம் பிதுர்க்களுக்கு மாளய சிரார்த்தம் செய்தல் உத்தமோத்தமம். இப்

புண்யகாலத்தில் சேதுதீர்த்தமாடி சேதுதீரத்தில் ஸ்நானம்செய்வோர்களின் பிதுர்க்களில் பிதாவர்க்கத்தினர்கள் ஒருகோடிபேர்களும் அன்னைவர்க்கத்து பிதுர்களில் ஒருகோடிபேர்களும் சுவர்க்கபதவியை கிருதார்த்தத்தை எற்ற அட்சணமே பெற்று இந்திரபோகங்களை எய்துவார்கள்.

## ஆடி அமாவாசை புண்யகால ஸ்நானம்

ரத்னாகரம், மகோததி யிவ்விரு சாகரங்களையும் சர்வலோக தீர்த்தங்களினால் சங்கமமாகி அப்புனித சாகரசங்கமத்திற்கு "சேது" எனத் திருநாமமிட்டு அதி உன்னத வரப்ரசாதங்களை வழங்கிக் கொண்டே, முப்பத்து முக்கோடி தேவர்களுடனும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுடனும் அஷ்டதிக்குப் பாலகர்கள், சிவகணங்கள், பிர்ம்ம, விஷ்ணு முதலியவர்கள் சூழ சாட்சாத் ஸ்ரீ சிவபெருமான் உமையவள் சகிதம் இத்தூய சேதுவில் முதன்முதல் நீராடிய சுபமுகூர்த்தம் ஆடி அமாவாசை புண்ய காலமான தினமிக் காலையில் ஜோதிசொரூபமாய்த்திகழும் ஸ்ரீசேதுவில் தீர்த்தமாடக் கொடுத்து வைத்தபுண்யவான்களின் பாக்யமே பெரும் பாக்யமாகும்.

பூரண புண்ய பலப்பிரூப்தியானது ஆயிரத்தெண் நிறையுடையது. இப்பூரண நிறையை ஸ்ரீ சேதுவைப் போன்று நிறைந்தளிக்கும் புண்ய தீர்த்தங்கள் அதலாதி கீழுலகங்கள் ஏழிலும், ஸ்வர்காதி மேலுலகங்கள் ஏழிலுமில்லை. ஆதலால், தேவர்களே! பரிபூரண பலப்பிராப்தியை மற்றைய புண்ய நதி, தீர்த்தங்கட்கிடையில் ஸ்ரீசேதுவானது எவ்விதம் நிறைந்தளிக்கின்ற தென்பதை நீங்களறிந்திருக்க வேண்டுவது மிக்க அவசியமாதலால், சொல்கிறேம் கேளுங்கள், என சிவபெருமான் சொல்லத் துடங்கினர்.



"மேருபர்வத சிகரத்தினின்று பிரவாகமெடுத்தோடும் சர்வ பவநாசினியாகிய கெங்கா நதியானது தச பலப்பிருப்தியையும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கோபிகா ஸ்திரீகளுடன் திருவிளையாடல் புரிந்த யமுனாநதியானது தச பலப்பிருப்தியையும், மஹாமஹ கும்ப தீர்த்தமானது தச பலப்பிருப்தியையும், கௌதமிநதியும்கிருஷ்ணவேணி நதியும் நவ பலப்பிருப்தியையும் பல்குணி, தாம்பிரவருணியும் நவ பலப்பிருப்தியையும், பினாகினி, காவேரிநதி அஷ்ட பலப்பிருப்தியையும், துங்கபத்ராவும், பீமநதியும் சப்த பலப்பிருப்தியையும் வஜ்ஜுலாவும், பவநாசியும் ஆறு பலப்பிருப்தியையும், திருவேணிசங்கமமானது நூற்றெட்டு பலப்பிருப்தியையும், சாதாரண காலங்களில் ஸ்ரீ சேதுவானது நூற்றுஇருபத்தேழு பலப்பிருப்தியையும், ஆடி அமாவாசை புண்யகாலத்தில் ஸ்ரீ சேதுவானது ஆயிரத்தெட்டு பூரண புண்ய பலப்பிருப்தியையும் சிறந்தளிக்கும் வரப்ரசாதமும் ஆற்றலும் பெற்று மிளிர்ந்து கொண்டிருப்பதால் இப்படிப்பட்ட தெய்வீகம் பொருந்திய ஸ்ரீ சேதுவை ஆடி அமாவாசை புண்ய காலத்தில் திரிகரண சுத்தியாக மனதில் நினைப்போமாக; சேதுவை கண்களிக்க தெரிசிப்போமாக; சேது தீர்த்தமாடி பரிசுத்த வாழ்வை அடைவோமாக.

## சூரிய, சந்திர கிரஹண புண்யகால ஸ்நானம்

—o—

சர்வ ஜீவராசிகளின் நேத்திரங்கட்கும் அதிஷ்டாதாவாகயிருக்கின்ற சூரிய, சந்திரர்கள் சாயாக்கிரகங்களால் மறைக்கப்படும் வெவ்வேறு காலங்கட்கு சூரிய கிரகணம் என்றும், சந்திர கிரகணம் என்றும் பெயர். சூரிய சந்திரர்களை சாயா கிரகங்கள் மறைக்கும் காலையில், சாயாக் கிரகங்களின் விரிய சக்திப் பாய்ச்சல்களானது சூரிய, சந்திர கோளங்கள்மீது தாக்கப்பட்டு அதனால் ஓர்வித விஷ சக்தியானது எங்கும் வியாபித்து புவியிலுள்ள சர்வ ஜீவராசிகளின்

இயற்கை தத்துவ சக்திகளுக்கு, சிறுபோதினில் தணியும் மதுவெறி போன்றோர் எழுச்சியைத் தந்தும், பின் விமோசனமானவுடன் தன் சுயநிலையை அடைவதும் கிரகண காலத்தின் போக்காதலால், கிரகண பீடை சார்ந்திருக்கும் காலங்களில் எவ்வித உணவு, பானங்களும் அருந்தாமல் விமோசனமாகிக் கொண்டிருக்கும் நேரங்களில் புண்ய தீர்த்தங்களில் ஸ்நானமாடிக் கொண்டிருந்தால் சரியாக விமோசனமாகும் விநாடியில் சூரிய,சந்திரர்களுடைய யௌவனம் பொருந்திய கோடி ஜீவ காந்த சக்தியானது புண்ய தீர்த்தத்தில் மூழ்கி நிற்போரின் சரீரத்தில் விசேஷமாய் ஊடுருவிப் பாய்ந்து தெய்வீக கலைபெற்று ஒளிர்வார்கள்.

புண்ய தீர்த்தங்கட் கெல்லாம் புனிதமளிக்கின்ற புண்ய தீர்த்தமாகவும், வேத சொரூபமாகவுமுள்ள அழகிய சேதுவில் சூரிய சந்திர கிரகண காலங்களில் சாட்சாத் ஸ்ரீ ராமனுதனை தியானித்துக் கொண்டு தீர்த்தமாடக்கொடுத்து வைத்தவர்களே "பாக்யசாலிகள்" என்றழைக்கப் படுவதற்குரிய புண்ய புருஷர்களாவார்கள்.

மேலும், யித்தூய சேதுவில் கிரகண விமோசன காலங்களில் பிதுர்கட்கு தர்ப்மணம் செய்வார்களேயானுல், அப்-பிதுர்களுடைய பெரும் பேற்றை நாம் எங்ஙனம் வருணித்துக் கூறமுடியும்? ஆ! அப்படிப்பட்ட தர்ப்பணத்தை இப்புண்ய காலத்தில் சேது தீர்த்திலே தத்தம் சந்ததிகளால் செய்தற்கு எத்தப்பிதுர்க்கள் கொடுத்து வைத்திருப்பார்களோ! அவர்களல்லவா யோகசாலிகள்! சூரிய கிரகண புண்ய காலத்திலே தர்ப்பணம் செய்தல் அப்-பிதுர்க்கள் எப்படிப்பட்ட நரகத்தில் அழுந்திக் கொடிய துன்பம் அனுபவித்து கொண்டிருந்தபோதிலும் அவர்களை அக்கணமே மீட்டிட சூரியபகவானுடைய ஜோதிமயமான ரதத்தில் வாலகில்லியர் முதலான பக்தர்களுடன் அமர்த்தி நித்யானந்த மீய்ந்து பிர்ம்ம பாருயணர்களாக்குவிக்கும்,



சந்திர கிரகண புண்யகாலத்தில் யிப்பரிசுத்த சேதுவில் பிதுர் தர்ப்பணம் செய்தலால் அப்-பிதுர்க்கள், சந்திர மண்டலத்திற்கு மேலே லெட்சம் யோசனை தூரத்திற்கப்பாலுள்ள நட்சத்திர மண்டலத்தில் ஆனந்தமயமாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திர வடிவமுள்ள புண்ய புருஷர்கள்பால் சேர்ந்து தாமும் நட்சத்திர வடிவு பெற்று நித்யானந்தத்தை அடைவார்கள்.

இப்பவித்திர சேதுவானது கிரேதா, திரேதா, துவாபரயுகங்களில் தேவசொரூபமாயிருந்து பாலுடன் கலந்த நீரும் பாலாகும் தன்மைபோல் தன்னிற் தீர்த்த மாடுவோர்கட்கு மேலாகிய தெய்வ லோகப்பிரூப்தியை யளித்துக்கொண்டும், கலியுகத்தில் பிர்ம்ம சொரூபமாகிய கெந்தமாதனத் தபோபலத்தைப்பெற்று புண்யமயமாயிருந்து எப்படிப்பட்ட மகாபாவிகளையும் புண்யபுருஷர்களாகச் செய்து கொண்டும் திரிலோகமும் புகழ ஒளிர்ந்துகொண்டிருக்கும்.

மேலும் இச்சேதுவைக்கண்ணுல் தெரிசித்தாலும் மனத்தால் நினைத்தாலும் இதில்ஸ்நானமாடினுலும் மாதா பிதா குரு தெய்வங்களை நிந்தித்த மாதோஷமும் அவர்களைக்கொன்ற கொடியபாவமும், சத்யசொரூபமாகயிருக்கப்பட்ட அந்தணர்களையும் சகல தேவதைகளும் குடிகொண்டிருக்கும் பசுக்களையும் சிசுக்களையும் மைந்தர்களையும் கொலைபுரிந்த மகாபாவமும், தஞ்சம் அடைந்தவர்களையும் அதிதிகளையும் விரட்டியடிக்கும்தோஷமும், பஞ்சகாலத்தில் அன்னமிட்டவரை கன்னமிடும் வஞ்சனையும், சுராபாணங்கள்செய்யும் மகாபாவமும், சாலைவிருட்சங்களை வெட்டுந்தோஷமும், பரதாரசேர்க்கையின் அதர்மமும், உத்தமர்கள்பொருளைக் கொள்ளையடிப்பதும் வந்தபேர்கள் பசிக்கஉண்பதும், புறஞ்சொல்லி குடிகளைக் கெடுப்பதும், நாடிக் கொடுப்பவரைத் தடுக்கும் அநீதமும், சாலை, சத்திரம், கோயில்குளங்களை யிடிக்கும் பாவமும், நாணமிழந்தபெண்ணுடன் படுக்கும்தோஷமும், நோன்புகளை மத்தியில் விடும்தோஷமும், கேடு

செப்பவர்களோடுறவாடிய பாவமும், வயிற்றினில் பசிரென்றிட வழக்கோரஞ் சொல்லிய அநீதமும், ஆணும் பெண்ணும் கூடும் கூட்டுறவைப் பிரிக்கும் பாதகமும், பாதிச்சாமத்தில் வீடுகளில் நெருப்பிடும் பாவமும், வாயில்லாபிராணிகளை வதைக்கும் மா பாதகமும், மாலையிட்டவனை இகழ்ந்து பரபுருஷனைச்சேரும் துரோகமும், கருவையழிக்கும் கொடியபாதகமும், ஆலயங்களில் புணர்கின்ற தோஷமும், மித்திரத்துரோகமும், சோதரத்துரோகமும், பொய் மொழிபுகன்ற மா பாவமும், ஜபதபங்களைவிட்ட தோஷமும் இப்பவித்திர சேதுவில் தீர்த்தமாடிய மாத்திரம் சூரியன்முன் நின்ற பனிபோல ஒழிந்து போகும்.

மேலும், இவ்வகை கொடிய பாவதோஷங்கள் புரிபவர்களுக்கு தர்மதேவதையால் விதிக்கப்பட்ட "தாமித்ர, அந்தாமிஸ்ர, ரௌரவ, மஹாரௌரவ, கும்பிபாக, காலசூத்ர, அசிபத்ரவன, க்ருமிபட்ச, அந்தகூப, சால்மலி, சந்தம்ஸ, சூர்மி, வைதரணீ, பிராணரோத, விஸசன, லாலாபட்ச, அவிசி, சார்மேயாதன. ரட்சாகணசன, சூலசந்தவிரோதன, தந்தசுகாசன், பர்யவர்த்தன், நிரோதான், சுவிமுக், பூயசோணிதபட்ச, விஷாக்னிபரிபீடன முதலிய இருபத்தெட்டு மஹாநரகங்களில் பயங்கரமபடர்களால் தள்ளப்பட்டு இம்சிக்கப் படுவார்களாதலால், இப்படிப்பட்ட பாவம் செய்தவர்கள் கெந்தமாதன இராமேச்சுரத்தை யடைந்து அங்கு புண்யசொரூபமாகத் திகழும் ஸ்ரீசேதுவில் தீர்த்தமாடுவார்களே. யானால் அவர்கள் செய்த சகல பாவமும் அக்கணமே நிவாரணமாவதுடன் முற்ஜென்மங்களில் செய்த பாவதோஷங்களும் பஞ்சாய் பறந்துபோகும். சேதுவில் ஸ்நானம்செய்யப்பட்ட பாக்யசாலிகள் மேற்கூறிய இருபத்தெட்டு மஹாநரகங்கள் எதிலும் தள்ளப்படமாட்டார்கள். காலபாசத்தை வீசி உயிர் கவரும் தென்திசையோனாகிய மறலியும், அவன் தூதர்களும் சர்வபவநாசனியாக விளங்கிக்கொண்டிருக்கும் சேதுதீர்த்தமாடிய பரிசுத்த ஆத்மாக்களிடம் நெருங்குவதற்கு அச்சங் கொள்வார்களென்றால் அப்படிப்



பட்ட புண்யசாலிகளுக்கு நரகம் என்கின்ற பேச்சுதான் ஏது! பிரம லோகம், விஷ்ணுலோகம், சிவலோகம் என்னும் மூவுலகும் ஸ்ரீசேதுவையணுகிய புண்யாத்மாக்களுக்குச் சொந்தம் என்பதை தேவர்களே! அறியுங்கள்.

ஸ்ரீசேதுதீர்த்த ஸ்பரிசமாத்திரத்தில் விலங்குகள், பறவைகள் ஊர்வன முதலிய ஜீவராசிகள் முன்ஜென்மங்களில் எத்தனைகொடிய கர்மங்களைச் செய்திருந்த போதிலும் அவைகளெல்லாம் விலக்கப்பட்டு ஜென்மசாபல்ய மடைவதற்குகந்த மானிடப்பிறப்பை எய்துவார்கள்.

இப்படிப்பட்ட இயம்புதற்கியலாத அபாரமகிமை படைத்த ஸ்ரீசேதுவில் சதாகாலமும் தேவசஞ்சாரமும் மகரிஷிகளின் ஸ்நானபான நேமநிஷ்டைகளு மாயிருக்கும் ஸ்வர்ணமயமான பிலக்ஷவிருட்சங்கள் பிரகாசித்துக் கொண்டிருப்பதும் அருணா ரமண வென்னுமிரு மஹாநதிகளின் தேவாமிர்த ஜலத்தை பானம்செய்து சத்ய குணமுள்ளவர்களாய் தேவரூபங்களை யுடைத்து அநேகஆயிர வருட ஆயுட்காலங்களையுடைய ஹம்ஸபுருடர்கள் சூழ அவர்கள் உபாசிக்கும் தேவனுகும் தகதகவென அக்னிசுவாலைவீசும் ஏழு நாவுகளையுடைய அக்னிபகவானுனவன் பிலட்சத்தின்றிவண் வந்து தினசரி சேதுஸ்நானம் செய்துபோவதும், சந்திரனுடைய சாந்தியம் மிகும் சால்மலித் வீபத்திலிருந்து சால்மலி மஹாவிருட்சத்தினடியில் வஸிக்கும் பட்சிராஜேந்திரனாகியவரும் ஞானசக்தி யுடையவனுமாகிய ஸ்ரீகெருட பகவான் சேதுவை தெரிசித்துப் போவதும், அஷ்டதிக்குகளும் சதாஸ்வயம்புவாய் ஜெகஜோதியான பிரகாசத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் அக்னிஸ்தம்பம் நிற்கும் குஜத்வீபத்லிருந்தும், தீர்த்தவதி ஜோதிநதியும் கிரௌஞ்சமா பர்வதமும் ஒளிரும் கிரௌஞ்சத் வீபத்திலிருந்தும் அதிகாலையில் ஸ்ரீசிவசுப்பிரமணியக்கடவுளும் சந்திரபகவானும் ஸ்ரீசேதுஸ்நானம்

யெ்து போவதும், சாக விருக்ஷத்தினடியில் அமர்ந்திரா நின்ற
ஸ்ரீவாயுதேவன் சேதுஸ்நானத்தை நாடி கெந்தமாதனம் வந்து
போவதும் இன்னும் மானஸோத்திர பர்வதத்தின் நான்குதிக்கு
களிலிருந்தும் இந்திரன் நிருதி, வருணன், இயமன்,குபேரன், ஈஸா
னன் இவ்வறுவர்களும்மா அப்பர்வதத்தின் மேலிருக்கின்ற ஸம்வத்
ஸர சொரூபமானகாலசக்கரமும் புனிதசதேதுநீராடிச்செல்வதும்புஷ்க
ரத் வீபத்திலே புஷ்பித்திருக்கும்,அக்னியினுடையபிரகாசம்பொருந்
யதிசிகையைப்போன்றஒளிரும்நிர்மலமானலட்சம் இதழ்களையுடை
யமிகப்பெரிதாய தாமரைப் புஷ்பத்தில் வீற்றிருக்கும் கமலாஸனக்
கடவுளாகிய பிர்மதேவன் சேது நீராடி தினம்வந்துபோவதும் ஸ்வர்
ணமயமான பூமிப்பரப்பின் மத்தியிலிருக்கும் லோகாலோகபர்வதத்
தில் பிரசன்னமாயிருக்கும் அஷ்டஐசுவரியங்களுக்கும் அஷ்டமாசித்
திகளுக்கும் மூலவஸ்தாகிய பகவான் விசுவஸேனர் சகலலோக
க்ஷேமத்தின் பொருட்டு இப்பவித்திர சேதுவில் அருணோதயகாலத்
தில் நீராடிச்செல்வதும், பிர்மஸ்ருட்டியை விர்த்திசெய்யும் பொருட்
டு ஸ்ரீ ஆடகேசுரமூர்த்தியானவர் விதலலோகத்திலிருந்து சேது
ஸ்நானமாடிச் செல்வதும் சிரஞ்சீவியும் பாகவத சிகாமணியுமாகிய
மகாபலிசக்ரவர்த்தி சுதலலோகத்திலிருந்து சேதுஸ்நானத்திற்கு
வருவதும் கிம்புருகண்டத்தில் சுத்தஷாட்குண்ய பரிபூரணராகிய
ஸ்ரீராமமூர்த்தியாகிய அரியைக்குறித்து உபாஸனை செய்துநிற்கும்
ஆஞ்சநேயமூர்த்தியானவர் தினம் அதிகாலையில் கிம்புருகண்டத்
திலிருந்து சேதுவை ஒரேபாய்ச்சலில் அடைந்து சேதுஸ்நானமாடி
பின்னோர்பாய்ச்சலில் கிம்புருகண்டத்தையடைவதும் இவர்போன்ற
சிரஞ்சீவியும் ஸ்ரீராமபக்தனாகிய விபீஷணன் இலங்காபுரியிலிருந்து
புட்பகத்திலமர்ந்து தினம் சேதுஸ்நானமாடிச் செல்வதும் பரப்
பிர்ம அம்ஸமாய் புண்யமயமாகி நிற்கும் ஸ்ரீசேதுவின் அகண்டா
கார புண்யப் பிரவாஹத்தை விளக்கி நிற்கின்றன.

மேலும் இளாவிருதம் அரிகிம்புரு, பாரதம், கேதுமாலம், பத்தி



ராசுவம், ரம்மியம், இரண்யமகம், உத்தரகுருவென்று சொல்லப்பட்ட
நவகண்டங்களிலுமுள்ள கோடானுகோடி சக்ரவர்த்திகள், ராஜ
ராஜாக்கள், தனவந்தர்கள் முதலிய பிர்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்ர
நான்கு வருணத்தார்களும் அத்யந்தபக்தி விசுவாசத்துடனும் பரி
சுத்த ஹிருதயபாவத்துடனும் தர்மகோக்குடனும் பந்துமித்திர
குடும்பத்தினர்களுடனும் பொன் வெள்ளி முதலிய திரவியங்களை
கைகையாய் அள்ளி இறைத்துக்கொண்டு சேது மஹாயாத்திரை
செய்யும் காட்சியும் சேதுதீரத்திலே நீராடும்போது அவர்களது முக
மண்டல ஜோதிபிரகாச மகிழ்ச்சியும் சொல்லத்தரமல்ல.

## சேது தீரத்தில் செய்யும் தானதர்மங்களின் பலன்

தெய்வ ஸாந்நியம் பொருந்திய சேதுதீரத்தில் உத்தமபிரா
மணன் ஒருவனுக்குக்கொடுக்கும் பொருள் தானம் மிகமிகச்சிறியதா
யிருந்திடினும் கோடானுகோடிபுண்ய பலனை கூட்டுவிக்கும். அத்
தீரத்தில் கோதானம் செய்யும் உத்தமர்கள் அஸ்வமேதயாகம்செய்த
பூரணபலனைப் பெற்றின்புறுவார்கள். பூதானம்செய்யும் புண்ய
வான்கள் அஸ்வமேதயாகம், ஹிரண்யகெர்ப்பயாகம், லட்சபிராமண
போஜனம்செய்த பலன்களைப் பெற்று யோகசீலர்களாய் இனிது
வாழ்ந்திருப்பார்கள். வித்யாதானம் என்று சொல்லப்படும் கல்வி
நிலயங்களை இச்சேதுவில் நிறுவிக்கொடுக்கும் தர்மசீலர்கள் இந்
திராதிதேவர்கட்கும் செய்தற்கரியதாகிய மஹேஸ்வரயாகம்செய்த
பரிபூரணபலனைப்பெற்று உலகெலாம்புகழும் பெருங்கீர்த்தியுடன் சா
ட்சாத் ஸ்ரீகைலைவாசனாகிய ராமநாதனின் அருட்கடாட்சத்தைப்பெ
ற்றுஇனிதுவாழ்வார்கள். இன்னும் தர்மசாஸ்திரங்களிலே சொல்லப்
படாநின்ற முப்பத்திரண்டறங்களும் ஸ்ரீசேதுவாகிய தனுஷ்கோடி
தீரத்தில் செய்யப்படில் அத்தகைய தர்மங்களின் பலன்களானது
ஒன்று கோடியாகப் பெருகி மனச்சந்துஷ்டியை அளிக்கும்.

துலதேகசிலாதானம்:— மஹாபயங்கரமான யித்தானமானது தீராத பிறவிநோயாளிகளான வாதம், காசம், குஷ்டம், ஹிருதய நோய், வயிற்றுவலி, சித்தசுவாதீனமின்மை முதலிய ரோகிகளுக்கு விதிக்கப்பட்டது. எவ்வகைப்பட்ட ரோகிகளாயினும் சித்தசுவாதீன மற்றவர்களாயினும் இத்தானத்தை சேதுதீரத்தில் மிகுந்தஜாக்கிரதையுடன் செய்யலாம். ரோகிகள் தங்கள் உருவச்சிலையை அங்கஅமைப்புகளுடன் ஸ்வர்ணத்திலாவது வெள்ளியிலாவது செய்து அச்சிலையை சந்தனம், குங்குமம், சிவந்தபுஷ்பங்கள், அட்சதைகள்நிறப்பியதட்டில் வைத்து இரும்புத் தகடடித்து வாங்கி அதில் செந்நெல் பறப்பி அதின்மேல் சேதுநீராடிவந்த நோயாளியை சிலைவைத்துள்ள தட்டை இருகைகளிலும் ஏந்திக்கொண்டு உட்கார்த்திவைக்கவும் ஐயமற வேதசாஸ்திரங்களைப் பயின்ற வேதியனுனவன் நான்கு திசைகளிலும் இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என்ற நான்கு வேதங்களின் உயிரெழுத்துக்களாகிய ல-லீ-லூ-லம். இருக்கு மேற்கிலும், ச-சீ-சூ-சம் சாமம் கிழக்கிலும், ந-நீ-நூ-நம். யசுர் தெற்கிலும், ர--ரீ--ரூ--ரம். அதர்வணம் வடக்கிலுமாக இவ்வட்சரங்களை ஓங்காரங்கொண்டு காட்டி, பழபெலி பதினாறு விதம் ஊட்டி ரோகிமுன் அமர்ந்து, பஞ்சாட்சரத்தை விதிப்படி ஜெபித்தல்வேண்டும் பஞ்சாட்சரஜெபம் நடந்துவரும் சமயத்தில் ஆடைஆசனப்பலகை, அன்னம், குடை, ருத்ராட்சம், சாளக்ராமம், மோதிரம், பூனூல், தாம்பிரச்செப்பு, பூஜாதிரவியங்கள் முதலியவைகளை பிராமணப்பெரியோர்கட்கு வழங்குதல்வேண்டும். பஞ்சாட்சர மஹாமந்திரஜெபத்தின் உருவேறஏற இரும்புத் தகட்டில் கொட்டியிருக்கும் நெற்கள் பொரிய ஆரம்பிக்கும் அச்சமயம் அர்த்தநாரீஸ்வர பாத்திரத்தில் சேது தீர்த்தம்எடுத்துவந்து இடதுகையில் தட்டைபிடித்துக்கொண்டு வலதுகையால் தீர்த்தத்தை ரோகியானவன் சிலையில் வார்த்துப் பின் இருகைகளாலும் சிலைதட்டை அப்படியே பஞ்சாட்சரத்தை ஜெபித்துக் கொண்டிருக்கும் மறையவர் கையிலாவது வேறே எந்த பிராமணரிடமாவது கொடுத்துவிட்டு பின்னுமோர்முறை சர்வபவசியாக விளங்கிக்கொண்டிருக்கும்



சேதுவில் நீராடிவர அந்த விநாடியிலேயே அவனைப் பற்றியிருந்த பிறவிநோய்களும் சித்தவிகாரமும் நிர்மூலமாக்கப்பட்டு திடஆரோக்யசம்பன்னனாய் சகல சீவர்களும்போற்றக்கூடிய மகிமைப் பிரதாபனாய் தீர்க்காயுள்பெற்று இகபரம் இரண்டிலும் நற்கீர்த்தியை அடைவான்.

இத்தானத்தை வாங்கக்கூடியவர்கள் வேதசாஸ்திரங்களில் சொல்லியபடி வேதோத்தமர்களாகவும், சன்மார்க்கநெறியுடையோர்களாகவுமிருத்தல் வேண்டும். அப்படியில்லாது சாமான்யர்களாகவும், துற்சனர்களாகவு மிருப்பவர்கள் தனத்துக்காக ஆசைப்பட்டு தானத்தைப்பெற்றிடில் அக்கணமே ரோகியின் உபாதைகளானது பன்மடங்கு பலன்பெற்று இவர்களைப்பற்றி வாட்டும். இதற்கு நிவர்த்தியானது எழுசன்முறைக்குமில்லை. உருவச் சிலையானது அங்கஅமைப்புகளில் பழுதுகளோ ஹீனமோ யிருத்தல்கூடா. அவ்விதம் ஹீனமுள்ள உருவச்சிலையை சேதுதீர்த்தத் தாரைவார்த்து தானம்செய்யும் ரோகி மேலும் கொடியரோகத்தால் பீடிக்கப் படுவதுந்தவிற, தானத்தை ஏற்கும் அந்தணன் எவ்வளவுஉயரிய வேதோத்தமனாயிருந்தபோதிலும் அவனையு மிவ்வியாதிபற்றி மிகுந்தகேட்டை விளைவிக்கும்.

சங்கதானம்: பிரகாசம் பொருந்திய வெண்மை நிறமுள்ள இடம்புரிசங்குகள் 108.வாங்கி சேதுதீரம் சென்று ஓங்காரரூபமாக 107.சங்கங்களை அடுக்கி மத்தியில் 1.சங்கத்தை வைத்து சங்கங்களுக்கு சந்தனம் குங்குமம் புஷ்பம் சாற்றி மத்தியில்வைத்திருக்கும் சங்கினுள் சுவர்ணமிட்டு நறுமண தூபம் காட்டவேண்டும். அக்காலையில் அந்தணர்கள் வேதபாராயணமும் ஆராதனைகளும் செய்தல் வேண்டும். தானம்செய்பவர் ஜெகஜோதியான சேதுவின் மஹாபுண்ய பிரவாகத்தையும் சங்கத்தின் பிரணவ சொரூபத்தையும் மனதிடைநினைத்து அஷ்டஐஸ்வரிய கடாட்ச மருளும்படி ஸ்ரீமந் நாராயணமூர்த்தியை மானசீகமாக தியானித்து சற்பிராமணர் ஒருவருக்

கு கொடுக்க ஐசுவரிய சம்பத்துண்டாகி விஷ்ணுலோகபிராப்தியும் பலிதமாகும்.

**தட்சிணாவர்த் சங்கதானம்:** தட்சிணாவர்த்தம் என்ற வலம்புரி சங்கு ஒன்று வாங்கி அதற்கு கனகச் சுரைகள் பூட்டி நவரெத்தினக் கற்கள் பதித்து அம்மாபெரும் அரியசங்கத்தை பொற்தட்டில் வைத்து அதற்கு பஞ்சாபிஷேகம் செய்வித்து வாசனைத் திரவியங்கள் சந்தனம் குங்குமம் புஷ்பங்கள் சூட்டி 1008.பிராமணோத்தமர்கள் சேதுதீரத்தில் அமர்ந்து பிரணவ மஹாமந்திரம் ஜெபிக்க தீபதூப ஆராதனைகள் சம்பிரமமாய் நடக்க பாஞ்சசன்யமென்னும் மச் செல்வபெருஞ் சங்கை யாதேனுமொரு ஆலயத்துக்கோ அல்லது தர்ம ஸ்தாபனங்களுக்கோ சேது தீரத்திலே தானம் செய்யும் உத்தமர்கள் குபேரனும் பொறாமைப்படுந் தன்மையாய் அபார செல்வநிதியையடைந்து அச்செல்வமானது புத்திரபௌத்திர பாரம்பரியமாய் அனேக தலைமுறைகள் வரைக்கும் தழைத்து நிற்கும். இப்படிப்பட்ட புண்யவான்கள் திருமகள் சமேத ஸ்ரீமந்நாராயணனின் பரிபூரண கடாட்சத்துக்கு பாத்தியப்பட்டவர்கள்.

**லிங்கதானம்:—** மாரகதலிங்கதானம், காஷ்மீரலிங்கதானம் இவ்விரண்டும் மிகச்சிறந்தவை. லிங்கத்திற்கு சேதுதீர்த்தாபிஷேகம் செய்வித்து 108.உருத்ராட்சமணிகள் கோர்த்தமாலை சூட்டி வில்வதளங்கொண்டு லட்சார்சனை செய்து பிராமணோத்தமர்கட்கு தம்மாலியன்ற தானதர்மங்களைச் செய்வித்து சேதுதீரத்தில் பயபக்தி விசுவாசத்துடன் சந்தியாவந்தன நியமானுஷ்டான சம்பன்ன உத்தமன் பாலிய தானஞ்செய்தவன் கோடானுகோடி புண்யங்களை எய்தி புண்யாத்மா என யாவராலும் புகழப்படுவான். தன்மனதில் தானம்கொடுத்த விநாடியில் நினைத்திருந்த இஷ்டங்கள் யாவும் பரிபூரணமாக சித்திக்கப் பெற்று இனிதுவாழ்வான். இப்படிப்பட்ட லிங்கதானத்தைசாமவேதகாலத்துடன் தானம்செய்தவர்களிடத்தில்



காலபாசம் ஆயிரம்துணுக்குகளாக அறுந்துபோம்.

**தர்மதானம:—** அரிதாகிய மானிடப் பிறப்பெடுத்து காருண்யமிக்கோனெனவாழ்வதே சிலாக்யமாதலால் அதற்குதேவாலயம், தர்மாலயம், வித்யாலயம் முதலிய தர்மங்களை புவியின்கண் செய்தலே மார்க்கம். அவைகளை இத் தூயசேதுதீரத்திலே வந்து செய்தல் ஒன்றுநூறாகிய பலனைக்கொடுக்கும் தேவாலயம்கட்டுதற்கு பொருள் தானம்செய்பவர்கள் தர்மதேவதையின் புத்திரர்களாக ஜெனித்து சத்யலோகத்திலே அரசாட்சிபுரிவார்கள். மடங்கள், பள்ளிக்கூடங்கள், தானம்செய்பவர்கள், மார்கண்டேயம், ஸ்காந்த புராணங்களில் சொல்லியபடி இஷ்டகாமியபூர்த்தியும் ஸ்வர்க்கபதவியும் பெற்று நிகரற்றமங்கள வாழ்வு பெறுவார்கள். தேவாலயதானம் பிர்மச்சார்ய விரத பிரதம குருக்களிடமும், தர்மசாலா, மடதானங்கள் இவைகளை சன்யாசிகள், சாதுக்களிடமும், வித்யாலயதானம் ஆச்சாரியார்தம்பதிகளிடமும் கொடுத்தல்வேண்டும்.

**காலபுருடதானம்:—** கொடுங் கோபத்தின் உருவமே காலபுருஷனுடைய சொரூபமானதினால் பார்ப்பதற்கு மிக்க பயங்கரமான அங்க அமைப்புகளுடன் காலனுடைய சிலையானது அமைத்தல் வேண்டும் வெள்ளிமுகம், தங்கநேத்ரம், தங்கப்பாதங்கள், கருப்புநிற மரங்களால் அமைக்கப்பட்ட கை, கால், மார்பு, முதலிய அவயவங்கள், கையில் வைரக்கட்கம், காதிலே புஷ்பகுண்டலம், ரெத்தவஸ்திரம், சங்குமாலையணிதல் புலித்தோலாசனம் இவைகளுடன் காலபுருஷ தானத்தின் சிலையிருத்தல் வேண்டும்.

பிராணபிரதிஷ்டா மஹாமந்திர சாஸ்திரியே இத்தானத்தை நடத்தி வைக்கும் ஆச்சாரியராக விருத்தல் வேண்டும் சந்தியவானும், சந்தியாவந்தன பூஜாகைங்கர்ய, நியமநிஷ்டைகளில் அணுவும் தவறாதவர்களுமே இத்தானத்தை வாங்க யோக்யதாபாத்ர

மாவார்கள்.

அபமிருத்யு, கிரகங்களின் கொடூரத்தன்மைகளால் மரணம் இவைகள் நிகழாவண்ணம் தடுப்பதற்கு செய்யும் உபாயம்தான் காலபுருஷதானமாகும்.

இத்தானத்தை நடத்துவதற்கு சேதுதீரமே இடம்புகழ்க்கியலா மேன்மையுற்ற நற்றலம்.

சேதுதீர புண்யமணலிலே நீர்தெளித்து பத்து நேர்க்கோடுகளும் பத்து குறுக்குக்கோடுகளும் போட எண்பத்தொன்று அறைகளடங்கிய சக்ரம்அமையும் முதலறையில் ஹம்மென்றிட்டு பதினொருலக்கமிடவும். இரண்டாவதறையில் ஸம்மென்றிட்டு எழுநாடடவும். மூன்றாவதில் ஷம்மென்றிட்டு பனிரெண்டுலக்கமிடவும். நான்காவதில் ஜம்மென்றிட்டு எட்டுலக்கமிடவும். ஐந்தில் க்ஷம்மென்றிட்டு பதின்மூன்றுலக்கமிடவும். ஆறில் த்ரம் என்றிட்டு ஒன்பது லக்கமிடவும். எழில் ஞம் மென்றிட்டு ஐந்துபோடவும். எட்டில் அம்மென்றிட்டு பத்து போடவும். ஒன்பதில் ஓம்மென்றிட்டு ஆறு போடவும். இதில் நவக்கிரக பீசமும் எண்பத்தொன்றட்சரமுமிருப்பதைப் பார்க்கலாம். பின் நடுவணைமாறு சூடலாச் எண்பத்தோரறைகளும் அட்சரமும் பீசமும் நிறையப்பெறும். நாற்புறமும் ரேகை மூணையிழுத்து சூலம்நாட்டி சக்ரத்தைச்சுற்றி மூன்று சூரியவட்டம் அமைத்துப்பின் நான்குதிக்குகளிலும் நான்குவாசல்களுடன் சதுரக் கோட்டை கட்டவேண்டும். மேலவாசலில் இருக்குவேத உயிரையும் கீழவாசலில் சாமவேத உயிரையும் தென்வாசலில் யசுர்வேத உயிரையும் வடக்கு வாசலில் அதர்வன உயிரையும் நாட்டி மத்தியில் பூர்ணகும்பம் வைத்து கும்பத்தின்முன் காலபுருஷசிலையை புலியாசனத்தின்மேல் வைத்து யாவற்றிற்கும் சந்தனம் குங்குமமிட்டு



தூபதீபம்கொடுத்து ஐம்—உம்—அம் சிவய நம என்ச் சிந்தித்துக் கொண்டே மானச பூஜைசெய்க. பின் தானம்கொடுப்பவர் ஆச்சாரியார்மூலம் காலபுருஷதான சத்யவசனத்தைக்கேட்டு அதுபோல் உச்சரித்தும் பிராண பிரதிஷ்டா மஹாமந்திரத்தை ஆச்சாரியார் உச்சரிக்க காலதேவப்பிரதஷமயானது மகாஉக்ரத்தோடு ஜீவகலைபெற்று ஜ்வலிக்கதானம் வாங்கும் சத்யசீலர்கள் தங்களின் நற்கிரிகைகளின் பலன்களில்சிறிதுபாகத்தை அதற்கு அர்ப்பணம் செய்துதிருப்திசெய்து அந்தானத்தை மங்களகரமாக பெற்றுக்கொள்ளாலம்.

ஷோடசபலதானம்;— சேதுதீரத்தில் பதினாறுவகை தேவதாபடங்களை வாங்கி பதினாறு பிராம்மணர்களுக்கு வஸ்திரம் வாசனைத்திரவியம் புஷ்பம் முதலியனவைகளுடன் தானம்செய்தலால் ஸ்வர்க்கப்பிராப்தி சித்திக்கின்றது மேலும் ஸ்ரீராமநாதபர்வதவர்த்தனி ஸ்ரீசேது ஸ்ரீராம லெட்சுமண சீதா, ஹநும, சிவலிங்கப்பிரதிஷ்டாதி கெந்தமாதனபர்வத படங்களை தானம்செய்யும் புண்யவான்கள் மஹாமேரு பர்வததானம் செய்த பெரும்புண்யத்தை எய்தி மகிழ்வார்கள்.

பூமிதானம் சிவதர்மத்திலே விசுவாமித்ர மகரிஷியால் பூமிதானத்தின் சிறப்பு சொல்லப்பட்டிருந்தாலும் சேதுதீரத்திலே வந்து செய்யும் பூமிதானமானது ஒன்றுகோடியான பலனைக்கொடுக்குமாதலால் சேதுதீரமே பூமிதானத்துக்கு சிரேஷ்டமான தலமாகும். ஓர்கிராமமாவது நகரமாவது, வயலாவது, கிரகமாவது முக்குற்றமற்ற நற்றவத்தோர்க்கு சேதுதீரத்தில் தானமீயும் தானபதிகள் பத்துக்கோடி கல்பம் பிர்மலோக வாசத்தைப்பெற்றின் புறுவார்கள்.

உபய கோர்முகிதானம்: கன்றின் முக மாத்திரம்

தோற்ற வின்று நிற்கும் பசுவை வலம்வந்து செய்யும் தானம். இவ்வரிய தானத்தை சேதுதீரத்தில் செய்யும் புண்யவான்கள் பூப்பிரதட்சணம் செய்தபலனையடைந்து அப்பசுவின் அங்கங்கள் முழுவதிலும் ரோமங்கள் எத்தனையுள்ளதோ அத்தனை வருடம் தேவசரீரத்தைப்பெற்று தெய்வலோகத்தில் தேவபோகங்களை எய்துவார்கள் இத்தானம்செய்யுங்காலையில் ஹேம மாதிரி சங்கற்ப பாருயணம் செய்தல்வேண்டும்.

கற்பகவிருக்ஷதானம்:— இத்தானபதி அஷ்டலட்சுமி கடாட்சத்தை அடைவான். பசும் பொன்னால் கற்பகவிருட்சம் நிறுவி அதற்கு வெள்ளிப்புஷ்பம் காய்கள் அமைத்து மஞ்சள் தட்டில் வைத்து சேதுதீரத்தில் சேதுதீர்த்தம் வார்த்துசற்சனருக்கீய்ந்திடில் அவ்விநாடிமுதல் தானபதியானவன் அஷ்டலட்சுமிகளும் தன்னிடம் பூரணகிருபா கடாட்சத்துடன் அருள்பாலித்திருக்கக் காண்பான். தானமேற்றோன் கொடிய வறுமைக்காளாகி ஏழுதலைமுறைவரைக்கும் துன்பப்படுவான். இதற்குப்பிராயச்சித்தம் தானமேற்றோன் ஒருமண்டலம் அந்திசந்தி யிவ்விருநோங்களிலும் சேதுதீர்த்தமாடி ஸ்ரீராமனாத சேவையேற்கில் இத்தோஷநிவர்த்தியாகும்.



(1) உத்தர தேசத்தில் மஹரிஷிகளும் புகழும் வண்ணம் வேதசாஸ்திர வல்லுனர்களாய் யாசகுருக்கள் என்றழைக்கப்படும் அரிவசு பாரவசு, என்னுமிரு பிருமனோத்தமர்கள் மகத்தான கீர்த்திப் பிரதாபங்களுடன் வாழ்ந்து வரும் நாளில் ஓர்நாள் பாரவசுஎன்பவன் விடியுமுன் தன் பிதாவின் ஆச்ரமத்தை நாடிச்சென்றான் கங்கைகரையோரம் ஆச்ரமம் நிறுவி சதாகாலமும் சர்வேச்வரனை அகத்தில் நிறுத்தி யோக நிஷ்டைபுரிந்துவரும் பாரவசுவின் பிதாவாகிய சைப்ய மஹரிஷியானவர் அச்சமயத்தில் புலித்தோலை எடுத்து தேகம் பூராவும் போர்த்திக்கொண்டு ஆச்ரமவாயிலில் படுத்திருந்தார் பாரவசு ஆச்ரமத்தை அணுகியதும் அவ்வாச்ரமவாசலில் புலித்தோல் போர்த்திப் படுத்திருப்பது தகப்பனென்றுணராது புலியே தன்தகப்பனைக் கொல்வதற்கு வாயலில் பதுங்குகிறது எனத்தவறாக எண்ணிஅப்புலியைக் கொல்வதற்கு தன் கையிலிருந்த யோகதண்டத்தை விஞ்சை மந்திரயுச்சாடனம் செய்து பிரயோகித்தான்.

யோகதண்டம் சிவ்வெளப்பாய்ந்து சைப்ய ரிஷியை மாய்த்துக்கொன்றது பாரவசும் தகப்பனைக்கொன்றதுக்க மேலிட்டதால் சித்தப்பிரமை யுற்றவனாகி இவனைக் கண்ட யாவரும் மகாசண்டாளன் என்றழைக்க பிர்மஹத்தி தோஷத்தால் பீடிக்கப்பட்டிருந்தான்.

பிர்மஹத்தி தோஷத்தால் சித்தப்பிரமையுற்று மிக வருந்தும் தன் குமாரனின் கஷ்ட நிலையைக்கண்ட அவனது தாயானவள் சாஸ்வதிக்கொப்ப கலாநிதியாதலால் தன் தனயனையிட்டுக் கொண்டு யித்தூய சேதுவை யடைந்தாள்.

கெந்தமாதனச் சாரலில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியால் பிரதிட்டை செய்யப்பட்ட ஸ்ரீராமலிங்க தெரிசனமும் சேதுஸ்நானமும் அநுதினமும் அந்தரங்க சுத்தியுடன் செய்து வருகையில் ஓர்தினம் அதிகாலையில் சேதுநீராடி கரையேறுகையில் ஏ பராவசு என்னும் பிராமண வேத சிகாமணியே! உன்னைப்பற்றி யிருந்த பிதா பிர்மஹத்தி நிவர்த்தியாகி கிருதார்த்தனாய் என்று கணகணவென ஒலித்தது. இத்தெய்விக வாக்கைகேட்டதும் பராவசு என்பவன் ஆனந்த பரவசனாகி முன்னிலும் அதிக கலைஞானியாய் வேதோத்தனாய் விளங்கி, பக்திமேலீட்டால் சேது தீர்த்தமெடுத்து ஸ்ரீராமநாதனுக்கு அபிஷேகித்து மங்களகரமாய் தன்தேசம் சென்று வாழ்ந்திருந்தான்.

(2) பாண்டவர்கட்கும் கௌரவர்கட்கும் நடந்தபாரதப் பெரும் போரில் சாட்சாத் ஸ்ரீஅகில நாயகனாகிய ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் பரிபூரண அனுக்ரகத்தால் விஜயகாண்டீபதராகிய அர்ச்சுனாதி பாண்டவர்கள் கௌரவ சைன்யங்களை யோட்டிமடித்து துரியோதனனையும் தொடைமுறித்து வீழ்த்திவிட்டு, அன்றிரவைக்கழிப்பதற்கு படைவீட்டையடைந்து பாசறையிற்றுயில் கொள்ளலாயினர்.

இவ்வாறிருக்க யுத்தகளத்தில் தொடைமுறிபட்டு குற்றுயிராய் வீழ்ந்துகிடக்கும் துரியோதனன் சமுத்ரம்போன்ற தன் சேனைசைன்யங்கள் மடிந்துகிடப்பதையும், ஒப்பாருமிக்காருமில்லா வில்வீரர்களாகிய பீஷ்மாச்சாரியார் துரோணாச்சாரியார் கர்ணன் முதலியவர்கள் மடிந்துபட்டதையும் தனது சகோதரர்களின் உடல்கள் கால்வேறு, தலைவேறாக அரியப்பட்டுகிடப்பதையும் இவ்வாறாகிய தன் கெதியையுமெண்ணி



ஆராத் துயரமுற்றிருக்கையில் அவண் வந்த அசுவத்தாமா துரியோதனனுக் காறுதல்கள் பல கூறி தன் தகப்பனையும் உன்னையு மிவ்வாறு சிதைத்த பாண்டவர்களை இக்கணமே மாய்த்துப் போடுகிறேனென்று வீரம்பேசிநிற்க, துரியோதனனும் ஒருவாறுதேறி உடனே அசுவத்தாமாவுக்கு சேனாதிபதிபட்டங்கட்டவும், இன்றிரவே பாண்டவர் ஐவரையும் மாய்த்துவருகிறேனென சபதம்செய்து அக்கணமே அவ்விடத்தை விட்டு பாண்டவர்தங்குமிடத்தை நாடிச்சென்றான் அசுவத்தாமனென்னும் துரோணாச்சாரியாரின் அருந்தவப்புதல்வன்.

கையில் மந்திரவாளுடன் வீராவேசத்தால் பூரிக்கப்பட்டவனாய் பஞ்சபாண்டவர் துயிலும் பாசறைக்குள் பிரவேசித்து அங்கு ஆழ்ந்தநித்திரையிலிருக்கும் துருபதன் துஷ்டத்யும்னன் முதலியோரை நித்திரைமயக்கத்திலேயே வாளினால் கொன்று வீழ்த்தி பின்னும் அங்கு படுத்திருந்த துரோபதையின் பிள்ளைகளாகிய உபபாண்டவர்கள் ஐவரையும் பாண்டவர்களென்றே துணிந்து அசுவத்தாமாவானவன் மிகவும் சந்தோஷித்து தமது சபதம் இலகுவில் முடியப் போவதை எண்ணி வீராவேசங்கொண்டு ஐந்து வாள்வீச்சுகளினால் அவ்வைந்து இளம் பாண்டவபுத்திரர்களையும் கொன்று அவ்வைந்து சிரங்களையும் கையில் எடுத்துக்கொண்டு அதிவேகமாகவந்து துரியோதனன்முன் வைத்து பாண்டவர்களை கொன்றேன்; என்று தன்னை மறந்த உற்சாகத்துடன் மொழிந்து நின்றான். துரியோதனனும் ஆனந்தக் கடலில் மூழ்கிதன் உடல் நோவையும் மறந்திருந்தான்.

பொழுதும்புலர்ந்தது. அவ்வைந்து தலைகளையும் பார்த்தான் துரியோதனமகாராஜன் தன்முன் நின்றகுருபுத்திரன் சொல்

சிறிவிழுந்து அடா மதியீன! இவர்களா பாண்டவர்கள்? இளம் பாண்டவர்களை மதிகெட்டு பாண்டவர்களென்று கொன்ற சிசுபாதகா? பாரடா இவர்கள் பாண்டவர்களின் ரூபங்களை பொத்த இளம்பாண்டவர்கள் எனத்தெரியவில்லையா? எனச்சொல்லிக்கொண்டே ஒரேஎக்கமாய் மண்மேல் சாய்ந்தான் அரவக்கொடியோன்.

எங்கும் துக்கசாகர அலைகள் மோதியது. அவ்வலைகள் அசுவத்தமாவின் சிரத்துக்குமேலும் எழும்பி அடித்தன அந்தோ! ஆழ்ந்தநித்திரையில் சிசுபாதகம்! இம்மாபாதகத்தை எங்ஙனம்தொலைப்பேன். இவ்வுலகில் அழியாத கொடும் பாவியாகி விட்டேன் பரிசுத்தமாகிய என்வாழ்வும் நான் செய்த புண்யங்களும் பங்கப்பட்டுப் போய்விட்டன வேதசொரூபிகளாகிய மஹரிஷிகள் முன்னிற்கவும் அருகதையிலாதோ ஆகிவிட்டேன் என்றுபலவாறு நொந்து இவ்வுலகிலுள்ள புண்யதீர்த்தங்களில் ஆடி பாவபரிகாரத்தை நாடித்திரிகையில் வேதவியாசரருளியபடி தெட்சிண பாரதத்தில் புண்ய கெந்தமாதனச்சாரலில் ஜோதி சொரூபமான ஸ்ரீசேதுதீர்த்தத்தை அடைந்தான்.

ஆகா! சேதுதெரிசனம் சர்வபவநாசனம் அன்றோ! சிவசொரூபியாகிய அசுவத்தாமா, அவ்வானந்த சேதுவைப் பார்த்ததும் கங்குகரையற்ற ஆனந்தப்பெருக்கெய்தி ஓடோடியும் சென்றார் இவ்விதம் தன்னைநோக்கி ஓடிவரும் அசுவத்தாமாவை சேதுவானது அலைகளாகிய கைகளால் கட்டியணைத்து பவசம்ஹாரம் செய்தருளிய காலையில் சேதுசாகரமானது பரமேஸ்வராதி சகல. தேவகணங்களாலும் நீந்தி விளையாடப்பெற்றிருக்கும்தேவானந்த சாகரமாகவே அசுவத்தாமாவின் கண்களுக்குத் தோன்றிற்று.



ஆனந்த மயமான புண்யசாகரமாகிய ஸ்ரீசேதுவைப் பிரிந்துவர மனமில்லாதவராய் அசுவத்தாமாவானவர் அனேகநாள் அத்தூயசேதுதீரத்திலேயே வாசஞ்செய்து ஸ்ரீராமநாதனுடைய கிருபாகடாட்சத்தைப் பரிபூரணமாய்ப் பெற்று ஹிமாலயபர்வதச்சிகரத்திலே நிறுவப்பட்டிருக்கும் தன் ஆச்ரமத்துக் கெழுந்தருளினார்.

(3) பாண்டிய தேசாதிபதியாகிய சுந்திரபாண்டியனென்னும் உத்தமஅரசன் இப்புண்ய சேதுதீரத்தில் கோதானம் பூதானம் ஸ்வர்ணதானம், அன்னதானம் முதலிய அறங்களை செவ்வனே செய்து அச்சேது தீரத்திலேயே வாசஞ்செய்து வருகையில் ஓர் நாளுதயத்தில், ஸ்ரீமகாலட்சுமியானவள் வைகுந்தத்தில் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைப் பிரிந்து சங்கரபாண்டியனின் கோரிக்கையை பூர்த்திசெய்து மகிழ்விக்கஎண்ணி அச்சேதுதீரத்திலேயே கோடிசந்திரோதயம் போன்ற முகாரவிந்த லட்சணங்களையுடைய பெண் குழந்தையாகத் தோன்றி மணலில் தவழ்ந்து விளையாட சுந்திரபாண்டியனும் அவன் மனைவியும் மகாலட்சுமியை மகளாகவும் மகாவிஷ்ணுதேவனை மருமகனாகவும் அடையும் பெரும்பாக்யத்தை சேதுவால் பெற்றின்புற்று வாழ்ந்தார்கள்.

(4) கிராடதேசத்தில் வசித்துவந்த அமரதேவன் என்னும் ஏழைபிராமணனுக்கு புத்திரனாக ஜெனித்து தன்ஐந்தாம் வயதிலேயே தாய்தகப்பனுக் கடங்காத துஷ்டத்தன்மை படைத்து தேசசஞ்சாரம் செய்வதற்காக தன்னூரையும் தாய்தகப்பனையும் பிரிந்துசென்ற விரதசீலன் என்னும் பிராமணஇளைஞன் பிச்சைக்காரர்களுடன் வசிப்பதும் அவர்களுடன் பிச்சைஏற்று உண்பதும் ஊர்ஊராய்ச் சுற்றித்

திரிவதுமா யிருக்கையில் பனிரெண்டு வயது நிரம்பியபால்
ய திசையை யடைந்தான். அக்காலையில் தன்னுடைய
கேவலநிலையை எண்ணி தனக்குத்தானே பட்சாதாபப்
படலாயினன். நிர்ப்பயமான செய்கையும் அஞ்சாதநெஞ்
சும் உதயமாயின உடனே சீச்சீ இப்பிச்சைக் கூட்ட
மா எனதுசேர்க்கையிடம்! நல்லது இச்சோம்பேரிக்கூட்
டத்தின் வாயில்மண்ணைப் போடுவேன் எனத்துணிந்து
அன்றிரவு எல்லோரும் அயர்ந்து துயில்கொள்கையில் அவ
ர்களிடமிருந்த பணம்காசுகளைஎல்லாம் வாரிக்கொண்டு
அவ்விடத்தைவிட்டு காட்டுமார்க்கமாய் பிரவேசித்து அடு
த்த ஊரைஅடைந்தான் இவனிடம் பணம் காசுகள் ஏராள
மாயிருப்பனத அறிந்த அவ்வூர்போக்கிரிகள் சினேகம்இவ
னுக்கு கிடைத்தது கள் சாராயம் முதலிய மதுபானங்
களை உட்கொள்வதும் நிபராதிகளுடன் வீண் கலகம்
செய்வதுமாயிருந்து வழிப்பறி முதலிய கொள்ளைக்கூட்ட
த்திலும் சேர்ந்து மகாதீரவீரமாக வேலைசெய்து வந்தான்
நாளுக்குநாள் திருட்டுத்தொழிலில் தேர்ந்து அப்பிராந்தியத்
தில் முதன்மையான பேரெடுத்தான் திருட்டில்வந்த தன
ங்களை குடிப்பதிலும் விபசாரிகளுக்குக் கொடுப்பதிலுமே
செலவுசெய்து வந்தான் இவ்விதம் செய்து வருகையில்
அவ்வூர் அரசகுருவின் புத்திரிஜலம்திரட்ட ஆற்றங்கரைக்
கு வந்தகாலையில் இவன் மாறுவேடத்துடன் ஓர்வண்டி
யிலிருந்து கீழிறங்கிவந்து அம்மாஎன்னை நீ அறியாயோ
நான்உனது பெரியதந்தையின் குமாரனல்லவா? காஷ்மீர
தேசத்துக்கு சென்றிருந்த நாங்கள் எனதுசிறிய பிதா
வின் தெரிசனத்துக்காக இவ்வூர் வந்திருக்கிறோம் எனது
மனைவி பெரியதாயார் முதலியோரை அதோவிருக்கும்
சோலையில் நிறுத்திவிட்டு நான்மாத்திரம் முதலில் உங்க
ளின் வீடு தெரிந்துபின் அழைத்துப் போகலாமென வந்
தேன் வழியில் உனதுசாயலைக்கண்டு இன்னாளென தெரி



ந்து கொண்டேன் ஆதலால் இவ்வண்டியில் வேண்டிய
திரவியங்களிருக்கின்றன இதைஉங்கள் வீட்டிலிறக்கும்
படி வண்டிக்காரனுக்கு உத்தரவிட்டிருக்கிறேன் உனது
பெரியதாயாரையும் மைத்துனியையும் அழைத்து வரலாம்
வாவென்று சொல்ல அப்பெண்ணும் அவனுடன் உடன்
சென்றாள். சோலையை இவ்விருவரும் கிட்டியதும் விரத
சீலனானவன் அப்பெண்மணியை கட்டியணைத்து தன்னைக்
கூடும்படிவேண்ட இவன் மோசக்கருத்தை அறிந்தமங்கை
அடாபாதகா நீயாரடா என்னைவஞ்சித்து இவ்விடாத
செயல்புரிய துணிந்தனை? நீயாராகயிருந்த போதிலும் உன
து வாக்கால் தங்காய்! என்றுஎன்னை அழைத்து விட்டு
பின் பெண்டாள வேண்டுவது பிராமண தர்மமல்லவே!
என்றெல்லாம் மொழிந்து தன்நிறைகாக்க தவித்துக்கொ
ண்டிருக்கும்போதே காமவெறிபிடித்த விரதசீலன் மேலும்
அவளை பலவந்தப்படுத்தி புணர்ந்து கொண்டிருக்கும்
போது அச்சோலையிலுள்ள விருட்சங்கள் ஒன்றில் வீற்
றிருந்து இவ்விடாத சம்பவத்தைக் கண்ணுற்றிருந்த அண்
டபோண்டபட்சியானது தனதுஅன்பிற்குரிய பெண்பட்சி
யினிடம் ஏ பூங்கொடியாய்! இதேபார்! ஓர் பிராமணன்.
தன் உடன்பிறந்த தங்கையைப் புணர்ந்து கொண்டிருக்கி
ன்றான். இம்மஹா பாதகத்தை கண்ணால் பார்த்ததினாலேத்
தோஷத்தை நிவர்த்திசெய்ய புண்யசொரூபமாக திகழும்
சேதுதீர்த்தத்தை நாடிச்செல்வோம் என்றுசொல்லிக்கொ
ண்டிருக்கும்போது பட்சிகள் சொல்லிய வார்த்தை கேட்
டு கோபங்கொண்டு சீறிவிழுந்து அப்பெண்மணி யணிந்
துள்ள ஆபரணங்களை எல்லாம் கழற்றிக்கொண்டு கூரிய
தன் வாளால் ஒரேவீச்சாக வீசி நிரபராதியாகிய பெண்
மணியை உடல்வேறு சிரம்வேறாக்கி அங்கோர் பாழும்
கிணற்றில் போட்டுவிட்டு மிகுந்த தைரியத்துடன் காடு
மலைவனம் வனாந்திரங்களெல்லாம் தாண்டி வெகுநாள்

பயணத்திற்குப்பின் விதற்பதேசத்தை யடைந்தான் மஹாகொடிய சண்டாளத்வமாகிய உடன்பிறவிகளான சகோதர சகோதரி கூடலைப் பார்த்த தோஷத்தால் பீடிக்கப்பட்ட அப்பட்சிகள் இக்கோரக் கொலையையும் பார்த்துவிட்ட படியால் அரைக் கணமும் அவ்விடம் தங்காமல் உடனே ஸ்ரீ ராம--ராம வென்று தாரகத்தை செபித்துக்கொண்டு சேதுதீரத்துக்கு பறந்துசென்றன.

விதற்பநாடு சேர்ந்தவிரதசிலன் அங்கும்அனேக ஆயிரம் களவுகளும் கொலைகளும் விபசாரமும் அதிமூர்க்கமாகச்செய்து ராஜதண்டனை முதலியவைகளுக்கெல்லாம் தப்பித்துக்கொண்டு வாழ்ந்துவரும் நாளிலோர் தினம் கையில் பணமில்லாது பசியால்தாக்கப்பட்டு வருந்துகையில் திரவியஞ்சேர்த்து வைத்தால் ஆபத்தில்உதவும்என்ற விருப்பத்தைக் கொண்டான் எனினும் திரவியசேகரிப்பை முன்னினும் அதிதீவிரமான களவு, கொள்ளை, சூறை முதலியவைகள் மூலமே செய்யலானான் ஒவ்வோர் ஊரிலும் கிடைக்கும் பணக்குவியல்களை அவ்வூரிலேயே விரையமாக்காமல் நடுராத்திரி வேளையில் ஆரண்யம் சென்றங்கோர் நற்றலத்தில் புதைத்துவைத்து வரலாயினன்.

இரவெல்லாம் பேய்பிசாசங்கட் கொப்ப வனங்களில் சஞ்சரித்துக் கொண்டும் பிர்மாண்டமான மலைக்குகைகளினுள் நிர்ப்பயமாகச்செல்வதும் அங்குவசிக்கும் தபோதனர்களை வதைப்பதும் அவர்கள் அருந்தவத்தால் பெற்றிருந்த கமனக் குளிகை மந்திரசக்திவாய்ந்த யோகதண்டம் முதலியவைகளைக் கைப்பற்றிக்கொள்வதுமாக அனேகஅற்புத மகிமை வாய்ந்த பொருள்களைச் சேகரித்தும் வந்தான்.



இவ்விதம் விரதசிலனானவன் நாளடைவில் நித்திரையை அறவேஒழித்தவனாகி தான் அதுவரை சேகரித்து புதைத்துவைத்திருக்கும் சகல பொருள்களையும் ஓர் யிடத்திற் கொண்டுவந்து சேர்த்துப்பார்க்க நிதியானது அளவிடமுடியாத பெருவாரியாயிருந்தது. இந்நிதிக்கு வியலால் பிரயோசனம் யாதுஎன்று ஆழ்ந்த யோசனைசெய்த விரதசிலனுக்கு அப்பொழுதுதான் லட்சுமி கடாட்சமும் ஞானமும் உதயமாயிற்று. ஏழைத் தாய்தந்தையரின் நினைப்பு அவன் ஹிருதயத்தில் புகுந்து அவனது கல் நெஞ்சத்தைகரைத்தது. மறுவிநாடியில் சோதரியைக்கூடியதும்கொலைசெய்ததும்அண்டபேரண்ட பட்சி சொன்ன வாய்மையும், தபோதனர்கள் வதை, பிறர்பொருள் அபகரிப்பு முதலியவைகள் ஒன்றன்பின் ஒன்றாகபேரலைகள் போலெழும்பி அவனைத் தாக்கலாயிற்று.

ஆ! அந்தணர்குலத்தில் பிறந்துகுலாசாரசத் கருமங்களை எல்லாம் துறந்து தாய் தந்தையரைச் சிறுவயதிலே பிரிந்து நீசர்களிடத்திலே புசித்து கொலை, களவு, காமம், சூது, குடி முதலானபஞ்சபாதகத்தொழிலிலுழன்றுசண்டாளனாக திரியும்படி ஹே! சர்வரக்ஷக என்தலையில் விதித்தனையோ? பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து நாளும்பொழுதும் ஆர்வமுடன் சீராட்டிப்பாராட்டி வளர்த்த தாய் தந்தையர்க்கு சேவைபுரியா இச்சரீரம் ஜீவனுடனிருந்தும் பயன்யாதோ; பகுத்தறிவற்ற மிருகங்களும பெற்றதாயிடத்து அன்புபூண்டு ஒழுகும்போது மானிடர்கள் தவறினால் அவர்களை எதற்கொப்பிடுவது? அதிலும்என்போன்ற கொடியபாபிகளைமகா நரகங்களிற் றள்ளினும் தகுந்த தண்டனையாகமாட்டாது. ஆ! எத்தனைபேர்கள் சடக்துடிக்க, ஜீவனனைது வாதனைப்பட அவர்களை சற்றும் இரக்கமின்றி கொலைபண்ணியிருக்

கிறேன். விலைமதிப்பில்லா மாணிக்கமாகிய கற்பை எத்தனை சத்யவதிகளிடை பலவந்தமாக அழித்திருக்கின்றேன். நெற்றிவேர்வை நிலத்தில்விழ பாடுபட்டு சம்பாதித்து வைத்த பொருள்களை எத்தனை குடும்பங்களிலிருந்து களவுஎடுத்திருக்கின்றேன். மதுபானங்களை அளவுமீறி குடித்து எத்தனை உத்தமர்களை மனம்நோவ திட்டியும் வைதும் சடம்நோவ அடித்தும் குத்தியுமிருக்கின்றேன்- பிராமணகுலத்தில் பிறந்தவர்கள் உலகிலுள்ள மாந்தர்கட்கு சத்யகுணங்களைப்புகட்டி அவர்கள் நீதியாய் வாழ உபதேசிக்க வேண்டியதிருக்க அதற்குநேர்மாறாக நடந்து சண்டாளத்வத்தை பூரணமாக அடைந்திருக்கும் எனக்கு உய்யும் வழியும் இனிஉண்டோ! பட்சிஜாதிகளும் பாவபுண்யங்கட்கு பயந்து வேதசாஸ்திரங்களில் சொல்லியவாறு சத்யத்துடன் வாழவிரும்பும்போது நானோ பிராமணகுலத்தில் பிறந்தும் நிட்சாக்குச்சியாகயிருக்கின்றேன் தான் நிர்குற்றமாய் மாசற்றிருந்தபோதிலும் பிறன் (நான்) செய்த பாவச்செயலைக் கண்ணுற்றதினால் தனக்கும் அத்தோஷம் சார்ந்திருக்கின்றதென்றும் புண்யபிரவாஹசாகரமாகிய தூயசேதுவைத் தெரிசித்தாலொழிய தன்னைச்சார்ந்த தோஷம் தீராதென்றும் சொல்லி தன்பேடையும் அழைத்துக்கொண்டு அன்றோர்நாள் அத்தூய சேதுவை நாடி அண்டபேரண்ட பட்சி சென்றதன்றோ; அகிலாண்டங்களையும் சுற்றி வரும் தெய்வீக பறவைகளாகிய அண்டபேரண்ட பட்சிகள் சேதுவைப்புகழ்ந்து சென்றதென்றால் அத்தூயசேதுவுக்கு இணையான புண்யசாகரம் அகில அண்டங்களிலுமில்லையென்றே திட்டமாய் சொல்லலாம் ஆதலால் அத்தெய்வீகபட்சிகள் காட்டிச்சென்ற வழியே நாமும் சென்று ஜெகஜோதியாக விளங்கும் சேதுதெரிசனம் செய்து ஸ்ரீசேதுராமலிங்கத்தினருளால் சகல சாஸ்திரவேதசம்பன்னனாகி மாதாபிதாவை



யடைந்து அவர்களாசிபெற்று சத்யசீலனாக வாழ்வேன். என்று தனக்கு தானே சொல்லிக்கொண்டு பணக்குவியல்களை எல்லாம் குதிரைகளின்மேல் ஏற்றிக்கொண்டு ஸ்ரீசேதுவைநோக்கி தெட்சிணமார்க்கம்சேது மஹாஞானயாத்ரை துடங்கலாயினன்.

வழியில் பொற்காசுகளை அள்ளி ஏழைகட்கும் எளியவர்கட்கும் அங்கப்பழுதற்றோர்கட்கும் வாரிவாரிக்கொடுத்துக் கொண்டு உள்ளும் புறமும் கருணைவாரியாகிய ஸ்ரீசேதுவை மனதிலைதியானித்த வண்ணம் கருமலையாகிய கற்பகம் ஒளிரும் சாரலில் ஸ்ரீசேது தீரத்தை யடைந்தான்.

அவ்வழகியபுனிதசாகரமாகிய ஸ்ரீசேதுவையும் தேவவசந்தமன்றமாகிய கெந்தமாதனத்தையும் கண்களால் தெரிசித்த விரதசீலனின் ஹிருதயமானது ஆனந்தத்தால் பொங்கி தன்னையே மறந்தவனாய் ஆடினான், பாடினான், ஸ்தோத்தரித்தான், பொற்காசுகளை எல்லாம் இருகைகளாலும் வாரிவாரி சேதுவில் வசிக்கும் மறையவர்கட்கும் ஏழைஎளியவர்கட்கும்குழந்தைகட்கும், வயோதிகர்கட்கும்கொடுத்துக்கொண்டே சேதுவில்நீராடுவதும் பணங்களை அள்ளிஇறைப்பதும் ஸ்ரீராமலிங்கத்தை பொற்காசுகளால் நிறைத்து ஆலிங்கனம் செய்துகொள்வதுமாயிருக்கையில் இருபத்தேழாவது தடவை ஸ்ரீசேதுவில் மூழ்கிஎழும்போது கணகணவென ஆகாயத்தில் சப்தம்முழங்கவே விரதசீலன் ஆச்சரியமுற்று ஆகாயத்தை நோக்கினான்.

ஹே, விரதசீலா! என்ற சப்தமானது முதலிலும் பின் "உன்னைப்பற்றியிருந்த சண்டாளத்வம் அறவேநீங்கி பிரமஹத்தி சகலஹத்திகளும், கொலை, காமம் முதலிய பஞ்சபாதகங்களும் நிவர்த்தியாகி புனிதனானாய் என்று அசரீரமுழங்கிற்று.

புனிதனுகிய விரதசீலன் ஸ்ரீசேதுவையும் ஸ்ரீராமலிங்கத்தையும் நாவறப்போற்றித் துதித்து தன் தாய்தந்தையர்களைக் கண்டுபிடித்து சத்யநெறிதவாது உத்தமோத்தனுய் பிரக்யாதியுடன் இனிதுவாழ்ந்திருந்தான்.

## தீர்த்தமகத்துவ காண்டம் முற்றிற்று



# மூர்த்தி மகத்துவகாண்டம்

## (ஸ்ரீ ராமனுதக் கடவுள் எனும்)

## ஸ்ரீராமலிங்கம்.

ஸ்ரீராமேசுர மஹாலிங்கமானது மகாலட்சுமியாகிய சீதாபிராட்டியின் திருக்கரங்களால் தெய்வீக கெந்தமாதனபர்வத மிருத்திகையைச்சேர்த்துப் பிடிக்க, மிருத்யுஞ்சயனுகிய சர்வேஸ்வரனுடைய ஜோதியொளியானது அதினின்று கோடிசூரிய உதயம்போன்று வீசவே ஸ்ரீராமர், சீதா, லட்சுமணன், விபீஷணன், சுக்ரீவன் முதலியோர்கள் மிகுந்தபக்தியுடன் அகத்தியர், கௌதமர், பிருகு முதலியமாதவத்தோர்களைப் பார்த்து இச்சோதியின் விபரத்தை தெரிவிக்குமாறு வேண்ட அகத்தியமஹரிஷிசொல்லலாயினர். வாரும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியே, இத்தூய மலேச்ஸ்வரப்பிரீதியான தலமாதலாலும் இத்தலத்தைவிட மேன்மையுற்ற சிவத் தலம் எங்குமில்லையாதலாலும் காசி ஸ்வயம்புலிங்கத்தைவிட கெந்தமாதனமிருத்திகை லிங்கமே சர்வசிரேஷ்டமென்பதையும், சிவபெருமானின் சர்வேச்சுரத்வமும் சர்வஞ்ஞத்துவமும், சர்வநியந்திருத்வமும், சர்வாந்திரியாமித்வமும், சர்வகற்பிதுத்வமும், சர்வ சத்தித்வமும் பொருந்தி பூரணஈஸ்வரகலையுடையது என்பதையும்ஈஸ்வரானுக்ரகம் உமதுபேரில் பரிபூரணமாகயிருப்பதால் மஹாலட்சுமியால் மணலைச் சேர்த்துப் பிடிக்கப்பட்ட இந்த ரூபம்லிங்க சொரூபமாய் நன்கமைந்து இதில் தெய்வீகஒளி வீசுகின்றதல்லாமல் வேறொன்றில்லை யாகையால் ஸ்ரீராமச்சந்திர, இச் ஜோதிலிங்கத்திற்கு உமது திருக் கரங்களால் அபிஷேகாதி தூபதீபநிவேதனங்கொடுத்துமந்திரபூர்வமாக இப்புண்ய கெந்தமாதன கற்பகச்சாலிலே பிரதிஷ்டைசெய்க, முகூர்த்தவேளை வந்துவிட்டது,பிரதிட்டையைத் துவக்குக;எனமொழிந்து தன் ஆசனத்திலமர்ந்தார்.

முதன் முதலில் அர்த்தநாரீச்சுர பவித்திரச் செம்பில் நிறைத்த ஸ்ரீசேதுதீர்த்தத்தை ஸ்ரீராமச் சந்திரன் சீதாதேவி யிருவர்களும் சேர்ந்து லிங்கமீதுவருடித்துக் கொண்டே லக்ஷாபிஷேகித்தனர் மஹாவேதமந்திரத்தை மானசீகமாய் திரிகாணசுத்தியாய் பக்திமேலீட்டால் தியானிக்கையில் லிங்கமானது பெரிதாகவளர்ந்துநின்றது

இவ்வற்புத சேதுதீர்த்த லட்சாபிஷேக சற்பலனையும் சிவப்பிரீதியையும் அடைந்தவராய் கங்குகரையற்ற ஆனந்தப்பெருக்கெய்தி ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர், லிங்கத்திற்கு கெங்காபிஷேகம் செய்துவைக்க எண்ணி காசிமாக்ஷேத்ரத்தில் ஜெகஜோதியாக விளங்கிக் கொண்டிருக்கும் கெங்காபவானியை மனதிடைதியானித்து கோதண்டத்தை கரங்களிற்றாங்கி கோதண்டத்தினோர் கோடியைப் பூமியிலூன்றவும், ஸ்ரீராமநாதனுடைய திருமேனியைத்தெரிசிக்கும் தன் மாபெரும் பாக்யத்தை எண்ணி மகிழ்ந்தகங்கையும் அதிகவேகமாக பாதாளமார்க்கமாய் வந்து கோதண்டம் ஊன்றிய தலத்தில் நிலைகொள்ள ஸ்ரீராமச்சந்திரனும் மகிழ்ச்சிபூத்த முகாரவிந்தத்துடன் அப் பரிசுத்த கங்கையை ஸ்ரீராமலிங்கத்துக் கபிஷேகிக்கையில் ரிஷிகள் செய்த வேதமந்தரகோஷமானது ஸ்ரீகைலையங்கிரிவரைக்கும் முட்டி ஈசனை மகிழ்வித்து வரவேற்புக் கூறியது.

பின்னர் ஸ்ரீராமச்சந்திரன், சிவலிங்கத்துக்கு ருத்ராட்சமாலையும் வில்வமாலையும் சூட்டி தூபதீபங்காட்டி லிங்கத்துக்கு ஸ்ரீராமநாதன் என திருநாமமிட்டு பஞ்சாட்சர மஹாமந்திரத்தை உள்ளமுருகத் தியானிக்கையில், எங்கும் பிரகாசமாய் தேவர்கட்கெல்லாம் தேவராய் பரமாத்மாவாயிருக்கின்ற பரமேஸ்வரனானவர் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்யோசாதம் யிவ்வைந்து முகங்களுடனும் யியம்புதற்கரிய ஆனந்தரூபத்துடன் லிங்கத்தின்மேல் பிரத்யட்சமாகி ஸ்ரீராமச்சந்திராதி பக்தர்களையும், அகத்தியர், கௌதமர் முதலிய ரிஷீஸ்வரர்களையும் வாழ்த்தி வரமருளி ஸ்ரீராமசுவாமியைச்



சார்ந்திருந்த ராவணபிர்மஹத்தி தோஷத்தைப்பற்றற நிவாரணமாக்கி, ஒப்புயர்வற்ற அதிஉன்னத அபிஷேகமாகிய ஸ்ரீசேதுதீர்த்தத்தை நமது சொரூபமாகிய ராமலிங்கத்துக்கு அபிஷேகிப்போர்களும் பரிசுத்த கெங்கையை அபிஷேகம்செய்வோர்களும் திரிலோகங்களிலுமுள்ள சகலயோகபோகங்களையும்யிப்பூவுலகில் கிடைக்கப்பெற்று நிகரற்ற செல்வவாழ்வையும் மேலாகிய மோட்சப் பிராப்தியையும் அடைவார்கள் என்றும் இவ்விரண்டு தீர்த்தங்களையும் சிவநிசியின் ராமலிங்கத்துக்கு அபிஷேகிப்போர்கள் சொல்லிமுடியாத பெருமைவாய்ந்த தெய்வீக அம்சம் பொருந்தி தேவர்களும் எதிர் கொண்டழைக்க மோட்சலோகத்தை பெறுவார்களென்றும் ஆயிரத்தெட்டு சிவஸ்தலங்களிலும் கெந்தமாதன ராமேச்சுரமே ஸ்ரீகைலையின் முகமானதினாலும் இப்புண்ய தலமானது எங்கணும் ஆனந்தமயமான சிவலிங்கங்களாகவும் அதன் சொரூபங்களாகவுமே காணப்படுவதினாலும் திரிலோகத்தார்கட்கும் சிறந்தபுண்ய க்ஷேத்ரமாக விளங்கிக் கொண்டு பாரமார்த்தீக மேம்பாடுகளை நிகரற்று அருளிக்கொண்டிருக்கும் என்றும் திருவாய்மொழிந்து அச்சிவலிங்கத்திலே ஐக்யமாக லிங்கமானது முன்னிலு மிருமடங்கதிகமாய் வளர்ச்சியுற்று, அதனுள் ஓர் ஜீவகலையானது மிளிர ஈஸ்வரசாநித்ய மிகுந்து காணப்பட்டது.

இவ்வற்புத சிவத்திருவிளையாடல்களைக் கண்ணுறப்பார்த்திருந்த ஸ்ரீராமச்சந்திராதி பக்தர்களும் அகத்தியர் கௌதமர் முதலிய ரிஷீஸ்வரர்களும் ஸ்ரீராமலிங்கத்தைவிட்டுப்பிரிய மனமில்லாதவர்களாய் பசுவானது கன்றைவிட்டுப் பிரிய மனமில்லாது விறட்டினும் சுற்றிச்சுற்றி நிற்பதே போன்றிருந்து பின் ஸ்ரீராமலிங்கத்தை ஸ்ரீசீதாசமேதராய் ராமச்சந்திரமூர்த்தியானவர் ஆலிங்கனம் செய்து அயோத்திமாநகரத்துக்கு எழுந்தருளினர்.

## ஆலிங்கன தெரிசனம்

ஆஹா! ராமேச்சுரமகாலிங்க ஆலிங்கன தெரிசனம் யார்க்குக் கிடைக்கும்? தேவகுருவாகிய பிரகஸ்பதியும் அசுரகுருவாகிய சுக்ரனும் பிர்மதேவனும், விஷ்ணுபகவானும், அசுவத்தாமா மார்க்கண்டேயர், ஆஞ்சநேயர் முதலிய சிரஞ்சீவிகளும், தேவாந்திராதி திக்குப்பாலர்களும் தினந்தோறும் கௌனமார்க்கமாய் வந்து ராமநாத ஆலயத்தில் பிரவேசித்து ஸ்ரீராமேச்சுர மஹாலிங்கத்தை ஆலிங்கனம் செய்துவருவதால் அகில உலகமகிமைப் பிரதாபர்களாய் சர்வசக்தியுடையவர்களாய் திகழ்கின்றனர். பாக்யசாலிகள் லிங்கத்திற்கு பொன்னுடை தரித்து ஆலிங்கனம் செய்துகொள்கின்றனர். எப்படிப்பட்ட பிர்மஹத்திகள் செய்தவர்களாயினும், கொடியமாபாதங்களைச் செய்தவர்களாயினும் துளியளவேனும் தர்மங்களைச்செய்தறியாதவர்களாயினும், தெய்வநிந்தனை புரிந்தவர்களாயினும் ஒரு தடவை ஸ்ரீராமேச்சுர மஹாலிங்கத்தை ஆலிங்கனம் செய்து வழிபட்ட மாத்திரத்தில் கற்பகோடிகாலம் பஞ்சாக்னிமத்தியில் நின்று பஞ்சேந்திரியங்களை யொடுக்கி வாயுபட்சணம் செய்துகொண்டு ஈஸ்வரனை அகத்தில் நிறுத்தி செய்துபெற்ற மாபெரும் தபோபலனை அடைவதுந்தவிர இனி எப்பொழுதும் பிறவித் துன்பங்களினால் அவஸ்தையுறமாட்டார்கள். ஸ்ரீராமலிங்கத்தை ஆலிங்கனம் செய்து வழிபட்ட புண்யபுருஷர்களின் பிறவித்துன்பங்கள் கலைந்தெறியப்படுவதுந்தவிற அவர்களின் ஜென்மம் சாபல்யமடைந்து தெய்வப் பிறப்பெய்துவார்கள்.

சதாதேவர்களும் மஹரிஷிகளும், புண்யபுருஷர்களும் மெய்மறந்து ஆடிப்பாடித்துதிக்கப்படும் சுயம்புவாய் ஜெகஜோதியாய் மந்திரமூலமாய் விளங்கப்பட்ட ஸ்ரீராமலிங்கமூர்த்தியானது அகிலஉலகங்களிலுமுள்ள சர்வபுண்யநதிகளும், புண்யதீர்த்தங்



களும், முப்பத்துமுக்கோடி தேவர்கள், கின்னரர், கெருடகாந்தர்வர், சித்தவித்யாதரர்கள், சிவகணங்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர்களும், ஆயிரத்தெண் சிவஸ்தலங்களிலுமுள்ள சுத்த ஷாட்குண்ய சிவசாநித்யங்களும், அஷ்டலட்சுமிகளும் தன்னுள்ளடங்கி தேஜோமயமாய் சர்வமுந்தானாகி விளங்குகின்றதால் இராமேச்சுர மகாலிங்கதெரிசனமானது சர்வலோக புண்யயாத்திரையின் சம்பூர்ணபலனை யளிப்பதுடன் அட்டமங்களம், அட்ட ஐசுவரியம், தீர்க்காயுள், தர்மநோக்கம் ஞானஉதயம், ஏகாக்ர சித்தி, ஸ்வர்க்கம்மோட்சம் யிவற்றை பரிபூரண கிருபையுடன் மக்கள்பால் அளித்துக்கொண்டிருக்கின்றது.

## திருப்பள்ளி எழுச்சி தெரிசனம்

கெந்தமாதன கற்பகமெனும் திருவிராமேச்சுரத்தில் வைகறையில் ஸ்ரீபர்வதவர்த்தனிசமேத இராமநாதக்கடவுளின் தெரிசனமானது மகாகோடி புண்யத்தைக் கொடுக்கக்கூடியதான அற்புதானந்த தெரிசனமாகும் தேவாதிகட்கும் ஸ்ரீராமநாதனுடைய கற்பகத்தமர்ந்த வைகறைத்தெரிசனம் அரிதுஎன்றால் அதன் அனந்தாதீத அற்புதமகிமையை எடுத்துரைப்பதற்கு நாவாயிரம்படைத்த ஆதிசேடன்தானீடோ? இவ்வரியபிர்மானந்த தெரிசனத்தை ரகசியமுணர்ந்த மானிடர்கள் புவியின்பலபாகங்களிலிருந்தும் தேவைநகரமென்னும் ராமேச்சுரத்திற்கு நாடிவந்து கற்பகச்சாரலிலே தூயசேது சாகரத்தின்காற்றினால் இரவெலாம் தானாகவே யியங்கும் பிராணாயாமமானது நிர்மலத்துவத்தை அளிக்க, வைகறை நேரத்தில் ஸ்நானம்செய்து ஸ்ரீராமநாதனை பர்வதவர்த்தனி அம்மைசமேத னுயிருக்கும் ஆனந்தக்காட்சியைக் கண்ணால்கண்டு மனமாறத்தொழுது நாவாறப்போற்றி ஆனந்தபாஸ்பம் சொரிந்து மெய்மறந்து நடனமாடி நிற்பர்.

இத்தூயதெரிசனத்தை ஓர்தடவையேனும் கண்குளிரக் கண்டு களித்தபுண்யாத்மாக்கள் தான்நினைத்தகாலையில் கைலைவாசப்பேரின்ப வாழ்வைப்பெற்றின்புறுவாரகள்.

திருப்பள்ளிஎழுச்சி நேரத்தில் அங்குவைக்கப்பட்டிருக்கும் தட்சிணாவர்த்தம் என்றும் வலம்புரிஎன்றும் பாஞ்சசன்யம்என்றும் சொல்லப்படும் பரிசுத்தபிரணவசொரூப செல்வச்சங்கமானது ஓங்காரஒலிமுழங்க பம்பம்என சப்திப்பதையும் அப்புனிதசங்கின் தெரிசனத்தையும் பெறலாம். இவ்வலம்புரிசங்க தெரிசனமானது பெரும்ஐசுவரியத்தைக் கொடுக்குமாதலால் சுருதிநூல்கள் இதன் மகத்வத்தை மிகவும் புகழ்ந்துரைக்கின்றன.

மேலும்சூரியோதயத்தில் ஸ்ரீராமலிங்கத்துக்கு நடக்கும் பாலாபிஷேகத்தைக் கண்ணுறும் புண்யபுருஷர்கள் ஸ்ரீராமநாதனுடைய கிருபாகடாட்சத்தால் தங்கள்பிதாவர்க்கத்து பிதுர்க்களில் ஒருகோடிபேர்களும் அன்னைவர்க்கத்துப் பிதுர்க்களில்ஒருகோடிபேர்களும் கிடைத்தற்கரிய கைலைவாழ்வை அடைந்தின்புறுவார்கள். இருகோடிபிதுர்களும் பரமசந்தோஷமடைய அப்பிதுர்களுடைய நல்லாசியைப்பெற்று இப்புவியில் தீர்க்காயுளுடன் புத்திர பௌத்ர பந்துமித்ரர்கள்சூழ தெய்வங்களெலாமிவர்கட்கு துணையாகநிற்க செல்வ வாழ்வு வாழ்வார்கள்

## உச்சிக்கால தெரிசனம்

மத்தியானத்தில் ஸ்ரீராமலிங்கத்துக்கு செய்யப்படும் பஞ்சாபிஷேகதெரிசனத்தை அந்தக்கரண சுத்தியுடன் கண்ணுறாத மனித சென்மம் இப்புவியில் வாழ்ந்தும் யாதுபிரயோஜனம்? எத்தனை சுற்றத்துடனும் குபேரச்செல்வத்துடனும் வாழ்ந்துமென்ன? உலகினோர் ஏவல்பணிசெய்ய அதிஉன்னத அதிகார சம்பத்துடன் வாழ்ந்துமென்ன? எத்தனை புண்ய க்ஷேத்ரயாத்ரைகள் புரிந்துமென்ன? தேவதைகளருளைப் பெற்றுமென்ன? ஸ்ரீராமநாத பஞ்சாபிஷேக தெரிசனத்தை சேது புண்யக்ஷேத்ரத்திலே உச்சிக்காலத்தில் தெரிசிக்காதவர்களின் சென்மமும் சாபல்யமடையப் போவதில்லை.



இவ்வரிய நற்றெரிசனத்தால் மாந்தர்கள் ஜென்மசாபல்யமடைந்து தம்பதிசமேதமாய் பிர்மலோகத்தில் ஆயிரம் தேவவருடங்களவரை இன்புற்று வாழ்வார்கள். இவ்வாயிர தேவவருடங்களும் பிர்மலோகத்தில் பூர்த்தியான அவ்வந்திநேரத்திலே "ஸ்ரீராமநாதா" வென்று தேவதேவனின் தூயநாமத்தை ஒருமுறை உச்சரித்தமாத்திரத்தில் பின்னுமோர் பதினாயிரம் வருடங்கள் விஷ்ணுலோகத்தில் சகலமரியாதைகளுடனும் வாழ்ந்து ஸ்ரீராமநாதனுக்கொப்ப நிகரற்ற வாழ்வை எய்துவர்.

## சந்திபூஜா தெரிசனம்

சூரிய அஸ்தமனநேரத்தில் ஸ்ரீராமலிங்கத்துக்கு நடக்கும் எண்ணரிய அபிஷேகாதி நிவேதனங்களில் சூடதீபாராதனையையேனும் கண்ணுறும் பாக்யவான்கள் காசி, கயா, பிரயாகை யிம்மூன்று க்ஷேத்ரதெரிசனங்களை ஏககாலத்தில் பெற்ற பலனைப் பெற்றின்புறுவார்கள். இதல்லாமலு மித்தூய நற்றெரிசனத்தால் சகலதேவர்களும் மானிடர்களும் கைலைவாழ்வைத் தன்னிறுதிக் காலத்தில் பெற்றின்புறுவார்கள். இராமேசுர மஹாலிங்க சந்திபூஜா தெரிசனத்தை எவரொருவர் ஒருமண்டலம் வரைக்கும் பக்திசிரத்தையுடனும் அத்திருவாலய குருக்கள்வேதபிராமணர்கள் ஆலயப்பணியாளர்கள்

ஆலயப்பசுக்கள் இவர்களை ஸ்ரீராமநாதனாகவே பாவித்து உபசாரனை செய்துபெறுகின்றார்களோ அப்படிப்பட்ட புண்ணியசீலர்கள் அவரவர்கள் பக்திசிரத்தைக்கேற்ப சாலோப, சாமீப, சாரூப, சாயுட்சம் என்னும் பேரின்பமுக்தி வீடுகளையடைந்து சாட்சாத் ஸ்ரீராமநாதனே போன்று பரிசுத்த பிரமானந்த வாழ்வெய்துவார்கள்.

---

மேலும், ஸ்ரீராமலிங்கத்துக்கு பஞ்சாமிர்தாபிஷேகம் செய்விப்போர்கள் சேதுதீரத்திலே லட்சப்பிராமண போஜனம் செய்வித்த பலனைப் பெற்றின்புறுவார்கள். ருத்ராபிஷேகம் செய்விப்போர்கள் ஸ்ரீராமநாதனின் பேரருட்கடாட்சத்தால் ஒரு யுகாந்தகாலம் வரைக்கும் பிரமலோகவாழ்வையும், இகத்தில் அஷ்டஐசுவரியங்களையும் தீர்க்காயுளையும் பெற்று புகழுடன் வாழ்வார்கள். உபயாபிஷேகத்தை விதிப்படி பக்திசிரத்தையுடன் செய்பவர்கள் நட்சத்திரங்கள் போன்ற புத்திர புத்திரிகளைப் பெற்று ஈஸ்வரபக்தியானது வளர்பிறைபோன்று வளர இறுதிக்காலத்தில் ஸ்ரீராமநாத ஸ்மரணையுடன் கைலாயத்தை அடைவார்கள். ஆயிரத்தெட்டு வில்வதளங்கள்கொண்டு சகஸ்ரநாமம் செய்விக்கும் பக்திமான்கள் தானதுகாறும் அப்பிறப்பில் செய்திருக்கும் சகல பாவதோஷங்களினின்றும் விடுதலைபெற்று புனிதர்களாவார்கள். முன்னூற்றெட்டு திரிசத அர்ச்சனைகள் செய்தவர்கள் அசுவமேதயாகம் செய்தபலனைப் பெற்றின்புறுவார்கள். நூற்றெட்டு அஷ்டோத்திரம் செய்தவர்கள் அன்று செய்த பாவம் அன்றே நிவாரணமாக்கப்பட்டு காயத்திரி மஹாரகஸ்ய வேதமந்திரத்தை செபித்த பலனைப் பெற்றின்புறுவார்கள்.

ஸ்ரீராமநாத திருவாலயத்தைக்கட்டும் தர்மவான்கள் ஆயிரம் அசுவமேதயாகம் செய்த பலன்களைப் பெறுவதுந்தவிர அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகங்களை செய்துவைப்பவர்கள் ஆயிரம் ராஜசூயயாகங்களை சம்பூரணமாய் செய்துமுடித்த மாபெரும் பலனை



யெய்தி மறுபிறப்பில் இந்திரபதவியைப்பெற்று தேவாதிகள்வணங்க தேவலோகாதிபதியாவார்கள். இன்னும் ஸ்ரீராமநாத கைங்கர்யங்களையும் க்ஷேத்ராபிவிருத்திகைங்கர்யங்களையும் பக்திசிரத்தையுடன் செய்துவைப்பவர்கள் இகபர உயர்வாழ்வைப்பெற்று தேவர், மூவர் முதலியயாவராலும் புண்யவான் என்று போற்றிப் புகழப்படுவார்கள்.

# மஹாசிவராத்திரியும் சேது, கங்கை, தீர்த்தாபிஷேகமும்

சிவநிசிஎனும் சிவராத்திரி பிரதிவருடந்தோறும் மாசிமாதத்து கிருஷ்ணபட்சத்தில் பதினான்காம் தினத்தில்வரும் ஓர்புனித இரவு சிவராத்திரியானது சிவபூஜைக்கு மிகவும் உகந்ததோர் புண்யகாலமாகும் மானிடர்கள் சிவராத்திரியன்று பக்திவிசுவாசத்துடன் விரதமிருந்து அவ்விரவில் நித்திரையை ஒழித்துசுஸ்வரபஜனையிலும் பூஜைகளிலுங், சத்கதாகாலக்ஷேபங்கள் செய்வதிலும்அதி தீவிரர்களாயிருப்பார்கள் சிவராத்திரிவிரதமிருந்து சிவனைவழிபட்டவர்கள் சிவனுடைய வாசஸ்தலமாகிய கைலாயத்தைப்பெற்று இன்புறுவார்கள் சிவராத்திரி மகத்வத்தை சுருதிநூற்கள் மிகவும் சிலாகித்துக் கூறுகின்றன.

பூர்வகாலத்தில் ஓர் அசுரன் தன்வயிற்றை நிரப்புதற்கு ஆகாரந்தேடி வனத்திற்றிருந்து வருகையில், அகோரமான பசியால் பீடிக்கப்பட்ட ஓர்பயங்கர சிம்மமானது வழியில் எதிர்ப்பட்டு அசுரனைத்தாக்கிற்று அசுரனும்சிம்மத்துடன் கொஞ்சநேரம் வரை யுத்தம்புரிந்தான் சிம்மத்தைவெல்லுவதற்கு இயலாதவனாய் தன்உயிரைக்காப்பாற்றிக் கொள்ளும்நிமித்தம் ஓட்டம்பிடிக்கலானான் சிம்மமும்இவனைப் பக்ஷித்துதன்பசியை ஆற்றஆவல்கொண்டு விடாமற்றுரத்த அசுரன்வழியில்ஓர்மரத்தில் ஏறிக்கொள்ளவே, சிம்மமானது மரத்திலேற முடியாததால் மரத்தடியில் உட்கார்ந்துஅவன்இறங்கிவரும் நேரத்தை கவனித்துக்கொண்டிருந்தது இவ்விதமாகாரக்ஷஸனும் சிம்மமும் யாதொருஆகாரமின்றி பகல்நேரத்தைக்கழித்தனர் இரவும்வந்ததது சிங்கமோஅவனை விட்டுப்போகவில்லை ராக்ஷசனும் தான்தூங்கினால் மரக்கிளைகளினின்றும் கீழேவிழு



ந்து விடுவோமென்றும் உடனேசிம்மம்தன்னைப் பட்சித்துப்போடுமென்றும்பயந்தான், என்னசெய்வது? நித்திரையானது தனது அதிகாரத்தைச் செலுத்தஆரம்பித்தது. ஆனால்அசுரன் எப்படித்தூங்கமுடியும்? அபாயமல்லவா? மேலும்அவன் யாதொருவேலையுமில்லாமல் எங்ஙனம் விழித்துக்கொண்டிருக்கமுடியும்? அதுவும் அசாத்யமாகவே தோன்றிற்று. ஆயினும் நிர்க்கஆராய்ந்து முடிவாக ஓர்தீர்மானத்துக்குவந்தான் மரத்தின்இலைகளை ஒவ்வொன்றாய்பறித்து கீழேவீசத்தொடங்கினான் இவ்வகையாக இரவுபூராவும் கழித்தான் பொழுதும்விடிந்தது. விடிந்ததும் அவன் கண்ட அதிசயம்என்ன? மரத்தடியில்காத்திருந்த சிம்மமானது இறந்து கிடப்பதைப்பார்த்தான். உடனேஅசுரனானவன் அக்காரணத்தை ஆராயத்துடங்கினான்.

ஆஹா! இவ்வசுரனன்றோ பாக்யசாலி! சாட்சாத்ஸ்ரீகைலாசபதியானவர் கங்கையானது ஜடாபாரத்திலிருந்து ஒழுகபிறைச்சந்திரனைத்தரித்தவராய் அம்மரத்தடியிற்றோன்றி வாராய்பக்த, என்றசுரனை அழைத்துக்கூறலாயினர் நீநம்மீதுஇன்றிரவு லட்சம் வில்வார்ச்சனை செய்தபடியால் நாம்உனது செய்கைக்குமிகவும் மகிழ்ந்து உனதுசத்ருவாகிய சிம்மராஜனைமாய்த்து உனக்குத்தெரிசனம்தந்தோம் ஆதலால்நீஇன்றிரவுசெய்த அர்ச்சனைமகத்வமானது, தேவாதிகட்கும் கிடைத்தற்கரிய கைலாயத்தில் ஓர்பதவியை சாஸ்வதமாய் ஏற்கும்பாக்கியத்தை உனக்குச்சொந்தமாக்கி விட்டபடியால் ஓபக்த, எம்முடன்கைலைக்குவருக எனத்திருவாய் மொழிந்து அசுரனைஅழைத்துச் செல்லுகையில் சிவபெருமானானவர் அப்புனிதஇரவுக்கு சிவராத்திரிஎனப்பேரிட்டு அங்கிசிமுழுதும் எவரொருவர் பக்தியுடன்நித்திரைகளைத்து விரதமிருந்து நமக்குந்நம் சொரூபமாகிய சிவலிங்கங்கட்கும் அர்ச்சனைகளும் பூஜைகளும் அபிஷேகாதிகளும் செய்கின்றனர்களோ அத்தகையோர் ஒவ்வொருவரும் இப்பூவுலகில் புண்யபுருஷர்களாத் தீர்க்காயுளு-

ன் வாழ்ந்துஇனிமேல் ஒருக்காலும் பிறவித்துன்பங்களில் உழலாமல் பிர்மானந்தமான கைலாயத்தைப்பெற்று ஆனந்தமயமாக வாழ்வார்கள் என்பதாய்மகத்தான வரமருளி அசுரனை அழைத்துக்கொண்டு திருக்கைலைக்கெழுந்தருளினார்.

அசுரன்ஏறியிருந்த விருட்சமானதுவில்வமாம் அவ்வில்வ விருட்சத்தடியில் ஓர்சிவலிங்கம் அமைக்கப்பட்டிருந்ததால் அசுரன் பறித்தெறிந்த வில்வதலங்கள் ஒன்றின்பின்ஒன்றாய் லிங்கமீதுபடவே ஈஸ்வரமகிழ்ச்சியும், ஈஸ்வரபிரசன்னமும் சிவராத்திரி மகத்வமும்உண்டாயிற்று.

இத்தகைய ஈஸ்வரவரப்பிரசாத மிக்கசிவநிசியில் ஸ்ரீராமேச்சுர மகாலிங்கத்தில் ஈச்சுரசாநித்யமானது ஆயிரம்பணாமுடிகளையுடைய ஆதிசேடனாலும் விவரித்துரைக்கமுடியாத மஹாசாகரம் போன்று விளங்கிக்கொண்டிருப்பதால் அகிலலோகங்களிலுமிருந்து சகலஜீவர்களும் தேவர்களும் இப்பவித்ர சிவராத்திரி தினத்தன்று இராமேச்சுரத்தைநாடி சங்காதிசங்கமாய்வந்து ஸ்ரீராமலிங்கத்துக்கு சேதுதீர்த்தஅபிஷேகம, கங்காபிஷேகம், வில்வஅஷ்டோத்ர சகஸ்ரநாம, திரிசாதஅர்ச்சனைகள், புரிந்துஅன்றிரவை ஆனந்தமாகப்போக்கி ஸ்ரீபர்வதவர்த்தனிசமேத ராமநாதக்கடவுளின் பரிபூரணஅருளைப்பெற்று மேலாகியசிவபதவியாகிய கைலாயத்தை சுதந்தரித்துக் கொள்கின்றார்கள்.

சர்வலோகங்களிலுமுள்ள புண்யதீர்த்தங்களின்சங்கமமாகிய சேதுதீர்த்த அபிஷேகமானது ஸ்ரீராமேச்சுரமஹாலிங்கத்துக்கு அத்யந்தப்ரீதியை உண்டாக்குவதானால் சேதுதீர்த்தத்தை பக்தியுடன் எடுத்துவந்து, ஏழைகட்கு தர்மம்வழங்கி, தம்பதிசமேத பிரமனோத்தமர்கட்கு அன்னவஸ்திரம்கொடுத்து அவர்களுடைய நல்லாசியைப்பெற்று சிவராத்திரியன்று ஸ்ரீராமநாதனுடையசன்



று மறையவர்கள் வேதமந்திரகானம்செய்ய ஹோமதூபங்கள் நறுமணங்களைப்பரப்ப சூடதீபஆராதனைகள் ஜெகஜோதியாய் ஒளிர சேதுதீர்த்தத்தை ஸ்ரீராமலிங்கத்தின்மேல் அபிஷேகித்தைல்வேண்டும்.

சேதுதீர்த்தம்தன் திருமேனியிற்பட்டதும் சிவபெருமானுக்குண்டான மகிழ்ச்சிப்பெருக்கை என்னென்றெடுத்துரைப்பது? தீர்த்தத்தை வருவித்துக்கொண்டிருக்கும்வரை லிங்கமானது பெரிதாகவளர்ந்து வருவதும்அபிஷேகம் நின்றதும் எப்போதும்போலுள்ளவடிவமாவதும் லிங்கமூர்த்தியின் அற்புதானந்த தெய்வீக காட்சியல்லவா? லக்ஷம்சேதுதீர்த்த அபிஷேகங்கள் செய்யும்பாக்யவான்களும் ஒரேதடவையில் சேதுதீர்த்தத்தை லக்ஷஜனன மஹாமந்திர உச்சாடணத்துடன் ஸ்ரீராமலிங்கத்துக்கு அபிஷேகிப்பவர்களும் ஈஸ்வரஸ்வய தெரிசனத்தை கண்குளிரக்கண்டு பாமகிருதார்த்தனாகி அக்கணமேஅச்சரீரத்தை துறந்து மறுஜென்மத்தைஎடுத்து அப்பிறப்பில் உலகையாளும் சக்கரபதியாகி நீதிநெறிதவறாது மண்ணும்விண்ணும்புகழ தீர்க்காயுளுடன் செங்கோலோட்சி அந்திய காலத்தில் பிரமலோகத்துக்கழைத்துச் செல்லப்பட்டு அங்கும் ஆனந்தமயமான பேரின்பவாழ்வை எய்தி இன்புறுவர்.

பூலோக கைலாச மென்றழைக்கப்படும் காசிமக்ஷேத்திரத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் கங்காதீர்த்தமெடுத்து வந்து ஸ்ரீராமேச்சுரமஹாலிங்கத்துக்கு பக்திசிரத்தையுடன் சிவராத்திரியில் அபிஷேகிப்போர்கள் யமவாதனையினால் ஒருக்காலும் அவஸ்தையுறமாட்டார்கள். அப்படிப்பட்ட அதிட்டசாலிகள் இருபத்தெட்டு மஹாநரகங்களெதிலும் தள்ளுண்டு துன்பமுறமாட்டார்கள். ஆனால் இப்புண்ணியவான்கள் மரித்ததின்பின் இவர்களது சூட்சமசரீரம்சம்பூரணமானபோகங்கள் நிறையப்பட்டுள்ள சுவர்க்கத்தையடைந்து அங்கு

தேவசரீரம்பெற்று என்றுமழியாத நிரந்தரத்தன்மையுடன் "இவர் கெந்தமாதன ராமேச்சுரமஹாலிங்கத்துக்கு சிவநிசியில்கெங்கை வருடித்தபுண்யசாலி" என்று தேவாதிகள் எல்லோராலும் புகழ்ந்து சொல்ல விசேஷமதிப்புடன் சுவர்க்கபோகங்களை யனுபவித்து வாழ்வார்கள்.

சிவராத்திரியில் ஸ்ரீராமேச்சுரமஹாலிங்கத்துக்கு சேது, கெங்கை யிவ்விருதீர்த்தங்களாலும் அபிஷேகம்செய்து வித்யாதானம், அன்னதானம், இவைகளை அவரவர்கள் சக்திக்கேற்ப செய்பவர்கள் இகபரம் இரண்டிலும் உயர்வாகியபதவிகளை "காசிலிங்கங்கொண்டு வந்த அனுமானானவர் சீதாதேவியால் பிடிக்கப்பட்ட மணல் லிங்கத்தை ராமசுவாமிபிரதிஷ்டைசெய்துவிட்டாரென்பதைத் தெரிந்து அடங்காதகோபங்கொண்டு எப்படியும் மணல் லிங்கத்தைப்பெயர்த்தெறிந்துவிட்டு தான் கொண்டுவந்த லிங்கத்தை அந்த ஸ்தானத்தில் வைத்து பிரதிஷ்டை செய்விக்கவேண்டுமெனத் துணிந்தவராய் தன் முழுப்பலன்கொண்டும் அண்டங்களெல்லாம் அதிர்ச்சிகொள்ள விஸ்வரூபமெடுத்தும் லிங்கத்தைப்பெயர்க்க பிரதிட்டைசெய்யப்பட்ட மணல் லிங்கமானது அணுவும் அசையாதிருந்த,, நிலைபோன்று ஸ்திரமாகவும் யாவராலும் அசைக்கமுடியாத வாறும் பெற்று ஸ்ரீகைலாசபதியாகிய ராமநாதக்கடவுளினிடத்தில் அகலாதபக்தி கொண்டு இனிதுவாழ்ந்திருப்பார்.



## மலைவளர்காதலி எனும்

# ஸ்ரீபர்வதவர்த்தனி அம்மன்

சட்சாத் ஸ்ரீகைலாசபதியாகிய சிவபெருமான் முன்னர் கற்பகபர்வதத்தில் ஏகாந்தமாக இனிதுவீற்றிருக்கையில், அகில உலகங்களிலுமுள்ள புண்யநிதிகட்கெல்லாமோ புண்ணியசுரங்கமாக ஓர் அழிவற்ற சாஸனத்தை உண்டுபண்ணி அதின் நிமித்தம் உலகத்தார்களுக்கும் வழியைக் காட்டவேண்டுமென்றும் அவ்வாறு செய்தற்கு ஈஸ்வரகடாட்சத்தைப் பெறும் தருணமிதுவே என்றுமெண்ணி ஏகாந்தமாயிருக்கப்பட்ட ஈஸ்வரனிடம் சென்ற மலைவளர்காதலியினாலன்றோ மஹாவரப்பிரசாதங்களையுடைய புண்யசாகரமாகிய சேதுவானது நமக்குக்கிடைத்தது. சேதுஉற்பத்திக்கு காரணகர்த்தாவாயும் முதன்முதலில் சேதுவில்நீராடியவருயும் சேதுவின்நாமத்தை தரித்தவருயுமிருக்கின்ற ஸ்ரீசேதுபர்வதவர்த்தனி அம்மையாரின் தூயதெரிசனத்தை சேதுக்ஷேத்திரத்திலே தெரிசிக்காத கண்களும் கண்களோ?

அகில புவனங்களை எல்லாம் பெற்றெடுத்த பரமேஸ்வரியே சேதுபர்வதவர்த்தனி எனத்திருநாமம் பூண்டு ஸ்ரீராமநாதனுடைய திருவாலயத்தில் எழுந்தருளியிருப்பதால் ஜெகன்மாதாவின் தெரிசனம் மானிடர்களால் நினைக்கமுடியாத அநேக இகபரசௌபாக்யங்களை அளிக்கும். ஸ்ரீராமலிங்கத்தை தெரிசித்தவர்கள் மலைவளர்காதலியாகிய பர்வதவர்த்தனி அம்பாளின் தெரிசனத்தைப் பெறாவிடில் அவர்கள் யாதொரு பலனையும் அடையமாட்டார்கள்.

நித்திய கல்யாணியாகிய ஸ்ரீபர்வதவர்த்தனி அம்மனுக்கு மிகவும் பிரீதியானது சேதுதீர்த்தம். சேதுதீர்த்தத்தை பரமேஸ்வரிக்கு

அபிஷேகம்செய்பவர்கள் பவித்திரர்களாகி இகத்தில்துன்பமென்பதையே அறியாது மங்களகரமாய் வாழ்ந்து பரத்தில் சாலோப சாமீப, சாரூப, சாயுட்சயமென்னும் முக்திவீடுகளை படிப்படியாயடைந்து ஈஸ்வரத்திருமேனியுடன் இரண்டறக்கலந்து ஐக்யமாவார்கள்.



## காசிவிஸ்வநாதர் என்ற

## ஸ்ரீ அநுமலிங்கம்

கெந்தமாதன கற்பக பர்வதசாரலில் சிவலிங்கப் பிரதிட்டை செய்யவிரும்பிய தசரதராஜ தனயனாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி தமிழ்முனியாகிய அகத்தியர்மூலம் பிரதிட்டை செய்வதற்குகந்த முகூர்த்தகாலத்தை நிர்ணயம் செய்து வாயுபகவான் புத்திரனாகிய ஆஞ்சனேயரைப்பார்த்து வாராய் அநுமந்த, நாளை உதயநேரமானது நம்மால் சிவலிங்கப்பிரதிட்டை செய்வதற்கு குறிப்பிடப்பட்ட சுபகாலமானபடியால் அதற்குள் நீ காசிக்ஷேத்ரம் சென்று ஸ்வயம்புலிங்கம்கொண்டுவரக்கடவை என்றாக்ஞாபிக்க ஆஞ்சநேயரும் நல்லதென சுவாமியினுடைய ஆக்ஞையை சிரமேற்கொண்டு விஸ்வரூபந்தாங்கி காசிசென்று ஸ்ரீவிஸ்வநாதனைத் தியானித்து லிங்கம் கொண்டுவருவதற்குள் முகூர்த்தகாலம் வந்து சீதாபிராட்டியாலுண்டுபண்ணப்பட்ட மிருத்திகை ஜோதிலிங்கத்தை மஹரிஷிவாக்குப் பிரகாரம் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் பிரதிட்டை செய்துவிட்டபடியால் ஸ்ரீராமசுவாமியின் உபதேசப்படி அநுமாரானவர் தான் கொண்டுவந்த காசிலிங்கத்தை தன்பேரால் ஸ்ரீராமலிங்கத்துக்கு வடபாரிசத்தில் விதிப்படி பிரதிட்டைசெய்து பக்திப் பிரவாஹத்தில் மூழ்கினின்றார்.

வாயுதேவனின் அருந்தவப்புதல்வனும் மஹாபெரும் பக்தனும் சிரஞ்சீவியுமாகிய ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தியால் பிரதிட்டை செய்யப்பட்ட அநுமலிங்கத்தை முதன் முதலில் வ[illegible]ப்பட்டுப் பின்னர் ஸ்ரீராமலிங்கதெரிசனத்தைப்பெ[illegible]ர்கள் தா[illegible] சர்வசித்திகளையும் அடைவார்களென்று[illegible] அ[illegible] [illegible]

வழிபடுகிறவர்களும், ஸ்ரீராமலிங்கத்தை முதலிலும் இரண்டாவதாக அனுமலிங்கத்தையும்வழி படுகின்றவர்களும் யாதொரு பலனையும் அடையமாட்டார்களென்றும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியால் ஆணையிடப்பட்டிருப்பதால் முதன்முதலில் வாயுதனயனால் பிரதிஷ்டைசெய்யப்பட்ட காசிவிஸ்வலிங்கதெரிசனம் செய்பவர்கள் சகலபாக்யங்களையும் பெற்று வாழ்வார்கள். அனுமலிங்கதெரிசனம் பெற்றவர்கள் காசிமாக்ஷேத்ரம்சென்று கங்கைநீராடி விஸ்வநாதனைத் தெரிசிக்க வேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில் காசிவிஸ்வநாதனே அனுமலிங்கமாக கெந்தமாதன ராமேச்சுரத்தில் வீற்றிருப்பதினாலேயே தான். பின்னும் அனுமலிங்க தெரிசனம்செய்தவர்கள் விஸ்வரூப பலிஷ்டராகிய ஆஞ்சநேயமூர்த்தியின் கிருபா கடாட்சத்துக்குப் பாத்திரமாகி ஆஞ்சனேயரின் கிருபையினால் வஞ்சனை பில்லி ஏவல் சூனியம், பேய், பிசாசம், அலகை, பிரம்ம, ராக்ஷசை, முனி முதலிய துஷ்டர்களின் ஹிம்சைகளினின்றும் பரிபூரணமாய் விடுதலைபெற்று சுகமேவாழ்வார்கள். இவ் வனுமலிங்கத்தை கிம்புருகண்டத்தில் தவம்செய்து நிற்கும் அனுமாரானவர் தினசரி அதிகாலையில் ஒரே பாய்ச்சலில்தாண்டிவந்து தெரிசனம்செய்துபோவதாக பெரியோர்கள்சொல்கின்றார்கள்.



# சேதுமாதவர்

நினைத்தவற்றையெல்லா மளிக்கும கற்பகத்தருக்கள் நூறுயிரம் சேர்ந்திடினும் சேதுவுக்கு இணையாகுமோ? ஸ்ரீவைகுண்டவாசகனாகிய மஹாவிஷ்ணு மாதவனானவர் புண்யங்கட்கெல்லாம் வித்தானதோர் புனிதசாகரமாக விளங்கும் சேதுவின்மேலுள்ள பக்திப்பெருக்கால், சுந்திரபாண்டியனென்னும் சந்திரகுல அரசனால் இத்தூயதலத்தில் அடியும் உதையுப் பட்டதை நறுமணங்கள்கமழும் புஷ்பங்களை தம்மீது தூவினதற்கொப்பவும், காலில்பூட்டிய சங்கிலி விலங்குகளை பொற்சிலம்புகளாகவும் சிறைஅறையை ஹிருதயம்உகந்த திருவாலயமாகவும் பாவித்ததுந்தவிர சுந்திரபாண்டியனையும் அன்புடன் ஏற்று தன் ஸ்வயரூப தெரிசனமளித்து வைகுந்தபதவியும் அருளினார்!

சேது மாதவ சரிதையை இந்நூல் 168-வது பக்கம் பார்க்க

கெந்தமாதனமும் சேதுவும் பிரகாசிக்கும் புனிதக்ஷேத்ரமாகிய இராமேச்சுரத்திலே கால்களில்பூட்டப்பட்ட விலங்குகளுடன் ஸ்ரீராமநாத திருவாலயத்திற்கு சமீபம் கோயில்கொண்டிருக்கும் ஸ்ரீசேதுமாதவ தேவனை தெரிசிக்கும் சேதுயாத்ரைசெய்யும் புண்ணியசீலர்கள் அவர்கள் யிச்க்ஷேத்திரத்தில் செய்த தானதர்மங்கள் மிகச்சிறியதேயாயினும் கொண்டுள்ள பக்தி அற்பமேயாயினும் ஒன்றுகோடியாகப் பெருகிய பலனை பெறுவதுந்தவிர கெங்கை, யமுனை, பிரயாகை, கிருஷ்ணவேனி, காவேரி யிவ்வைந்து புண்யநதிகளிலும் ஏககாலத்தில் நீராடியபலனையும் பெற்று லட்சுமிகரமான தூயவாழ்வெய்துவார்.

தினம் அருணோதயத்துக்கு முன்னெழுந்து சேதுதீரம் சென்று சேதுதீர்த்தத்தை பாத்திரங்களில் நிறப்பி காவடிகள்கட்டி தன் திருத்தோள்கள் மீது சுமந்து வந்து ஸ்ரீராமலிங்கத்திற்கு அபிஷேகித்துவருவதால் விஷ்ணுதேவனுக்கு சேதுமாதவர் என்ற நாமம் வழங்கலாயிற்று. வெண்பவளக்கற்களால் சேதுமாதவருடைய விக்ரகமானது அமைக்கப்பட்டிருப்பதால் சுவேதமாதவர் என்றும் அழைக்கப்படும்.



# கெந்தமாதனபர்வத தெரிசனமும் பர்வதசிகரமீதமர்ந்து சேது தெரிசனமும்

கெந்தமாதனமென்னும் கற்பகபர்வதமானது சேதுசாகரத்திலும் நிலத்திலுமாக பாதாளத்திலாழ்த்தப்பட்டு விட்டதின் மேல் அப்பர்வதமிருந்த மத்தியபாகத்தில் தெய்வதச்சனால் நிர்மாணிக்கப்பட்ட அழகியமண்டபமானது கெந்தமாதனத்தைப் போன்றே உருவமும்உயரமும், சிகரமும்வாய்ந்து நாற்புறமும்பச்சைப்பசேரென்ற மரக்தளிர்களையுடைய அடர்ந்தகாடுகளும் அதற்கப்பால் நீலமயமான திரைகடலும் சோபிக்கஇரண்டடுக்கு உப்பரிகைகளையும் சிகரம்போன்ற கோபுரங்களையும் உடையதாயிலங்குகின்றது.

இப்பர்வதமண்டபத்தினடித்தட்டில் ஸ்ரீராமபிரானின்பரிசுத்த திருவடிகள் தெரிசனம் பிரதானமானது இரண்டாவதாக மேற்தட்டிலிருந்தவாறே தெற்குநோக்கிப்பார்த்தால் ரத்னாகர மகாசமுத்ரமும் மஹோததிமகாசமுத்ரமும் தத்தம் அலைகளாகிய கைகளைநீட்டிக்கொண்டு ஒன்றையொன்றுநோக்கி அதிவேகமாகஓடிவருவதுபோலும், இருசமுத்ரஅலைகளும் ஒன்றின்மேல் ஒன்று மோதி ஜெயஹோ என்ற சப்தத்துடன் அர்ப்பரித்துக்கொண்டு மேலெழும்பி ஒன்றாககலந்து சங்கமமாவது ஒன்றையொன்று கைகளால் கட்டித்தழுவி ஆசீர்வதித்துக்கொள்வது போலுமுள்ள சேதுவின் உபயானந்த தெய்வீகக்காட்சியைத் தெரிசிக்கலாம் மூன்றாவதாக கெந்தமாதன விஸ்வரூப ஆஞ்சனேயமூர்த்தியின் நேத்திரானந்த தெரிசனம்பார்க்கத்தக்கது.

புண்ணியமே உருவெடுத்தது கெந்தமாதனம். அத்தகைய யிடத்தில் தர்மத்தைநிலைநாட்ட அவதரித்த ஸ்ரீமந்நாராயணமூர்த்தி திருவடிகளின் தெரிசனம்என்றால் அதன்அபார மகத்வத்தை யாரால்சொல்லிமுடியும்? ஸ்ரீமந்நாராயணனாகிய ராமபிரானின்தூய திருவடிகளையுடைய கெந்தமாதனத்தின் ஒப்புயர்வற்ற தெரிசனத்தையும், அம்—மாமலை மண்டபமீதமர்ந்தவாறே சேதுதெரிசனத்தையும் விஸ்வரூபஅனுமானின் தெரிசனத்தையும் கிடைத்தற்கரிய மானிடசென்மமெடுத்த புண்யசீலர்கள் தத்தம்வாழ்க்கை இலட்சியமாகக்கொண்டு, எத்தகையகஷ்டங்கள் உளதெனினும், இடையூறுகள் குறுக்கிடினும் அவைகளைஎல்லாம் மேவிலைவைராக்யத்துடன் திருவிராமேச்சுரத்தையடைந்து கண்ணாரக்கண்டுமகிழ்ந்து பக்தி விசுவாசத்துடன் போற்றித்துதித்து இச்சென்மத்தை சாபல்யமாக்கிக்கொள்வது இன்றியமையாக் கடமையாகும்.



## காட்டுப்பிள்ளையார்என்ற
## ஸ்ரீ சாட்சிவிநாயகர் தெரிசனம்

சேதுஸ்நானம், கெந்தமாதனதெரிசனம், ஸ்ரீராமலிங்கதெரிசனம் இவைகளைச் செய்துமுடித்தபின் கோடிதீர்த்தப்பிரசாதமெடுத்துக்கொண்டு இராமேச்சுரத்தைவிட்டு பிரயாணமாகுங் காலையில் இராமேச்சுரத்துக்கு நேர்மேற்கில் 2.மைல் தூரத்தில் பாம்பன்ரஸ்தாவில் காட்டுப்பிள்ளையார் கோவிலில் ஸ்ரீசாட்சிவிநாயகர் தெரிசனம் செய்தல் வேண்டும். எங்குபார்க்கினும் லிங்கமயமாகவும் லிங்கசொரூபமாகவும் புண்யதீர்த்தங்களும் தேவஆலயங்களும் வேள்விகுண்டங்களுமாகயிருக்கப்பட்ட சேதுராமேச்சுரத்தில்புண்யார்த்தமாக விஜயம்செய்யும் யாத்ரீகர்கள் கழித்த மலமூத்திரம் எச்சில் முதலியதோஷங்களெல்லாம் நிவாரணமாகும்பொருட்டு ஸ்ரீசாட்சிவிநாயகமூர்த்திதெரிசனம் மிகவும் முக்கியம்.

ஸ்ரீசாட்சிவிநாயகமூர்த்தி ஓங்காரபிரணவமூல சொரூபமாயமைந்திருப்பதால் பக்தர்கள், தெரிசனமாத்திரத்தில் சர்வதோஷங்களும் பற்றறகலைந்தெரியப்பட்டு புனிதர்களாக்கப்படுகிறார்கள். தசரததனயனாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் சிவலிங்கப்பிரதிட்டைசெய்துவிட்டு அயோத்திமாநகருக்குத்திரும்புங்காலையில், தான் லோகநாயகனாகயிருந்திட்டபோதிலும் துஷ்ட சம்ஹாரநிமித்தம் பூலோகத்தில் மனிதஜென்மமெடுத்திருப்பதால் மஹாபரிசுத்தமாயிருக்கும் தேவைப்பதியாகிய ராமேச்சுரத்தில் மலமூத்திராதிகளைக் கழித்த தோஷம் நீங்க ஸ்ரீசாட்சிவிநாயக பிரதிஷ்டையும் தெரிசனமும் புரிந்தார்.

ஸ்ரீராமச்சந்திரன் சீதாதேவியாருடன்வழிபட்டுவணங்கியதும் விபீஷணன், லட்சுமணன், அனுமான், சுக்ரீவன் முதலியோர்களும் எழுபத்திரண்டு வெள்ளம் வானரவீரர்களுடன் ஸ்ரீஆதிமூலமாகிய சாட்சிவிநாயகக்கடவுளை வழிபட்டு மகாபவித்திரர்களானார்கள்.

# சேதுமஹாயாத்ரைசம்பூரணம்

இராமேச்சுரத்தில் ஸ்ரீசாட்சிவிநாயகர் தெரிசனம் பெற்றவுடன், தீர்த்தயாத்ரையை விதிப்படி பூரணமாய் நடத்திவைத்த மறையவர்கட்கு மனம் திருப்தியாகும்வரை ஆடை ஆபரண திரவியங்கள் கொடுத்து வேதமந்திரங்களினால் அவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்றுப்பின் ஏழைஎளியவர்கட்கும் பசுக்கட்கும் வேண்டியதர்மங்களைச் செய்து உள்ளும்புறமும் ஆனந்தமயமாகி முகமண்டலமானது மகிழ்ச்சிததும்ப, ஜெயம் ஜெயம் என சேதுவாசிகள் மங்களவாழ்த்துகள்கூற இராமேச்சுரத்தைவிட்டுப் பிரயாணமாகி இராமேச்சுரத்துக்கு மேற்கே முப்பத்தைந்து மயிலிலிருக்கும் முகவைநகரம் என்ற இராமநாதபுரத்தை அடையபவண்டியது.

கல்லாகக்கிடந்த அகலிகைக்கு சுயரூபமளித்தது எந்த பாத அரவிந்தங்களோ அத்தூய திருவடிகளில் பிரகாசிக்கப்பட்ட சங்கு சக்கர ரேகைக ள்பதிந்து மாபெரும் புனிதத்தன்மைவாய்ந்துள்ள சேது என்னும் தெய்வத்திருவணையை கோதண்டத்தின் கோடியினால் உடைத்தெறிந்து பின்னர் அத்தெய்வத்திருவணையின் ஞாபகார்த்தமாகவும் இராமாவதாரத்தின் நோக்கங்களெல்லாம் நிறைவேறி "தர்மத்தை நிலைநாட்டியதின், ஞாபகார்த்தமாகவும், அக்காலையில் தமதுவேண்டுகோளுக்கிணங்கி திருவணையைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்ற சேதுபதிமன்னர் பிரானின் திருஅரண்மனையில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்சேதுபீடத்தை தெரிசித்துவிட்டு தத்தம் இல்லம் திரும்பி இராமேச்சுரப்பிரசாதமாகக் கொண்டுவந்திருக்கும் கோடிதீர்த்தத்துக்கு தூபதீபங்கள்கொடுத்து மேல்மூடியைப்பிரித்து இஷ்டமித்திர பந்துஜனங்களுக்கு வழங்கி



ஸ்ரீபர்வதவர்த்தனிஅம்பாள் சமேத ஸ்ரீராமநாதக்கடவுளின் பரிபூரண கடாட்சத்தால் தர்மார்த்த காம மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் முழுநிறையுடன் பெற்று சுகஜீவியாக வாழ்வார்கள்.

மேலும் மஹாரகஸ்யமாயிருந்ததும், ஸ்தலம் தீர்த்தம், மூர்த்தியிம்மூன்றுமகிமைகளும் முழுநிறையுடன் அமைந்திருப்பதுமான சேதுமகத்வத்தை விவரித்துரைக்கும் "சேதுமாக்ஷேத்ர புராணத்தை மிகவும் பக்திவினயத்துடன் பாராயணம்செய்பவர்களும் கேட்பவர்களும் அகண்டபரிபூரண சச்சிதானந்த புண்ணிய பிரவாஹமாக விளங்கும் ஸ்ரீசேதுவைத்தெரிசித்து ஸ்நானமாடியபலனையும் கெந்தமாதனபர்வத தெரிசனத்தையும் அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமநாதக்கடவுளின் கடாட்சத்தையும் பெற்று விளங்குவார்கள் சேதுபுராணம் இருக்கும் கிரகங்களெல்லாம் சகல தேவதைகளும் மிகப்பிரீதியுடன் வசிக்கும் ஸ்ரீஇராமநாதசாநித்ய மிகுந்த கெந்தமாதன-சேது-ராமேச்சுரமாகவே விளங்கி அவ்விடம் சதாகாலமும் அஷ்டலட்சுமிகளின் கடாட்ச மிகுந்தொளிரும்.

ஓம்.



# யாத்ரீகர்கட்குஉபயோகப்படும்

## சிலகுறிப்புகள்

ஸ்ரீராமநாத ,பர்வதவர்த்தனி அம்பாளுக்கு செய்யப்படும்

## அபிஷேகாதிகள்

| | டிக்கெட்டு ரூ - அ - பை |
|---|---|
| உபயாபிஷேகம் [பிரசாதத்துடன்] | 5 - 4 - 0 |
| இதர உபயாபிஷேகம [சர்க்கரைபொங்கல்] | 6 - 0 - 0 |
| ஷை [பிரசாதத்துடன்] | 10 - 8 - 0 |
| பஞ்சாமிர்தஅபிஷேகம் " | 22 - 8 - 0 |
| ருத்ராபிஷேகம் " | 50 - 0 - 0 |
| கங்காபிஷேகம் பாத்திரம் 1க்கு | 2 - 0 - 0 |
| பாலாபிஷேகம் — படி 1 க்கு | 1 - 8 - 0 |
| 1008 நாம சகஸ்ர நாமார்ச்சனை [வடைபாயசத்துடன்] | 4 - 0 - 0 |
| 308 நாம திரிசாதஅர்ச்சனை [பாயசத்துடன்] | 1 - 8 - 0 |
| 108 நாம அஷ்டோத்திர அர்ச்சனை | 0 - 5 - 0 |
| தேங்காய் 1 க்கு | 0- 1 - 0 |
| வெள்ளி, தங்கவாகனங்களைப் பார்க்க விரும்புவோர்கள் செலுத்தவேண்டிய டிக்கட்டு தொகை | 5 - 0 - 0 |
| கோவிலின் விலைமதிப்புயர்ந்த நகைகளை பார்ப்பதற்கு டிக்கெட்டு தொகை | 15 - 0 - 0 |
| பஞ்சமூர்த்தி உத்ஸவம் - - | 160 - 0 - 0 |
| வெள்ளிரதோத்ஸவம் - - | 500 - 0 - 0 |

## தங்கும் சத்திரங்கள் மடங்கள்

### (இராமேஸ்வரத்தில்)

மஹபீர் தர்மசாலா:-- ரெயில்வேஸ்டேஷனுக்கருகில்யாத்ரீகர்கட்கு தங்கும்வசதிகள்

அக்னிதீர்த்தபங்களா:-- அக்னிதீர்த்த சமுத்திரக்கரையோரமிருக்கும் மின்சாரவிளக்குகளுடைய ஓர்சுகாதாரக்கட்டிடம் நாள்ஒன்றுக்கு ரூ 2-0-0 வீதம்தங்கும் ஜார்ஜுசெலுத்தல் வேண்டும்

பகவான்தாஸ்பாகலா தர்மசத்திரம்:-- திட்டகுடியிலிருக்கும் மிகப்பெரியதோர்சத்திரம் யாத்ரீகர்கள் இலவசமாய் தங்கும்வசதிகள்

ஆரியவைசியசத்திரம்:-- மேலவீதியில் இராமதீர்த்தக்கரையிலுள்ளது தங்கும்வசதிகள்

கைவல்யமடம்:-- தெற்குரதவீதியிலுள்ளது யாத்ரீகர்கள் தங்கும்வசதி

கொங்கணியர்காசிமடம்;-- நடுத்தெருவில்உள்ளது கொங்கணியர்களுக்குமாத்திரம் வசதிகள்

பாலயநாட்டார்மடம்:-- வடக்குரதவீதியிலுள்ளது யாத்ரீகர்கள் தங்கும்வசதி

சுகாவிடுதி:-- தெற்குரதவீதியிலுள்ளது யாத்ரீகர்கள் தங்கும்வசதிகள் செய்யப்படுகின்றன

நகரையூர்செட்டியள்மடம்:-- மேலவீதியிலுள்ளது யாத்ரீகர்கள் தங்கும்வசதி யளிக்கப்படுகின்றன

இராமமந்திரமடம்:-- கீழரதவீதியிலுள்ளது மின்சாரதீபசப்ளை யுண்டு நாள் 1க்கு ரூ 5-0-0 வீதம் தங்கும்வசதி யளிக்கப்படுகின்றன.



சௌராஷ்டிரமடம்:-- கீழரதவீதியிலுள்ளது சௌராஷ்டிரர்களுக்குமாத்திரம் தங்கும்வசதியளித்தல்

திருப்பணிபங்களா:-- கீழரதவீதியிலுள்ளது தங்கும்வசதிகள்மட்டும்

### (தனுஷ்கோடியில்)

வீரப்பசெட்டியார் சத்திரம்:-- சாப்பாடும் தங்கும்வசதியும்

தஞ்சாவூர்மகாராஜாசத்திரம்:-- சாப்பாடும்தங்கும்வசதியும்

டிராவெல்லர்ஸ்பங்களா:-- தினம் 1 க்கு ரூ 1-8-0 வீதம் ஜாகையளிக்கப்படுகின்றன

மேற்கண்டவைகள்தவிர யாத்ரீகர்கள் விரும்பியவண்ணம் தகுந்தஜாகை முதலியசகலவசதிகளையும் திருப்திகரமாய் செய்து கொடுப்பதற்கு க்ஷேத்ரபுரோகிதர்கள் சித்தமாயிருக்கின்றனர்.

120754
256
226A

## வைத்தியசாலைகள்

கெவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி:—

ரெயில்வேஸ்டேஷனுக்கு சமீபத்திலிருக்கின்றது. காலை 8. மணியிலிருந்து 11.மணிவரைக்கும் மாலை4½மணியிலிருந்து 6வரைக்கும் சிகிச்சை.

ஆயுர்வேத வைத்தியசாலை:---

கீழரதவீதியிலிருக்கின்றது- காலை 8. மணியிலிருந்து 11மணிவரைக்கும் மாலை 3மணியிலிருந்து 6வரைக்கும்

## இலவசவாசகசாலை

இராமேஸ்வரம் நகரசபையாரால் பரிபாலிக்கப் படுகின்றது

பஞ்சாயத் போர்டு ஆபீசுக்கு எதிரில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஹிந்து, ஜஸ்டிஸ், முதலிய ஆங்கில தினசரி பத்திரிகைகளும் தமிழ்நாடு இந்தியா முதலிய தமிழ் தினசரிகளும் வரவழைக்கப்படுகின்றன.

காலை 8.மணியிலிருந்து 9.வரைக்கும் மாலை 5.ந்திலிருந்து8.வரைக்கும்.

ஸ்ரீ ராமநாத ஸ்வாமி பர்வதவர்த்தனி அம்பாள்.

